இதன் தண்டு வேர், மருந்துக்கு உபயோகப்படும். இவை உடம்பிற்கு வலிவைக் கொடுக்கக் கூடியன. இத்தாது விருத்தியையும் உண்டாக்கும். இக்கொடியின் கஷாயம் முறை சுரம், பலவீனம், அஜீரணம், வாத நோய், கிரந்தி முதலியவைகளுக்குக் கொடுக்கலாம். இதனினின்று ஓர் வித சருக்கரை எடுப்பதுண்டு. அதற்குத்தான் அமிர்த சர்க்கரை அல்லது சீந்தில் சர்க்கரை அல்லது சீந்தில்மா என்று பெயர். இது வெண்மையாயும் கசப்பாயும் இருக்கும். இதை மண்ணீரல் வலி வீக்கம், பலவீனம் முதலியவை களுக்குக் கொடுக்கக் குணமாகும். இக்கொடியை மற்ற கடைச் சரக்குகளுடன் சேர்த்து அதிசாரத்துடன் கூடிய சுரம். தாகம், இருதயப் படபடப்பு, பலவீனம் முதலிய நோய்களுக்குக் கொடுப்பதுண்டு. Moon creeper, Bilekiller — Tinospera Cordifolia or Menispermum — Cordifolium. It is a turing creeper. Its stem is mostly used in Medicine. It is very bitter. The dried pieces of stem are sold in the bazars. The plant is very common Bengal, Assam, Malabar and Deccan. The tincture prepared from it is useful in cases of general debility, skin diseases acidity of urine and other urinary diseases, in some cares dyspepsia, gonorrhoea, leucorrhoea. It is febrifuge and tonic in gout. The stem is alterativetonic, antiperiodic and antipyretic. It is mostly used in the form of decoction. It is very useful to reduce fever in cases of jaundice. The creeper that spreads on a margosa tree is considered most effective for this purpose. Decoction is made out of its stem and dried ginger in the proportion of 4:1 and administered twice daily. It is useful in diarrhoea thirst, and palpitation also. From its cold infusion an extract is taken. It is knowns as சீந்தில் சர்க்கரை, but it is bitter. There are the following varieties. *1.* பொற் சீந்தில், 2. பேய்ச்சீந்தில் (ஆகாச கருடன்); 3. கருஞ் சீந்தில்.

சீந்தி நீர்கண்டம், see சீந்திற் சக்கரை 'சீந்தி நீர்க் கண்டம் தெறி சுக்கு தேனளாய் (சீந்திற்மா) மோந்தபின் யார்க்கும் தலை குத்தல் மாறுமே' All will be relieved of their head ache by swelling the palo of the gulancha and sliced dry ginger mixed with honey.

சீந்திற் கிழங்கு, சீந்திற் கொடியின் அடிவேர்க் கிழங்கு - the bulbous root of moon creeper இது காயசித்திக்கு உதவும். It is useful for rejuvenation. It is useful in veneral diseases, emaciation in children and to eliminate certain poisons.

சீந்திற் சருக்கரை, சீந்தி நீர்க்கண்டம், சீந்தில் மா சீந்தில் உப்பு எனப்படும். இது கிழ்க்கண்டவாறு செய்யப்படுகிறது. நன்றாக முத்தின சீந்திற் தண்டை உலர்த்திச் சிறு துண்டுகளாக நறுக்கி இடித்து குளிர்ந்த நீரிலிட்டு ஒரு நாள் ஊற வைக்கவும். பிறகு நன்றாக கசக்கி கசக்கிப் பிழிந்து திப்பியை நீக்கிவிடவும். நீரை வெயிலில் மூன்று மணி நேரம் வைக்க அடியில் மா படியும். அதன் மேல் நீர் தெளிந்து நிற்கும். அந்த நீரை இறுத்து விட வேண்டும். பிறகு வேறு சுத்த நீர் விட்டு கலக்கி மேற்கண்டபடியே தெளியவிட்டு நீரை இறுத்து விட வேண்டும். இவ்வாறே மேலும் இருமுறை செய்து நன்றாக உலர்த்தி மாவை எடுத்துக் கொள்ளவும். It is prepared as follows. Well grown stem of the Creeper is cut into small pieces dried and smashed. Then it is soaked in sufficient quantity of cold water for a day. Afterwards it is well squeezed.

The stem will now look like fibres. Then it is thrown out. The water if left to settle in the hot sun. After three hours the clear water on the top is decanted. Again fresh water is poured and mixed well allowed to settle again. The process must be repeated twice again. A fine white powder remaining at the bottom is completely dried and stored. இந்த சர்க்கரை சுத்த கைப்பு. இதனால் பதினெண் வகை குட்டங்களும், மதுமேகத்தில் உண்டாகும் தாகம், கபப்பிணிகள் அஸ்திசுரம் நீங்கும், This is very bitter. It cures all the eighteen varieties of the skin diseases thirst in diabetis, and diseases due to cold and chillness and fever affecting bones.

சீந்தில் தண்டு சூரணம், சீந்திற் கொடி அடித்தண்டிலிருந்து தயாரிக்கும் சூரணம், Powder made from that of well grown stem of the creeper along with some bazaar drugs.

சீந்துதல், மூக்குச் சீந்துதல், blowing the nose.

சீந்தூசி, see செம்பை.

சீந்தை, see சீத்தை.

சீபம், சரசாண்ட பாஷாணம், a mineral poison.

சீபலம், வில்வம், bael tree Aegle — Marmelos.

சீபன்னம், see குமிழ மரம்

சீபங்கோரை, ஓர் வகைக் கோரைப்புல், fisher man's sedge - Cyperus Venustus.

சீப்பாய்ச்சல், see சீப்பாய்தல்.

சீப்பாய்தல், சீழ் கோர்த்தல், to form pus, to suppurate.

சீப்பால், ஈன்றணிமைப்பால், அதாவது சீம்பால், the first milk given by a cow after calwing. This milk when boiled becomes solid into a cake — Beestings.

சீப்பிடிக்கல், see சீப்பிடித்தல்.

சீப்பிடித்தல், see சீப்பாய்தல்.

சீப்பிதுக்கல், புண்ணினின்று சீழை வெளிப்படுத்தல், to squeeze the pus out of boils, ulcers, wounds etc.

சீப்பிரமியம், see சீழ்ப்பிரமியம்.

சீப்பு, தோளெலும்பு, the shoulder blade - Scapula, 2. விலா வெலும்பு, nib bone; 3. See சீப்பங் கோரை, 4. வாழைக்குலை, bunch of plantain; 5. எலும்புக்கோவை, Skeleton.

சீப்புக் கோரை, சீப்பங் கோரை, club rush bul rush; 2. பயிர்களை, weed, a parasite.

சீப்புச் சரட்டை, முதுகில் சீப்பைப் போன்ற முள்ளுடைய மீன், a species of fish with comb like fins on its back.

சீப்புச் சிப்பி, சீப்பு வடிவமான சிப்பி; an oyster resembling a comb.

சீப்புதல், சப்புதல், sucking.

சீப்புச் சுறாண்டி, see சீப்புச் சரட்டை.

சீப்புப் பணிகாரம், ஓர் வகை அப்பம், a kind of cake or pastry.

சீப்புண், சீழ் கட்டிய புண், ulcer with pus.

சீமந்தனி,
சீமந்தினி, முதற் தடவை கருப்பமாயிருக்கும் பெண், a woman pregnant for the first time - Unigravida 2. ஓர் கற்புடைய பெண், a chaste woman.

சீமணல், நாகமணல், zinc ore.

சீமந்தகம், see சிந்தூரம்.

சீமந்தம், முதுகு நீரிடுகை, முதற் கர்ப்பந்தரித்த பெண்ணுக்கு 1 —

6 அல்லது 8 வது மாதம் உச்சி வகிர்ந்து செய்யும் சடங்கு. இது கரு வளர்ந்து நோயின்றிக் குழந்தையைப் பெறுவதற்காக வேண்டிச் செய்யும் சடங்கு, This is a ceremony performed by Hindus during the course of first pregnancy in accordance with their religious rites for the well being of the child and safe delivery. It is generally done during the 4th, 6th, or 8th month of pregnancy. This helps her to be happy and free from anxiety and fear. The ceremony can be considered as a sort of noitification.

சீமுக்கி, தேவதாளி, Convolvulus genus. (unidentified).

சீமுள்பூ, ஓர் பூடு, a variety of bastard ipecacuanha — Phychotria cranata.

சீமந்த புத்திரன், தலைமகன், eldest son.

சீமூதம், மலை; mountain; 2. பெண் யானை, female elephant.

சீமூதை, இரவு, night; 2. கொடி முந்திரிகை, grape vine, Vitis — vinifera.

சீமூதைவாகி, புகை smoke.

சீமூத்திரம், மூத்திரச் சீழ் போல் வடியும் ஓர் நீர் ரோகம், fat in the urine giving milky appearance — Chylurea.

சீமூலப் பூ, see சீமுள்பூ.

சீமூலம், see சீழ் மூலம்.

சீமை, சீர்மை, superior; 2. வெளியூர், foreign country or place 3. ஐரோப்பிய தேசம், European Country, particularly England; 4. பூண்டின் முதல் மொழி, prefix to plant names as in சீமையாமணக்கு, Baliospernum montanum; 5. ஓர் தேசம், a tract of country as கோணசீமை, (corner country);

5. அந்நிய, foreign as opposed to நாட்டு local or indegenous; 6. அக்கரை தேசம், Country beyond the seas; 7. See அகத்தி, it is a common name prefixed to the names of plants drugs or other articles following the Dravidian languages. The term denotes articles introduced to India from foreign Countries chiefly Europe and America. Formerly the term was used to distinguish one province from another in the same Country and things of greater quality. Sometimes the word 'பறங்கி' is used as in பறங்கிப் பட்டை.

சீமை அகத்தி, see சீமையகத்தி.

சீமை அதிவிடயம், வெளிநாட்டு அதிவிடயம், இது லேகிய வகைகளில் சேரும், Atces as opposed to Indian atees - Aconitum Hetrophyllum. It forms one of the ingrediants in the preparation of electuaries.

சீமையத்தி, சீமையத்தி, which see.

சீமை அமுக்கார், see அசுவகந்தி, as opposed to நாட்டு அமுக்கார்.

சீமை அழவணம், சீமை மருதோன்றி, foreign henna - Syrian Rue Peganum Hermala. Its seeds are imported from Persia. They yield a red dye. They are narcotic. emmenagogue, ematic and anodyne. The powdered seeds are useful in asthma, jaundice, and colic, Wounds are fumigated as the smoke has antiseptic properties.

சீமை அலரி, மஞ்சள் அலரி, foreign Oleander. Thevetia Neridifolia.

சீமை ஆல், பால்மரம், Indian rubber tree - Indian Caeretchonc Ficus elastica alias Slilpnophyllum elasticum.

சீமை இந்துப்பு, கறியுப்பைக் காய்ச்சி எடுத்த பிறகு

மிச்சமிருக்கும் கடல் தண்ணீரை மறுபடியும் காய்ச்சி எடுத்ததினாலுண்டான ஊசிக் கம்பியைப் போன்ற உப்பு. இதுவே பேதியுப்பு, salt prepared form the bittern of sea water which is left after the crystallization of common salt it is generally known as Epsom salt - catharticus amarus.

சீமை இலந்தை, see சீமையிலந்தை.

சீமை ஊமத்தை, ஊதா ஊமத்தை, European thorn apple. Datura Stramonium.

சீமை ஊமத்தையுப்பு, ஊதா ஊமத்தை விதையினின்று எடுக்கும் ஓர் விஷ உப்பு, a poisonous alkaloid found in the thorn apple when obtained it occurs in white prisms.

சீமை எரிவண்டு, ஐரோப்பிய தேசத்திய ஓர் பூச்சி. இது உடம்பில் பட்டவிடங்களில் கொப்புளங்களை எழுப்பும். உலர்ந்த பூச்சிகளினின்றுதான் அக்கினி பிளாஸ்திரி என்னும் எரிவண்டு களிம்பும் செய்வதுண்டு. நமது நாட்டு எரிவண்டுக்கும் இக்குணமுண்டு. இக்களிம்பை மேற்பூசக் கொப்பளிக்கும். அன்றியும் இதைப் பாரிசவாயு, காக்கை வலி, பாண்டு வீக்கம், வாதவலி வீக்கம் முதலிய ரோகங்களுக்கு மேற்பூச்சு மருந்தாக உபயோகிக்கலாம். உள்ளுக்கும் தகுந்த அளவில் கொடுக்க மூத்திர ரோகம், வெள்ளை, சூதகச் சிக்கல், கக்குவான், சரும ரோகம் முதலியவைகள் குணமாகும். blistering fly or common cantharides — Cantharis Vesicatoria. It is an insect found in various part of Europe. When it comes in contact with the body blisters are formed on the body. From the dired insect are prepared plaster of cantharides. The Teline fly obtained in India as similar vesicant properities. It is used

externally in cases of Paralysis, epilepsy, dropsy, artheritic enlargements etc. It is successfully employed internally in cases of disease of the bladder, leucorrhoea, amenorrhoea, whooping cough and some cutaneous diseases.

சீமை ஒலிவை மரம், காட்டொலிவம், foreign wild Olive — Olea dibica.

சீமைக்கஞ்சா, see கஞ்சா.

சீமைக்கடுகு, வெண்கடுகு, white mustard — Sinapis alba - the powder is used poultice.

சீமைக் கடுக்காய், அயல் நாட்டுக் கடுக்காய், gal nut imported from foreign countries.

சீமைக் கமலம், உலாந்தா கமலம், faceted or cut diamond of Hallond.

சீமைக்கர்ப்பூரம், காட்டுக் கஞ்சாங் கோரை, Sage tea plant Salvia genus.

சீமைக்கரி, நிலக்கரி coal as opposed to charcoal கட்டைக் கரி.

சீமைக்கருவேல், ஒரு வகை வேலமரம், a variety of Acacia.

சீமைக்கள்ளி, சாதிக்காய் மரம், nut meg tree.

சீமைக் கத்திரி, ஓர் வகைக் கத்தரி, foreign brinjal.

சீமைக் கற்றாழை, பெருங் கத்தாழை, foreign aloe, great aloe — Fourcroya gingantea. It gives a fibre used in arts and manufacturis.

சீமைக் கல்நார், மேனாட்டுக் கல்நார், asbestos imported from foreign countries opposed to நாட்டுக் கல்நார், which is obtained locally — Lycopersicum.

சீமைக் கள்ளிமரம், சாதிக்காய் மரம், nutmeg tree.

சீமைக்கர்ப்பூரவிலை, காட்டுக் கஞ்சாங் கோரையிலை, camphor leaf — Salvia pebeia.

சீமைக்கர்ப்பூர வல்லி, கர்ப்பூரவல்லி சாதி bastered lavender. Anisochilus Genus, It is opposed to கர்ப்பூர வல்லி (ஓமம் வாசனை வரும்) thick leaved lavender — Anisochilus carnosus alias Meriandra strobolifera.

சீமைக்காசுக் கட்டி வெள்ளைக்காசுக் கட்டி, catechu prepared from crambir plant as opposed to நாட்டுக்காசுக் கட்டி, Indian catechu prepared from different species.

சீமைக்காசினி, see சீமைக்காசுரு.

சீமைக்காசுரு, சீமைக்காசினி அதாவது சிவப்புக் காசல் கீரை, Red sorrel — Hibiscus Sabdariffa.

சீமைக்காடி, ஐரோப்பாவிலிருந்து இறக்குமதியாகும் புளித்தகாடி. Vinegar imported from Europe it is prepared from malt and unmatted grain by the acetous fermentation. It is opposed to அரிசிக்காடி — Rice vinegar or acetic acid prepared from rice malt vinegar — Acetum Britanicum.

சீமைக்காட்டாமணக்கு, கிழக்கு இந்திய தீவில் விளையும் காட்டாமணக்கு, It is opposed to நாட்டுக் காட்டா மணக்கு, gatropha curcas — Croton oil plant of the East Indies Croton tigilium.

சீமைக் காட்டுள்ளி, see சீமைப் பேயுள்ளி.

சீமைக் காண்டாமிருகவிரத்தம், to it makes a red pigment used for dyeing.

சீமைக்கிச்சிலிக் கிழங்கு, கற்பூரக் கிழங்கு இது. இமயமலையினுற்பத்தி யாகும் மருந்துக் கிழங்கு. இது 3 அடி உயரம் மஞ்சட் பூ, கிழங்கு மருந்துக் கடைகளில் கிடைக்கும். சித்தரத்தையைப் போல் இது நீளமாயும் பருமனாயுமிருக்கும். ஒடிக்க உள்ளே வெண்மையாய் இருக்கும். பருசிக்க வாசனை

யாயும் சிறிது விருவிருப்பு முள்ளது. இது கர்ப்பூரக் சிச்சிலி கிழங்கைப் போலவே மருந்துகளுக்கு உபயோகப் பட்டாலும் இது மற்றதை விட மிகச் சிறந்தது. Orange root or Europe Zedoary - Hedychium Coronarium alias H spicatum. It is a herbaceous plant found on the Himalayon region 3 feet high yellow flowers. The root is available in bazaars. It is long and broad but different in being very white internally. It is fragrant and slighlty warn in taste but not pungent. It is used medicinally for the same purpose as long zedoary but this is more preferable.

சீமைக் கிழங்கு, ஓர் வகைக் கிழங்கு, a kind of foreign root Colocasia - Autiquorum useful in piles and congestion of the portal system. The juice of petioles is highly useful in arterial bleeding and wounds. It is used as ear drops in ear ache. For Scorpion sting and insect bite is rubbish on the affected part. The juice of the black species is used for bubo and inflamed glands, internally it is a Laxative.

சீமைக் குங்கிலியம், ஆஸ்திரேலியா, நியூசிலாண்டு இவ்விடங்களில் உற்பத்தியாகி இந்தியாவிற்கு இறக்குமதியாகும் குங்கிலியம், Foreigner damer such as those from Australia and New Zealand and imported into India.

சீமைக் கொஞ்சி, நாகக் கொஞ்சிச் செடி, இது பெரிதாயும் அழகாயும் அடர்த்தியாயுமிருக்கும். இலைகள் கருப்பு கலந்த பச்சை நிறம் பளபளப்பு, சிவப்பு காய்கள், குளிர் காலத்தில் காய்க்கும். An daman satin wood — Cinabor, Murraya Exotica. A large handsome buhy shrub with shining dark green leaves bears small red berries in cold season. It is a religious plant. It is planted for ornament.

சீமைக்கொட்டைக்களா, கொட்டைக்களா, tomitomt Flacourtia Inermis.

சீமைக் கொய்யா, சீனக் கொய்யா, Chinese guava Pridium — Cattleyianum.

சீமைக் கொறுக்காப்புளி, see கொறுக்காப்புளி.

சீமைக் கொறுக்காய்ப்புளி, see கொறுக்காய்ப்புளி.

சீமைக் கொன்றை, see சிவப்புக் கொன்றை.

சீமைச்சடா மாஞ்சில், சடா மாஞ்சில், இதன் ஆணிவேர் வெகு நீளம். அதன் அடியில் அநேக சல்லி வேர்களிருக்கும். இது வாசனையும் தித்திப்பாயுமிருக்கும். ஆனால் சூட்டைத் தரும். சூதக வலிக்கு ஓர் கைகண்ட மருந்து, தாபகரம் வறட்சி இவைகளுக்குச் சூரணம் செய்து கொடுக்கலாம். இதன் தைலம் மஞ்சளாயிருக்கும். தலை மயிர் வளரும். நரை மயிர் கறுக்கும். Common valerian root. This is very useful in dismenorrhoea, oil extracted from it can be used as hair dye.

சீமைச்சதாப்பிலை, அருவதா இது கருப்பையிலிருக்கும் பிண்டத்தை வெளிப்படுத்தும், It is a herb. Its leaves are used for expelling the foetus from the womb.

சீமைச்சதாவேரி, சீமைத் தண்ணீர் விட்டான் கிழங்கு, South African climbing asparagus — Asparagus — Sarmentosus.

சீமைச் சரக்கு, ஐரோப்பிய அமெரிக்க தேசத்திலிருந்து வரும் மருந்து சாராயம் போன்ற மதுசரக்கு, medicinal drugs or intoxicating drugs like Beer, Vine Brandy imported from Europe and America.

சீமைச் சாதிக்காய், வாசனைச் சாதிக்காய், fragrant nut meg. Myristica Frangans. It is opposed to நாட்டுச் சாதிக்காய், ordinary native nut meg Bombay mace tree.

சீமைச் சாமந்தி, பாரசீக சாமந்தி. இது பாரசீகத்திலிருந்து கொண்டு வந்ததாலிப் பெயர். இது பஞ்சாப் தேசத்தில் பயிரிடப்படுகிறது. இதிலிருந்து எண்ணெய் எடுத்து, சுறுசுறுப்புண்டாக்கவும், வலிப்பைப் போக்கவும் கொடுப்பதுண்டு. இதன் பூக் கஷாயம், உடம்பிற்கு பல விருத்தியையும் சீரண சக்தியையும் குமட்டலையும் முண்டாக்கும். மேலும் சூதகத்தடை, சூதக சன்னிக் குதவும். இதை வாலையிலிட்டு எரித்து எண்ணெய் எடுக்கப்படும். European Chamomile Anthemis — Nobilis. It is brought from Persia and cultivated in Punjab. Volatile oil is prepared from the flower heads and is prescribed as a stimulant, tonic, stomachic and anti Spasmodic. The infusion of the flowers is a bitter tonic and carminative and promotes emetic action. It is useful in hysteria and suppression of menses. It is opposed to wild chamomille or country Chamomille — Matricaria Chamomille. See also சாமந்தி.

சீமைச் சித்திர மூலம், ஓர் வகை முள்ளுச் சித்திர மூலம், foreign plumbago — Pedilanthus Tithymaloides. It bears thick fleshy leaves and small crimson unattractive flowers.

சீமைச் சீந்துகம் காட்டுப் புளி, manilla tamarind — Pithacolobium Dulce. See கொறுக்காப்புளி.

சீமைச்சிவழை, குராசான் சிவதை வேர், இது இலேசாகவும், நடுவில் துவாரமும், வெட்டுண்ட இரண்டு பக்கமும் பிசின் படிந்திருக்கும். உட்புறம் வெள்ளை அல்லது மஞ்சளாயிருக்கும். கருப்புச்சாதி நஞ்சுக் குணம் வாய்ந்தது. ஆகவே அது நீக்கப்படும். இதை பேதியாக உபயோகிக்க, கபம்

எரிந்து சத்து பித்த நீர் கட்டு இவைகளை வெளிப்படுத்தும். கடுக்காயுடன் கஷாயமாக உபயோகிக்க, காக்கை வலி, பைத்தியம், கால் நரம்பு வலி, இவைகள் போம். இதைச் சூரணம் செய்து காப்பியாகக் காய்ச்சி உபயோகிக்கலாம். Khurasan or Indian jalap convolvulus Terpethum, Root bark is light and is used in Medicine. The centre woody portion is rejected. It is white or yellow. The cut ends exhibit a resinous deposit. The black variety is very virulent and is generally not used in Medicine. It is cathartic as such removes phlegms, over burnt tissues, accumulation of billious deposits. When used as a decoction with gallnut it forms a useful remedy in epileptic fits, lunacy nervous pain of the limbs etc. Its powder can be used like coffee powder. See also சிவதை வேர்.

NOTE: True jalap is known commercially as Veraleruz jalap which is not available in these parts. Another variety is Tmepico jalap — Ipomaia simutens.

சீமைச் சிறுவேல், common wattle — Acacia decurrens.

சீமைச் சீரகம், ஓர் வகை பிளப்புச் சீரகம், a species of cuminseed. Carum - Nigrum.

சீமைச் சுண்ணாம்பு, சுத்தி செய்த சுண்ணாம்பு, இது நாட்டுச் சுண்ணாம்பினின்று தயாரிக்கப்படும். இது மெதுவாயும் வெண்மையாயுமிருக்கும். இதற்குப் புளிப்பை எடுக்கும் குணமும், துவர்ப்பும், தண்ணீர் இழுக்கும் குணமுமண்டு. ஆகவே புண், புரை இவைகளின் மேல் தூவலாம். அன்றியும், மந்தபேதி, அசீர்ண பேதி, இருமல், அதிசாரம், சூலையெரிவு, வயிற்றுப் புளிப்பு இவைகட்கு உபயோகிக்கலாம். இதைச் சூரணித்து சாதிக்காய், மிளகுத் தூளுடன் சேர்த்துக் குழந்தைகளுக்குக் கொடுக்க, குடலுக்கு வலுவுண்டாகி இரணங்களை மாற்றும். மருந்தின் விஷத்தையும் முறிக்கும். நாட்டுச் சுண்ணாம்பு சாம்பல் வர்ணமாயிருக்கும். இதில் அனேக விதமுண்டு. சிவப்பு, ஊதா, சாம்பல் வர்ணம், கருப்பு முதலியன. சிவப்பு திருவனந்தபுரத்திலும், கருப்பு தஞ்சாவூரின் சமீபம் வல்லத்திலும் கிடைக்கும். Yellow limonites chalk - prepared chalk which is obtained from native chalk - Creta praeparata — It is soft and white - amorphous carbonate of lime - Carbonus Calcis. It is medicinally antacid, astringent and absorbent. Finely powdered chalk sprinkled over-ulcers, excoriations etc acts by absorbing discharges. More over it proves serviceable in diarrhoea indigestion, acidity of the stomach, burning sensation of the heart - chest, advanced stage of bronochits. When mixed with the powders of nutmeg and pepper, its efficacy is increased and forms a useful in bowe complaints of children by removing inflammation. This powder is known as aromatic chalk powder — Pulvis cretae Aromatica.

NOTE: 1. It can be converted into quick lime by calcination and used for all the purposes of ordinary lime stone. It dissolves in dilute muriatic acid. Red chalk is plentiful in Travancore, black near Vallam near Tanjore.

NOTE: 2. Geological chalk formation occur at Golatoor near Trichy and extends towards Vridachalam, Cuddalore, and Pondicherry. Here it occurstinged with various colours - red, purple grey and black. Prepared chalk is used in polishing metals and glass, in painting and white washing. Imported native chalk is too hard for use. It is opaque of a grey white colour.

சீமைச் செம்பை, பரங்கி வேல், foreign solah - Parkinsomia Aculeata.

சீமைச் செம்மரம், சீமை சப்பங்கம். இது வெளிநாட்டு மரமாயினும், இந்தியாவிற் கொண்டு வந்து பயிராக்கப்பட்டது. இது வத்தங்கி மரத்தைப் போலில்லாவிட்டாலும், குணத்தில் ஒன்றுதான். இம்மரத்தின் வைரந்தான் சிவப்பாயிருக்கும். இது வாசனையாயும் தித்திப்பாயு மிருக்கும். இதில் துவர்ப்புச் சத்துண்டு. இதன் கஷாயம் குழந்தைகளின் விடாபேதிக்கும், பெண்களுக்குக் காணும் வெள்ளையில் யோனிக்குள் வஸ்தி செய்யவும் பிளவையில் ஒழுக்கக் குறைக்க இதைத் தைலரூபமாக, பூசு மருந்தாக உபயோகப்படும். Log wood tree - Haematoxylon Campechianum. A native of America and West Indies. but introduced into India. Although it differs from Vathangi (heart wood) Haema toxylli Lignum in appearance, in qualities they are similar. The wood is black externally and reddish brown internally. It contains tannic acid and is an astringent and tonic. Its decoction is used in chronic or atonic diarrhoea especially in children, as douche in leucorrhoea and the oil prepared from it is applied over carbuncle to reduce the amount of its discharge.

சீமைச் செவ்வந்தி, சீமைச் சாமந்திப்பூ; இதனால், பெண்களுக்கு உதிர அழுக்கு வெளியாகும். பிரசவ அழுக்கும் போம், It act as emmenagogue.

சீமைச் சேம்பு, see களற் சேம்பு.

சீமை கொட்டைக்களா, see சீமைச் சொத்தைக்காளி, ஓர் வகைக்களா செடி.

சீமைச் சொத்தைக்காளி, சொட்டைக்களா இது ஓர் முட்செடியின் பழம், Sweet thorn fruit Flacourtia Inermis. Nilgiri coronda.

சீமைச் சோபிதம், see ஊதளை.

சீமைச் சோம்பு, சேக்கு விதை, இது குடலுக்கு வலிவையும், சீரண சக்தியையும் கொடுக்கும். இதை வறுத்து தூள் செய்து கறி மசாலையாகவும் உபயோகிப்பதுண்டு. குடிநீரிலும் வாசனைக்காக உபயோகிக்கலாம். இது வயிற்றுப் பொருமல், வயிற்று நோய், இவைகளைப் போக்கும். ஆகவே, இதனின்று தைலம் இறக்கி, வயிற்று வலிக்கு கொடுப்பதுண்டு. பேதியுப்போடு கலந்து அனுபானமாக உபயோகிக்கலாம். foreign anise - caraway seeds - Carum cari-fructus. It is stomachic and carminative. Seeds parched and powdered is used to falvour curries and also. drink. It proves serviceable in flatulence and colic. The oil obtained from the seeds by distillation process is given in atonic dyspepsia. It is a good vehicle for saline purgatives.

சீமைத்தக்காளி, சீனத் தக்காளி, இது சிவப்பு அல்லது மஞ்சளாயிருக்கும். இப்பழம் பழ வகையிலும் கறிகளுடனும், குழம்பிலும் சேர்க்கப் படுகிறது. Tomato, Lycopers icum Esculentum, Fruit is red or yellow and is eaten as salad and is used in curries and sauce.

சீமைத் தண்ணீர் விட்டான் கிழங்கு, see சீமைசதாவேரி.

சீமைத்துத்தி, வெண் துத்தி, இது பர்ஷியா தேசத்தினின்று கொண்டு வரப்படும். இதன் விதை அழற்சியை மாற்றும், நீரைப் பிரிக்கும். இளைப்பை யாற்றும், பூக்கள் குளிர்ச்சி, நீரைப் போக்கும். வேர் துவர்ப்பு, அழற்சியைத் தணிக்கும். கஷாயமிட்டுச் சர்க்கரை கலந்து கொடுக்க இருமல் முதலியன போம். இலைகளை எண்ணெய் ஊற்றி வதக்கி தீ(று)னு கட்ட கொப்புளம் பாம்பு கடித்த புண் இவைகளுக்கு வைத்துக் கட்டவும் ஒத்தடங் கொடுக்கவும் உதவும் - foreign tooty or marsh mallow — Althaea Officinalis. The different parts of the plant are imported from Persia Seeds are

demulcent, diuretic and febrifuge, flowers cooling and diuretic, roots astringent and demulcent. The decoction of the seeds and root with sugar is given for cough. Leaves with a little oil is used as poultice or for fomentation. It is useful in borns and sores caused by snake bite.

NOTE: The species ROSEA is the English hollyhock. The althaea of the Portuguese at Goa is Grevivia Scabrophyla. The roots of shoe flower are dried and sold in bazaar's as foreign toothe.

சீமைத் தேவதூரி, see *சீமைத் தேவதாரு.*

சீமைத் தேவதாரிப் பிசின், சுருள் தேவதாரி மரத்தின் பிசின் இது மருந்தில் உள்ளுக்கு உபயோகிக்க வயிற்றுக்கு வலிவும், வெளிக்குப் பற்றுப்போட கட்டிகள் பழுக்கும், turpentine of English deodar Pinus Longifolia. It is obtained by incisions on the tree. It is used internally as stomachic and externally as plaster and applied over abscess for quick supperation.

சீமைத் தேவதாரு, சுருள் தேவதாரி, English deodar — Pinus Longifolia.

சீமைநரி வெங்காயக்காடி, சீமை காட்டுள்ளிப் புளிப்பு, இது சீமை நரிவெங்காயத்தை ஏழுநாள் காடியில் ஊறவைத்து, பிறகு இதற்குச் சாராயங் கூட்டி வடிகட்டிய தெளிவு, Vinegar of squil. It is prepared by macerating the squill and soaking in the acetic acid for seven days, and then some spirit is added and strained.

சீமை நரிவெங்காயச் சூரணம், காயவைத்து இடித்த சீமைப் பேயுள்ளிப் பொடி, Powder prepared out of sliced and dried bulb of squill.

சீமை நரிவெங்காயப் பாவளத் திரவியம், காரீயத்தில் ஊறவைத்து வடித்த குடிநீர். இது பாண்டு, இருமல், காசம் முதலிய சளி ரோகம் இவைகளுக்கு உயோகிக்கலாம். tincture of squill - prepared by macerating the squill and soaking it in spirit sufficiently and then filtered it is a good adjunct ot cough and acts benificially in heavy breathing due to dropsy, chronic bronchitis, asthma and other catarrhal affections.

சீமை நரிவெங்காயப் பாணிதம், சீமைப் பேயுள்ளிப் பாகு, Syrup of squill.

சீமை நரிவெங்காயம், சீமைக் காட்டு வெங்காயம், இது மத்திய கடற் கரைகளில் விளையும். இதை மெல்லிய துண்டுகளாக அறுத்துக் காயவைத்து பதப்படுத்தி ஏற்றுமதியாகும். இது கோழை யறுக்கும், நீரைப் பிரிக்கும். அதிகளவில் வாந்தியும் பேதியு முண்டாகும். இதைக் குழந்தைகளுக்குக் காணும் தொண்டையடைப்பு, கக்குவான் இவைகளுக்குக் கொடுப்பதுண்டு. இது போலவே 'நாட்டினத்துக்கு நரிவெங்காயம்' என்று சொல்லப் படும். Officinal squill - Urgenia Scilla — it is found on the shores of Mediteranian. The bulb is sliced and dried and then exported. It acts as an expectorant and diuretic in small doses; in over doses it is an irritant poison and causes vomitting and motions. It is useful in croup and whooping Cough.

சீமை நறுவிலி, பொன்னறுவிலி. இது சிறு தித்திப்பும் பிசுபிசுப்புமுள்ள ஓர் வகை நறுவிலி. இதை மேற்கு தீவுகளிலிருந்து கொண்டு வந்து பயிராக்கப்பட்டது. golden sebesten — Cordia speciosa. It is a small tree introduced from the West Indies.

சீமை நன்னாரி, சாரசம், சீமை நன்னாரி வேர், இது அமெரிக்கா தேசத்தினின்று கொண்டு வந்து பயிராக்கப்பட்டது. இதன் வேர், அனேக அடி நீளம். இறகின்

பருமன் அடுத்தடுத்து கணுக்களுண்டு. இவ் வேர்ப்பட்டையில்தான் சத்துண்டு. இது பலவிருத்திக்காகவும், மேகம், வாதசூலை முதலிய நோய்களுக்கும் உபயோகப்படும். Jamica sarasaparilla — Smilax Officinalis. It was brought from central America. Roots are several feet long with joints at short distances and about the thickness of a quill. The virtue of it resides in the bark. Smilacine is its active principle. It is an alterative tonic useful in Syphlitic and chronic rheumatic affections.

சீமை நன்னாரி திரவசத்து, சாரசவேரின் நீர்ச் சத்து, Liquid extract of sarasparilla — Extractum Sarsae Liquidum.

சீமை நன்னாரி வேர், ஜமெய்கா, அமெரிக்கா தேசங்களிலிருந்து இறக்குமதியாகும் காய்ந்த வேர். இதில் அனேக வகை களிலிருந்தாலும் பொதுப்பட மாப்பசையுள்ளது. மாப்பசையற்றதென இரு வகைத்து, இதனின்று கஷாயம் ஷர்பத் முதலியவைகள் தயாரிக்கப்படும். பொதுவாக இதற்கு வியர்வை அதிகப்படுத்தவும், மூத்திரத்தை வடிக்கவும் பலத்தை உண்டாக்கவும், உடம்பிற்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கவும் சக்தி வாய்ந்தது. ஆயினும் கர்ப்ப மேகம், நீடித்த சூலை, வாதப் பிடிப்பு, சரும நோய் முதலிய நோய்களுக்கு உபயோகமாகும். see சீமை நன்னாரி, dried root of jamaica and America sarsaparilla — Smilax Officinalis — Although there are different varities distinguished from the place from where they are imported According to the character of the layers contained in these roots they have been generally classified in to two namely non meal and mealy.

From the root bark is prepared decoction and syrup of sarsaparilla. It is supposed to be a diapphoretic, diuretic alternative and tonic. It is extensively employed in the treatment of consitutional syphilis, chronic forms of gout, rhuematism and skin diseases.

NOTE: Very little that is definite can be stated with regard to the action of sarasaparilla upon the animal economy. By some practitioner it is regarded as a remedy of great value, by other as possessing but little power. As a rule, it is more relied on by surgeons than physicians.

சீமை நாபி, சீமைவச நாபி, aconite imported from Germany — Aconitum Napellus see சீமை நாபி வேர்.

சீமைநாபிக் களிம்பு, வசநாபிக் களிம்பு, ointment of Aconitia unguentum Aconiti.

சீமைநாபித் தைலம், வசநாபி எண்ணெய், aconite liniment — Linimentum Aconiti.

சீமைநாபி வேர், உலர்ந்த வசநாபிவேர். இது ஜெர்மனியிலிருந்து இறக்குமதியாகும். வேர் முழுவதும் கசப்பும் விருவிருப்பும் மரத்தல் குணமும் வாய்ந்தது. இதினின்று நாபிக்காரம் தயாரிக்கப்படும். இது வெண்மையாயிருக்கும். இதன் தூளை மிகுதியான அளவில் உள்ளுக்குச் சாப்பிட கைகால்களில் தடதடப்பும், மரத்தல், சோர்வு, மாரடைப்பு, நீர்ப்போக்கு மேற் சுவாசம் முதலிய குணங் களேற்படும். உயிருக்குத் தீங்கு விளைவிக்குமளவில் சாப்பிட பஞ்சேந்திரியங்களும் ஒடுங்கி, இழுப்பு, மூர்ச்சை கண்டு மரணம் உண்டாகும். சிறியவளவில் நாட்பட்ட வாதப்பிடிப்பு, சூலை, நரம்பு நோய், நெஞ்சுவலி, பாண்டு முதலிய நோய்களுக்கு உள்ளுக்கும் வலியைப் போக்க மேற்பூச்சு மருந்தாகவும் உபயோகப்படும், see சீமை நாபி, dried root of Aconite Aconiti Radix. It is imported from Germany. It is bitter and acrid causing numbness. The alkaloid obtained from the root is a white uncrystallisable solid known as

Aconitia. Course powder of the root when taken in large doses course tingling in the extremities followed by numbness and a feeling of faintness with intermittent action of the heart; considerable increase in the urinary secretion and diuresis is produced.

In dangerous and fatal doses there is loss of five senses followed by convulsions, syncope and death. In small doses it is used internally in the treatment of acute and chronic rheumatism, gout. neuralgia, diseases of the heart, dropsy etc. It is externally applied for cessation of local pain.

சீமை நாயிராஞ்சி, see சீமை நாய்விருஞ்சி.

சீமைநாய் விருஞ்சி, ஓர் வகை நாயிராஞ்சி — aaron's rod Stachy tarpheta indica.

சீமை நிலக்கடம்பு, ஓர் வகைக் கடம்பு, a variety of Codamba — Justicia Acaulis.

சீமை நிலவாகை, மேனாட்டு நில ஆவாரை, African Senna see சூரத்தாவிரை.

சீமை நில வேம்பு, சூரத்து நில வேம்பு, அயல் நாட்டு வேம்பு, இதற்குத் திரட்டுக்குச்சி எனவும் பெயர். இது 3 அடி நீளம், கசப்பு, இதை வெந்நீர்க் கஷாயமாக அசீரணம், குன்மம், முறைசுரம், குளிர்க் காய்ச்சல், கர்ப்பிணி வாந்தி பலவீனம் முதலியவைகளுக்குக் கொடுக்கலாம். french chiretta — Andrographis paniculata. It decoction is useful for Intermittent fevers. Malaria, indgestion etc.

சீமை நிலாவிரை, வெள்ளைப் பொன்னாவிரை Alexandrian senna — Cassia obovata.

சீமை நீலி, மேனாட்டு நீலிச்சாயப்பூடு, West Indian indigo or foreign indigo — Indigo fera Anil.

NOTE: It is a larger plant than the. indian indigo, It is obtained

in Mexico and Brazil and it was from this plant that anidine was first obtained.

சீமை நூக்கு, மேனாட்டு நூக்க மரம், tree mahogani — Suristenia Mahogani.

சீமை நெல்லி, சீமைச் சம்பு, West Indian myrtle — Eugenia imflora, 2. ஓர் வகை நெல்லி, barbadoes cherry — Malphigia glabra.

சீமைப் பச்சை மிளகாய், ஊசி மிளகாய் ஊறுகாய் போடவுதவும், needle chilly — Capsicum Minimum. It is chiefly used for making chilly vinigar.

சீமைப் பருத்தி, மேனாட்டுப் பருத்தி, West Indian Cotton such as Barbadoes, Bourbon, Egyptian, Georgian, Mexican Neworleans sea islands etc. Gossypium — Racemossum.

சீமைப்பலா, ஈரப்பலா, bread fruit — Artocarpus incisa.

சீமைப்பனை, மோரீஸ் பனை, mauritus palm — Latania Commersonii.

சீமைப்பிசின், அம்மோனியாப் பிசின் — gum ammoniac. It is the product of Dorema Ammoniacum; 2. சகமுனியாப் பிசின். இது ஓர் வகைக் குக்குலு. இதை மாமூதா என்றும் சொல்வதுண்டு, gum Scammony — Convulvolus scammonia. The gum - resin குக்குலு, is obtained from the incision of the root. It possesses Cathartic and anthelmintic actions.

சீமைப்பிச்சி, சீன வெண்பிச்சி, Chinese, Trachelospermum — Jasminoides.

சீமைப் பித்தளை, ஜெர்மன் வெள்ளி, German silver.

சீமைப் பிரப்பமரம், இலங்கை பிரம்பு, Ceylon oak Schleichera — Trijuga.

சீமைப்புளி, சிவப்புப் புளி, red tamarind — Adansonia ligitata; 2.

கொறுக்காப்புளி, manilla tamarind prospis duleis.

சீமைப் புளிச்சை, ஓர் வகை புளிச்சைக் கீரை, hemp leaved hibiscus — Hibiscus Sabdariffa.

சீமைப்பூசினி, வெள்ளைப் பூசனிக்காய், an egg shaped gourd known as vegetable marrow — Spanish gourd — Cucurbita ovifera.

சீமைப் பேயுள்ளி, சீமை நரிவெங்காயம். இது மத்தியத் தரைக்கடலின் தென்கரை மாகாணங்களில் விளையும். இது கசக்கும். இதை துண்டுகளாக அறுத்துக் காயவைத்துப் பதப்படுத்துவார்கள்.

சிறியவளவில் சுறுசுறுப்பையும் கோழை நீக்குந்தன்மையும், நீர்ப்பிரிக்குங் குணம் வாய்ந்தது. அதிகவளவில் வாந்தியும் பேதியுமுண்டாகும். Scilla or squill — Scila maritima. It is grown in the Southern Coasts, bordering the Mediterranean. The bulb is sliced and dried. The pulverised powder acts as a stimulent, expectorant and diuretic in small doses; in large doses produces vomiting and purging.

சீமை மகிழம், ஓர் வகைப்பாலை, இதன் காய் ஊறுகாய்க்கும் கறிக்குமுதவும், foreign ilanjy. Sideroxylon. Tonentosum. The fruit is made into pickles and curry; 2. ஓர் வகை மகிழ மரம், iron wood of the Cape Sideroxylon inerme. 3. chryosophyllum cainita.

சீமை மணத்தக்காளி, பெருந்தக்காளி, இதுவே எருமைத் தக்காளி, see சீமைத்தக்காளி, tomato buffalo winter cherry — Lycopersicum esculentum, alias Solanum lycopersicum.

சீமை மரவள்ளிக் கிழங்கு, மேனாட்டு மரவள்ளி, Mendoza arrow root — Canna Achirus. (typicus)

சீமை மருது, ஓர் வகை மருது. இதன் பூ வெள்ளை, இலை வாசனையா யிருக்கும். இது கபால நோய்களுக்கு உபயோகப்படும். காய்க்கு வாந்திக்கும் குணமுண்டு. இலையை தண்ணீரில் கொதிக்க வைத்து அத்தண்ணீரை வாய் வேக்காட்டிற்கு, கொப்பளிக்க உதவும். இதன் விதையை அரைத்து, தேள் கடிக்குப் பூசலாம். விதையைப் பொடித்து அஞ்சனக் கல்லோடு சேர்த்து மை தீட்டலாம். Foreign mindie or Common myrtle — Myrtus Comminis — it is a shrub with white flowers; leaves have a pleasant odour and are useful in cerebral affections; fruit is emetic gorgling of the decoction of the leaves is useful in appthae; paste of the seeds is applied to scorpion sting; powdered seeds are mixed with antimony and used to colour eyelids.

சீமை மருதோன்றி, see சீமையழவணம், இதன் விதை கடுகைப் போலிருக்கும். இதைக் கடுகெண்ணெயிலிட்டுக் காய்ச்சி நாபியில் தடவ, குன்மம் போம், foreign henna — Peganum harmala. The seed resembles that of mustard. The seeds are boiled in mustard oil, and the oil is applied on the naval to cure dyspeptic troubles, see சீமையழவணம்.

சீமை மல்லிகை, see சிமிக்கிப் பூ.

சீமை மாசிப்பத்திரி, மேனாட்டு மாசிப்பத்திரி; இது புதர்களிலும் மலை ராச்சியங்களிலும் விளையும். இதைக் காய வைத்து, கட்டுகளாக விற்கப்படும். ஓர்வித துர் நாற்றமும் கொடிய கசப்புமுள்ளது. இது வயிற்றுக் கோளாறை போக்கும். உடம்புக்கு வலிவு. குன்மத்திற்கு ஏற்றது. புழுக்களைக் கொல்லும். இதை நாட்பட உபயோகிப்பதனால் உடம்பின் நரம்பைத் தாக்கும். Foreign worm wood — Artemisia Absinthium. It is a flowering herb found grown in thickets and mountainous places. Bundles of dried herbs are sold. It has a disagreeable odour and intensely bitter taste. It is stomachic and tonic as well; useful

in atonic dyspepsia; reputed to be anthelmentic, Continued long use of the drug has an injurious effect on the nervous system.

சீமை மாதுளை, இதுவே பேதனா; இவ்விடம் கடைகளில் கிடைப்பதரிது; இது பர்ஷியன் குடாக்கடலிலிருந்து இறக்குமதியாகும். இதன் விதை சப்பென்றிருக்கும். வாசனையிராது. சிவப்பு; இது மெல்லக் கசக்கும். இது அழற்சியைப் போக்கி உடம்பிற்கு வலுவைத் தரும். இதன் பழம் துவர்ப்பு, சர்க்கரையில் கலந்தாவது சர்ப்பத்தாகவாவது உட்கொள்ளலாம். இதனால் அதிசாரக் கூட்டங்கள், சீதபேதி இவைகள் போம். foreign pomegranate — Cydonia Vulgaris — Little found in bazaars. It is imported, from the seaports of persian gulf. Seeds are inodorous and insipid, reddish brown in colour. When long chewed it is bitter. The seeds are demulcent, tonic and restorative; fruit is astringent; edible with sugar in jelly and syrup very useful in all varities of diarrhoea and dysentery.

சீமை மிளகாய், நேபாளத்து மிளகாய்; காந்தாரி மிளகாய்.. இது பார்வைக்கு வித்தியாசமிருந்தாலும் குணத்தில் ஒத்திருக்கும். இது காய்ந்தது. வாசனையிராது. ஆனால் காரமும் விருவிருப்புமுள்ளது. உடம்பிற்கு சுறுசுறுப்பை உண்டாக்கும், கறி மசாலைக்குதவும், இது சில சமயங்களில் அசீரணம், கழிச்சல் படுக்கையில் கிடத்தல் முதலியவைகளுக்கு உபயோகமாகும். உடம்பில் தேய்க்க சிவக்கும். கொப்பளிக்கு நீராக உபயோகிக்க, தொண்டைக் கம்மல் போம். இதன் களிம்பு கீல் வாயு, கை கால் வலி, இவைகளுக்குப் பூசலாம். Nepal chilly, Capsicum Nepalensis — foreign chilly — Capsicum Fastigiatum Although it differs in appearance, it has the same properties as those of our chilly. It is intensly hot in taste, used chiefly as a condiment. It is a stimulent. In atonic dyspepsia, diarrhoea and extreme prostration, it sometimes proves as an invaluable remedy. Decoction of it when used as gorgle removes sore throat an ointment made out of it is applied externally for Rheumatism and Arthritis.

சீமை முயல், மேனாட்டு முயல், Europe hare or rabbits. Lepus — Ruficandatus.

சீமை முள்ளங்கி, மேனாட்டுக் கறி, an European vegetable of the cabbage genus — Turnips. It is cultivated on account of its esculent root.

சீமை மூசை, see வச்சிரமூசை.

சீமையகத்தி, பேயகத்தி, இதற்கு வண்டு கொல்லி, மலைத்தகரை, வண்டு கடியிலை எனப்பல பெயருண்டு. இது சாதாரணமாய் தோட்டம், பங்களாக்களில் காணலாம். இச்செடி *8 — 12* அடி பூ மஞ்சள் நிறம். இதன் இலை இரசத்தை எலுமிச்சம்பழம் சாற்றோடு கலந்து வண்டுக்கடி படர் தாமரை முதலிய படை ரோகங்களுக்குப் போடலாம். இலையை இடித்துப் படையின் பேரில் தேய்க்க குணமுண்டாகும். இவ்விலையைச் சுண்ணாம்பு தண்ணீர்க்காடி தோல் மெழுகு தேங்காயெண்ணெய் இவற்றோடு சேர்த்துக் காய்ச்சியும், அல்லது பச்சையாக அரைத்தும் தேய்க்க எல்லாவித விஷ கடிகளும் அரையாப்பு முதலிய மேகக் கட்டிகளும் குணமாகும். அன்றியும் இதனால் இரசதாது, கிருமி, உஷ்ண சொறி, தினவு நீங்கும், Broad leaved Cassia or West Indian Sesbane Cassia Alata. It is known by different names — ring worm shrub, mountain cassia winged senna etc. Shrub 8—12 ft. with yellow flowers. It is grown for its beautiful inflorescence in the gardens. Juice of the leaves mixed with lime juice or salt is applied

on ring worm. Fresh leaves are bruised and rubbed over the surface. The leaves bruised into a paste and mixed with an equal weight of borax is applied over the surface of ring worm and other similar affections. Decoction of the leaves is used as a mouth wash in stomatitis. It is used for herpes and venereal affections. It is a tonic expectorant and astringent. The paste of the leaves is applied for poisonous bites, bubo and other venereal affections.

சீமையதிமதுரம், அயல் நாட்டு அதிமதுரம், sweet root — Glycirrhize glabra.

சீமையத்தி, தேன் அத்தி, இது குளிர் தேசம், மலைச்சாரல் இவ்விடங்களில் பயிராகும் நாட்டு அத்தியை விடப் பெரிது. பழத்தின் உள்ளே சிறு விதைகளுண்டு, பிசுபிசுப்பாயும், தித்திப்ப ாயும் சதைப்பற்றுள்ளதாயு மிருக்கும். இதைச் சாப்பிட, தொண்டை வறட்சி போம். இதை காயவைத்து தேனில் ஊறப்போட்டு வெளியூருக்கு ஏற்றுமதியாகும். இது இரத்தத்தை விருத்தியாக்குவதுடன் மலத்தை இளக்கச் செய்யும். அன்றியும் இதனால் தேக அழற்சி, சோகை, சீதபேதி முதலிய நோய்கள் நீங்கும், Foreign fig tree. Hebrew Teenah — Ficus carica. This variety is chiefly met with in cold countries and mountainous regions. It is abundan in Nilgris, Bangalore, Persia and Afghanistan. Its fruits are bigger than the country figs. They are more sweet and fleshy. The dried fruits preserved in honey are exported. It is a good laxative promotes blood.

சீமையரு நெல்லி, ஓர் வகை யருநெல்லிக் காய், Barbadoes cherry — Malpighia Purnicifolia.

சீமையவரை, மேனாட்டு அவரை, European bean Phaselous — Trilobus; 2. வயல் அவரை, field gram, Phaselous — Vulgaris.

சீமையலரி, மஞ்சள் அலரி, yellow oleander. Thevetia Nerifolia.

சீமையவுத்தி, see சீமையகத்தி.

சீமையவுரி, மேனாட்டு அவுரி, British Indigo. Isatistinctoria.

சீமையழவணம், சீமைமருதோன்றி, வெள்ளைப்பூ. இதன் விதை கடுகளவு இருக்கும். கருப்பு நிறம், கனம், சிறு கசப்பு, இதற்கு வயிற்றுக் கிருமிகளை அழிக்கவும், தூக்கத்தை மூட்டவும், உஷ்ணத்தைக் கொடுக்கவும், சக்தியுண்டு, குடலிலுள்ள வாயுவையும், குடற் கோளாறுகளையும் குணப்படுத்தும் தேக ஆரோக்கியத்தையும் கொடுக்கும். மார்பு நுரையீரல் கோளைகளை நீக்கும். அன்றியும் இதன் கஷாயம், மூர்ச்சை, பக்க வாதம், பைத்தியம், மூளை நோய், பாண்டு, காமாலை, வயிற்று வலி, கால் நரம்பு வலி முதலியவைகளை போக்கும். இதன் ஊறற் கஷாயம், இரத்த சுத்தி, மல இளக்கம், கருப்பம், தாது விருத்தி இவைகளை உண்டாக்கும். இக் கஷாயத்துடன் தேன், நல்லெண்ணெய் சேர்த்துச் சாப்பிட மார்பு கோழை, இருமல், இரைப்பு நீங்கும், Syrian Rue — foreign henna Pegamum harmala. It is a herbaceous plant with white fragrant. flowers, seeds are like mustard in size, black thick with bitter taste. They possess narcotic, antispasmotic, hypnotic, emetic, anthelmentic and emmenagogue action. They also remove flatulence and other intestinal disorders and restore healthy functions. Decoction of the seeds is given internally in cases of collection of phlegm and other chest affections, fatigue, paralysis, mental disorders, cerebral complaints dropsy, jaundice, colic sciatic affections etc. Cold infusion purifies blood, removes constipation, induces conception in woman and promotes secretion of semen. Decoction taken with

honey and sessamum (gingely) oil removes chest affection cough asthma powdered root mixed with mustard oil is applied to the hair to destroy vermin.

NOTE: The seeds are sold in bazaar. They are burnt or used as fumigation to drive away evil spritis. During the forty days of puerperal period it is used with benzoin or mustard seeds for fumigation.

சீமையாதளை, சிகப்பு ஆதளை, foreign castor plant Ricinus — Communis 2. பேதானா, common quince, Cydonia — Vulgaris.

சீமையாதனம், இபிகாக், Ipecacuauha — Cephalis, ipeacuanha.

சீமையாதிதம், குவாசியா, quassia wood — Picraena excelsa.

சீமையாமணக்கு, சீனத்தாமணக்கு, இதன் விதை பேதியாகும். அதிகவளவில் விஷத்தன்மை உள்ளது. இதற்கு நேர்வாளத்தின் குணமுண்டு. மேலுக்குத் தடவ சுருசுருப்பைத் தருவதுமின்றி தோல் சிவக்கும் இதன் எண்ணெய்க்கும் விரேசன குணமுண்டு. இது வாதப்பிடிக்கு மேற்பூச்சு மருந்தாக உபயோகப்படும். வேர் பேதியாகும். இதைப் பொடித்து பாண்டு, காமாலை, முதலிய நோய்களுக்கும் கொடுக்கலாம். Foreign Castar - Baliospermum Montanum. The seeds are drastic puragative in over does it is a acronarcotic poison. It is substitute for croton tigilium and is externally used as a stimulant and rubifacient. Oil from the seeds is a powerful hydrogogue cathartic and it is externally applied in rheumatism. The powdered root is also cathartic and is used in dropsy, jaundice etc, 2. ஓர் அயல் நாட்டாமணக்கு — bronze leaved physic nut —Jatropha Montana.

சீமையாமியம், see கலம்பாவேர்.

சீமையாலமரம், பாற்சோற்றி மரம், இது 30—40 அடி உயரம். மலையாளத்தில் மிகுதி. இதினின்று பால் எடுப்பதுண்டு. இப்பாலை வார்ப்பில் வார்த்து ஆறியபின் பலகைகளாக எடுக்கலாம். அன்றியும், ஒழுகாதபடி பாத்திரங் களுக்கு அல்லது கூடைகளுக்குட்புறம் பூசுவதுண்டு. மெழுகுவர்த்தியாகவும் சுளுந்துக் குச்சியாகவும் உபயோகிக்கலாம். Indian rubber tree or Indian caoutchouc, foreign banyan — Ficus elastica. Tree 30—40 feet high, yields large quantity of milk and when the juice exposed to air, it separates into an elastic substance and the juice is poured formed into pear shaped bottles. By being spread over moulds of clay, it is solide fied into sheets. Caoutchoua furnishes candles and flame - beam (torch) inside of vessels and baskets are smeared with the milk to prevent leakage. The tree is introduced from Eastern Pennisula. It has a spreading habit and has a aerial roots.

சீமையால், see சீமையாலமரம்.

சீமையாவிரை, சியாம் தேசத்து ஆவிரை; அதாவது மஞ்சள் கொன்றை; Sumitra Senna — Cassia — Siamea; 2. see பிரம்புக் கொன்றை.

சீமையிந்துப்பு, ஐரோப்பா அல்லது மேனாட்டு இந்துப்பு, Rock salt imported from Europe. 2. பேதியுப்பு, Epsom salt — Sulphate of Magnesia. It is opposed to நாட்டு இந்துப்பு — see இந்துப்பு.

சீமையிலந்தை, பெரு இலந்தைப் பழம், இது அமெரிக்காவிலும், மேற்கு ஐரோப்பாவிலும் விசேஷம். இக்கனியில் அனேகவித உப்புச் சத்துக்கள் (உழமண்ணுப்பு, சுண்ண உப்பு, சாரவுப்பு, காந்தவுப்பு, அயமண்ணுப்பு, தீமுருகற்சத்து) இவைகள் அடங்கியுள்ளன. மற்றப் பழங்களை விட மேலானது. எளிதில் சீரணமாகக் கூடியது. தினப்படி சாப்பிட்டவுடன்

உபயோகிக்கலாம். ஐரோப்பாவில் ரொட்டி வெண்ணெயுடன் சாப்பிடுவதுண்டு. சமைத்தும் புசிப்பார்கள். அமெரிக்காவில் சிறந்த வுணவுப் பொருளாகக் கொள்வார்கள். மூளையை உபயோகித்து வேலை செய்வோருக்கு இது ஓர் சிறந்த உணவு, அசீரண நோய்க்கு மெத்த உபயோகமானது. Fruit of foreign jujube — Zizyphus Mauritiana. It is abundent in America and South Europe. It is said to contain the principle of many salts — Potassium. Sodium, Magnesium, iron, and phosphrous salts, it excels other fruits as it is easily digestible and can be eaten daily after food in Europe it is used with bread and butter and is also cooked and eaten. In America it is considered as important and superior dish. Even those who suffer from indigestion can use it. It is highly useful to those who do more brain work. 2. See ஆப்பிள்.

சீமையிலுப்பை, மேனாட்டிலுப்பை, foreign Mowah — American bully — Mimusops Manilkara.

சீமையிச்சன், see சீமையீஞ்சு.

சீமையிஞ்சு, ஓர் வகை ஈச்சமரம், Common Indian fern palm. Cycas circinalis.

சீமையூமத்தை, ஐரோப்பா ஊமத்தை, Europe datura or apple of Peru — Datura, Stramonium, See வெள்ளூமத்தை.

சீமையெண்ணெய், ஒலிவை யெண்ணெய், Olive oil. 2. மேனாட்டினின்றும் இறக்குமதி யாகும் எண்ணெய், any oil exported from foreign country; 3. மண்ணெண்ணெய், kerosine; 4. மண் தைலம், crude oil.

சீமையெள்ளிலை, மேனாட்டு எள்ளின் இலை, sesame leaf or bennie leaf of Europe.

சீமைரூமிமத்தகி, பூனைக்கண் குங்கிலியம், எப்பொழுதும் பச்சென்றிருக்கும். செடி, காய்கள் மிகச் சிறியவை. பட்டாணியைப் போலிருக்கும். பூக்கள் சிறிது. பச்சை நிறம், இதன் அடிமரத்தை வெட்ட அதினின்று குங்கிலிய வாசனை யுள்ள பிசின் (மத்தகி) ஒழுகும். இப்பிசின் காய்ந்தவுடன் கண்ணாடியைப் போல் பளப்பளப்பாயும் ஒடியுந் தன்மை யுள்ளதாயும் இருக்கும். இது பல விருத்தி மருந்தாகவும், துவர்ப்புள்ளதால் ஒழுக்கை நிறுத்தும் தன்மை வாய்ந்ததாகவும் கொள்ளலாம். பல்லீறுகளைப் பலப்படுத்தும். ஆகவே சொத்தைப் பற்களுக்கு இதை இடுவதுண்டு. வாசனைக்காகத் திராட்சை சாராயத்திற் கலப்பதுண்டு, Cat's eye resin Turkish olibanum — Pisticialentiscus. It is an evergreen shrub, fruits are very small about the size of the pea; flowers small, green, incision on its trunk yields an aromatic resin called mastiche with balsamic flavour. The resin when dried is brittle glossy and brilliant. It is slightly tonic, and

astringent. It strengthens the gum and used for filling Carious teeth; cuployed also to flavour wines.

சீமை வாகை, தூங்கு மூஞ்சி மரம், rain tree Enterolobium Samau.

சீமை வாதுமை, java almond tree, East Indian Elemi — Canarium commune.

சீமை வாத்து, ஐரோப்பிய வாத்து, நீர் வாத்தைப் போல் அழகாயிராது, European goose, domestick duck — Anas domestica. It will not be elegant as wild duck.

சீமைவிதை, சீமைச் சோம்பு அல்லது கேக்கு விதை — carum carui.

சீமை விளாம்பிசின், ஓர் மரப்பிசின், gum of foreign acacia — Feronia elephantum.

சீமை வெங்காயம், see சீமை நரி வெங்காயம், a species of white onion.

சீமை வெண்டி, கஸ்தூரி வெண்டிக்காய், mask bendy Hibiscus abelmoschus.

சீமை வெள்ளரி, கொடி வெள்ளரி, இதுவே மொலாம் பழம், melon creeper; Cummis melo.

சீமை வெள்வேல், ஓர் வகை வெள்வேல். இம் மரம் 20—25 அடி. கருவேலைப் போலவேயிருக்கும். இதன் பட்டையை வெல்லத் தண்ணீரிலிட்டு வாலையின் மூலியமாய் சாராயம் காய்ச்சு வார்கள். கஷாயமிட்டு வாய் கொப்பளிக்கவுதவும், foreign white acacia — Anasandra — Acacia ferraginea. Tree 20 — 25 ft. high; much resembles Acacia sundra & Acacia catechu. Its bark steeped in jaggery solution aids the distillations of arrack. The decoction of the bark is used as gorgle for diseases of the gum. A decoction with ginger and other ingredients is used as wash for the diseases of the teeth.

சீமை வேலமரம், பெரிய வேலமரம், black wattle — Acacia melonoxylon.

சீமை வேலம்பட்டை, நீலகிரி வேலம்பட்டை, Wattle bark of Australian acacia — Acacia melanoxylon, தோலை பதனம் செய்ய உதவும்.

சீமைவேல், ஓர் வேல மரம், Jerusalen thorn tree — Parkinsomia aculeata.

சீமை வேலஞ் செடி, mimosa wattle — Acacia. dealbata.

சீம்பால், ஈன்றணிமைப்பால், the first milk given by a cow after calving Beesting — see *சீழ்ப்பால்.*

சீயக்காய், சிகைக்காய்; எண்ணெய்க் கசிவை எடுக்குங் காய், இது 3 — 6 அங்குல நீளமாயும், சப்பையாயுமிருக்கும். பூவந்திக் கொட்டையைப் போல ருசிக்கும். உள்ளுக்குக் கொள்ள குடலின் மாசுகளைப் போக்குவதுடன், கோழையையும் அறுக்கும். ஆகவே, இதன்விதையைக் கஷாயமிட்டு உபயோகித்தால் மஞ்சட்காமாலை முதலிய பித்துக் கோளாறுகளை அகற்றும். இதன் சிறிய இலை புளிப்பாயிருக்கும். மிளகு இரசத்தி லிட்டு உட்கொள்ள பேதியாகி, பித்தத்தைக் கழற்றும். இதன் கொழுந்தை, சமையலில் புளிக்குப் பதிலாக உபயோகிப்பதுண்டு. காயை அரைத்து, தலைக்குத் தேய்க்க அழுக்கை அகற்றி மயிரை சுத்தப்படுத்தும். மூன்று வகைப்படும், அவை: 1. காட்டு சீயக்காய், 2. மண்டற் சீயக்காய்; 3. நல்ல சீயக்காய், Soap pod — Acacia Concinna. The pods are 3 to 6 inches long. They have taste like soap nut. They are used to remove the oily matter and dirt from the surface of the body. Medicinally they are deobstruent and expectorant. A decoction of the seeds is used in jaundice and other biliary derangements; small leaves have pleasant acidity and they are put into pepper water to keep bowls open and to work off bile. Leaves are used in cookery as substitute for tamarind; powder or paste of pods are used for washing the hair and kill virmin. There are three varities viz; 1. Mimosa rubicaulis; 2. Acacia intsia; 3. Acacia concinna.

சீயக்காய்ப் பிரமேகம், இதில் மூத்திரம் சத்துடன் சருகாய் விழும். காய்ச்சினால் நார்போல் காணப் படும். சீயக்காய் வாசனை வீசும், This is an urinary disease where in urine smells like the soap pods.

சீயக்கெம்பு, சீயாம் தேசத்தில் எடுக்கப்படும் கெம்பு, Rubies found in Siam.

சீயக் கொழுந்து, சீயக்காய் கொழுந்து, tender leaves soap pod.

சீயங்கல், மட்ட சீயக்கெம்பு, an inferior ruby.

சீயங்காய், see *சீயக்காய்.*

சீயஞ்சிவப்பு, see சீயக்கெம்பு, சீயங்கல்.

சீயப்பட்டுக்காய், பாவட்டங்காய், Indian pavetta — Pavetta indica.

சீயம், எருக்கம்பால், madar milk; 2. கூகை நீறு, arrow root.

சீயம் பாக்கு, இழிந்த பாக்கு, inferior boild. areca nut.

சீயா, ஓர் மரம்; சீயக்காய், a kind of soap pod wattle tree.

சீயாக்காய், அரையாப்புக்காய், see சீயக்காய்.

சீயான், ஓர் வகைப் பூரான், Centepede; 2. See செய்யான்.

சீயில்லா, சீழற்ற, matterless.

சீயு, பலாசு, Bengal Rino — Butea frontosa.

சீய், சீழ், pus.

சீரகக்சூரம், ஓர் வகை பேரீந்து, a kind of date tree.

சீரகக் கடுக்காய், பூ பிஞ்சில் உதிர்ந்து போன கடுக்காய், tender gall nut that has fallen from the tree — unriped gall nut.

சீரகக்கோனி, வசம்பு, sweet flag — Acorus calamus.

சீரகக் கோரை, கன்னிக் கோரை, maiden sedge grass, Cyperus — Fastigiatus.

சீரகக்கோழி, நரை கொள்ளு, a species of horse gram. 2. see சீரகா கோளி.

சீரகச் சக்களத்தி, சீரகத்தைப் போல காணும் விதை. இது சீரகத்துடன் கலந்து விற்கப்படுகிறது. some variety of fruit that looks like cumin which is mixed with real cumin and sold in the bazaar.

சீரகச் சம்பா, ஓர் வாசனையுள்ள சன்னச்சம்பா இது சாப்பாட்டிற்கு மிகவும் சிறந்தது, a kind of paddy.

சீரகசுத்தி, see சீரகம்.

சீரகச் செடி, வெண் சீரகச் செடி, white cumin plant Cygusticum — Cyminum.

சீரகத் துவையல், சீரகத்தையே பிரதானமாகக் கொண்டு தயாரித்த துவையல், chutney prepared with cumin seed as chief ingredient.

சீரகத்தைலம், நல்லெண்ணெய் படி 1, சீரகத்தை ஒரு பலம் கொண்டு தயாரிக்கும் தைலம், பித்த மயக்கத்திற்காகத் தலையில் தேய்த்து முழுகவுதவும். இதனால் கபாலச் சூடு உள்ளனல், மேக தழும்பு போம், Gingelly oil 40 pal — and cumin seeds 1 pal. The later is fried in the oil, filtered and preserved. It is used for oil bath to relieve giddiness, head ache and bilousness.

சீரகநெய், சீரகத்தைக் கொண்டு தயாரித்த மருந்து நெய், medicated ghee prepared with cumin seeds as chief drug.

சீரகபாடி, see கோஷ்டம்.

சீரகபாதிதம், கொடி சம்பங்கி, Creeper Champak — pergularia minor.

சீரக மாத்திரை, உஷ்ணக் காய்ச்சலுக்குக் கொடுக்கும் சீரகம் சேர்ந்த மாத்திரை — pills prepared with cumin as cheif ingredient and given for certain fevers.

சீரகம், இது, இந்தியாவில் அனேக இடங்களில் பயிராகும், இச்செடியின் பூக்கள் வெள்ளை, வேர் விருவிருப்புள்ளது. விதைகள் வாசனையாயும் கசப்பாயுமிருக்கும் இவ்விதை இங்கு பயிராயினும், மிகுதியாக நாம் உபயோகிப்பது, சீனம் பர்ஷிய குடாக்கடலிலிருந்து தான் இறக்குமதியாகிறது. இதன் விதைக்கும் எண்ணெய்க்கும், கொத்தமல்லி விதையைப் போல் சீரணிக்கும் சக்தி வாய்ந்துள்ளது. ஆகவே, கறிக்கு மசாலையில் உபயோகப்படும். 1. நற்சீரகம் see சீரகம் — அரோசகம், வயிற்றுவலி,

பீலிகம், காசம் போம், 2. காட்டு சீரகம், சர்மநோய் போம், 3. பெருஞ்சீரகம், சோம்பு, பீனசம், பீலீகம், அசீரணம், வயிற்றுப் பிசம் போம், 4. கருஞ்சீரகம், மண்டைக்கரப்பான் சிராய்பீனசம் உட்சூடு. தலைநோய் போம், 5. பிளப்பு சீரகம்; 6. நட்சத்திர சீரகம்; 7. செஞ்சீரகம், சீரகசுத்தி - சுண்ணாம்பு நீரில் 7 சாமம் ஊற வைத்து பிறகு உலர்த்திப் புடைத்து எடுத்துக் கொள்வது, இப்படி செய்த சீரகம் மருந்துகள் செய்ய உபயோகப்படும். இதை மிளகுடன் சூரணித்து, அசீரணம் வயிற்றுவலி, பித்த மயக்கம், அரோசகம் இவைகளைப் போக்கும் இவற்றினின்று எண்ணெய் எடுக்கலாம். அரைத்துக் களியாகக் கிண்டி கட்டிகளுக்கு வைத்துக் கட்ட குளிர்ச்சியைத் தந்து அழற்சியைப் போக்கும். எலுமிச்சம் பழரசத்திலிட்டுக் கொடுக்க, கர்ப்பிணிகளின் வாந்தியை நிறுத்தும், Common cumin seed. Cuminum Cyminum it is cultivated in many places in India. Yet it is imported from persion gulf flowers are white, seeds fragrant and slightly bitter. The seeds are carminative. It is used in curry power. Before it is used in medicine it is purified as follows. The seeds are soaked in clear solution of calcium hydroxide for a day, then dried and preserved. The seeds are powdered along with pepper and is used to cure diarrhoea and dyspepsia. Cumin seeds soaked in lime fruit juice for twelve hours, are well dried and powdered. Quarter tea spoon of the powder mixed with brown sugar when administered relieves vomitting and morning sickness. It is useful in for giddiness also.

There are several varities.

1. நற்சீரகம் — Common cumin useful for indigestion & nausa.

2. காட்டு சீரகம், (vermonia Anthelmintica) useful in skin diseases.

3. பெருஞ்சீரகம், (சோம்பு) Ancise useful as aromatic.

4. கருஞ்சீரகம் — Nigella a Sativa useful dismonorrhoea

5. பிளப்பு சீரகம், carum Nigrum used as carminative.

சீரகம், ஓர் நிறுத்தலளவு, a measure of weight; 2. பன்றி, pig; 3. ஓர் ஈந்து a kind of date tree.

சீரகோணி, வசம்பு, see சீரகக் கோணி — 2. வெள்ளைக் காக்கணம், white flowered mussell shell creeper — clitorea ternatea.

சீரகா கோளிகம், ஓர் இமாலையப் பூண்டின் வேர், இதனின்று பால் வடியும். இது எண் வகை மூலிகைகளில் ஒன்று, a root from the Himalaya yielding a milky juice and used by the Hindus as one of the eight principal medicaments.

சீரகிருதம், பால் சேர்ந்த நெய், purified butter mixed with milk.

சீரக ரோகணி, see கடுகுரோகணி.

சீரகவள்ளி, நாய்ச் சீரகவள்ளி, cumin yam — Dioscorea bulbifera; 2. காட்டுக் சீரகவள்ளி a species of wild Malacayam — Dioscorea globosa.

சீரகாதி சூரணம், அசீரணம் அக்கினிமாந்தம் இவைகளுக்குக் கொடுக்கும் சீரகம் மிகுதியாகச் சேர்ந்த ஓர் சூரணம், Mixture of powders where in the cumin powder is the chief ingredient. It is useful for indigestion loss of appetite and diarrhoea.

சீரச்சடம், எருக்கு, madar plant.

சீரசாலம், ஓர் மீன், a kind of fish.

சீரசீடம், பால் புளிப்பதாலேற்பட்ட பூச்சி கிருமி, some bacteria generated by fermentation of milk.

சீருச்சபலம், பாலை, Ape flower — Minusops Kanki.

சீரகாகோளி, பாற்காகோளி, see காகோளி, It is a bulb brought from Morung is Nepal.

சீரங்கி, see கற்கடக சிங்கி.

சீரசந்தானிகம், தயிரோடு கலந்த பால், curd mixed with milk.

சீரசம், உறைந்த பால், coagulated milk.

சீரசம்பவம், புளித்த பால், fermented milk.

சீரசாப்பி, பாலைக் கடைந்தெடுத்த வெண்ணெய், clarified butter churned from milk.

சீரசாரம், பாலாடை, skin of milk; 2. பாலேடு cream; 3. தயிர், curd; 4. வெண்ணெய், butter.

சீரணசாலம், வயிற்றில் உள்ளே இருக்கும் சீரணநீர் பொசியுங் கோளங்களுக்குக் காரணமாகவுள்ள கண்ணறைகள், a variety of columnar cells forming the greater part of tubules of the gastric glands of the stomach — Adecomorphus cells or Principal cells.

சீரணசுக்கிலம், இரைப்பையில் ஊறும் ஓர் வகைச் சத்து, a peculiar animal principle secreted by the stomach — Pepsin.

சீரசீசம், சீமைத்தாழைப் பிசின், resin of pine of America — Pinus longifolia.

சீரசீங்கி, பால் நெரிஞ்சில் — Tragia in volucrata.

சீரசீரம், see சீரகம்.

சீரசுக்கிலம், பழமுண்ணிப்பாலை, unidentified.

சீரணகாலவளவு, see சீரணகாலம்.

சீரணக்கிரமம், see சீரண முறை.

சீரணகாலம், உண்டவுணவு வகைகள் குடலிற் செரிக்கும் நேரத்தில் அளவு இரசதாதுவாக மாற எடுத்துக் கொள்ளும் கால அளவு இங்கிலீஷ் சுகாதார விளக்கப்படி அடியிற் கண்டவாறு குறிக்கப் பட்டிருக்கிறது. period of digestion i.e. actual time taken for digestion for various dishes of food According to modern Hygiene the following table shows the time taken for certain articles of food to get digested.

	மணி நேரம், hours
வேகவைத்த மாட்டுக்கறி, Beef boiled	3
பொரித்த மாட்டுக் கறி, Beef fried	4
வேகவைத்த மீன், Fish boiled	$1^1/_4$ to $2^1/_2$
வேக வைத்த ஆட்டுக்கறி Mutton boiled	3
பொறித்த ஆட்டுக்கறி Mutton fried	3 to $3^1/_2$
பொறித்த கோழிக்கறி fowl fried	$2^1/_2$ to 4
பொறித்த பன்றி இறைச்சி, Pig fried	5
பச்சை முட்டை, raw egg	$1^1/_2$
பொறித்த முட்டை fried or cooked egg	3 to $3^1/_2$
உருளைக்கிழங்கு potatoe	$2^1/_2$ to $3^1/_2$
காய்கறி Vegetables	3 to 4
அரிசி சாதம் cooked rice	1 to 2
ஏடுதயிர் சாதம், curd rice	3 to 4
கோதுமை சாதம் boiled wheat	3 to 4
குழம்பு சாம்பார் சாதம் Sambar rice	3 to 4
சவ்வரிசிக் கஞ்சி வாற்கோதுமை டபாரா sago conjee, wheet conjee	1 to 2
இளநீர், சாராயம், காடி முதலியன Tender cocoanut water, arrack vinegar	3 to 4
பழவகைகள் fruits	3 to 4
சூரணம், லேகியம், கிருதம் முதலிய மருந்துகள்	3

சீரணகால அளவு கூறல் as told by Agastiar.

பொருள்: சீரண காலம் (hours)

பிழிந்த ரசம் Squeezed juices. from leaves roots, stem etc — $2^3/_4$ மணி

அரைத்த மருந்துகள் grinded medicines — 3 மணி

செயநீர்கள் — 3 மணி

குளிர்ந்த நீர் Cold water — 3 மணி

வெந்நீர், Hot water — 6 மணி

காய்ந்தாறிய சலம், boiled & Cooled water — $1^1/_2$ மணி

கஷாயம், Decoction — $1^1/_4$ மணி

கனிரசங்கள், Fruit juices — $2^1/_2$ மணி

அன்னம், Cooked rice — 6 மணி

பால், milk — 8 மணி

தேன், Honey — 5 மணி

தயிர்ச்சோறு, curd & rice (cooked) — $4^1/_2$ மணி

மோர்ச்சோறு, Butter milk and rice (cooked) — $4^3/_4$ மணி

நீர் அன்னம், water and rice (cooked) — 5 மணி

வெண்ணெய் அன்னம், Butter and rice (cooked) — 6 மணி

சாராயம், arrack — 2 or 3 மணி

சூரணம், powder — 5 மணி

தைலம், oil — 5 மணி

இலேகியம், Electuaries 5 மணி

கிருதம், Medicinal ghee — 5 மணி

பஸ்பம், Baspam — $1^1/_2$ மணி

நல்ல பதார்த்தங்கள், Curry — $2^3/_4$ மணி

உயர்ந்த பழ வர்க்கங்கள், High class fruits —3 மணி

கருணைக் கிழங்கு, Ham — 3 மணி

வித்துக் (விதை)கள், Seeds — 3 மணி

அறுசுவை பதார்த்தங்களின் பச்சை, raw articles — 2 மணி

மேற்படி வெந்தது, Cooked articles — 2 மணி

கழுநீர், rice washed water — 2 மணி

காடி, Vinegar — 2 மணி

மா, பொரியுண்டை, மிளகோ தனம், பசுவின் பால் இவற்றை எல்லாம் ஒருவேளை உண்டால் — 6 மணி

வடிகஞ்சி, decanted cooked rice liquid — 3 மணி

வேறுவகை கஞ்சி Conjee — 3 மணி

நல்ல வெல்லம், jaggery — 6 மணி

தேன், Honey — 6 மணி

பச்சரிசி, Raw rice — 6 மணி

கக்கரிக்காய், மற்றக்காய்கள், Cucumber and vegetables — $3^3/_4$ மணி

இளநீர், Tender cocoanut — 3 மணி

சருக்கரை, sugar — 3 மணி

பானக்கம், Sugar water — 3 மணி

தயிர்த் தெளிவு நீர் — 3 மணி

மோர்த் தெளிவு நீர் — 2 மணி

வறுத்த மாவை நீரில் கலக்கிக் குடித்தல் — 3 மணி

காய்ந்த நீர் Hot water — $2^1/_2$ மணி

முக்காற்கூறு, சுண்டிய நீர் Water heated acid reduced to $^1/_4$ — 3 மணி

அருந்தும் பதமாயாற்றிய நீர், Mild hot water — $2^1/_2$ மணி

மரம், செடி, கொடி இவைகளின் பூக்கள், flower — 3 மணி

தளிர்கள், tender leaves — 3 மணி

இவ்வண்ணமாக எல்லா உணவு வகைகளின் சீரணகால அளவை அகத்திய முனிவர் கூறியவாறாம்.

சீரண கோளம், gastric glands.

சீரணக் குறைவு, சீரணத் தளர்ச்சி, impaired or feeble digestion — Caligopepsia.

சீரண சக்தி, செரிக்கும் வலிவு, digestive power of faculty.

சீரணசுரம், அசீரணத்தா லேற்படும் சுரம், fever caused by indigestion.

சீரண பத்திரம், வேப்பிலை, margosa leaf.

சீரணபர்ணம், see சீரண பத்திரம்.

சீரண பாதை, வாயினின்று துவங்கி அபானவாயில் வரை பேரிச்சவ் வினாலாகிய குழல் alimentry canal lined with mucous membrane extending from the mouth to the anus, through which food passes.

சீரணமது மேகம், ஏழு தாதுக்களும் குறைவுபடுங் காலத்திலும் வாதாதி தோஷங்களினால் வாயு சஞ்சார மார்க்கம் அடைபடுங்காலத்திலும் பிறந்து, மதுமேகத்திற்குரிய குணங்களைக் காட்டும் ஓர் வகை மதுமேகம் — a temporary diabetes resulting from the increased formation of sugar due to the irritation of the pneumogastric nerves by which the glycogenic function of the liver is governed.

சீரணமின்மை, அசீரணம் absence or cessation of the digestive function.

சீரண முறை, சீரணக்கிரமம்; அதாவது நாம் உட்கொள்ளும் எவ்வித பதார்த்தங்களும் முன்னர் இரைப்பையிற் சென்று அவ்விடம் பாகம் பண்ணப்பட்ட பின்பு, தம் சுய பேதத்தை யொழித்து பாணீரூபத்தையடையும். இதிலுள்ள எஞ்சிய சக்கை பாகத்தை இரைப்பையானது

மலமாகத் தள்ளும் மேற்கண்ட சக்கை நீங்கிட மிகுந்த பாகம் குடல் வழியாக நீர்த்துவமடைந்து சுத்த ரூபமாக மாறிய அன்னரசம் நிரை நீர்த்தாரையை அடைந்து பிறகு இரத்தமாக மாறும். 1. அப்பொழுது மேலே நுரைத்தெழுந்த கல் மிஷத்திற்கு பித்தமென்றும், 2. அடியிற் படிந்த வண்டலுக்கு வாத மென்றும், 3. மத்திய பாகமாய் நிற்பதற்கு கபம் அல்லது சிலேட்டுமமென்றும் பெயர் கொண்டு உடம்பிற் பரவும். The process of digestion. The food that we take passes into the stomach becomes reduced to the consistence of soup and is called chyme which enters the duodenum while the remains the food assume the character of the faeces. The chyme is then turned into chyle which enters the lymphatics and then goes to the heart and blood vessels.

சீரண முறை, சீரணக்கிரமம்; அந்த முறையை இங்கு விளக்கி கூறுவோம். விளக்கம் by C.D. உட்கொள்ளும் அறுசுவை யுண்டி, வாயில் அரைபட்டு அங்குள்ள போதக கபத்துடன் கலந்து பிராண வாயுவால் உணவுக் குழாய் வழியாக இரைப்பைக்குள் செலுத்தப்படு கிறது. இரைப்பையிலுள்ள கிலேதக கபத்தின் செய்கையாலும் சமான வாயுவின் செய்கையாலும் உணவு ஆட்டுக்கல்லில் அரைபடுவது போல் நன்றாக அரைபட்டு, கூழாக்கப்படுகிறது. பிறகு வாயுவால் அது பக்குவாசயத்திற்குச் செலுத்தப்படுகிறது. அங்குள்ள பாசக பித்தம் சடராக்கினிகளால் சமைக்கப்பட்டு பக்குவமடைந்து அன்னரசமாகவும், திப்பியாகவும் மாறுகிறது. ஆறு சுவைகளும் இனிப்பு, கார்ப்பு, கைப்பாக விபாகமடைகின்றன; சமானன், வியானன் என்கிற வாயுக்களால் நீர் வடிவமாகவுள்ள அன்னரசமும், திப்பியும் சிறு குடலுக்குச் செலுத்தப்படுகின்றன. அன்ன ரசம் சிறுகுடலில் உறிஞ்சப்பட்டு

இரச தாதுவைப் போஷிக்கச் செல்கிறது. முதல் நாள் இரச தாதுவில் தங்கி அங்குள்ள அக்கினி (இரசாக்கினி)யால் பக்குவமடைந்து அத்தாதுவைப் போஷிக்கிறது. இரண்டாம் நாள் இரத்த தாதுவிற்குச் சென்று தங்கி அங்குள்ள அக்கினியால் (இரத்தாக்கினி) பக்குவமடைந்து அத்தாதுவைப் போஷிக்கிறது. அங்ஙனமே மூன்றாம் நாள், நான்காம் நாள், ஐந்தாம் நாள், ஆறாம் நாள், ஏழாம் நாள்களில் முறையே மாமிசம், கொழுப்பு, எலும்பு, மஜ்ஜை, சுக்கிலமாகிய ஒவ்வொரு தாதுவிலும் தங்கி அங்குள்ள அக்கினியால் சீரணிக்கபபட்டு அந்தத் தாதுக்களைப் போஷிக்கிறது. பிறகு எட்டாம் நாள் தேகத்திற்கு குன்றாத வன்மையை யளிக்கும். குடலில் நீர் ரூபமாக திப்பி எஞ்சி நிற்கும் இது மேற்கூறிய வாயுக்களால் பெருங்குடலுக்குள் செலுத்தப்படும். அங்குள்ள அக்கினியால் நீர் உறிஞ்சப்பட்டு, கெட்டிப்பட்டு மலமாக மாறி அபான வாயுவால் வெளிப்படுகிறது. The Process of digestion. It is as follows. The food which generally consists of six tastes- Sweet, sour, pungent, saltish, astringent and bitter — is eaten it is first grinded in the mouth and gets well mixed with Bodhaka kapam which exists at the throat and root of the tongue. Then the Prana Vayu sends it to the stomach through the gullet. Here it mixes with Kledaka Kapham. The Vayus Samanan and Vyanan aid the stomach to grind and partly digest the food into a soft pulp. The half digested pulp is then sent to the pithavayu (receptacle for bile) or otherwise called Pakuvasayam where Pasaka Pitham and jataraghni further digest it and turn it into liquid Annarasam and waste matter. Then they are passed into the small intestine. The Annarasam is absorbed by the intestine and sent to Rasedhathu to feed it. So, during the first day Annarasam wets the dathu, and gets further digested by the Agni — Rasagni — which exists there. The Dhathu absorbs what is suitable and what it requires. On the second day the remaining Annarasam passes on to feed the Rahktha Dhathu — Blood. Rakthagni — Agni of the Dhathu acts on the Anna rasam, and the dhathu utilises what it requires, On the third day the remaining passes on to the mamisa Dhathu — flesh, which is feed in the similar manner. Thus on the fourth, fifth, sixth and seventh days the Annarasam feeds Rosuppu (fat) Elumbu (bone) majjai (marrow) and sukila (Semon) Dhathus repectively in the same manner and on eigth day gives full vitality to the body. All movements in the small instestines are brought about by Vyanan and Samanam. The liquid waste matter, and undigested rather are all that remains now at the termines of the intestine. They are passes into the large intestine. The Agni that exists there causes the water to be absorbed. They are dried become solid, and pass out as faeces. All movements in the large intestine are caused by Appana Vayu.

சீரணமூட்டி, சீரண சக்தி வளர்க்கும் மருந்து, medicine that promotes digestion.

சீரணம், உண்டதைச் சமித்தல் அதாவது உணவாக உண்ட பண்டங்களைப் பக்குவப்படுத்தி இரசம் முதலிய ஏழுத்தாதுக் களுக்குப் பயன்படக் கூடிய அன்னரசமாகச் செய்யும் தொழில் — process or act of converting food into materials fit to be assimilated in the system — Digestion; *2.* குறைவு, decrease; *3.* பதனழிவு, rottenness; *4.* கிழங்கு, bulbous root.

சீரணம், உண்ட உணவானது பித்தம், பாசக நீர், குடல் நீர் கணைய நீர், வாய் நீர் முதலியவைகளின் உதவியினால் சீரண திசையடையும். ஆதலால், பலவிதமாகக் கொள்ளப்படும். அவையாவன: *1.* பித்த நீரினாலுண்டான சீரணம், the digestive effect of the bile upon food — biltary digestion.

2. வயிற்றில் பாசக நீரினாலேற்பட்ட சீரண சக்தி, that which is carried on in the stomach by aid of the gastric juice — Gastric digestion.

3. குடலில் உண்டான சீரணம், digestion carried on in the intestines — Intestinal digestion.

4. கணைய நீரின் உதவியினாலுண்டான சீரணம், that which is performed by the pancreatic juice — Pancreatic digestion.

5. வாய் நீராலேற்பட்ட சீரணம், digestion effected with the aid of saliva — Salivery digestion.

6. ஏனைய வழியாலுண்டான சீரணம், digestion taking place some where in the body other than the alimentary canal such as in the blood or under the skin — parenteral digestion.

7. உபசீரணம் அதாவது உண்டவுணவு கடைசியாக அடையும் சீரணம், final preparation of food for assimilation by aid of lymphatics etc, secondary digestion.

சீரணரசம், வயிற்றிலிருக்கும் சீரண கோளங்களினின்று வெளிப்படும் ஓர் புளிப்பு நீர். இது உணவோடு கலந்து சீரணத்தை உண்டாக்கும், gastric juice which is a thin acid fluid thrown out from the gastric glands when food passes into the stomach.

NOTE: Pure gastric juice appears to consist of little more than water containing a few saline matters in solution and is acidity is due the presence of free hydrochloric acid. It contains also pepsin. Thus when the food passes into the stomach the contractions of that organ roll it about and mix it throughly with the gastric juice to help digestion.

சீரணரசவக்கினி, சீரணத்திற்குக் காரணமாக விருக்கும் சடராக்கினி, gastric fire.

சீரண விருத்தினி, சீரணத்தை அதிகரிக்கும் பொருள்கள், stomachic.

சீரணவுறுப்பு, சீரணத்திற் குரிய உறுப்புகள், digestive organs.

சீரணாக்கினி, செரிமானத்தை யுண்டாக்கிப் பசியை யெழுப்பும் சூடு — சடராக்கினி.

சீரணி, ஓமச் செடி, Omum plant; 2. காடு forest; 3. சீரணித்தல் அதாவது சமித்தல், to digest.

சீரணித்தல், see சீரணி, 2. பதனழிதல் to get rotten.

சீரணித்துப் போதல், உட்கொண்டு போதல், in chemistry becoming absorbed through chemical combination, being combined chemically; 2. சமித்துப் போதல், being digested completely.

சீரணிப் பித்தல், சமிக்கச் செய்தல், causing or promoting digestion.

சீரதம், பால் கொடுத்தல், the act of giving suck, the function of secreting milk — Lactation.

சீரதரு, அத்தி மரம், fig tree — Tithy melus antiquorum; 2. பால் வடியும் மரம், a tree with milky juice.

சீரதி, see ஓமம்.

சீரதும்பி, சுரை, bottle gourd.

சீரதுருமம், holy fig tree.

சீரத்துழாய், துளசி, holy basil — Grimum sanctum.

சீரதைலம், எண்ணெய், பால் முதலியவைகளைக் கொண்டு தயாரித்த தைலம், an ungent prepared with milk, oil etc.

சீரநாசினி, பால்வற்றி, lactifuge.

சீரபடிகம், வெண்படிகம், a species of opal described as milky crystal.

சீரபலம், களா களாக்காய், Bengal currant — Carissa carandas.

சீரபாகம், கஷாயமிறக்கு முறை, அதாவது 1 பாகம் மருந்து தண்ணீர் 32 பாகம் பால் 8 பாகம் தண்ணீர் சுண்டுமளவும் கொதிக்க வைத்து இறக்கவும். the proportionate method of preparing decoction with milk ie., one part of medicinal drugs, 8 parts of milk, and 32 parts of water. All are boiled together till all the water evaporates and milk alone remains. It is then strained & used. பாலிலிட்டுச் சமைத்தது cooked with milk.

சீரபுட்பி, வெள்ளைப்பூ — Andropgon Ociculatus.

சீரபுட்பிகம், வெள்ளைப் பூ பூக்கும் விஷ்ணு கரந்தை, a white variety of fever basil or Vishnu's plant.

சீரபிரணேசி, see எருக்கு.

சீரமம் see விலாமிச்சை.

சீரமி, கௌளி பாத்திரத்தென்னை, a variety of cocoanut, the shell of which is used as a mendicants bowl.

சீரமோசகம், ஓர் முருங்கை, a variety of moringa.

சீரமோடகம், see சீரமோடன்.

சீரமோடன், விழுதி, cleome plant; 2.See காட்டெருமைப்பால், 3. வெள்ளைக்கல், white stone.

சீரமோடா, see சீரமோடன்.

சீரமோனகம், கொம்புத் தேன், Honey collected from honey combs build on the branches of trees.

சீரமோரடம், ஓர் கொடி, a creeping plant.

சீரம், இலாமிச்சை, fragrant Andropogon grass — Andropogon Muricatus; 2. பால், milk; 3. சீரகம், cumin; 4. கூகை நீறு, the flour of malabar arrow root; 5. காட்டெருமைப்பால், milky juice of Euphorpia Antiquorum — Spurge; 6. மலைப்பாம்பு, python a large mountainous snake — non poisonous; 7. மரவுரி, bark of a tree used as cloth by mountainers, and even by Siddhars to protect themselves from cold; 8. செடியின் ரசம், sap of plant; 9. கோஷ்டம், Arabian costus — Costus Arabicus; 10. முலைப்பால், women's breast milk.

சீரம்ரெண்டு, see இரு சீரகம்.

சீரயவம், இது ஒரு தாதுப்பொருள் — dolomite, a kind of rock containing double carbonate of lime and magnesia.

சீரரோகம், பிரசவித்த பெண்களுக்கு பால் கட்டிக் கொள்ளல், disease due to accumilation of milk in the breast of delivered woman.

சீரரோத்தமம், சிற்றீஞ்சு, date tree or palm as opposed to பேரீஞ்சு, wild date palm.

சீரல், நாகமணல், Zincore; 2. நாகபாஷாணம், a poisonous Compound of Zinc; 3. நாகம், Zinc; 4. சீருதல், excited condition.

சீரவடம், ஈயம், lead; tin.

சீரவட்டம், see சீரவடம்.

சீரவட்டை, ஈயத் தண்டு, see இண்டங் கொடி.

சீரவர்த்தினி, முலைப்பாலை விருத்தியாக்கும் மருந்து, Lactagogue.

சீரவிரதம், பால் மாத்திரம் சாப்பிட்டு இருக்கும் விரதம், living on milk alone in consequence of a vow.

சீரவிருட்சம், see சீரதரு, அத்திமரம், fig tree.

சீரன்னம், பாலும் சோறும், rice cooked with milk.

சீரா, பலாசு, palaus tree. Butea frondosa; 2. தீஞ்சாறு, treacle; 3. சர்க்கரைப் பாகு, Syrup; 4. கவசம், outer covering; 5. நரம்பு, Nerve or vein; 6. அதிமதுரம், liquorice root honey creeper; 7. பலா, Jack fruit tree.

சீரா செங்கழு நீர், செங்கழுநீர், red Indian water lily. See சீதா செங்கழுநீர்.

சீராடவல்லோன், எருமை முன்னை, broad leaved premna — Premna integrifolia.

சீரால், சிராவம், discharge of any fluid; 2. பெரும்பாடு, abnormally profuse menustral; flow — menorrhagia.

சீரால சகரோகம், தோஷப்பாலைக் குடிக்கும் சிசுக்களுக்குக் காணும் நோய், இதனால் அசீரணப்பட்டுப் பேதியாகி சுரம் அரோசகம் வயிற்றிரைச்சல், ஏப்பம், கொட்டாவி முதலிய குணங்கள் ஏற்படும். a disease of children caused by taking vitiated breast milk. Symptoms are indigestion, diarrhoea, fever, anerexia, erectations, yawning and gas in the abdomen.

சீராளன் கறி, பச்சைப் பருப்பினால் செய்யப்படும் ஓர் விதக் கறி, சிறுத் தொண்டன் தன் பிள்ளையாகிய சீராளனை அறுத்துச் சமைத்த கறிபாகத்திற்கு ஒப்பனையாகக் கூறப்படும், a vegetable curry prepration of the Tamils. It is prepared mainly with green gram. It is named after Seeralan, son of Siruthondar.

NOTE: Siruthondar was a staunch devotee of God Siva. He used to feed the devotees of Siva who visit his house. Only after feeding a devotee, he would take his meals. One day a saintly devotee came to his house but refused to take meals without the curry prepared out of the flesh of his only son. He had to kill his son, and prepare the curry to feed the devotee. The devotee was Siva himself. Being satisfied with his sincere devotion, he restored his son. The tasteful curry prepared out of green gram was named after his son.

சீரானபிம்பி, தித்திப்புக் கோவை, sweet Cephalandra indica.

சீரானயிருசுவம், திருநாமப்பாலை, seven leaved hora tree — Alstonia scholaris.

சீரி, புளிய மரம், tamarind tree — Tamarindus indicus.

சீரிகம், ஓர் பாம்பு, a kind of serpent.

சீரிகை, ஓர் சிள் வண்டு, a small poisonous beetle; 2. வண்டு கொல்லிப் பூடு, a plant known as worm killer. see ஆடுதின்னாப் பாளை, 3. சீமையகத்தி, ring worm shrub — Cassia alata.

சீரிடம், தலை head; 2. வாகை, sirissa tree — Albizza lebbek.

சீரிடல், see சீரல்.

சீரிணபத்திரம், வேம்பு, margosa tree — Azadirachta Indica.

சீரிண பன்னம்,

சீரிண பன்னி, see சீரிண பத்திரம்.

சீரிணம், பொன்னாங்கன்னி, sessile plant — illecebrum sessile.

சீரிதம், மரவுரி, see சீரம்.

சீரிமா, மாமரம், mango tree — Mangifera indica.

சீரியம், புளிய மரம், tamarind tree.

சீரியா, மலைக்குறிஞ்சா, mountain downy tree. Indian ipecacuanha Tylophora asthmadica.

சீரிவிருக்கம், புளிய மரம், tamarind tree.

சீரிவிருட்சம், see சீரி விருக்கம்.

சீரி வில்வம், ஆயிலியம், Common black plum of Jambolin tree — Eugenia jambolana. See நாகமரம்.

சீரினி, செங்கழு நீர், red Indian waterlly — Nymphaea Odorata.

சீருகம், தாமரை, lotus; செந்தாமரை, red lotus — Nelumbium Speciosum; 2. புளி, tamarind.

சீருகின்ற வாசுகி, நாகப் பாம்பு cobra.

சீருகை, வண்டு, beetle.

சீருசங்கம், வளையலுப்பு, bangle salt. Fel vitri.

சீருடன் முத்தி, சிற்றாமுட்டி, rose coloured sticky mallow, Pavonia Zeylancia.

சீருணம், செம்பு, copper.

சீருணி,

சீருணியம், see சீருணம்.

சீருமொடா, செம்முழி, eyes reddended by anger; 2. வெள்ளைக்கல், a white stone.

சீருளியம், தாம்பிரம், copper.

சீருள், ஈயம், lead; or tin 2. செம்பு; copper; 3. காரீயம், lead; 4. பஞ்சலோகம், an alloy of five metals.

சீருற்றபாணி, see மருள்.

சீரேவாயா, காட்டுத் தருப்பை, wild carrot — Peucedanum grande.

சீரை, மரத் தோல், inner bark of a tree; 2. மரவுரி, bark of a tree used as cloth.

சீரோணிகம், காட்டாமணக்கு adul oil plant — jatropha ceylandulifera.

சீா, பொன், gold 2. பத்தியவுணவு, prescribed diet to prevent or cure disease; 3. அளவு, measure; 4. புகனம், heaviness; 5. ஓசை, sound; 6. தளர்ச்சி, weak state.

சீாகஸ்து, மேனா என்னும் ஓர் வெள்ளை மரப்பால், a white gummy substance or resin taken from a tree Manna in sicily — It is a saccharine exudation with medicinal virtue.

சீாகாகோழி, சிறுதேட் கொடுக்கி, இது வட மொழியில் க்ஷீர காகோளி எனப்படும். a species of Indian heliotrope; 2. நாரைக் கொள்ளு, a species of horse gram.

சீாகாவிகா, see இருள் செடி.

சீாக்காரமுண்டாக்கல், உற்சாகம் உண்டாக்குதல் — causing excitement.

சீாக்கிருமி, எட்டி, கிருமியைப் போக்குதலாலிப் பெயர், Nuxvomica — Strychnos. Nuxvomica.

சீாக்கேடு, ஒழுங்கு கெடுதல் — disorder.

சீாக்கோழி, நரைக் கொள்ளு, a variety of horse gram.

சீாக்கோளகம், வெண் தேக்கு, white teak — Lagerstroemia Lanceolata.

சீாசனியம், கொக்கிப் பூச்சி, hook parasite.

சீரணபத்திரம், வேம்பு, margosa see சீரிண பத்திரம்.

சீாண பாணம், பேரீச்ச மரம், wild date tree 2. வேப்ப மரம், margosa tree.

சீாணம், சீரகம், cumin seeds; 2. பழுத்தது, that which has riped.

சீாத்தட்டு, எலும்பின் வளைவு இது கிரக தோஷத்தினால் ஏற்படுகிற தென்று கருதப்படும். a condition in children in which the bones are rendered soft and flexible Rickets or Rgchitis.

சீாத்தாதிகம், தேவதாரி, deodar tree — Erythroxylon Monogynum.

சீாத்தாலன், நாகமணல், zinc ore.

சீாத்துழாய், ஓர் வகைத் துளசி, sacred Basil.

சீாபடுத்தல், ஒழுங்கு செய்தல், to keep in order; 2. சுத்தி செய்தல், to purify or clean.

சீாபணம், see அமலை.

சீாபத்திரம், புண்ணியவரசு, peepul tree — Ficus Religiosa.

சீாபந்தபாஷாணம், கபால பாஷாணம், a mineral poison one of the 32 kinds of arsenic.

சீாபந்தம், see சீர்பந்த பாஷாணம்.

சீாபாகி, பனை மரம், palmyra tree — Borassus flabellifer.

சீாமோடன், வீழி, chilli fruited caper — Stroemeria Tetrandra alias cadaba indica.

சீாவணிக் கொட்டான், கரந்தைப்பூடு, sweet basil — Grimum basilicum.

சீலகாவுருவி, வேம்பின் மேற் புல்லுருவி, a parasite on margosa tree — Coranthus.

சீலகி, சீந்தில், moon creeper — Menispermum Cordifolium.

சீலநாதினி, வெற்றிலை, betel leaf — Piper Betel.

சீலமைந்து, பஞ்சமாபாதகம், five crimes, அவையாவன, they are 1. stealing, 2. lieing, 3. drinking, 4. disrespecting the teacher, 5. committing murder.

சீலம், மனோசிலை, Red arsenic — Arsenicum Rubrum; 2. சீந்தில், moon creeper.

சீலம்பாயறுகு, ஓர் வகை யறுகம்புல், a variety of spreading Cynoden grass.

சீலயம், சோனைப் புல், guinea grass — Panicum maximum.

சீலா, ஓர் மீன், a kind of fish; 2. ஓர் நீர்ப்பறவை, a water bird.

சீலாந்தி, பூவரசு, Portia tree (Heart wood) Thespesia Populnea.

சீலிபம், வாகை, sirissa tree see சிரிடம்.

சீலியுப்பு, சீலி தேசத்து வெடியுப்பு, salt petre of Sicily.

சீலை, வெண்காரம், borax; 2. மனோசிலை, red arsenic; 3. தீட்டுச் சீலை, menstrual cloth, 4. சீலைத் துண்டு, a piece of cloth.

சீலைகட்டல், மருந்தடங்கிய பாண்டத்திற்கு சீலைமண் சுற்றல், covering the vessel containing medicinal drugs with a piece of cloth smeared with clay before exposing it to fire. See சீலை மண் செய்தல், 2. காயம் கட்டி புண்களுக்கு மருந்து தடவிய சீலையை வைத்துக் கட்டுதல், இந்த சீலைகள் பல விதம் To dress wounds abscess ulcer and sinus with medicinal gauze.

சீலைகட்டி மறைத்தல், கண் புகைச்சல், dullness of vision as if obstructed by a screen.

சீலைக்கால் தூய்மை, சிலா மதுபாஷாணம், see சீலைக்கால் தூய்மை.

சீலைச் சாம்பல், see சீலை சுட்ட சாம்பல்.

சீலைசுட்ட சாம்பல், கந்தையைக் கொளுத்திக் கிடைக்கும் சாம்பல் இதனால் எலும்புருக்கி குணமாகும், ashes derived by burning rags. It is used for tuberculosis of bones.

சீலை சுற்றல், காயம் புண்புரைகளுக்கு துணியைச் சுற்றல், bandaging of wounds, ulcers sinuses etc after applying medicine.

சீலை செய்தல், சீலை மண் செய்தல், see சீலை மண்.

சீலைப்பற்று, சீலையிற் பூசிய மருந்து, a tenacious compounds steeped on a piece of cloth and made to adhere to the surface of the body — Plaster — 2. ருதுச்சீலை, soiled menstrual cloth.

சீலைப்பாம்பு, ஓர் விஷமற்ற பாம்பு, a non poisonous snake of the species of Russel — Carpet snake.

சீலைப்புல், ஓர் வகைப் புல், a kind of grass — Panicum Violaceum.

சீலைப் பேன், உடம்பில் தரிக்கும் அழுக்குத் துணிகளில் பிறக்கும் வெண்ணிறமான பேன். இதற்கு வடமொழியில் 'வீட்சா' எனப் பெயர். இது கடிப்பதினால் உடம்பில் சிறு தடிப்பும் தினவும் ஏற்படும். இதனால் சன்னிபாத சுரமும் உண்டாகும். a degraded white parasitic insect found on the dirty clothes worn — Louse — Its bite causes raised patches attended with itching. The organisms of typhus fever are transmitted by the bite of louse. It is known as 'Veecha' in Sanskrit.

சீலைப்பேன் கடி, சீலைப் பேனால் ஏற்பட்ட கடி, bite of louse.

சீலைமண், மருந்து அடங்கிய பாண்டத்தைப் புடத்திற்கு ஏற்றாமுன், காற்று புகாதபடி பொருத்து வாயில் சுற்றுவதற்காகச் சீலை யிலூட்டும் களிமண். அல்லது செம்மண், clay or other tenacious substance like red ochre which is used to smear the strip of cloth which will bind the container of drugs & its lid — Lute.

சீலைமண் சுற்றல், see சீலை மண் செய்தல்.

சீலை மண் செய்தல், மருந்து பாண்டத்தின் வாயை சீலை மண் கொண்டு அடைத்தல், To bind the contain of medicine to be prepared and its lid together with strips of cloth smeared with clay or red ochre and allowed to dry before submitting to fire.

சீலை மண் மூவிரண்டொன்று மேவல், ஏழுதரம் சிலைமண் சுற்றுதல், To bind the container and the lid seven times with clay smeared strip of cloth.

சீலை மருந்து, 1. பிளாஸ்திரி — Plaster; சீலையிலூட்டும் விரணமருந்து, இது பலவிதம் அவையாவன; ointment, oil or dusting powder applied to the ulcers by dipping the gauze in the oil or by smearing or dusting gauze with the medicine துவர்ச்சீலை — அரையாப்புக்கட்டி ரணங்களுக்குப் போடும் சீலை மருந்து — Bubo ointment.

2. காரச்சீலை — துன்மாமிச ரணங்களுக்கு சதையைக் கரைக்கப் போடும் சீலை மருந்து, Corossive ointments.

3. சிவப்புக் காரச்சீலை — ரசம், லிங்கம், அரிதாரம், கெளரி, சிங்கி, காவிக்கல் இவைகளை சம எடை கொண்டு பழச்சாற்றால் அரைத்து ரணத்துக்குப் போடும் மருந்து, இதனால் சண்டிப்புண் பிளவைப் பவுத்திரம் ஆனைக்கால் போம், red irritant ointment.

4. வெள்ளைச் சீலை: வெள்ளைத் துணி சுட்ட சாம்பல், சங்கு, ரசம், குங்கிலியம், சவுட்டுப்பு, கற்சுண்ணாம்பு, முலைப்பால் விட்டரைத்துப் போடும் சீலை மருந்து. இதனால் சண்டிப்புண், பிளவை வாய்ப்புற்று போம், white ointment. .

5. நீலச்சீலை — தலையோடு, சங்கு, வீரம், வெள்ளை, அரிதாரம், நீலம், சவுட்டுப்பு முதலியவை சம எடை தாய்ப்பால் விட்டரைத்துப் போட திமிர்கரளை கட்டி முதலியன போம், Blue ointment.

6. பச்சை சேர்வை சீலை: லிங்கம், மைல் துத்தம், சிங்கி, இரசம், குங்கிலியம் இவைகளைப் பொடித்து நல்லெண்ணெய் கூட்டி அரைத்து, பிறகு நீரால் கழுவி எடுத்த சீலை மருந்து, கிரந்தி, தடிப்பு, நீர் வடியும் ரணம் போம், Green ointment.

7. பச்சைக்காரச் சீலை, மஞ்சள், கெளரி, அரிதாரம், வெள்ளை, சிங்கி, முதலியவைகளை கள் வார்த்து அரைத்து சீலையிலூட்டிய மருந்து, படை, தொடைவாழை, திமிர் போம், green irritant ointment.

8. கருத்தகாரச் சீலை, மஞ்சள், வசம்பு, எருக்கிலை இவைகள் சுட்ட கரி; இத்துடன் கெளரி, வெள்ளைப் பாசாணங்கள், சங்கு சம எடை கொண்டு கையாந்தகரைச் சாற்றிலரைத்து, சீலையிலூட்டிப் போட கடிவிஷ ரணம் ஆறாப் புண் திமிர் தினவு போம், Black irritant ointment.

9. மஞ்சள் காரச்சீலை — ரசம், கெளரி, வீரம், அரிதாரம், சிங்கி, கடுக்காய்த் தோல்,

கடுக்காய்ப் பூச்சூரணம் கோழிமுட்டைக் கருவால் அரைத்துப் போட முளை மார் பாணிபோம், yellow irritant ointment.

10. சிவப்புக்காரச் சீலை — ரசம், லிங்கம், அரிதாரம், கௌரி, சிங்கி, காவிக்கல் இவைகளைப் பழச் சாற்றாலரைத்துப் போட ஆறாவிரணம், பிளவை, விஷக் கிருமி, ஆனைக்கால் பவுத்திரம் போம், Red irritant ointment.

11. கறுப்புக்காரச் சீலை — கௌரி, அரிதாரம், கற்சுண்ணாம்பு, பால் துத்தம், சிங்கி, வெ.குங்கிலியம், வெண்துணி சுட்ட சாம்பல் சம எடை, கழஞ்சு கொண்டு பொடித்து ரணத்தின் மேல் தூவி வர முளை விழுந்து ஆறும் — Black irritant ointment.

12. வெள்ளைக்காரச்சீலை — வெள்ளை, கௌரி, குங்கிலியம், சவுடு, வெண் குங்கிலியம், துணி சுட்ட சாம்பல் பொடித்துத் தூவ ரணம் ஆறும். முளையும் கரையும் — White irritant powder.

சீலை மூன்று செய்தல், மூன்று தடவை சீலை மண் சுற்றல், to bind the contain and lid three times with clay smeared strip of cloth.

NOTE: For calcining medicine Tamil Medicinal Science prescribes different methods of luting the vessel according to the strength of medicine contained in it, and degree of heat required for calcination.

சீலையிலூட்டல், மருந்தை சீலையில் தடவல், to smear medicine on the lint or Steep the gauze in medicine if it is liquid.

சீலையுஞ்சை, கருவாகை, fragrant sirissa.

சீலை வடிகொள்ளல், மருந்தைப் பொடித்து துணியிலிட்டுச் சலித்து எடுத்தல், separating fine and course powder of a drug by using cloth as sieve.

சீலை வடிதாக்கல், see சீலை வடிகொள்ளல்.

சீலை வலுவாகச் செய்தல், காற்றுப் புகாத படி சீலை சுற்றல் அல்லது சீலை மண் செய்தல், luting the containers before submiting them to strong fire.

சீலை வாகை, பீலி வாகை, stipulated sirissa.

சீலை வாய் செய்தல், மருந்து பாண்டத்தின் வாய்ப் பொருத்தத்தை துணியால் இறுகச் சுற்றல், luting the mouth of containers with lids.

சீலைவாளை, சொட்டை வாளை, butter fish $1^1/_2$ feet long.

சீல், பருந்து, Kite Milvus Govinda.

சீவகணங்கள், தாதுக்களின் உயிர்த்துணைக் கருவிகள், the vital or essential organs supporting the seven constituent parts (seven Dhathus) of the body.

சீவகப்பாலை, திருநாமப்பாலை, wild sarsaparilla — Similax macrophylla.

சீவ ஆத்துமம், பிரணாயம், finite spirit c.f. சீவாத்துமா.

சீவகப்பால், எருக்கன்பால், madar milk.

சீவகப்பேரிதம், புளித்த நீராகாரம், sour coldrice water.

சீவகமிருதி, கொல்லன் கோவை, sky root Bryonia epigaea.

சீவகமூலி, சீந்தில், moon creeper — menispermum cordifolium; 2. காட்டு நன்னாரி, wild sarasaparilla Similax macrophylla; 3. அசோகி, Indian Coccinea Cephalandra indica.

சீவகம், வேங்கை, Indian Rino Petrocarpus bilobus; 2. ஏலம், cardamuni; 3. திருநாமப்பாலை,

see சீவகப்பாலை, 4. இலந்தைப்பிசின், Gum of jujuba.

சீவகர்ணாங்கி, பொடுதலை, wild long pepper — Creeping vervain — Verbena nodiflora.

சீவகளை, உயிர்ப்பு, உயிரின் செழிப்பு, vital power, illumined life.

சீவகளையிருப்பு, மூச்சுக்குப் பிரதான (மான) இடம், the seat of respiration; 2. உயிருக்கு முக்கியமானவிடம், the seat of vital energy vital part.

சீவகன், நீண்ட ஆயுள் பெற்றவன் a man of long life; 2. சீவன் முத்தன், hermit with wisdom.

சீவகாங்கை, உயிருக்கு முக்கியமான அல்லது ஆதாரமாகிய சூடு, vital heat.

சீவசாட்சி நாடி, அங்குஷ்ட மூலத்தின் நாடி; இதன் சலன விசேஷத்தால் நோயாளியின் நிலைமையை எளிதில் அறியலாம். இந்நாடிக்கு சினாயுவசா, சிவசிரம், தமனி, தாமனி, தந்துகி சீவிதஞ்சம் என்று பல பெயர்களுண்டு, Radial arterypulse. By feeling it one can understand the true condition of the patient. It is known by several names.

சீவகாத்தம், சந்தனக் கட்டை, sandal wood.

சீவகாலம், வாழ்நாள், life time.

சீவசக்தி, பிராணசத்து, vitality -Vital power life essence; 2. பிராணனுக்கு உதவியான உடம்பை பலப்படுத்தும் பொருள், vitamins essential for life.

சீவசஞ்சீவி, சீந்தில், moon creeper. See சீவக மூலி.

சீவசஞ்சீவி மாத்திரை, சீந்திற் கிழங்கு சித்திர மூலம் வேர்ப்பட்டை, சேரான் கொட்டை, வாய்விளங்கம், நாபி, வசம்பு, கடுக்காய், தான்றிக்காய், சுக்கு, திப்பிலி

இவைகளை சம எடை எடுத்துக் கலுவத்திலிட்டு பசு மூத்திரத் தால் அரைத்து குன்றியளவு திரட்டி நிழலிலுலர்த்தித் தயாரித்த மாத்திரை, இது 1. வாந்தி பேதி, 2. பாம்பு விஷம், 3. சன்னிபாதம், இவைகளுக்கு இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும், A pill prepared with ten bazaar drugs found with Cow's urine and given for cholera, snake poison and sannipatham. The drugs are moon creeper root, plumbago root bark marking nut, aconite sweet flag, gall nut, dry ginger, piper longus, beleric myrobalans and berries of embellia ribes jeevasanjeevi pill.

சீவசத்து, பிராணபலம், vital strength or power.

சீவசத்துப் பொருள், vitamin.

சீவசத்துவம், see சீவசத்து.

சீவசாட்சி, சர்வகாரியங்களுக்கும் சாட்சியாகவிருக்கும் ஆன்மா, the intelligent soul or the universal intellect witnessing all things.

சீவசாதனம், தானியம், paddy.

சீவசுத்தி, சீவதற்பேதி மடக்கி பிரமத்தைக் கண்டறிதல், a state or condition in which the individual soul loses the sense of self and realises the Brahman.

சீவசுவாசம், பிராணவாயு, Oxygen; 2. மூச்சு, breath of life.

சீவசெந்து, உயிர்ப்பிராணி, living creature.

சீவசோணிதம், சுத்த ரத்தம், arterial blood. 2. கருவுண்டாக்கும் ருது, menstrual responsible for conception.

சீவஞ்சீவகம், ஓர்வித நிலா முகிப்புள், a variety of bartavelle — Pardix Genus.

சீவடிதல், சீழ் வடிதல், oozing or discharge of pus.

சீவட்டுக்காடை, மெல்லிய காடை, a thin quail

சீவதத்துவம், சீவதாதுவைப் பற்றி நிற்கும் சுபாவத்தைக் கருதிய வுண்மை, the vital principle or that priniciple on which the life of an organism is thought to depend.

சீவதம், ஆமை, tortoise; 2. மயில், peacock.

சீவதனம், சீவனுள்ள திரவியம், life giving drug.

சீவதன், நீண்ட ஆயுள் உடையவன், long living man; 2. வைத்தியன், physician.

சீவதாது, பிராணவாயு சஞ்சரிக்கும் நாடி, one of three pulses felt in the wrist indicating the vital principle life pulse.

சீவதாரு, தேவதாரு, deodar tree.

சீவதி, பாலை, iron wood tree — Mimusops Hexandrus.

சீவதிசை, உயிரோடிருக்குங்காலம், duration of life, 2. ஆயுள் நாள், life time.

சீவதேகம், ஆன்மாவோடு கூடிய வுடம்பு, body or receptacle of the soul in its different states existence; 2.சரீரத்திரியம், அதாவது முத்தேகம், 1. தூலம்; 2. சூக்குமம்; 3. காரணம், (in Agama Philosophy) the three fold enumeration of bodies as physical the astral and the causal.

சீவத்திரயம், சீவ ஆத்துமாவின் மூன்று வகைப் பேதங்கள், the three state of the soul or life.

சீவத்தறுவாய், மரணவாயில், moment of death.

சீவத்துவம், ஆன்ம சக்தி, the life energy, 2. உடம்பை உயிர்ப்பிக்கும் தத்துவம், the vital force on which the life depends — vitality.

சீவநதி, எக்காலமும் நீர் ஓடிக் கொண்டிருக்கும் ஆறு — River where water flows all through the

years i.e. during all seasons —example Ganges, Godaveri.

சீவநாசினி, வெற்றிலை, betel leaf.

சீவநாசவிடம், உயிர் சேதத்தை விளைவிக்கும் நஞ்சு, deadly poison.

சீவநாடி, பிராண வாயு உலாவும் இரத்தக் குழல், the vital artery, 2. வாதநாடி, one of the three pulses in the wrist indicating the life principle — pulse of wind humour.

சீவநாந்தம், மரணம், death.

சீவநாயகன், ஆத்துமா, the soul; 2. சிவகரணி, a medicine or have rage which raises or revives the spirits — cordial.

சீவநாள், ஆயுட் காலம், life time.

சீவநூல், see உயிர் நூல், Biology.

சீவந்தம், மருந்து, medicine; 2. பிராணன் life.

சீவந்தி, சீந்திற் கொடி, moon creeper 2. பாலை மரம், iron wood tree 3. ஓர் வகை கடுக்காய், a variety of gallnut tree; 4. புல்லூரி, parasite plant; 5. சிவனி, which see; 6. கொடிப்பாலை, green wax flower 7. வெட்பாலை, tellichery bark — wrightia tinctoria; 8. மந்தாரச் சிலை, a kind of stone with medicinal virtue.

சீவந்திகம், சீந்தில் — moon creeper — Tinosphere cordifolia.

சீவந்திக் கடுக்காய், see செங்கடுக்காய்.

சீவந்திக்கிரியம், பெண் பனை, female palmyra.

சீவந்திரி, see சீவந்தி.

சீவந்திரேவதம், பூனை வணங்கி, குப்பைமேனி — Acalypha Indica.

சீவந்திரோகி, பாலை — see சீவந்தி

சீவந்தில், see சிந்தில்.

சீவபரமாணு, சீவ அணுவில் உருண்டையாய் நிற்கும் பாகம், a spheroid body with in a cell forming the essential and a vital part — Nucleus.

சீவபிரேதம், உயிர்ப்பிணம், living corpse.

சீவபேதம், உயிர்ப்பேதம், differents lives.

சீவப்பிராணி, உயிர்ப்பிராணி, living creature.

சீவப்பிரியம்,

சீவப்பிரியை, கடுக்காய் மரம், Indian gall nut tree.

சீவமங்கிலியம், ஓதளை, medicinal acacia — Acacia catechu.

சீவமந்திரம், உடல், body.

சீவம், சரகாண்ட பாஷாணம், a kind of arsenic; 2. see சீவன், 3. பரமாத்துமா, the universal soul.

சீவரசம், இரத்தம் அளவுக்கு உடம்பில் அதிகரித்தாலும் குறைந்தாலும் நோய் அல்லது மரணம் சம்பவிக்கும் பிராணா தாரத்திற்கு ஆதாரமான இரத்தம், blood which is essential for life. If it increases or decreases or causes disease.

சீவரத்தம், பிராணாதாரத்திற்கு ஆதாரமான இரத்தம், blood essential to keep body alive.

சீவரத்தாசயம், இருதயம், heart propelling blood.

சீவரத்தின பீடம், சுக்கிலம், semen which is seat of life.

சீவரத்தினம், முத்து, pearl; 2. மாணிக்கம், a superior ruby; 3. தலைச்சன் பிள்ளை சிரசிலிருக்கும் கல், a stone found in the head of a first born child; 4. பத்மினி சாதிப் பெண், One of the four classed of women divided according to lust; 5. நாகரெத்தினம், a gem supposed

to be on the head of a species of cobra.

சீவரத்தின நாதம், துத்தநாகம், zinc.

சீவராசி, உயிர்ப்பிராணிகள், all that live.

சீவரேகை, உள்ளங் கையிலுள்ள ஆயுள் ரேகை, a line on the palm indicating the duration of one's life.

சீவர்த்தினி, பாலை மரம், iron wood tree — Mimusops hexandra.

சீவலயம், சாவு, death.

சீவலம், ஓர் நீர்ப்பூண்டு, an acquatic plant.

சீவலாக்கல், மெல்லிய துண்டுகளாகச் சீவியெடுத்தல், to shave off in thin slices with a sharp instrument.

சீவலோதனி, கையான் தகரை, eclipse plant — Eclipta prostata.

சீவல், கத்தியால் களைதல், scraping; 2. சீவுதல், paring off; 3. செதுக்குதல், dressing with a knife — whitting; 4. மெல்லியதாய் அரிதல், cutting into thin pieces; 5. தாம்பூலத்தில் தயாரிக்கப்பட்ட பாக்குச் சீவல் areca nut parings used along with betel leaf and chunnam; 6. செதுக்கப்பட்டது, shavings; 7. மெலிந்த உடம்பு, emaciated body.

சீவஆத்துமம், பிராணயம், finite spiril C.f. சீவாத்துமா.

சீவவர்க்கம், சீவசாதி, animal kingdom as opposed to தாவர வர்க்கம், vegetable kingdom; சிவசிருஷ்டி, creation of life.

சீவவனல், உயிர்த்தி, vital fire; 2. உடம்பின் சூடு, Animal heat; 3. சமிக்குந்தீ, gastric fire.

சீவவாதக் கட்டளை, உடம்பின் தத்துவங்களைக் குறிக்கும் ஓர் தமிழ் நூல், a Tamil treatise

on philosophical conception of the human body.

சீவலிலியம், மரணம், death.

சீவவீரியம், ரசம், mercury.

சீவவெறி, உயிர்ப் பிராணிகளின் நஞ்சு, poison of living creatures or animals.

சீவவொடுக்கம், see ஆன்மா வொடுக்கம், 2. சமாதி, பாம்புகடி முதலியவற்றில் உயிர் அடங்கி நிற்றல், a condition of temporary cessation of animation in snake bites & Samadhi (in yoga).

சீவனகம், சோறு, cooked rice.

சீவனபுத்திரர், புத்திரஞ்சீவி, Putranjiva rox burghi.

சீவனம், உயிர் வாழ்தல், living; 2. நீர், water; 3. மூளை; brain; 4. வெண்ணெய், butter; 5. சீவனோபாயம், means of lively hood; 6. கஞ்சி, boiled gruel

சீவனவுடதம், இறுதி காலத்தில் உயிரைச் சிறிது வரை நிறுத்தும் கண்டாவிழ்தத்தைப் போன்ற மருந்து, a medicine which retains life for a few minutes by the renewal of vital activities —revivescence drug or medicine; 2. மூர்ச்சை தெளிந்துயிர்ப்பிக்கு மருந்து, a remedy that aids in restoring conciousness; 3. உடம்பிற்குச் சுகத்தையும் வலிமையையும் கொடுக்கும் மருந்து, a medicine that helps in restoring health and vigour —restorative.

சீவனாகாதம், நஞ்சு, poison.

சீவனாகினி, வெற்றிலை, betel leaf, நீர், water.

சீவனாக்கினி, see **சீவனாகினி**.

சீவனாடி, see **சீவநாடி**.

சீவனாதாரம், உடம்பு, body.

சீவனாந்தம், உயிர் முடிவு; மரணம், end of life - death.

சீவனாயுதம், see சீவனாவுபதம்.

சீவனார்த்தம், உயிர் வாழ்க்கைக்கு ஆதரவு, support of life as opposed to ஆத்துமார்த்தம் support for existence of soul.

சீவனாவுபதம், பிணி தீர்த்து உயிர் தரு மருந்து, restorative; 2. உயிர் தரு மருந்து, a medicine sought for by the alchemists for prolonging life — Elixir, c.f. சீவனாவுடதம்.

சீவனாளி, உயிருள்ள ஆண் அல்லது பெண், living being or person.

சீவனி, ஆடு தின்னாப்பாளை, worm killer — Aristolochia Bracteata; 2. மூர்ச்சை தீர்ந்துயிர்தரு மருந்து, a restorative; 3. சீவநாடி, the vital artery known as aorta which gives rise to all the arteries of the systemic circulation; 4. மூலாதாரத்திலுள்ள நாடி, artery in the sacral region between the anus and the pudenda; 5. வாதநாடி, one of the three pulses at the wrist indicating the vital function of the body; 6. பாலை மரம், iron wood tree – Minusops hexandra; 7. செவ்வள்ளிக் கிழங்கு, red coloured sweet Potato — Diosorea Sativa; 8. மந்தாரச் சிலை, a species of black stone with medicinal properties வெட்பாலை, Wrightia tinctoria.

சீவனிநங்கை, தற்பூசனி, water melon.

சீவனிநாடி, see சீவநாடி.

சீவனியகணம், மூலிகைகளை குறித்த ஓர் வைத்திய நூல், a treature about plautus promoting longevity.

சீவனியம், தண்ணீர், water; 2. மழைச்சலம், rain water; 3. கருவைக் காப்பாற்றும் சரக்குகள், ஆயுளை வளர்க்கும் மருந்துகள், drugs that preserves and protects the conception; medicine that prolongs life.

சீவனீய தைலம், கடைச் சரக்குகளுடன் உடும்பு, பருந்து கொழுப்புச் சேர்த்துக் காய்ச்சி, செவிடுக்குக் கொடுக்கும் ஓர் தைலம், Water lizard, fat of kite and bazaar drugs are boiled & given for deafness.

சீவனீயம், மூத்திர தாரை வழியாக செலுத்தப்படும் ஒரு கிருதம், a preparation of ghee which is used to be injected through urethra. see சீவனியம்.

சீவனீயவர்க்கம், சீவகம், ரிஷபகம், காகோளி, சிரகாகோளி, மேதை, மகாமேதை, விருத்திருத்தி, இவ்வெட்டும் அட்டவர்க்கம் எனப்படும். இவை கிடைக்காவிடில் சீவகம், ரிஷபகம் இதற்குப் பதிலாக நிலப்பூசனிக் கிழங்கையும், மேதை, மகாமேதைக்குப் பதிலாக தண்ணீர்விட்டான் கிழங்கையும், காகோளி, சிரகாகோளிக்குப் பதிலாக அமுக்கிராங் கிழங்கையும் விருத்திருத்திக்குப் பதிலாக —நிலப்பனங் கிழங்கையும் சேர்த்துக் கொள்ளல் வேண்டும், the group of drugs that prolong life. It is not possible to obtain them, instead the following are used. Ipomea digitata; 2. Asparagus, 3. Winter cherry (root) 4. Black musale.

சீவனௌஷதம், இறுதி காலத்திலும் உயிரை நிறுத்து மருந்து, medicine tending to prevent life leaving the body.

சீவன், உயிர், life; 2. உயிர்ச் சத்து, vitality; 3. சீவாத்துமா, perceptive soul as found in ones body; i.e. individual soul as opposed to பரமாத்துமா, the infinite or abstract state of the soul realised only in extreme circumstances as Samadhi i.e. universal soul; 5. சீந்தில், moon creeper; 6. வைடூரியம், Catseve; 7. பிராணி, living being; 8. உயிர் தருமருந்து, life giving medicine; 9. பிராணன், vitality.

சீவன் கொடுத்தல், பிழைக்க வைத்தல், to restore life.

சீவன் சீவம், ஓர் வகைக் காட்டுக் கோழி, a species of jungle fowl.

சீவன் பிரிதல், உடம்பினின்று உயிர் பிரிதல், the seperation of life from the body; 2. இறத்தல், to die.

சீவன் மயங்கல், ஓர் மரணக் குறி, a symptom before death.

சீவன் முத்தன், துறந்த ஞானம் மடைந்தோன், one in whom the soul is freed from the illusive which ensnares it before his death — perfected soul; 2. இம்மையிலே முத்திக் குண்டான பக்குவத்தை அடைந்தவன், one whose soul remains only so long in the body as is necessary to work out the karma whose activity is already commenced. See ஆரூடன்.

சீவன் முத்தி, ஞானமடைந்து பிறப்பறுத்து நிற்றல், the state of the soul which is liberated from the illusion it before ones death — final deliverance.

சீவன் வாங்கல், கொல்லல், taking away life — killing.

சீவா, பாலை, iron wood tree.

சீவாகி, செஞ் சந்தனக் கட்டை, red sandal wood.

சீவாக்கினி, உயிர் பிழைத்தற் கேதுவான சூடு, heat required for sustenance of life — animal heat; உயிர்த்தீ — மூன்று வகைகளிலொன்று.

சீவாசயம், உயிர் நிலை — seat of life vital part.

சீவாணு, பரகு போன்ற சிற்றறைகளிலிருக்கும் வஸ்து, a viscid colloid holding fine granules in suspension. 2. பிராண இயக்கமுள்ள அணுமாத்திர வஸ்து, the only known form of matter in which life is manifested — protoplasm; 3. உயிர்

அணு cell — ஒரே ஒரு உயிர் அணுவைப் பெற்றுள்ள கிருமி — one called germ or unicellular organism — bacterium.

NOTE: It really means the germs supporting the life and let us see role of germs in the causation of diseases. According to Siddhars the germs by themselves are powerles to cause diseases unless the constitution is undermined by unregulated sexual functions and other rules of health. It is only the neglect of such health —ensuring practices that make man an easy prey to germs which are powerless in cases of yogis and other able bodied men who keep their bodies pure and strong by the observance of self control and regular healthful habits. So in Siddhar's work germs do not occupy the all important role, that they do in the Western medicine of to day.

The ancients did recognise their existence and their potency for mischeif as we gather from their writings. Generally the germ caused diseases are leprosy, Crysipelas Carbuncle, certain skin diseases abscesses etc., and it is so mentioned in their works.

NOTE:— Infectitions diseases such as cholera, dyphtheriia, small-pox are all said to be caused by germs. That is the theory of the west. It must be understood that if an English medicine prescribed in such cases fails to do any good where as the Indian Medicine works it out with complete success then the 'Siddhars' (Eastern) theory has to be considered more scientific than that of the west.

சீவாதாரம், *உடம்பு*, body as a mainstay of life.

சீவாது, *உயிர்ப்பிக்கு மருந்து*, a medicine restoring consciousness.

சீவாதாரி, *கோகா செடி*, Cocaine plant Erythroxylon Coca.

சீவாத்துமம், see *சீவாத்துமா*.

சீவாத்துமா, *சாக்கிரம் அல்லது உயிர் வாழ்க்கைக்குப் பிரதானமான ஆத்துமா*, the finite spirit, embodied spirit individual human spirit which is essential for existence as opposed to *பரமாத்துமா* — infinite spirit on universal soul. Various people have in antiquity assigned to various parts of the body the seat of the soul or life such as the blood, the heart and the breath. Generally the brain was not so regarded. The Vaidik system posits the heart as the cheif centre of Consciousness — a relic of which notion we also still preserve in such pharases as take it to heart and learn by heart.

According to tantras however the cheif centres are to be found in the chakras of the cerebro spinal system and in the upper brain *(சசஸ்ராரா)* which they describe though the heart is also recognised as a seat of jivatma or embodied spirit in its aspect as vital principle or Prana Biblical saying is the blood is life.

According to same Indian views the brain is the centre of the mind and senses and the heart that of life Charaka says that the heart is the root from which springs all other parts of the body and is the centre of some of the functions or organs. According to Sushruta the heart is the seat of sensations.

சீவாந்தம், *சீவிய முடிவு*, end of life.

சீவாலி, *முதுகில் மூன்று புள்ளிகளையுடைய ஓர் வகைக் கடல் நண்டு*, a sea crab having three dots on the shell on its back — Neptumes Sanquinolentus (in yoga philosophy).

சீவாவத்தை, *ஆத்துமா மடங்குமவத்தை, அதாவது சாக்கிரம், சொற்பணம், சுழுத்தி முதலியன*, five stages of consciousness of the soul when

passing from the physical to intellectual state — wakefulness, dream, trance etc. 2 (in Pathalogy) — மரணா வத்தை — death pangs.

சீவான்மா, see சீவாத்துமா.

சீவி, அழிஞ்சில், alangium; 2. உயிர் வாழ்தல், to live; 3. மலைகோங்கு, a species of silk cotton tree grown in mountain; 4. மதனப் பூடு, a flowering plant having the virtue of promoting vitality in the system — cycus circinalis 5. உயிருடையோன், living man or woman.

சீவிகா, சாதிக்காய் nut meg.

சீவிசுரம், ஆன்மா, soul.

சீவிச்சுரம், ஆன்மா, the soul; 2. சீவாத்துமா the sentient soul as opposed to பரமாத்துமா, the abstract soul.

சீவிதகாலம், சீவிக்குங்காலம், life time.

சீவிதசமுசயம், மரண பயம், fear of death.

சீவிதஞ்ஞை, இரத்தாசயம், heart.

சீவிதம், பிழைப்பு, existence; 2. விருத்தி, progress; 3. வாழ்நாள், life time.

சீவிதமந்திரம், பஞ்சாட்சரம், the five sacred letters of Siva — ந, ம, சி, வ, ய.

சீவிதேசன், see சீவனாவுபதம்.

சீவித்தல், சீவியம் பண்ணுதல், to lively hood; 2. மரித்தல், dying, 3. சீவிப்பித்தல், to make one live; 4. உடலுடன் வாழ்தல், to live with the body.

சீவித்துப் போதல், இறத்தல், to lose the seed of life — to die.

சீவிப்பித்தல், சீவிக்கச் செய்தல், to make one live.

சீவியகாலம், வாழ்நாள், life time.

சீவியங்கம், கல்லுப்பு, rock salt but strictly the pebble like salt

— அண்டகல் — found on the soil of fuller's earth.

சீவியநாள், ஆயுள் நாள், life time.

சீவியம், ஆயுள், life time; 2. உயிரோடிருக்கை, existence of life; 3. சீவனம், lively hood; 4. வாழ்நாள், living period.

சீவியெடுத்தல், சதை வளர்ச்சியை கத்தியால் செதுக்கி யெடுத்தல், removal of a part of growth by paring off.

சீவினி, சஞ்சீவி மருந்து elixir, 2. சீவிக்கச் செய்யும் மருந்து, any medicine that promoters or restores life. 3. அழிஞ்சில் alangium.

சீவு, ஓர் புல், a kind of grass; 2. சீவுதல், to pare.

சீவுதல், சுரண்டுதல், scraping; 2. பல்துலக்கல், cleaning the teeth.

சீவொழுக்கு, see சீழொழுக்கு.

சீவோற்பத்தி, கருத்தரித்தல், conception 2. கருக்கொள்ளுங் காலம், period of conception.

சீழுதிரக்கட்டு, பிள்ளை பெற்றவர்களுக்குக் காணுமோர் நோய், இதற்கு மூங்கிலிலை கஷாயம் வைத்து 3 தினம் கொடுக்க அழுக்கு கீழ்நோக்கிக் குணப்படும், puperal infection no proper discharge after delivery Decoction of bamboo leaves gives relief.

சீழொழுக்கு, புண்ணினின்று சீழ் வடிதல், discharge of pus or oozing of pus from an ulcer or wound.

சீழ், சீ, pus.

சீழ்கசிதல், சீழ் வடிதல், oozing pus.

சீழ்கட்டுதல், சீழ் கொள்ளல், supuratign.

சீழ்கொண்ட, சீழ் அடங்கிய consisting of pus.

சீழ் கொள்ளல், சீழ் கோத்தல், to form pus suppurate.

சீழ் கொள்ளுகை, சீழ் பற்றுகை, setting in of pus in ulcer, or

abscess — suppuration great stinging pain local heat burning sensation and fever are the symptoms of suppuration.

சீழ் கொள்வீக்கம் சீழ் பற்றுதலினாலுண்டாகும் வீக்கம், suppurating swelling.

சீழ் கோத்தல், see சீழ்க்கட்டுதல்.

சீழ்க்கட்டி, சீழ் கொள்ளும் கட்டி, well ripened abscess.

சீழ்க்கட்டு, பிள்ளை பிறந்தவுடன் கருப்பையில், பெண்களுக்குண்டாகும் சீழ்த்திரட்சி, lochia.

சீழ்க்காது, சீழ் வடியும் காது, a purulent discharge from the ear otorrhea.

சீழ்க்கிராணி, உந்தியின் கீழ் வயிறுப்பி, உளைந்து நாவறண்டு, மலமும் சீழாய்க் கழிந்து முகம், கை காலில் வெளுப்புக் காணும் ஓர் வகைக் கழிச்சல், a form of chronic diarrhoea attended with swelling below the naval, pain, dryness of the tongue, purging mixed with pus. It is marked by anemic appearance in the face and limbs — diarrhoea chylosa.

சீழ்க்கொப்புளம், சீழ் கொண்ட சிறு தோல் யெழுச்சி, a small elevation of the cuticle filled with pus — pustue.

சீழ் கொள்ளா வீக்கம், சீழில்லாமலே ஏற்படும் வீக்கம், non suppurating swelling.

சீழ்த்துவாரம், சீழ் வெளிப்பட வேண்டி உண்டாகும் துளை, an opening for the discharge of pus — Fontanel; 2. சீழ் வெளிவரும் துவாரம், an opening through which pus oozes or discharged — Vent.

சீழ்ப்பல், சீழ் கொண்ட பல், tooth with pus at its root pyorrhoea.

சீழ்ப்பறவு, ஓர் கடல் மீன், a sea fish.

சீழ் பற்றிய, சீழ் கொண்ட, affected with pus.

சீழ் பற்றுதல், see சீழ் கொள்ளல்.

சீழ் பாய்ச்சல், see சீழ்க் கொள்ளல், 2. சீழ் வடிதல், exudation of pus.

சீழ்ப்பால், சீம்பால், இது உடம்பிற்கு பலம் மந்திக்கும், நீர்த்தாரையில் கல் விளையும், the milk of cow during the first three days after calving — Biestings.

சீழ்ப்பிடித்தல், see சீழ்க் கொள்ளல்.

சீழ்ப்பிரமியம், நீர் கடுத்து எரிச்சலுண்டாகி, சீழ் வடிந்து உடல் மெலியும், see சீழ்ப்பிரமேகம், a kind of disease marked by the presence of pus in the urine and followed irritation, burning sensation, emaliation etc., Pyurea.

சீழ் பிரமேகம், கோசத்தின் நாளத்தில் அல்லது அல்குலில் கடுப்புடன் சீழ்ப்போல் வெள்ளை கண்டு அரையாப்பு, சுரம், மயக்கம் முதலிய குணங்களைக் காட்டும் ஓர் நோய், பச்சையிளநீர் சாப்பிடல் நன்று, an inflammatory ailment of the male urethra or the female vagina attended with secvation inter — mingled with pus, bubo, fever, giddiness etc — Gonorrhoea Tender cocoanut gives relief.

சீழ்ப்பீனிசம், வெட்டையும், பித்தமும் அதிகரித்து, கபால முதல் நாசி வரை புண்ணாகி சீழ் வடிந்து தலைவலி யுண்டாகும் ஓர் நாசி நோய், a disease of the nose where in there is discharge of pus from the nose.

சீழ்ப்புண், சீழ் கொண்ட புண், suppurating sore — running sore.

சீழ்ப்போன்ற, சீழைப் போன்ற, resembling pus.

சீழ்மரம், ஓர் மாமரம், a species of mango tree.

சீழ்மலடு, கருப்பையில் சீழ் கலந்து சிக்கிக் கொண்டு துடையின் சந்தில் குத்தலுண்டாகி, வயிறு பெருத்து, பசியற்றிருக்கும் ஓர் வகை மலடு, a kind of sterility

in women marked by ulceration of the utreus attended with pus, boring pain in the, groms, enlargment of abdomen and loss of appetite.

சீழ்மூத்திரக் கட்டி, ஆண் குறிக்குள் ஏற்படும் சீழ்க்கட்டி. இதனால் மூத்திரத்தில் சீழ் கலந்து வெளிவரும், abscess formed in the passage of urine — urinous abscess.

சீழ்மூத்திரம், மூத்திரத்துடன் சீழ் கலந்து வருதல், pus in the urine — pyurea.

சீழ்மூலம், ஆசனத்தில் மூலமுளை உற்பத்தியாகி, சதா சீழ் வடிந்து கொண்டேயிருக்கும் ஓர் வகை மூல நோய், இது உடம்பில் சூடு அதிகரித்து மூலத்தில் நொந்து புண்ணாகி, சீழ் மலத்துடன் வெளிப்படும். அதனால் வாயு அதிகரித்து அபானங் கடுத்து மயக்கங் காணும், an inflamed piles with pus discharge — ulcerated piles.

சீழ்வடிதல், சீழ் ஒழுகுதல், discharge of pus.

சீழ்வாந்தி, சீழும், கோழையுமாக வாந்தி செய்தல், a profuse and sudden expectoration of pus and putrecent matter — Vomica.

சீழ்வாளை, see சொட்டைவாளை.

சீழ்விரணம், சீழ் வடியும் புண், suppurating ulcer.

சீறமரம், சாதிமுத்து, superior pearl; 2. கெட்டிமுத்து, solid pearl.

சீறல், பெருங்காயம், asafoetida; 2. பாம்பின் சத்தம், hiss of serpent through anger; 3. கோபத்தோடு இரைதல், raging with anger.

சீறல் போக்கல், மருந்தின் வேகம் போக்கல், to root out or eradicate the virulence of medicine.

சீரு, பலாசு, bastard kinotree — Butea Frondosa.

சீருடக்காரம், சூடன், camphor.

சீறிய கொடிச்சி, நாகசிங்கி, which see.

சீறியழுதல், அலறியழுதல், screaming.

சீறுதல், see சீறல்.

சீறுள், ஈயம், lead or tin; 2. செம்பு, copper.

சீறெலி, சுண்டெலி, mouse.

சீறெண்றழல், see சீறியழுதல்.

சீற்காரம், புணர்ச்சிக் காலத்தில் மயில் முதலியவற்றின் ஓசையைப் போல் உண்டாகும் ஓர் வகைத் தொனி, a sound that is produced during coitus.

சீற்றசத்தி, சிவனின் 4 வகை சத்திகளில் ஒன்று காளி — One of the four powers of —Siva.

சீன அவுரி, சீன தேசத்து நீலிச் செடி, China indigo, Isatis indigotica.

சீன இலந்தை, Indian plum zizphous — jujuba.

சீன எரிவண்டு, சீன தேசத்திலுள்ள எரிச்சலை யுண்டாக்கும் வண்டு, Chinese fly causing blister and burning sensations on the body like cantharides.

சீனக்கட்டி, இரும்புக் கிட்டம், scum of iron; 2. வார்ப்பு இரும்பு, cast iron.

சீனக்கடுக்காய், சீன தேசத்திய மஞ்சட் சாயலான முதிர்ந்த கடுக்காய், gall nut yellow in colour and fully matured imported from China — China myrobalan; 2. சிவந்த சீனக் கடுக்காய், red China gall nut.

சீனக்கண்டல், கரைக்கண்டல், China mangrove — Lumnitzera Racemosa.

சீனக்கரும்பு, இறுங்கு சோளம், sweet millet sorghum saccharatum.

சீனக்கருவாப் பட்டை, சீனத்தில் இருந்து இறக்குமதியாகும் கருவாப்பட்டை, Cinnamon bark imported from China.

சீனக்களிமண், மருந்து பாத்திரங்கள் செய்யும் சீன தேசத்திய ஓர் வித களிமண், China clay from which medicine containers are manufactured.

சீனக்களிம்பு, சீனத்தில் தயாரிக்கும் களிம்பு, an ointment prepared by the Chinese.

சீனக் கற்பூரம், சீன தேசத்திய கற்பூரம், Camphor imported from China. 2. கிண்ணி கற்பூரம், refined camphor cast in a mould of cup camphor.

சீனக்காக்கை, சீன தேசத்துக் காக்கை, China crow.

சீனக்காந்தள், ஓர் வகைப் பூ, China mangrove Pyrranthus Albus.

சீனக்காய்க் கொடி, பறங்கிக் கொடி, great pumpkin creeper.

சீனக்காரம், சீன தேசத்திய படிகாரம், இதனால் பல்லரணை இலிபதம் கண்ணோய், துன்மாங்கிஷம், வாதப்பிணி, உட்சூடு, குன்மம் போம், alum imported from China is distinguished from indigenous one.

சீனக்கிச்சிலி, நாட்டுக் கிச்சிலி, China orange tree — Citrus aurantum.

சீனக்கிழங்கு, see இரேலில் சின்னிபேதிக் கிழங்கு; 2. பரங்கிப்பட்டை. இது ஓர் கடைச்சரக்கு, china root; Smilax China; *3.* வள்ளிக்கிழங்கு, china yam.

சீனக்கிளி, பெரிய வெள்ளைக்கிளி, இதன் கொண்டை அசையும் — a white parrot of china having a movable crest — Cockatoo.

சீனக் கொழுஞ்சி, கஸ்தூரி எலுமிச்சை, musk lime. Triphasia Trifoliata.

சீனக் கொழுப்பு, நீர்த்திப்பிலி மரத்தினின்று வடிக்கும் தடித்த எண்ணெய், vegetable tallow prepared from the kernol of the fruit — China tallow.

சீனசம், உருக்கு, steel.

சீனசுத்தி, அதாவது படிகார சுத்தி, பசும் பாலில் மூன்று சாமம் ஊறிய பின் எடுத்துக் கொள்ள சுத்தியாம், Purification of Alum. The process is to boild it in cow's milk for a hours.

சீனசப்பாத்துச் செடி, செம்பரத்தை, China shoe flower plant. Hibiscus Rosa — Sineses.

சீனச்சரக்கு, சீன தேசத்திலிருந்து இறக்குமதி யாகும் மருந்துச் சரக்கு, drugs imported from China.

சீனச்சாமந்தி, see சீனப்பூ, 2. மாசிப்பத்திரி, indian absinth — Artemesia indica.

சீனச்சாரம், சீன தேசத்தில் தயாரிக்கும் சாரம், Salammoniac prepared by Chinese.

சீனச்சுக்கான், சீன தேசத்திய சுக்கான் கல், lime stone of China porcelain. see சீனபதிச் சுக்கான்.

சீனச் சுண்ணம், சீன தேசத்திய சுண்ணாம்பு, இதனால் கபம் போம், China chalk. It removes phlegm from the system.

சீனச்சூடன், சீனக் கற்பூரம், China camphor — cup camphor; *2.* பூநீறு, சூடன், வீரம், கம்பி முதலிய சரக்குகளைக் கொண்டு மச்சமுனி சொல்லியபடி செய்யும் சுண்ண மருந்து, இது கபத்தை அறுக்கும், a medicine prepared according to Machamuni with the following drugs, fuller's earth, camphor, salt peter, corosive sublimate. It removes phlegm.

சீனச் சோம்பு, அனாசிப்பூ, China anise — Illicum — Anisatum.

சீனட்டங்குருவி, ஆந்தையைப் போன்ற ஓர் பட்சி, fern owl — Caprimulgus Indicus. 2. காட்டு சீனட்டம், jungle night. Jar goat sucker. Caprimulgus — Asiatita.

சீனட்டம், see சீனட்டங் குருவி.

சீனத்தா, இதிரக் கிழங்கு, which see.

சீனத்தாளி, நொளைதாளி, China laurel Antidesma bunias.

சீனத்தானியம், தினை, China corn.

சீனத்துக்காய், see அம்பளங்காய்.

சீனத் தேயிலை, சீனத்தில் விளையும் தேயிலை. China tea.

சீனநொதி, சர்க்கரைப் புளிப்பு, sacchrine fermentation.

சீனபதிக் கற்பூரம், see சீனக் கற்பூரம்.

சீனபதிச் சுக்கான், பீங்கான், கண்ணாடி முதலிய சாமான்கள் செய்வதற்கு சீன தேசத்தில் உபயோகிக்கும் களிமண், China clay used for manufacturing pottery ware and other untensils glass etc porcelain.

சீனபதி ரேக்கு, சீன தேசத்திய செம்புத் தகடு, thin copper foils or tinsels imported from China.

சீனபிட்டம், செவ்வியம், China pepper root of piper Nigrum. See சீன மிளகு.

சீனப்படிகை, see சீனக்காரம்.

சீனப்பட்டை, பரங்கிச் சக்கை, China root — Similax of China; 2. கொழும்பு வேர் - Columbo root — jatcorrhiza columba. c.f. சோப்சினி.

சீனப்பரம், பரங்கிக் கிழங்கு, large china root smilax glabra.

சீனப்பருத்தி, see செம்பரத்தை, shoe flower plant.

சீனப்பலா, see சீனப்பட்டை.

சீனப்பவளம், சிவப்பு பிச்சி, a variety of red tinged jasmine.

சீனப்பனிச்சை, சீன தேசத்திய பேரீச்சமரம், Chinese date palm. Diospyros Kaki Fruit is about the size of an apple with twin almond like stones in the centre.

சீனப்பா, பறங்கிக் கிழங்கு, பறங்கிப் பட்டை, similax China.

சீனப்பாகு, சீன தேசத்தில் தயாரிக்கும் ஓர் தித்திப்புப் பாகு, China syrup.

சீனப்பாலி, சகாமோனிதம், an unknown plant.

சீனப்பாலை, சீனச்சாராயம், arrack manufactured in China.

சீனப்பிசின் மரம், சாம்பிராணி மரம், China olive — Canarium Commune.

சீனப்புகை, மேகப் புண்களுக்காக அகஸ்தியர் வைத்திய காவியத்திற் சொல்லியுள்ள ஓர் வகைப் புகை, fumigation for veneral sores as in Agastiyar's Kavium.

சீனப்புல், மலையாளத்தில் விளையும் ஓர் விஷப் புல். இதன் ஓரினம் உடம்பில் பட, சுரம் உண்டாகும். China grass — Urtica Nivea. It is common in the west coast, Malabar. A Species of this grass Urtica crenulata —when touched brings on fever.

சீனப்பூ, ஓர் பூஞ்செடி, இதுவே பரங்கிப் பூ அல்லது சீனச்சாமந்தி, a flowering plant known as China mindle or China privet - Lagerstroemia Indica. The flowers are useful in Medicine.

சீனமல்லிகை, ஓர் வகை சீனப்பூ. இதுவே சீமை வெண் பிச்சி, Shangai Jasmine — China Jasmine — Trachelos permum jasmine oides.

சீனமிளகு, கப்பல் மிளகு. இதுவே கபாப்சீனி. இது சீன தேசத்திய மரத்தின் வித்து. இச்செடியின் காய் இலவங்கம், இலவங்கப்பட்டை, சாதிக்காய் ஆக இம் மூன்று சரக்கு வாசனையுங் கலந்தது போன்ற வாசனையுள்ளது. இக்காயையும் இலைகளையும் சமையலுக்குபயோகிப்பார்கள். China a pepper — Pinenta Acris — Seed from the berry the tree are used Berries have an aromatic odour resembling a mixture of cinnamum, cloves, and nutmeg. Bark is astringent and aromatic, leaves and berries are used in cooking.

NOTE: It is a kind of cubeb pepper introduced by the Chinese in commerce and trade with India in olden days. There is also a tree of the same genus in Tropical America known as ultspice (Pimenta Officinalis). It is employed as an aromatic stimulant and carminative.

சீனமுத்து, சீன தேசத்திய செயற்கை முத்து, an artifical pearl made in China.

சீனமூங்கில், கட்டை மூங்கில், China dwarf bamboo — Bambusa Nana.

சீனமௌலி, வெண் சந்தனம், white sandal wood — Santanum Album.

சீனம், மான் deer 2. படிகாரம், alum; 3. மனோசிலை, red arsenic; 4. சீன தேசம், China; 5. கடுகு, mustard; 6. சிந்து லவணம், Sindh salt; 7. மலைப்பாம்பு, mountain snake.

சீனயா, பறங்கிக் கிழங்கு, see சீனப்பா.

சீனயீரம், வால் மிளகு, tail pepper.

சீனலவணம், பூநீர், கல்லுப்பு, நீருப்பு வெடியுப்பு, இவைகளைச் சம எடையாகக் கலந்து காடியில் எரித்திட்டு எடுத்த ஓர் வகை உப்பு, It is salt prepared in China. It is prepared as follows: Equal quantities of fullers earth, rock salt, common salt and mitre are dissolved in sufficient quantity of vinegar and heated till it becomes dry.

சீனவங்கம், சீன ஈயம், China lead, 2. சீன தேசத்து வீரம்.

சீனவள்ளிக் கிழங்கு, China potato.

சீனவன்னி, see சீனை.

சீனவிச்சி, சீனத்து இச்சி மரம், Chinese banyan — Ficus genus.

சீனவீரம், வால் மிளகு, tail pepper; 2. சீன தேசத்து வீரம், corrosive sublimate prepared and imported from China.

சீனவெரிவண்டு, சீன தேசத்திய எரிவண்டு, a blister fly of China.

சீனவேர், பறங்கிச் சக்கை, common China root Smilax China; 2. சோப் சீனி, Indian China root smilax Lanceasefolia.

சீனன், மூர்க்கன், rude fellow; 2. மடையன், fool; 3. விருத்தன், old man.

சீனாக்கற்கண்டு, சுத்தி செய்த வெண்மையான கற்கண்டு, white sugar candy.

சீனாக்கற்பூரம், see சீனக் கற்பூரம்.

சீனாக்காரம், படிகாரம், alum.

சீனாப்பிரேதம், மிக நலிந்தவன், an emaciated person.

சீனாப் பூரம், சீனத்துக் கற்பூரம், China camphor.

சீனி, வெள்ளைச் சர்க்கரை, white sugar; 2. see சீனக்காரம், 3. பித்தளை மணல், brasore; 4. ஓர் மரம், false hemp; 5. புத்தன் சீனி, Batavian orange citrus Auraticum.

சீனிகம், சர்க்கரைப் பாகு, Syrup.

சீனிக்கண்ணாடி, தூரதிருஷ்டிக் கண்ணாடி, Telescope.

சீனிக்கற்கண்டு, சீனக்கற்கண்டு, crystal sugar.

சீனிக்காரம், படிகாரம், alum.

சீனிக்கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, sweet potato. இதுவே வத்தாளைக் கிழங்கு.

சீனிக் கொத்தவரை, சிறு கொத்தவரை, a small variety of cluster bean — China lablab.

சீனிசக் காளான், பெருங் காளான், large variety of mushroom.

சீனிச்சருக்கரை, வெள்ளைச் சருக்கரை, இதனால் வாதசுரம், கிருமிரோகம் நீங்காதவிக்கல் இவைகள் போம், white sugar, It is useful in rheumatic fever, worm, disease and hic cough.

சீனிச்சிறுமி, பறங்கிப்பட்டை, see சீனப்பட்டை.

சீனித்துளசி, holy basil of China.

சீனிப்படிகை, see சீனப்படிகை.

சீனிப்பண்டம், வெள்ளை சருக்கரையைக் கொண்டு தயாரித்த இனிப்புப் பண்டம், sweet meals prepared with white sugar — Confection.

சீனிப்பலா, ஓர் பலாமரம், bread fruit tree — Artocarpus incisa.

சீனிப்பாகு, சர்க்கரைப் பாகு, molassus; 2. மருந்தைக் கூட்டித் தயாரிக்கும் தித்திப்புப் பாகு, China syrup.

சீனி மருந்து, பறங்கிப்பட்டை, see சீனப்பட்டை.

சீனிமிளகாய், கானல் மிளகாய், forest chilly; 2. தித்திப்புக் கலந்த மிளகாய், seasoned sweet chilly.

சீனிமிளகு, see சீனமிளகு.

சீனியவரை, சீன தேசத்து அவரை, China lablab — cluster beans. Dolichos fabea formis; 2. கொத்தவரை, cluster bean Cyamopsis Psoraloitils.

சீனை, வன்னி மரம், sumatree — Prosopis spicigera.

சு

சு, நன்மை, சுகம் இவைகளைக் காட்டும் ஓர் உப சர்க்கம், a prefix devoting good or health.

சுகக்கீனம், சௌக்கிய வீனம், ill health.

சுகக்கினி, நாக்கு, tongue.

சுகக் கேடு, சௌக்கியக் குறைவு, ill health.

சுகசதம், மஞ்சபத்திரி, an unknown drug capable of reducing gold into powder.

சுகசத்தி, விட்சேப சத்தி; சுருங்கி விரியக் கூடிய சத்தி, power of contraction and expansion.

சுககரம், சுகத்தைக் கொடுப்பது, that which is condusive to health.

சுகங்காட்டல், சௌக்கிய குறியை உணர்த்துதல், symptoms showing recovers indication of convalescence.

சுகசங்கடம், சுக்கில மூத்திரம், passing urine mixed with semen.

சுகசந்தரிசனம், சுகானுசாரம், adoption of sanitary measures to promote or secure health.

சுகசந்தரிசன நூல், சுகானுசார விதிகளைப் போதிக்கும் நூல், Sanitary science.

சுகசபதம், இளம் பருவமுள்ள நோயற்ற பெண், a healthy young girl.

சுகசரீரம், நோயற்ற வுடம்பு, a healthy constitution in which the three humours are in equalibrium; 2. மிருதுவான வுடம்பு, a delicate constitution.

சுகசரீ, சவுக்கிய நிலைமையோடு கூடிய உடம்பையுடையவன், a healthy person.

சுகசன்னி, பொருந்தாப் புணர்ச்சியாலுண்டாகும் பெண் தோஷம் அதாவது மாதவிடாய் காலத்தில் சம்போகம் செய்வதனால் உண்டாகும் திரிதோடசுரம், a morbid delirious fever due to sexual intercourse during the first three days of menstrual period 2. ஓர் சன்னி வலிப்பு, a fit of apoplexy from unseasouble intercourse.

சுகசன்னிபாதம், தைலம் தேய்த்து முழுகியும் தயிரன்னம் புசித்து வயிறு மந்தமாயிருக்கும் போதும் உடம்பு அலுத்திருக்கும்போதும் பெண்களை மாதவிடாய் காலத்தில் புணர்தலாலும் கடும் புணர்ச்சியினாலும், நரம்புக்கு அசதி கண்டு, உடம்பில் வலி, கண் சிவப்பு, வியர்வை நடுக்கம், பிரமை காணுதலுடன் உடம்பு குளிர்ந்து கண் சுழன்றும் இவை முதலிய குணங்களைக் காட்டுமோர் வகை சன்னிபாதம். இச்சன்னிக்குக் கட்டிய வெள்ளைப் பாஷாணத்தில் அரிசியடை தேனில் உரைத்துக் குழப்பிச் சாப்பிட தீரும், a kind of delirium marked by pain in the body, blood shot eyes. Perspiration trembling, hallucination and other mental disturbances. It is due to indiscreet sexual intercourse after bodily exhaustion after taking oil bath, eating cold rice or curd rice especially with a woman who is in her periods.

சுகசாத்தியம், எளிதில் தீரக் கூடியது, easily Curable.

சுகசாரிதம்,அகில், Agil wood.

சுகசிங்கினி, see சிங்கினி.

சுகசிதம், பூனைக்காலி, common cowitch plant Mucuan pruriens.

சுகசிதா, பெத்தணத்தி.

சுகசிம்பர், see சுகசிம்பி.

சுகசிம்பி, பூனைக்காலி, see சுகசிதம்.

சுகசீவாதி, ஈரற்கல், a red stone of liver colour Adamantine spar.

சுகசீவாதிச் சுண்ணம், ஈரற் சுண்ணம், a calcined powder prepared out of corundum with a metalic banisy lime.

சுகசீவி, நோயணுகாமற்படி சீவித்திருப்போன். one living without ailment; now it is applied to one who lives happily without earning.

சுகட்டான், நாணற்புல் bubrush, reed; 2. முடக்கொற்றான், baloon vine smooth leaved heart pea — Cordiospermum Halicacabum.

சுகட்டிகம், பெருங்குமிழ், cashmere tree — lymelina arborea.

சுகட்டிகா, நாணற்புல், buffulo reed — Saccharum Spontaneum.

சுகட்டிரா, பேய்ப்புல், a kind of poisonous grass full of little clots.

சுகண்டகெந்தி, கோழித்தலைக் கெந்தகம் red sulphur of brick dust colour used formerly by Tamil Alchemists.

சுகண்டி, ஓர் இரத்தினம், a gem.

சுகதபேதம், முதல் சினைக்குள்ள மூவகைப் பேதங்களுள்ளொன்று, அஃது மரத்து இலை, காய் முதலிய வித்தியாசம், (in Botany) one of the three changes as between the original and its productions i.e., the stock, its branched leaves fruits etc.

சுகதாரு, கடம்பு, cadamba tree — Eugenia Racemosa.

சுகதிர், பொன்னாங்காணி, sessile plant — illuecbrum sessile.

சுகதிகா, பேய் மருட்டி, devil frightner. Anisomeles malabarica.

சுகதுக்கம், குப்பைமேனி, acalypha indica. 2. வாழ்நாளிலேற்படும் இன்பமும், துன்பமும், sorrows and pleasures of life — up and drons in existence.

சுகதுக்கி, பிறப்பில் அழுந்தி இருக்கும் ஆன்மா, the soul subjected to births and deaths.

சுகத்திரகம், வாகை மரம், common sirissa — Albizzia labbak.

சுகத்திரம், see சுகத்திரகம்.

சுகத்திரா, இந்துப்பு, rock salt.

சுகத்துருமம், வாகை, see சுகத்திரகம்.

சுகத்துவம், உடம்பிலுள்ள நோயைத் தன்னிலே நீங்கச் செய்யும் இயல்பு, nature cure affected through health guarding force — viz Medicatrix Nature.

சுகதுக்க மிரண்டறியுமிலை, குப்பைமேனி Indian acalypha.

சுகநாசனி, கிளிமூக்கு, an unknown plant 2. அகத்தி, which see.

சுகநாசா, கிளிமுருக்கு, இது இரசத்தைக் கட்டும், an unknown plant. It is said to consolidate mercury.

சுகநாசா பாலா, see சுகநாசா

சுகநாதத் தைலம், அகத்திக் கீரைச் சாறும் நல்லெண்ணெயும் கலந்து காய்ச்சிய தைலம்; தேகச் சூடு, கொதிப்பு வெட்டைச் சூடு போம், an oil prepared with the juice of Agati grandiflora — It cools the system. It is a bathing oil.

சுகநாதம், யோக திண்டு, a pillow used in yoga practice.

சுகநீர், இந்திரியம், semen.

சுகநீர் ஒழுக்கு, see சுகநீர்ப் பெருக்கு, சையோக மில்லாமலே அதிகமாக சுக்கிலம் ஒழுகுதல், discharge of semen without copulation.

சுகநீர்த்தம்பனம், இந்திரிய கலிதமாகாதபடி தம்பித்தல், Suppression of the discharge of Semen Spermatochesis.

சுகநீர்ப் பெருக்கு, இந்திரிய கலிதம், discharge of semen; 2. இந்திரிய வொழுக்கு, in voluntry discharge or nocturual emission of semen.

சுகந்தகம், ஈரவெண்காயம், Onion; 2. கந்தகத்தூள், 3. தேன்தோடம் பழம், a very sweet orange an orange which tastes sweet like honey.

சுகந்தக் கலவை, பரிமளத்திரியம் குழம்பு, mixure of perfumes.

சுகந்தசூட்சம், மருக்கொழுந்து — Aristalochia labiosa.

சுகந்தஞ்சம், கழுதைமான் புள்ளி, an unknown drug said to possess the virtue of consolidating arsenic compounds.

சுகந்தத் திரவியம், வாசனைப் பண்டங்கள், aromatic drugs.

சுகந்தத் தூபம், நறும்புகை, fragrant smoke or incense.

சுகந்த பற்பம், வாசனைத் தூள் அல்லது பொடி, aromatic powder scented dust.

சுகந்த பரிமளம், மிக்க வாசனை, too much fragrance sweet scent.

சுகந்தப்பட்டை, வாசனைப் பட்டை, aromatic or fragrant bark.

சுகந்தபாலா, see பாலா.

சுகந்தப்பாலை, நன்னாரி, Indian sarasaparilla.

சுகந்த புட்பகம், சுரபுன்னை, Ochrocarpus longifolius.

சுகந்தமரம், கற்பூர மரம், camphor tree.

சுகந்தமா, கஸ்தூரி மிருகம், musk deer; 2. கற்பூரம், camphor.

சுகந்தமாட்சி, கெந்த மாஞ்சில், (போகர் நிகண்டு) an unknown drug referred in Bogar's vocabulary. See note under சடாகமிருதம்.

சுகந்த மூலதிரசம், அரத்தை, galangal — Alpinia galanga.

சுகந்த மூலி, வெட்டி வேர், cucus root — Andropogon Aromaticus.

சுகந்தம், அரத்தை, see சுகந்த மூலாதிரசம்; 2. ஈரவெங்காயம், onion; 3. கந்தகம், sulphur; 4. கிழங்கு, bulbous root; 5. பரிமளம் aroma; 6. சீரகம், cumin seed; 7. நீலோற்பலம், blue Indian water lily Nymphaca Stellata; 8. வாசனைப் பொருள் aromatics; 9. இனிய கந்தம், perfume; 10. சிவப்பு வாசனைச் சம்பாநெல், red variety of fragrant paddy Muse sapientum (chamba); 11. வாழை, a species of fragrant plantain; 12. நறுமணம், fragrance; 13. கொடிச்சம்பங்கி, primrose creeper — Pergularia odoratissima.

சுகந்தரசம், அகஸ்தியர் வைத்திய காவியம், 1500-ல் சொல்லியுள்ள ஓர் குளிகை, இது குன்மத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. a medicine mentioned in Agastian Kaviyam 1500. It is given for dyspepsia; 2. நறும்பிசின், a fragrant resin.

சுகந்த சுரசரசம், கஞ்சாங் கோரை, Ocimum Album.

சுகந்தரம், ஈரவெங்காயம், Onion.

சுகந்த வர்க்கம், வாசனைத் திரவியங்கள், a group of aromatic drugs used in Medicine or other substances mixed in perfumes; 2. செவ்வந்திக்கல், a semi precious stone amethyst.

சுகந்த வாழை, பூ வாழை, a variety of plantain.

சுகந்தவில்லை பரிமளபில்லை, tablet prepared with sandal and other fragrant substances.

சுகந்தன், கஸ்தூரி, musk.

சுகந்தாதோ, சற்பாட்சி, which see.

சுகந்தாசம், see கறுப்புக் கடலை.

சுகந்தா பலம், கோதுமை wheat.

சுகந்தி, செவ்வந்திக்கல், see சுகந்த வர்க்கம், 2. See இருவாட்சி.

சுகந்திகம், வெண்டாமரை, white lotus; 2. கந்த தூபம், fragrant incense.

சுகந்திக்கல், ஓர் இரத்தினக் கல், இதுவே செவ்வந்திக் கல், a semi precious stone Amethyst.

சுகந்திதம், வாழை, plantain.

சுகந்திதா, பேய் மொச்சை, devil mochai — Dalichos genus.

சுகந்தி பலயுதகம், குந்துருக்கம், white dammer — Vateria indica.

சுகந்திப்பாலை, நட்பாலை வேர், the root of fragrant paulay (milky plant) 2. நன்னாரி வேர், Indian sarasaparilla.

சுகந்திரணி, மல்லிகை, jasmine.

சுகந்திரம், பெருங்காய மரம், a tree yielding asafoetida — Ferula assafoetida.

சுகந்திருநாகம், பாலை, milky paulay, Mimusops hexandra; 2. நன்னாரி, Indian sarsaparilla.

சுகந்தினி, சண்பகம், champak flower — Michelia champaca; 2. நாறு கரந்தை, a kind of basil with fetid smell — Spoermithius genus.

சுகந்தீசபரணம், see ஏலா வாலுகம்.

சுகந்தீதம், வெட்டிவேர், See சுகந்தமூலி.

சுகந்தோத்தம், மகிழம்பூ, apa face flower — Mimusops elengi.

சுகபலம், எருக்கஞ் செடி, madar plant — Calotropis gigantea.

சுகபலா,

சுகபலை, see சுகபலம்.

சுகபவேதிசம், பனிப்பயிறு, dew gram phaselous Radiatus.

சுகபிச்சகம், மாமரம், Mango tree.

சுகபுச்சம், சுகந்தநீறு an aromatic powder; 2. வாசனையுள்ள விபூதி, fragrant holy ash 3. கந்தகம், sulphur.

சுகபுட்பம், வாகை, sirissa tree Mimosa Flexuosa; 2. மாஞ்ச பத்திரி — unidentified plant.

சுகபேதி, கஷ்டமில்லாமல் ஆகும் பேதி, gentle mild purgative. Aperient; 2. மலம் இளகி laxative; 3. சொற்பபேதி, simple purgative.

சுகபேதிக் குளிகை, சுத்தி செய்த வாளத்துடன் ரோஜாப்பூ, உலர்ந்த நெல்லிக்காய் சம எடை சேர்த்துப் பழச்சாறு விட்டு 3 நாள் அரைத்து கடலையளவில் செய்த மாத்திரை, இதை சீரக கஷாயத்தில் கொள்ள வருத்தமின்றிப் பேதியாகும், a purgative pill containing purified croton seed petals and emblic myroblan when given with cumin decoction acts as a good purgative.

சுகபேதி மாத்திரை, கோதுமை ரவா $1^1/_4$ பலம் சுத்தி செய்த வாளம், பூரம், சுக்குத் தூள் வகைக்கு $^1/_2$ பலம் இவைகளைப் பன்னீர் விட்டரைத்து பயிறு போல் மாத்திரை திரட்டவும், குழந்தைக்கு முலைப்பாலிலும் பெரியவர்களுக்கு சோம்பு, திராட்சை, சுக்கு கஷாயத்திலும் கொடுக்க, கஷ்டமில்லாமல் பேதியாகும். A purgative pill containing purified croton seeds Subchloride of mercury dry ginger, wheat rava and prepared as instructed. This can be given to children with breast milk to adults with the decoction dry grapes and dry ginger.

சுகபேதி யெண்ணெய், 1. சிற்றாமணக் கெண்ணெய் படி $^1/_2$, பசுவின் பால் படி 2, அதிமதுரம், கடுக்காய், இந்துப்பு, கடுகு ரோகணி சுத்தி செய்த வாளம் வகைக்குப் பலம் $^1/_4$ இவைகளை இடித்துக் கலக்கி, பிறகு காய்ச்சி வடித்துக் கொள்ளும் எண்ணெய். இதைப் பெரியவர்களுக்கு $^1/_2$ பலம் கொடுத்து 1 நாழி சென்று வெந்நீர் கொடுக்கவும். மோர்க்கஞ்சி கொடுக்கப் பேதியை நிறுத்தும். மாலையில் சுக்கு கஷாயம் இராத்திரி ரசம் சாதம் பருப்புத் துவையல், An oil purgative prepared with castor oil (of small castor seeds) cow's milk some bazzar drugs and purified croton seeds as per rules of making oil; 2. முருங்கப்பட்டை மூக்கரைச் சாதனை வேர், ஈருள்ளி, இவைகளைச் சமமாய்க் கொண்டு தட்டிச் சாறு பிழிந்து, அதற்குச் சரியாக சிற்றாமணக்கெண்ணெய் விட்டு எரித்து மலபந்தம், கரப்பான், சிரங்கு இவைகளுக்குக் கொடுப்பது, a mild oil purgative prepared as told above, and used for skin diseases mainly.

சுகபோகம், இன்ப நுகர்ச்சி, sexual enjoyment.

சுகபோகி, சிற்றின்பத்தை நாடப்பட்டவன், a man devoted to sexual enjoyment An epicure.

சுகபோசனம், நல்ல சாப்பாடு, rich meals 2. ஆரோக்கியத்தை யுண்டாக்கும் உணவு, a whole some food — மாறுபாடில்லா உண்டி, not incompatable food.

சுகபோசனி, நல்ல உருசியுள்ள உணவை நாடுபவன், one who indulges in the luxuries of the table; 2. ஆரோக்கியத்தை உண்டாக்கும் உணவைத் கொள்பவன், one who takes whole some balanced and incompatable food.

சுகப்படல், நோயினின்று நீங்கல், to be cured of the disease; 2. குணப்படல், to recover from disease; 3. போகம் அனுபவித்தல், to enjoy life; 4. சௌக்கியப்படல், to be restored to health.

சுகப்படுதல், see சுகப்படல்.

சுகப்பிரசவம், கஷ்டமில்லாமலே பிள்ளை பெறல், easy and safe delivery of child without any complications; 2. இயற்கைப் பிரசவம், natural delivery of child without any surgical aid.

சுகப்பிரியா, see ஆத்தி மல்லிகை, 2. வாகை sirissa tree see சுகத்திரகம், 3. பொன்னாங்கண்ணி, sessile plant Illecebrum Sessile.

சுகப்பிரியை, see சம்பு நாவல்.

சுகப்பிழை, சௌக்கியவீனம், ill health.

சுகப்பேறு, see சுகப்பிரசவம்.

சுகமரணம், கஷ்டமில்லமல் சாதல், an easy or painless death — Euthanasia.

சுகமாய்ப் போதல், நோயின்றி சௌக்கியப்படல், to recover from disease, to be restord to health.

சுகம், உடம்பு, body 2. நீர், water 3. புளி கரைத்த தண்ணீர், tamarind water tamarind solution; 4. முலைக் கண், nipple orifice of teat; 5. சௌக்கியம், health; 6. கிளி, parrot; 7. ஆரோக்கியம் அதாவது உடம்பையும், மனத்தையும் சம நிலையில் நிறுத்தி வைத்தல், normal condition of body and mind. Keeping the body and mind with out any disease; 8. வாதபித்த சிலேட்டுமம் ஒழுங்கான நிலையில் இருத்தல், normal condition of the humours, the fundamental principles of the body; 9. உடம்பின் சாதாரண நிலை, general condition of the body; 10. உடற்றொழில்கள் சரிவர நடைபெறும் நிலைமை, that condition in which the body functions are duly discharged; 11. உடம்பு சுத்த நிலையிலிருத்தல்; sound state of the body; 12. இன்பம், enjoyment; 13. நன்மை that which is good or pleasing; 14. வருத்தமின்மை, the state of being free from sufferings.

சுகம்பலம், பூனைக்காலி, cowhage plant Mucuna — Pruriens.

சுகம்பல், புளிநறளை, fox grape — Cissus carmosa alias C. acida; 2. புளிப் பிரண்டை, hairy wild vine — Vitis setosa.

சுகம்பாரகம், பேய்ப்புல், devilgrass a poisonous grass full of knots.

சுகம்பேணல், உடம்பைக் காப்பாற்றல், preservation of health.

சுகரகம், வாழை plantain tree — Musa Paradisiaca.

சுகரணம், உயிருள்ள பிராணிகளின் கருவிகளையும் அவைகளால் நடைபெறும் சுகதுக்கத்துக்கடுத்த செய்கைகளையும் மாறுதலையும் பிரமாணங்களையும் விவரிக்கும் ஓர் நூல், that branch of Science which deals with the normal functions and phenomena of the living body. Physiology.

சுகாந்தம், ஈர வெங்காயம், onion. See சுகந்தரம்.

சுகலாவி, எருக்கு, madar plant — Calotropis Gigantica.

சுகலி, சடைச்சுண்டி, see சடைச்சி.

சுகவல்லபம்,

சுகவல்லம், மாதுளை, Pomegranate — Punica granatum.

சுகவழி, சுகாதார நூல், hygiene.

சுகவாழ்வு, சந்தோஷ சீவனம், happy life.

சுகவிரேசனம், see சுகபேதி, mild purgative 2. கஷ்டமில்லாமல் பேதியாதல், painless easy motion.

சுகவீனம், துன்பம், affliction; 2. (சுகம் + ஈனம்) ill health impairment of health.

சுகவேளை, சுகமான காலம், healthy period.

சுகாசகம்,

சுகாசம், வெள்ளரி, Cucumber.

சுகாசனம்,

சுகாதனம், மாதுளை, see சுகவல்லபம்.

சுகாசனம், (சுக + ஆசனம்) யோகம் புரிவதற்காக, தன் சௌகரியப்படி போட்டுக் கொள்ளும் ஆசனம், a yogic posture prefered according to one's ease and comfort.

சுகாட்டன், நாணற்புல், bubush — Saccharum Spontaneum; 2. முடக்கொற்றான் hearts pea — Cardiospermum halicacabum.

சுகாதாரம், சுகாதார நூல், Hygiene.

சுகாதாரவிதி, நோயணுகாவிதி, a system of principles designed for promotion of health, especially in house holds — Hygienic principles.

சுகாதார விளக்கம், சுகத்தைப் பற்றிய நூல்; science of health and its preservation explaining the hygienic principles — Hygiene Sanitary science.

சுகாதாரனுஷ்டானம், நோயணுகாவிதிகளை யனுசரித்தல், devotion to the observance of hygienic rules.

சுகாதிபலம், சாதிக்காய், Nutmeg — Myristica Fragrans.

சுகாத்மறங்காரா, மருவகம், a fragrant shrub Artemesia Austriaca.

சுகாநந்த சஞ்சீவி மாத்திரை, இரசம், அரிதாரம், கெந்தகம், நாபி, துத்தம், மனோசிலை, வெண்காரம், கோஷ்டம், வகைக்கு 1 விடை எடுத்து கிரமப்படி சுத்தி செய்து பழச்சாறு விட்டு 7 நாள் அரைத்து, மிளகளவு மாத்திரை செய்து 3 நாள் நிழலில் உலர்த்தி எடுக்கவும். அனுபானம் தேன், இஞ்சி, முலைப்பால், பன்னீர், குளிர்ந்த நீர், லவங்க கஷாயம், துளசிச் சாறு இவை எதிலேனும் கொடுக்க சகலவித சுரமும் போம், a pill called Suganatha sanjeevi containing purified mercury, sulphur, yellow orpiment red orpiment, zinc sulphide, borax, aconite & costus root is given for all fevers with various vehicles such as honey, breast, milk, ginger juice etc.

சுகாந்தக்கல், see சுகந்திக்கல்.

சுகாந்தம், ஈரவெங்காயம், onion, see சுகந்தம்.

சுகாந்தனம், see சுகாந்தம்.

சுகாந்திக்கல், see சுகந்திக்கல்.

சுகாம்பல், புளிநறளை, see சுகம்பல்.

சுகாரிதம், வள்ளையலுப்பு, salt useful in the manufacture of glass bangles — Fel vitri.

சுகானுபோகி, see சுகியன்.

சுகி, சௌக்கியம், health 2. சுகமுள்ளவன், a healthy person.

சுகிதம், பால், milk.

சுகித்தல், சிற்றின்பம் நுகர்தல், indulging in sexual pleasures.

சுகியன், போசனாதி சௌக்கியமுடையோன், one who has all comforts, Epicure.

சுகியா, தர்ப்பைப் புல், sacred grass sacrificial grass — Eragrostis Cynosuroides.

சுகிருது, ஓர் வகை முல்லை, a kind of jasmine.

சுகிர், உட்டுளை, inner cavity — (eg) pipe or sinus.

சுகிர்தம், நெய், ghee — clarified butter; 2. நல்லெண்ணெய், gingelly oil; 3. தவம் செய்தல், practising religious austerities; 4. அதிர்ஷ்டம், luck; 5. நற்செய்கை, good deeds.

சுகிலம், பொன், gold.

சுகுடம், சேம்பு, Indian Rales — Colocasia nymph — acifolia or C.antiquorum.

சுகுணம், நல்ல குணம், good quality or disposition.

சுகுணம் பிறத்தல், சௌக்கியமாதல், to be cured.

சுகுமரம், வாழை, plantain tree Musa para disiaca.

சுகுமாரச்சம், சண்பகம், champac flower — Michelia Champaca.

சுகுமாரதூலி, see சுகுமாரதூவி.

சுகுமாரதூவி, இலவு, silk cotton tree.

சுகுமாரதேகி, மெல்லியதேக முடையோன், one having a delicate body.

சுகுமாரநெய், மலடு நீங்கி, பிள்ளை பெறுதற்குக் கொடுக்கும் மருந்து, a ghee

preparation given to cure sterility of woman and conceiving.

சுகுமாரம், ஓர் கரும்பு, a kind of Sugar cane; 2. ஓர் தானியம், a species of grain; 3. மிருது softness; 4. மெல்லியதேகம், delicate body.

சுகுமாரன், மெல்லிய தேகமுடையோன், man with delicate constitution.

சுகுமாரி, see இருவாட்சி, 2. மெல்லிய தேக முடையவள், woman with delicate body.

சுகுலை, சவுக்காரம், fuller's earth soap.

சுகோதரம், தாளிசபத்திரி, East Indian plum. Flacourtia — Cataphracta.

சுகோஷ்ணம், (சுகம் + உஷ்ணம்) சாதாரண சூடு, moderate warmth; 2. இதமான சூடு, agreeable heat.

சுகோற்சவன், கணவன், husband.

சுகோற்பாலனம், சுகாதாரம், the science of health — Hygiene.

சுக்கங்காய், கொம்மட்டி, bitter apple — Citrullus colocynthis; 2. மிதுக்கங்காய், அதாவது நீர்வகை வெள்ளரி, a kind of country cucumber.

சுக்கங்கீரை, புளிக்கீரை, வடமொழியில் சதவேதியென்று பெயர், இது சாதாரணமாய் தோட்டங்களில் பயிர் செய்யப்படுகிறது. உடம்பிற்கு, குளிர்ச்சி, மலத்தை இளக்கும், மூத்திரத்தைப் போக்கும், country sorrel — bladder sorrel Rumex Vesicarius. In sanskrit it is known as 'Sadhavedi' so called from curing hundred diseases. It is commonly cultivated in gardens. It is cooling and aperient, and diuretic to some extent.

சுக்கச்சீலை, வங்கக் கல், leadore — plumbago.

சுக்கடைப்பஞ்சு, காதுவலிக் குபயோகிக்கும் மருந்து, drops for pain in the ear, Ear drops; 2. சுக்கையிடித்துப் பஞ்சுக்குள் பொதிந்து காதில் அடைத்துக் கொள்ளும் பஞ்சு, cotton in which is concealed powdered dried ginger inserted into ear as a remedy in certain diseases of the ear. This is used by just delivered woman to prevent chillness.

சுக்கம், ஓர் கொடி, an unknown creeper; 2. சுக்கான்காய், country cucumber 3. வெள்ளரி, mottled melon.

சுக்கலிகா, புளியாரை, sour sorrel, Oxalis corniculata.

சுக்கல், நெரிப்பதனா லுண்டாகும் துண்டு, a small piece obtained by crushing; 2. கண்ணில் பூ விழுதல், opacity of cornea.

சுக்கான், see சுக்கான்

சுக்காகிரி, சுக்கு நாறிப்புல், ginger grass, Panicum repens; 2. சுன்னாரிப்புல், roussa grass — Andro pogonmartim.

சுக்கானீறு, தாளித்த சுண்ணாம்பு, slaked lime.

சுக்கானைச் சத்தாக்கி, பாவட்டை, Indian pavetta — Pavetta indica.

சுக்கான், see சுக்கான்கல், 2. ஓர் உபரச சரக்கு, lime one of the natural substances contemplated in Siddha medicine; 3. உருக்குச் செங்கல், over burnt brick; 3. சுக்கான் துருசு, a kind of mineral forming a mixure of lime stone and blue vitrcol.

சுக்கான்கல், கற் சுண்ணாம்பு, lime stone, பூமியிலிருந்து வெட்டி யெடுக்குங் கல். இது சுட்டகல் லென்றும் சுடாதகல் என்றும் இருவகைத்து. சுட்டகல் வெண்மையாயும், சுடாதகல் கருப்பாயுமிருக்கும். தண்ணீரில் வசிக்கும் பிராணிகள், அதாவது மீன், நண்டு, நத்தை, திமிங்கிலம் முதலானவைகளின் மேலோடுகள் பல காலங்களில் ஒன்று சேர்ந்து அதனாலு ண்டானகல். மேலும் சலவைக்கல், சுண்ணாம்புக் கல்

என்று சொல்லுவதும் இவ்வினத்தைச் சேர்ந்த வைகளே. இக்கற் சுண்ணாம்பை, சாதாரணமாய்க் காள வாயில் வைத்து விறகு அடுப்புக்கரி அல்லது நிலக்கரியுடன் கலந்து சுடுவதனால் க்ரியமிலவாயு ஓடிவிடும். பிறகு நெருப்பு அவிந்தவுடன் அதற்குள் இருக்கும் கல்லை வெளிப்படுத்திக் கொள்ளலாம். இதுவே, சுண்ணாம்புக் கல்லென வழங்கும். இது வெண்மையும் சாம்பல் நிறமும் கலந்தது. வாசனையிராது. காரமாயிருக்கும். இதற்குத் தண்ணீர் விட்டுத் தாளிக்க விரிந்து பெருகிச் சுண்ணாம்பாகும்.

Aquatic animals and other creatures that have decayed undergo some changes and finally lime stones are formed — mechanically chemically and organically. Under water they always metamorphose into aqueous rocks. Marble stone and chalk also fall under the same group.

Lime stone is dug out of quarries. This is unburnt lime stone. This is chiefly carbonate of calcium. This stone is burnt in lime Kiln. Coal powder or charcoal is used as fuel. The lime stone and fuel are put in the Kiln in alternate layers and is exposed to strong heat Blowers are used. Carbonic acid gas escapes and the burnt lime is calcium oxide. The kiln is cooled and lime is taken out. The burnt lime is called quick lime. It is white with a pale grey tint inodorous and of an acrid and alkaline taste. It is put in small heaps and water is sprinkled. Then it crackles, swells and bulky white powder called slaked lime is obtained.

NOTE: In Siddhars Medical Science this stone is known by different names viz அண்டக்கல், பிரமக்கல், வெள்ளைக்கல், etc. and great many virtues, chemical, psychological, alchemical, are attributed to it. The use of it especially in Alchemy and medicine is held great secret in Tamil Medicine, On account of its importance it is taken as one of the 120 kinds of natural substances *(உபசரக்குகள்)*, When purified it is used for sectarial mark *(நாமம்)* on forehead.

சுக்கான் கல்குரு, செம்பின் ஊறலைப் போக்கும் ஓர் குருமருந்து, lime stone quintessence prepared through alchemical process and used for purifying copper.

சுக்கான் கல் சுண்ணம், இதனால் செம்புக்குக் களிம்பு போம். It removes the rust of copper and purifies it. *2.* நீற்றிய கற்சுண்ணாம்பு, slaked lime.

சுக்கான்காய், தும்மட்டிக்காய் இக்காயை வற்றலாகச் செய்து உண்ண அரோசகத்தையும் வாதத்தையும் நீக்கும், unriped cucumber is cut into two or four pieces dried. Then soaked in curd with salt to taste. Then it is dried again. Then it is fried in oil and eaten. It removes nausea and rheumatic affections.

சுக்கான் கீரை, புளிக்கீரை, country sorrel Rumex Vesicarius, *2.* புளியாரை, sour sorrel — Oxalis corniculata; *3.* கொம்மட்டிக் கீரை, leaves of a species of bryonia.

சுக்கான் தண்ணீர், சுண்ணாம்பூறிய நீர், water on lime stone beds; *2.* சுண்ணாம்பு கரைந்துள்ள தண்ணீர், lime water; *3.* சுண்ணாம்பு உப்புள்ள தண்ணீர், water containing calcium salts calcic water.

சுக்கான்தரை, சுண்ணாம்பு நிலம், இதில் ஒன்றும் முளைக்காது, soil of lime stone which is exceedingly barren and unproductive.

சுக்கான் நீறு, நீற்றின அல்லது தாளித்த சுண்ணாம்பு, quick lime mixed with water so as to reduce it to powder — Slaked lime.

சுக்கான் பருவதம், சிலாவங்கம் அல்லது வங்க கல் — lead ore.

சுக்கான் பழம், கொம்மட்டிப் பழம், fruit of Bryonia.

சுக்கான் பார், சுக்கான் கரை, lime stone Bed or bank; 2. சுக்கான் பாறை, lime stone quarry.

சுக்கான் பாறை, see சுக்கான் பார்.

சுக்கான் பாறை நீர், சுக்கான் தரையிலூறும் தண்ணீர். இதனால் மூத்திரக் கடுப்பு நெஞ்சிறகபம், பித்தாதிக்கம் கப ரோகங்கள் உண்டாகும். ஆயினும் வாதரோகத்தைப் போக்கும், This cures rheumatic affections but causes disurera, phelgm, diseases due to phelgm and causes heat.

சுக்கான் மண், சுக்கான் தரை, lime stone soil; 2. சீமை சுண்ணாம்புத்தரை, soil largely impregnated with carbonte of lime. It exhibits a whitish calcarious incrustaion on its surface.

சுக்கான் வருத்திபம், புளியாரை, sour sorrel — Oxalis corniculata.

சுக்கி, சுக்கு, dried ginger; 2. see சுக்கங் கீரை.

சுக்கிகை, புளியாரை, see சுக்கான் வருத்திபம்.

சுக்கிபம், நாட்டேலம், country cardamomum.

சுக்கிமம், see சுக்கிபம்.

சுக்கிரகதசுரம், விந்து அதிகத்தினால் வரும் சுரம், fever due to excess secreation of semen.

சுக்கிரகதவாதம், சுக்கிலம் கதித்ததினா லுண்டாகும் வாதம், rheumatic disease caused by excess secretion of semen.

சுக்கிரசனக வருக்கம், விந்துவை அதிகரிக்கும் பொருள்கள், காகோளி, சீரகாகோளி, மாமேதை மாஞ்சி, மாம்பில்லுருவி, கற்கடக சிங்கி, முதலியன, group of drugs that increase the secrition of semen viz kakoli, ksheera kakoli, Mamedai galls (Rhus succed enea valerian root etc.

சுக்கிரசோதன வருக்கம், விந்துவின் கெடுதிகளைப் போக்கும் மருந்து வகுப்பு. ஏலா வாலுகம், சமுத்திர சேனம், கடம்பு சர்க்கரை அகத்திப்பூ வேம்பு வேர் முதலியன. விந்துவை அதிகரிக்கும் மருந்து வகைகள், group of drugs that cure the vitiation of semen. They are cubebs, sugar, flowers of Agati bark of cadamba. See சுக்கில சோதனை வருக்கம்.

சுக்கிரதோஷம், விந்துவின் கெடுதி சுக்கில குற்றம், Vitiation of semen.

சுக்கிரத்துரிஞ்சில், பசுவின் பால், cow's milk.

சுக்கிரநிலம், சுக்கான்கல் நிறைந்த பூமி, lime stone quarry.

சுக்கிரப்படுவன், கண்ணின் கருவிழியிலும் இமையிலும் குருக்கள் போல் ஏற்பட்டு உண்டாகும் விரணம், a form of conjunctivities and keratities with vesicles on epithelium, inflamation of the membranes of the eyes — Phlyctenular ophthalmia.

சுக்கிரமணி, தாமரை விதை, lotus seed.

சுக்கிரமேகம், விந்து தானாகவே வெளிப்படல், — Spermatorrhoea.

சுக்கிரம், ஓர் கண்ணோய், see சுக்கிரரோகம், 2. கள், toddy; 3. சுக்கிலம், semen; 4. நீர், water; 5. பொன், gold; 6. கழுநீர், rice washed water; 7. ஓர் வகைப் புளித்த கஞ்சி, a kind of sour gruel see சுத்தம், 8. எட்டாவது தாதுவாகிய இந்திரியம், (Ojas) இது பாலில் நெய்யைப் போலும் எள்ளில்

எண்ணெயைப் போலும், உடம்பு முழுமையும் வியாபித்து இருக்கும். இதற்கு ஸ்தானம் நியமம் கிடையாது. (சுரகம்) a vital principle (force or power) which is considered as the eighth of the seven constituent parts of the body responsible for the orgin and phenomena of life. According to Charaka it is a vital principle ojas extending or spreading all over the body and lies concealed just like the oil in gingelly seed or ghee in milk. It has neither space nor location. 9. ஓர் பூடு, Rumex Vesicarins; 10. சிறுதேக்கு, clerodendon Serratifolium; 11. புளித்துப் போன தேன் சர்க்கரைப் பாகு முதலிய இனிப்புப் பண்டங்களிலிருந் துண்டாகும் ஓர் விதமது, an intoxicating liqour obtained by the fermentation of sweet substances such as honey syrup etc.

சுக்கிர ரோகம், வெள்விழி சிவந்து, கண் வீங்கி, முளை போல் சதை வளர்ந்து, குத்த லுண்டாகி தலை வலித்து, கடைக்கண்ணிரு புறங்களிலும் புண்ணாகி, தூங்க வொட்டாமற் செய்யுமோர் கண்ணோய், an eye disease characterised by the following symptoms viz — inflammation of the scleroti coat (white of the eye) swelling morbid crowth of flesh on the choroid including iris, piercing acute pain, head ache, lesions on both inner and outer corners of the eye sleep lessness etc.

It is of five varietes they are:

1. விரண சுக்கிரன், (ulceration) Vrana suikiran.
2. கருஞ்சுக்கிரன், (black) Karun sukiran.
3. விழிவிழுங்கிச் சுக்கிரன், (Phthisis bubi) Vizhi vizhungi sukiran.
4. வெண் சுக்கிரன், (white) Ven sukiran.
5. கனற் சுக்கிரன் (burning sensation) Kanal sukiran.

சுக்கிரனாளி, முத்து, pearl.

சுக்கிரன், See சுக்கிர ரோகம், 2. முத்து, pearl; 3. பொன்னிமிளை, gold pyrites; 4. வெள்ளி, silver; 5. ஒரு கிரகம், venus planet; 6. கண்ணில் விழும் வெள்ளைப் பூ, white speck in the eye; 7. இரண சுக்கிரன் — a dreadful disease of the eye by which the apple is destroyed.

சுக்கிராகம், தமரத்தை, coromendal gooseberry — Avershoa carambola.

சுக்கிராங்கம் மயில், peacock.

சுக்கிராசுமரி, சுக்கில அசுமரி நோய், seminal concretions. Which may obstruct the passage of urine.

சுக்கிராத சன்னி, பொன் வண்ணச்சாலி, unknown plant.

சுக்கிராருமன், (சுக்கிர + அருமன்) ஓர் கண்ணோய், இதனால் கருவிழியில் இருளடைந்து கண்ணில் சதை வளர்ந்து காணும், Opacity of the cornea due to filmy or fleshy growth in the eye.

சுக்கிரிகை, புளியாரை, see சுக்கிகை, 2. புளியமரம், tamarind tree.

சுக்கிரை, புளியமரம், see சுக்கிரிகை.

சுக்கிரோதயம், வெள்ளி முளைக்குங் காலமாகிய விடியற் காலை 4 மணி, appearance of morning star i.e. early morning 4 a.m.

சுக்கில ஆவிருதவாதம், ஓர் வகை விந்து நோய், இதனால் விந்து அதிகமாக ஒழுகி, புருஷத்துவம் நீங்கும், a seminal disease. An account of its loss vitality —erection of the penis is lost.

சுக்கிலகம், வெள்விழியில் கருப்பு, பச்சை புள்ளிகள் கண்டு, அழற்சி வலியுண்டாகும், black or green spots appear on the white portion of the eye, and cause pain and burning sensation.

சுக்கிலகலிதம், இந்திரியக் கலிதம், அதாவது தூக்கத்திலாவது, பெண்ணுடன் சம்போகிக்கு முன்பே விந்து வெளிப்படுதல் — emission of semen while asleep or before intercourse.

சுக்கிலகாசம், கண்ணின் கருவிழியைப் பற்றிய நோய், a disease of the lens in the eye — opacity of crystalline lens —Cataract.

சுக்கிலக் குட்டம், வெண் குட்டம், Leucoderma — white leprosy; 2. வெண்டமும்பு, white patchces on the body.

சுக்கில கெந்த, see இருள்மரம்.

சுக்கில கெந்தம், அதிவிடயம், Indian Atees — Aconitum Hetero phyllum.

சுக்கிலக் கடுப்பு, விந்து வரும் தாரைக்கு ஏற்படும் கடுப்பு, inflammation of vasa deferens —Spermatitis; 2. விந்து வெளிப்படும் போது ஏற்படும் வலி, painful discharge of semen.

சுக்கிலக் கட்டு, சுக்கிலத் தம்பனம், suppression of seminal discharge; 2. தாது உடையாதிருத்தல், thick semen; 3. விந்து இறுகுதல் congealed state of semen.

சுக்கிலிக் கலிதம், விந்து வெளிப்படல், see சுக்கில கலிதம்.

சுக்கிலக் கிருமி, விந்துக் கிருமி, spermatozoon.

சுக்கிலங் கழலல், see சுக்கிலட்சீணம்.

சுக்கிலசாமா, புளியாரை, sour sorrel, Indian sorrel — Oxais corniculata.

சுக்கிலட்சீணம், இந்திரிய நஷ்டம், loss of semen; 3. தூக்கத்திலேற்படும் விந்து ஒழுக்கு, nocturnal emission; reflex emission of semen during sleep; 3. சம்போகமில்லாமலே ஏற்படும் அதீத விந்து ஒழுக்கு, involuntry too frequent and excessive discharge of semen without copulation —spermatorrhoea.

சுக்கில சுரோணிதம், விந்துவும் மகளிர் சூதகமும், semen and menstrual blood; 2. விந்து நாதம், spermatozoa and ovum.

சுக்கில சோதனை வருக்கம், சுக்கில குற்றங்களை நீக்கும் பொருள்கள், the group of drugs which cures vitiation of semen:

1. மருதம்பட்டை, Myrica sapida.
2. ஒரு வகை கடம்பம், Nauclea cadamba.
3. கரும்பு, Saccharum officinarum.
4. Saccharum spontaneum, Thatch grass.
5. Ruellia longifolia.
6. வெட்டி வேர், Andropogon muricatus.
7. அகத்தி, Sesbania grandiflora. see சுக்கிர சோதன வருக்கம்.

சுக்கிலதாது, விந்து semen —seventh constituent of the body.

சுக்கிலதாதுச் சுரம், சுரத்தின் குணங்களுடையது மல்லாமல் ஆண்குறி சுருங்கல், விந்துக்கேடு, ஞாபக மறதி முதலிய குணங்களையும் காட்டும் ஓர் வகை சுரம். besides the symptom of fever there is contraction of penis, vitiation of semen loss of memory etc.

சுக்கிலத் தடிப்பு, விந்துத் தடிப்பு, thickness of seminal fluid.

சுக்கிலத்தம்பம், விந்து வெளிப்படாதபடி தடுத்தல், அல்லது நிறுத்தல், suppression of the secretion of semen —spermatos chesis, 2. சுக்கிலத்தை அடக்குதல், stopping the emission semen.

சுக்கிலத் தம்பனம் விந்து கலிதமாகாதபடி தம்பித்தல், இது கலைக்கியானத் தொன்று, the art of suppressing or restraining the discharge, or stopping the emission of semen. It is one of arts mentioned in Kalaignam see கலைக்கியானம்.

சுக்கிலத்துவம், வெண்மை, whiteness.

சுக்கிலத் தோஷம், சுக்கிலக் கோளாறுகள், seminal disorders.

சுக்கில நஷ்டம், காமவிகாரத்தில் முட்டி மைதுனம், ஆசனப் புணர்ச்சி, காமலீலை, சம்போகக் கனவு முதலிய காரணங்களை முன்னிட்டு ஏற்படும் விந்து நஷ்டம், loss or waste of semen due to lust inducing to masturbation, sodomy, sexual perversion, nocturnal emission or spermatorrhoea and other unnatural acts.

சுக்கில நரம்பு, அண்டத்திற்குள் நரம்பு, the cord by which the testicle is suspended — spermatic cord.

சுக்கில நிரோதனம், இதுவே சுக்கில பந்தம், நெடுநேரம் புணர வேண்டி, விந்துவை வெளிவிடாமல் கட்டல், இதனால் சோவை, கீழ்ப்பிரமேகம், அண்டநோய், அசுமரி, காமசுரம், மார்பு நோய், பித்தக்கிரிச்சரம் உண்டாகும். suppressing the semen for the purpose of prolonging copulation. This may give rise to many diseases as anemia, gonorrhoea testicle complaint, urinary calculus - seminal calculus. Venereal fever chest complaint itching etc.

சுக்கில பந்தம், see சுக்கில நிரோதனம்.

சுக்கில பந்தனி, இலவம் பிசின், gum of silk cotton tree so called from its power of keeping semen in suspension for sometime or checking the discharge of semen.

சுக்கிலபரணி, ஏழிலைப் புன்னை, seven lobed punnai.

சுக்கில பாகம், வெள்விழி, white of the eye. Sclerotic.

சுக்கில பாங்கம், மயில், peacock.

சுக்கிலப்புட்டா, குங்கும மரம், saffron Crocus sativus.

சுக்கிலப்பலை, வன்னி மரம், vanny tree Prosopis spicigera.

சுக்கிலப் பிரமியம், தாது உடைந்து ஒழுகும் ஓர்வித மேக நோய், a veneral disease attended with loss of semen.

சுக்கிலப் பிரமேகம், உடம்பில் உஷ்ணம் அதிகரித்து நீர்த்தாரையின் வழியாய், பெருநீர் இறங்கி அதில் சீழ், இரத்தம் உறைந்தது போலிருக்கும். குத்தல், குடைச்சல் கண்டு கை, கால் முழிகளில் வீக்கம், உடல் வலி முதலிய குணங்களைக் காட்டுமோர் மேக நோய், a veneral disease due to excessive heat in the system arising from impure coitus. It is marked by discharge of morbid fluid like congealed pus and blood from the urinary passage and attended with several complications such as boring acute pain and swelling in the limbs and joints.

சுக்கிலப் பூரிதம் குங்குமம், saffron crocus.

சுக்கிலப் பூரு, வெள்ளைத் தாமரை, white lotus.

சுக்கிலப் பெருக்கம், சுக்கிலம் அதிகமாக உற்பத்தியாதல், excessive secretion of semen.

சுக்கிலப் பெருக்கு, விந்து அதிகமாக ஊறல், see சுக்கிலப் பெருக்கம்.

சுக்கில மண்டலம், வெள் விழியின் பாகம், கருவிழியின் மேற்றோலும் கலந்தது, the slerotic or the white of the eye including the region of the cornea.

சுக்கில மறிப்பு, ஆண் குறி துவாரம் அடைபட்டு, சுக்கிலம் வெளிவராது தடைப்படல் obstruction to the passage or discharge of semen due to the structure of the urethera.

சுக்கில மூத்திரம் மூத்திரத்தில் விந்தும் கலந்து வெளிப்படல், the pressence or discharge of semen in the urine seminurea.

சுக்கில மேகம், சுக்கில மூத்திரம், இதில் மூத்திரமானது விந்துவைப்போல் வெண்மை யாகவும் குழம்பாகவும்,

தாழஞ்சாற்றைப் போல் இறங்கி ஈரலைப் போல் தோய்ந்து பஞ்சிமைபோலிறங்கும் ஓர் மேக நோய், a venereal infection in the form of gonorrhoea in which the urine assumes a milky or white appearance the semen and is rendered thick and discharged like a thread.

சுக்கிலம், விந்து, semen; 2. வெண்மை, whiteness; 2. புருஷரின் ஏழாவது தாது, the seventh constitutent part of the body of men i.e. semen; 4. நாரிசுக்கிலம் அதாவது நாதம், a fluid like semen containing ovum discharged by female; 5. பாலை மரம், iron wood tree Minusops hexandrus; 6. இரேதசு, semen virila the male reproduction elements; 7. ஓர் வகைக் கண்ணோய், see சுக்கில காசம்; 8. புளி, tamarind; 9. வெண்ணெய், butter; 10. வெள்ளி, silver; 11. பழமுண்ணிப்பாலை, another variety of Minusops genus; 12. தாமரை lotus; 13. சிலேட்டுமம், phelgm; 14. வெள்விழிப்பாகம், white of the eye; 15. பாலிருள் செடி, a plant acting on Zinc; 16. ஓர் வகை முல்லை, a variety of jasmine.

NOTE: Semen is formed in males by the essential parts of marrow the sixth constituent element of the body mixed with blood it is the support of the body and the root of pregnancy.' In the same manner (நாதம்) ovum is formed in the female and discharged with the menstrual fluid if not fertilised.

சுக்கிலவருமம், வெள்விழியில் முழுவதும் பரவியுள்ள மிருதுவான வெள்ளை சதை வளர்த்தி, an eye disease of the white sclerotic coat in which soft whitish growth gradually extends over the entire length.

சுக்கில வர்த்தினி, மகாமேதை, an Ayurvedic drug.

சுக்கில வாதம், பகல் நித்திரையினால் சுக்கில வாதம் என்னும் நோய் உண்டாகிறது. உடல் இறுகி வற்றுதல், மலமூத்திரம் சிக்குதல், வாய், மூக்கு இவைகளின் வழியாய் இரத்தம் வெளிப்படுதல், சுக்கிலம் அதிகரித்துத் தானே வெளிப்படுதல், சுவாசம் அருசி கோழை, இவை உண்டாம், sleeping during day time causes this disease which is characterised by emaciation, constipation supressing of urine, oozing of blood through mouth and nostrils, loss of semen, heavy breathing, nausea & phlegam in the chest.

சுக்கில விருத்தி, தாது புஷ்டி, increase in the secretion of semen; 2. சாதிபத்திரி, mace.

சுக்கில விருத்தியாக்கி, பூனைக்காலி, cow hage plant Mucana pruviens.

சுக்கிலன், சிலேட்டுமத்தால் நேர்ந்த பத்து வகை மேக சம்பந்தமான நீரிழிவில் ஒன்று. இதனால், மூத்திரம் நுரையாயிருக்கும், one of the ten kinds of diabetes contemplated in Siddha medical science. In this the urine will be found frothy.

சுக்கிலா, புளியாரை, sour sorrel or Indian sorral — Oxalis corniculata.

சுக்கிலாகம், கறியுப்பு, common salt.

சுக்கிலாங்கம், வெள்ளையுடம்பு, white body.

சுக்கிலாசகாரி, see காகோளி.

சுக்கிலாசயம், சுக்கிலம் தங்குமிடம், receptacle or seat of semen — Spermary; 2. விதை, testicle; 3. இந்திரிய கோசம், seminal vesicle.

சுக்கிலாசாமா, புளியாரை, sour sorrel — Oxalis corniculata.

சுக்கிலாசுமரி, (சுக்கில + அசுமரி) பெண்ணோடு புணருங்காலத்து வேகமாய் வரும் விந்துவை அடக்குவதாலும், அல்லது விந்துவைக் கட்ட வேண்டி உட்கொள்ளும் தாது புஷ்டி

மருந்துகளினாலும், உடம்பில், சூட்டினால் விந்துவைத் தனது இருப்பிடத்தை விட்டு நழுவச் செய்து நாளத்தின் வழியாகக் கீழே ஒழுக வொட்டாமல் அண்டத்தினுடைய மத்தியில் மறித்து, பிறகு அதற்குரிய அவ்விந்துவைக் சுண்ட வைத்து உலர்த்துவதாலும், நீர்த்தாரையை யடைத்துக் கொள்வதனாலே ஏற்படும் மூத்திரரோகம், seminal concretions. It is urinary disease found usually in adults, due to the spermatic calculus (concretions in the seminal vesicles) obstructing the flow of urine in the urethra — It may give rise to slow, thin and painful flow of urine. The spermatic calculas may be caused by any of the following causes.

1. The suppression of semen during sexual intercourse or to the sudden stoppage of the sexual act.

2. Taking in of drugs or medicines having a tendency to arrest or check the free flow of semen during coitus.

3. The retention of semen in an un natural place in the testicles during its flow and the formation of concretion through the degenerative changes of spermatoza and other secretions and their subequent calcification.

4. Excessive coitus tending to dislodge the semen from its natural recesptacle in the body.

5. Germination of semen in the organisms of adults. c.f. அசுமரிரோகம்.

சுக்கிலசுமரிரோகம், விரைவீக்கம் அடிவயிற்று நோய், மூத்திரம் கஷ்டத்தோடிறங்கல் முதலிய குணங்களைக் காட்டுமோர் நோய், இதற்கு, தமிழில் கல்லடைப்பு, என்று பெயர். இதில் விந்துவானது கற்கள் போல் திரண்டு மூத்திரத்தோடு சேர்ந்து வெளிவரும்போது ஏற்படும் அடைப்பு, see கல்லடைப்பு, an urinary disease characterised by the following symptoms swelling of the testicles, pain in the lower abdomen, difficulty in passing urine.

சுக்கிலாட்டம், நாணல், read Saccharum spontantum.

சுக்கிலாபம், சிரகாகோளி, an Ayurvedic drug — not procurable.

சுக்கிலாபாங்கம், மயில், peacock.

சுக்கிலார்மம் (சுக்கிலம் —சிலேட்டுமம், அர்மம் —படலம்) சிலேட்டுமப் படலம். இது கபத்தைக் கொண்டு வெள்விழி மேல் வெண் புடையை யுண்டாக்கிப் பிறகு மேன்மேலும் பருத்து மாமிச நிறத்தைப் பெற்று மிருதுவாயும், வலியில்லாமலும் தடித்திருக்கு மோர் கண்ணோய், a crop or manifest vegetation of soft whitish and painless growth slowly extending over the entire length of sclerotic (white of the eye) coat cause by increase of phlegm humour.

சுக்கிலான், வெட்பாலை, tellicherry bark — wrightia tinctoria.

சுக்கிலேஷ்டம், மாதுளை, pomegranate — Punica granatum.

சுக்கிலை, புளியமரம், tamarind tree — Tamarindus indica.

சுக்கிளை, இதிரக் கிழங்கு, which see.

சுக்கு, உலர்ந்த இஞ்சி, இதற்கு வீரம், சிங்கி, நாகமலி, சௌபாக்கியம், சுண்டி என்று பெயர். இது எல்லாக் கடைகளிலும் விற்கும். இது தோலுரித்த துண்டுகளாகவும், தட்டையாகவும், காரமும் வாசனையும் வாய்ந்ததாயு மிருக்கும். வாயுவைப்போக்கும், சுறுசுறுப்பை யுண்டாக்கும். இதன் கஷாயத்தினால் அசீரணம் அதிசாரம் இவை குணமாகும். அன்றியும் வயிற்றுவலி, சுரம் பித்தம் இவைகளுக்கும் உபயோகப்படும் இக்கஷாயத்தை இரவில்

சாப்பிட்டுப் படுக்க, வாதரோகத்தைக் கண்டிக்கும். இதை முலைப்பாலில் இழைத்து வாயு, வீக்கம் இவைகளுக்குப் பற்றுப் போடவுதவும். இக்கஷாயத்தோடு சோடாவுப்பைக் கலந்து சாப்பிட வயிற்றுப் புளிப்புப் போகும். மேலும் இதனால் குடலைச் சுருட்டிப் பிடித்தல், தீராத வாதநோய் விலாக் குத்தல், மார்பெரிச்சல், புளியேப்பம், வயிற்றுப்பிசம், செவி குத்தல், குலைவலி, தலைவலி, கிரமணி, சலபீனிசம், அலிமுகப் பாண்டு, வயிற்றுக் குத்தல், முதலிய நோய்கள் போம். இதை யுனானி வைத்தியர்கள் விசேஷமாக ஷர்பத், இலேகியம் முதலானவைகளில் உபயோகிப்பார்கள். ஆங்கிலேய வைத்தியர்கள் பாவனத்திரவமாகச் செய்து கொடுப்பார்கள். மாச்சுக்கு, பொடிச்சுக்கு, the former is succulent and large the latter is fibrous and small.

The dried rhizome ginger—Zingiber officinalis. It is known by several names as mentioned above and is sold in all bazars. It occurs in decorticated pieces subcom compressed hot and pungent in taste and has an agreeable aroma. It is heat making in its potency and acts as a spermato poietic and approdisiac. It removes the vayu (humour) in the system and so a carminative and a stimulent. It imparts a relish for food and is appetising and digestive. A decoction of this is founded useful not only in indigestion and diarrhoea but also in rheumatism when taken at bed - time. Moreover it is an efficious remedy in colic, fever, biliousness, rheumatic complaints, lever pain, headache, catarch of the nose, chronic diarrhoea, earache and bloating of stomach — Macerated in women's breast milk. It is applied for flatulence and swelling Bicarbonate of soda taken along with this decoction is atried

remedy against acidity of the stomach. It is also benifically employed in spasmodic affection of the bowels, chronic rheumatism, acute pain on the sides, burning sensation in the chest, tympanites, earache, pain in the liver, stomach dropsy etc.

Unani doctors use this drug freely in the preparation of their syrups and electuaries; while English doctors use this in the form of a tincture — tincture gingiberies which forms a useful adjunct to antacid and carminative draughts.

NOTE: Ginger is sometimes used as local application in the affection of eyes. It is powdered and rubbed to the extremeties in the collapse stage of cholera as a relief against the Çramps and as a check to cold perspiration. Fresh green ginger is commonly used as one of the ingredients in condiments and curry stuffs. As an external local application the dry ginger acts favourable as a stimulant and rublifacient in some froms of headache, toothache various affections of the throat and in shortness of sight dependent upon deficient power in the contractile tissue of iris.

According to Therayar, there does not seem to be any restrction towards the use of this drug as it is applicable to all kinds of diseases. Some divine properties are attributed to this drug. This drug should not be confounded with the dried rhizome of the false or wild ginger — Zingiber Zerumbet. *(உலர்ந்த காட்டிஞ்சி).*

சுக்குக் கஷாயம், உலர்ந்த இஞ்சியைத் தண்ணீரிலிட்டுக் கொதிக்க வைத்து, கண்டிய பின் இறக்கிய குடிநீர், a decoction is extracted by boiling dried ginger in water sufficiently long and then filtering it. See கஷாயம் செய்யும் விதி.

சுக்குசுத்தி, மேல் தோல் சீவி எடுக்கவும், it is purified by saving of the skin.

சுக்குச்சூரணம், சுக்கை யிடித்துச் சலித்துப் பொடி, powdered and sieved dried ginger; 2. சுக்கை ஆதியாகக் கொண்டு பல சரக்குகளைச் சேர்த்துச் செய்த சுக்காதிச் சூரணம், powder prepared with dry-ginger as cheif ingredient. There several of them and they go by different names, eg. தயிர் சுண்டி.

சுக்குதல், புணர்தல், copulation; 2. உலர்தல், drying.

சுக்குத் தண்ணீர், சுக்கிட்டுக் காய்ச்சிய தண்ணீர், boiled ginger water — gingertea. 2. சுக்கும் வெல்லமுமிட்டுக் காய்ச்சியிறக்கி வடிகட்டிய பானம், a favorite and in vigorating bevearge made by boiling dried ginger and jaggery and then fltered milk can be added and taken as coffee.

சுக்குநாறி, சாலி மரம், இதற்குச் சுக்குவாசனை வாய்ந்த தாலிப் பெயர் போலும், a tree of the Acacia genus probably so called because of its smell which is like that of dried ginger.

சுக்குநாறிப்புல், ஓர்வகைப் புல், spice or dry ginger grass — Panicum ripens c.f. Roussa grass; 2. சுன்னாரிப்புல், orange grass — Andropogon nardus; 3. மாந்தப்புல், roussa grass or indigestion grass — Andropogon martini alias A.muricatus. 4. எலுமிச்சம்புல், rusa oil plant — Andropogon schoenanthus, 5. கற்பூரப்புல், Andropogon citratis. இது குணத்திலும், உபயோகத்திலும் மாந்தப்புல் லெஞ்ஞெயைப் போன்றது,. In action and use it is similar to those of Andropogon martini.

இதற்குச் சாம்பர்ப்புல் லென்னும், வாசனைப் புல்லென்றும் பெயர். இது இந்தியாவில் கொச்சி, மலையாளம் முதலியிடங்களில் சிலோன், மலையாளம் முதலிய விடங்களிலும் மழைக்காலத்தில் விளைகிறது. இது பச்சைப் புல்லைப் போல்

தோட்டங்களில் பயிரிடப்பட்டு ஆலையந்திரத்திலிட்டு எண்ணெய் எடுப்பார்கள். இது சிவப்பாயும் காரமாயும் எலுமிச்சம்பழம் போல் வாசனையாயும் இருக்கும். இதற்கு அங்காகருஷ்ண நாசனி உட்டிணகாரி, சவேதகாரி முதலிய குணங்களுண்டு. இதன் எண்ணெயைக் கஞ்சியோடு கலந்து வயிற்று வலி வயிற்றுப் பொருமல், வாந்தி, இவைகளுக்கு உபயோகிக்கலாம். இதன் எண்ணெயைக் கீல்பிடிப்பு, நாட்டவாதநோய், குடைச்சல் இவைகளுக்குக் கொடுக்கலாம். இதன் எண்ணெயோடு தேங்காயெண்ணெயைக் கலந்து நோயுள்ள இடத்தில் தேய்க்கலாம்.

NOTE: It is named as ash grass or fragrant grass. In India it grows in Malabar and Cochin. It is cultivated in Ceylon and Malaya. It resembles grass and is grown in gardens it is cut and oil is extracted by machine. The oil is reddish in colour and smells like lemon. It is antispasmodic, stimulant and diurretic. It is mixed with rice porridge and given in cases of diarrhoea, vomiting and pain abdomen, mixed with cocoanut oil it is applied for excruciating pain, rheumatic pain etc.

சுக்குநாறிப்புல் தைலம், சுக்குநாறிப் புல்லை வாலையிலிட்டு, இறக்கிய எண்ணெய், oil obtained by distillation from the ginger grass. It closely assimilates in characters and properties and uses with the an a logus product of lemon grass.

சுக்குநாறிப்பூடு, இரண நாயகம் — a plant supposed to cure all kinds of ulcers.

சுக்குப்பாணிதம், சுக்கை கஷாயமாக வடித்த பிறகு, சர்க்கரையிட்டுக் காய்ச்சி யெடுத்த பாகு, a strong medicated solution of sugar in a decoction of ginger.

சுக்குப்பால், சுக்கைப் பாலில் இழைத்துக் கண்ணிற் பிழியும் ஓர் வகைக் கலிக்க மருந்து, a medicinal preparation like salve for external application made with a basis of dried ginger macerated or rubbed in milk.

சுக்குப் பாவனத் திரவம், சுக்கைத் தூள் செய்து சாராயத்தில் போட்டு வைத்து, பிறகு வடித்த ஓர் வகைக் குடிநீர், tincture of dried ginger prepared by maserating it in rectified spirit and filtering the product so obtained.

சுக்குப்பானம், see சுக்குத் தண்ணீர்.

சுக்குப்பொடி, சுக்குத் தூள், powdered dry ginger see சுக்குச் சூரணம்.

சுக்குமத் தண்டுலம், திப்பிலி, long pepper — poper longum.

சுக்குமம், சிற்றேலம், small cardamom — True cardamom.

சுக்குமாந்தடி, see சொக்குமாத்தடி, அல்லது மந்திரக்கோல், a magic wand.

சுக்குமி, கொத்தவரை, cluster bean, Dolichos fabae formis.

சுக்கும்பல், சிலந்தி, spider.

சுக்குல கந்தம், வசம்பு, sweet lag — Acorns calamus; 2. see அதிவிடயம்.

சுக்கு லேகியம், சுக்கு 25 பலத்திற்கு $2^1/_2$ படி தண்ணீர் விட்டு $^1/_8$ அளவாகக் காய்ச்சி, கஷாயமிறக்கி அதற்கு வெல்லம் $2^1/_2$ பலம் ஓமம் $^1/_4$ பலம் கறிவேப்பிலை $^1/_2$ பலம் நெய், $^1/_2$ படி இதை யெல்லாம் சேர்த்து லேகியமாகக் கிண்டி, புன்னைக்காயளவு சாப்பிட, கிராணி வாயு மூலம், அதிசாரம் வீக்கம் வாயு மந்தம் போம், an electuary prepared with the decoction of dryginger, jaggery, ajown, curry leaves and cow's ghee. If given in big marble size twice daily cures diarrhoea, chronic diarrhoea indigestion, wind swelling etc.

சுக்கு வெல்லம், சுக்குப் பொடி கலந்த வெல்லம், jaggery, mixed with the powder of dry ginger and used as a digestive.

சுக்கூறல் கஷாயம், சுக்கை இடித்துத் தண்ணீரில் ஊறப்போட்டு வடித்த கஷாயம், dryginger infusion.

சுக்கெலும்பு, மாரெலும்பு, bones of the chest.

சுக்கை, முசுமுசுக்கை, rough or bristly — bryonia scabra.

சுக்தம், புளித்த அரிசி நொய்க்கஞ்சி தேன், மோர், இவைகளை ஒரு மண் சட்டியிலிட்டு நெல்லில் புதைத்து 3 நாள் வைத்து எடுத்தது. இது நரம்புப் பிடிப்பு, வாதநோய், குன்மம், செரியாமை, நீர்வியாதி, குடிபோதை, இவைகளுக்குக் கொடுக்கலாம், to the sour gruel made from boiling raw broken rice honey, and whey are added. Then they are put into a pot, sealed and burried under a heap of paddy for 3 days After wards it is taken out and used for nervousness rheumatism, indigestion, dispepsia, urinary diseases and intoxication.

சுக்திகம், முத்துச்சிப்பி, pearl oyster; 2. வெள்விழியில், கபில நிறமான புள்ளிகள் ஏற்படும் ஓர் கண்ணோய், an eye disease on the sclerotic coat marked by specks with an oyster shell colour — (dark brown colour).

சுக்திகரோகம், ஓர் கண்ரோகம், see சுக்திகம்.

சுக்திரோகம், கண்ணின் வெள்விழியில் கருப்பாயும், சவ்வு பரவியும் முத்துச் சிப்பி நிறத்தோடு கூடிய கண்ணோய், an eye disease of the sclerotic coat characterised by black film like spreading growth of pearl oyster shell lustre.

சுக்ரம், see சுக்கிலம்.

சுங்கதாரி, கொறுக்காப்புளி, sweet babool — Pithecelloium dulce.

சுங்கத்தாவி, சவுட்டுப்பு, which see.

சுங்கத்தின் தாகம் போக்கி, பேராமுட்டி, fragrant Pavonia — Pavonia odarata.

சுங்கபுட்பினி, பெருமலர்க் கொன்றை — a species of cassia yielding big flowers.

சுங்கம், see ஆடுதின்னாப் பாலை, 2. கடுகு, mustard.

சுங்கன், ஓர் மீன், a kind of fish; 2. சுக்கிரன், which see.

சுங்காதம், see இலைக்கள்ளி.

சுங்கான், புகை பிடிக்குமோர் கருவி, a pipe of clay or other substance for smoking tobacco consisting of a bowl at one end for holding tobacco and a hollow stem through which the smoke is drawn.

சுங்கான்களி, புகைப் பிடிக்கும் சுங்கான் செய்வதற்குபயோகிக்கும் சுத்தமும் நேர்த்தியுமான களிமண், the purest and finest kind of potter's clay used for manufactured tobacco pipes — Pipe clay.

சுங்கான் புகையிலை, சுங்கானிற் போட்டு, புகை பிடிப்பதற்காக வேண்டி பதமிட்டுத் தயாரித்த புகையிலை, a kind of seasoned tobacco manufactured or prepared for using in smoking pipe.

சுங்கி, ஆலமரம், banyan tree — Ficus bengalensis; 2. வன்னி மரம், Suma tree — Prosopis spicigera.

சுசலம், சுத்தமான நீர், pure water.

சுசவி, பாகற்காய், bitter gourd — Momoridica charantia.

சுரனம், கொக்கோகப்படி ஓர் வகை முத்தமிடல், (in Erotic science) sucking kiss a kiss in which the lips are pressed forcibly as also the lip of the tongue, 2. see சுகனன்.

சுசனன், காற்று, wind, air.

சுசாதிகப்படிகம், பளிங்கு, Crystal; 2. see ஈசனுப்பு.

சுசாதிபலம், சாதிக்காய், nutmeg — Myristica fragrans.

சுசாதிபேதம், மரத்துக்கு மறுமரம், differences that exist between tree and tree.

சுசி, காமக்கவலை, sexual craving — sexual appetite; 2. பாதரசம், mercury; 3. பெண் முலை, female breast; 4. கொடிவேலி, lead wort — plumbago Zeylanica; 5. நெருப்பு, fire; 6. வெண்மை, whiteness; 7. கோடைக்காலம், summer.

சுசிகம், புளியாரை, இது கறையைப் போக்குவதாலிப் பெயர், sour sorrel oxalis corniculata. It is so called from its removing stains.

சுசிகரம், சுத்தம், cleanliness.

சுசிதம், பால், milk; 2. see அமுதவல்லி.

சுசிதளம், விஷ்ணு கரந்தை, Vishnu's basil — Sphoeranthus indica.

சுசித்துருமம், அரசமரம், peepul tree — Ficus religiosa.

சுசிந்தரி, மூஞ்சூறு, musk rat.

சுசிமணி, இரத்தினம், ruby.

சுசிமாசை, சுத்தமான பொன், refined gold.

சுசியாக்கினி, மருந்தைப் புடமிடவும் எரிக்கவும், வறுக்கவும் உபயோகப்படும் சுத்தமான நெருப்பு. இத்தகைய நெருப்பை, அடுப்புக்கரி, அரணி, சக்கிமுக்கிக்கல், சூரியன், கற்பூரம் என்னும் இந்த ஐந்து வகைகளில் ஏதாவது ஒன்றின் மூலியமாய்ச் சேகரிப்பதுண்டு, unpolluted fire or the one free from obnoxious elements used for clacining burning or roasting or boiling medicine. Such kinds of fire are obtained or drawn chiefly from any one of the following five agencies of transmission; 1. charcoal, 2. wood or fuel; 3. flint; 4. sun, 5. camphor.

சுசியாவாரை, வெள்ளையாவாரை, Italian senna — Cassia obovata.

சுசிரம், நெருப்பு, fire; 2. உட்டுளை, inner cavity.

சுசிரோசி, சந்திரன், moon; 2. வெண்மை, white colour; 3. வெளிச்சம், light.

சுசீலம், காற்று, wind.

சுசுகம், முலைக்கண், orifice of the nipple or the teat through which milk flows out from the breast of females.

சுசுந்தரி, நாவி, aconite; 2. மூஞ்சூறு, musk rat, shrew sorex indicus.

சுசுமம், நெருஞ்சில், caltropes — Tribulus terrestries.

சுசுமாடன், இலவணம், salt.

சுசுருதசம்மிதை, சுசுருதன் இயற்றிய ஓர் சிறந்த ஆயுள்வேதநூல், சரகர் செய்த ஆயுள் வேத நூலுக்கு இதை இரண்டாவதாகச் சொல்லப்படும். ஆயுள் வேதத்தில் சொல்லியுள்ள விஷயங்களை இதில் சுருக்கமாக 6 காண்டங்களாக வகுத்துக் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு காண்டத்திலும் அடியிற் கண்டபடி அனேக அத்தியாயங் களாகப் பிரிக்கப் பட்டுள்ளன.

1. சூத்திரஸ்தானம்	— 46	அத்தியாயங்கள்
2. நிதானஸ்தானம்	— 16	,,
3. சரீரஸ்தானம்	— 10	,,
4. சிகிச்சாரஸ்தானம்	— 40	,,
5. கல்பஸ்தானம்	— 8	,,
6. உத்தரஸ்தானம்	— 66	,,

A great work in Ayurveda compiled by Susruta. It is considered as next in importance to the celebrated work of Charaka. It is an abridgment of Ayurveda rearranged into six parts dealing in various subjects. Each part consisting of different chapters as shown below:—

1. Surgery in forty six	chapters
2. Nosology in sixteen	,,
3. Anatomy in ten	,,
4. Therapeutic in forty	,,
5. Toxicology in eight	,,
6. Local diseaess in sixtysix	,,

NOTE: Susruta Samhita is principally celebrated for its anatomical description and judicious principles of Surgery. It is one of the oldest books of medicine possessed by the Hindus and forms the basis of all systems of scientific medicines in the world. It is the most representative of the Hindu system of medicine and deals completely on practical surgery and mid wifery.

Dhanvantrai lectured on surgical subjects and Susruta took notes and so in his work Susruta Samhita will be found such subjects as Anatomy, Surgical instruments operations surgical diseases etc.

This work consists of five parts of 120 chapters.The sixth part — 'uttaratantrum' contains a separate introduction and deals on general diseases such as fever diarrhoea chest diseases etc. This part is said to have been compiled from the works of several sages probably Siddhars on general diseases and their treatment. Susruta seems to have been compiled after Charaka.

சுசுருதர், இவர் இராமர் காலத்தில் இருந்து வந்த விசுவாமித்திர ரிஷியின் வம்சத்திற் பிறந்தவர், ஆதிகாலத்தில் காசி தேசத்தை தேவதாசன் எனப் பெயர் பூண்டு ஆண்டு வந்த தன்வந்திரியிடம் வைத்திய பாடங் கேட்டுக் கொள்ளும்படி அனுப்பப்பட்ட எண்மருள் இவர் ஒருவர். இவர் தன்வந்திரிக்குப் பிரதம சீடராக ஏற்பட்டுப் பிறகு அவர் ஆயுள் வேதத்தை உலகத்தார் நன்மையடையும்படிக்குச் சுருக்கமாக எழுதும்படி கட்டளையிட, அவர் விருப்பத்தின்படியே சுசுருதர் இயற்றுவராயினர். இந்நூலுக்குத்தான் சுசுருதசம்மிதை யெனப் பெயராயிற்று. Susruta is the descendent of the great Viswamitra a contemporary of Sri Rama and is one of the eight pupils (the first students of medicine) sent to Benares to study under Dhanwantri, the then King of

Benares rulling under the title of Devadasa celebrated for this skillful treatment of diseases. Latter on Susruta became the principal disciple of Dhanwantri who ordered him to abridge the Ayurveda so as to fascilitate its study for the benefit of mankind, which was accordingly done.

சுகுகம், see சுககம்.

சுச்சம், சுண்டையிலை, leaves of Solanum pubescens; 2. பலாசு, Bengal Rino.

சுச்சிகம், திப்பிலி நவ்வல், a tree of the jaurmoon genus.

சுச்சு, சுக்கு, dried ginger; 2. சுண்டி, sensitive plant.

சுஞ்சுமாரம், மிடற்றெலும்பு, bone of the nape of the neck; 2. முதலை, Crocodile.

சுடகத்தி, பேய்க்கடலை, wild bitter gram.

சுடகமாமிசம், கருவாடு, dried fish.

சுடங்கமூலி, நிலத்துளசி, holy basil — Ocimum sanctum.

சுடரதிமாங்கிஷம், பாபா (சோதி) பச்சை நிறமாய், சதை வளர்த்தி கண் புகைச்சல், எரிச்சல், a disease of the black portion of the eye characterised by fleshy growth, burning sensation and basy sight.

சுடரெண்ணெய், சூட்டெண்ணெய், oil dripping from the wick while burning; 2. பந்தத் தைலம், heated oil dripping from the burning heated oil dripping from the burning torches; 3. சுடரில் கொளுத்திய வேப்பெண்ணெய், heated margosa oil dripping from the burning wick steeped in margosa oil; சூடு கொண்ட மருந்தெண்ணெய், heated oil dripping from the burning wick soaked in medicated oil.

சுடர், நெருப்பு, fire, 2. விளக்கு, lamp; 3. சூடன், camphor; 4. நெருப்புக் கொழுந்து, flame; 5. see சுடரெண்ணெய்.

சுடர்காசம், ஓர்வகைக் காசம், a kind of asthma.

சுடர்க்கடை, மின்மினி, fire fly — glow worm; 2. மயில், peacock.

சுடர்க்காரி, see சுடர்க்கடை.

சுடர்க்காளை, see சுடர்க்கொடி.

சுடர்க்கொடி, சூடன், Camphor; வீரம், perchloride of mercury.

சுடர்த்தைலம், பாதரசம், கந்தகம் முதலிய மருந்துச் சரக்குகளை அரைத்துத் தடவிய சீலைவத்திகளைத் தைலங்களில் துவைத்து விளக்கிற் கொழுத்துவதனாற் பிறக்கும் தைலம், பாகத்தை அனுசரித்து உள்ளுக்கும் சாப்பிட வுதவும், a medicated oil gathered from the drops falling from a burning wick which is soaked in oil. The wick is made of a cloth smeared with a paste of medicine which chiefly consists of mercury and sulphur. It is used internally also.

சுடர்பல தோன்றல், விளக்கைப் பார்ப்பதால் பலவாறாய்ப் பரந்து நீலநிறமாகக் காணப்பட்டு, விழிக்குள் வலியுண்டாகிக் குவளையை யுறுத்தி, வெள்விழி சிவந்து, தலை வலித்து தூக்கம் பிடியாது துன்புறுத்துமோர் கண்ணோய், an eye disease in which the vision is varied at the sight of a lamp and the objects around appear blue. It is attended with pain in the eye bail, irritation of the socket, inflammation of sclerotic coat, headache, sleepness etc.

சுடர்ப்பொடி, கற்பூரம், camphor.

சுடர்விட்டெரிதல், கொழுந்து விட்டெரிதல், burning with bright flame.

சுடர் விளக்கு, புட்பராகம், topaz.

சுடலன், ஒரு பூடு, Phoelin Paniculata.

சுடலாவிரை, see சுழலாவிரை.

சுடலை, சவுக்காரம், soap; 2. உ(மு) மண் fuller's earth; 3. சுடுகாடு, Cremation ground.

சுடலைகுத்தியாடல், see செடில் குத்தியாடல்.

சுடலைக்குருவி, சுடுகாட்டுக் குருவி, சாக்குருவி, a species of owl, the screeching of which is considered an evil omen as it is saw to fore bode an impeding death. It is so called from its habitation inburial grounds.

சுடலைதனில் நிர்த்தன், சிவனார்வேம்பு, Shivas neem — See கடலையாடி.

சுடலைநிற நிஷ்களம், துரிசு, blue vitriol.

சுடலைநீறு, பிணம் சுட்ட சாம்பல், ashes left after burning the dead.

சுடலைப்பூச் செடி, see ஆற்றலரி.

சுடலைப்பூண்டு, சுடுகாட்டில் முளைக்கும் செடிகள், plants grown generally in the cremation ground.

சுடலைமாடன், சுடுகாட்டில் வசிக்குமோர் பேய். இப்பேய் பெண்களைப் பிடித்தால் சுடுகாட்டுச் சாம்பல் அல்லது விபூதியைப் பூசிக் கொள்வதும், அஞ்சாத நெஞ்சம் படைத்து ஆடுவது பாடுவது மாயிருப்பாள். மந்திரத்தினால் இது ஆவேசம் கொள்ளும், a dare devil frequenting burial grounds. Women influenced by it are generally found with peculiar character vis — smearing holy ash or ashes of corpse on their bodies, possessing undaunted courage dancing singing etc.

சுடலையாடி, சவர்க்காரம், soap; 2. சிவனார் வேம்பு, shivas neem, Indigofera asphalathoides.

சுடலையாவரை, சுடுகாட்டில் விளையும் ஆவராஞ்செடி, tanners cassia found grown in the grave yard.

சுடலையூர்தி, see கருமருது.

சுடலையோன், துருசு, blue vitrio; 2. கள் toddy; 3. காய்ச்சுவமை.

சுடல், see சுடரெண்ணெய்.

சுடவாலமல்லி, பவளமல்லிகை, coral jasmine — Nyctanthes arbortristis.

சுடவைத்தல், சூடுண்டாக்கல், to heat anything in fire.

சுடற்காளை, சூடன், camphor.

சுடற்கொடி, see சுடர்க்கொடி.

சுடிகாரோகம், பிரசவம் அல்லது பிள்ளைப் பெறுதலையடுத்த நோய்கள், diseases relating to child birth — Puerperal diseases. They are fever, dropsical swelling, loss of appetite epistaxis, suppression of urine, diarrhoea, dysentry, deep seated pains in the abdomen, consumption, emaciation bodily pain, loss of strength etc.

சுடிநார், கடினர் மஞ்சள் பட்டு பஞ்சு காட்டிலவ மரம், yellow flowered silk cotton — cochlospermum gossypium.

சுடீகை, உச்சி, crown of the head; 2. கள், fermented liquor; 3. பனங்கள், palm toddy 4. பிரசவம், parturition.

சுடீரம், பீநாறி, fetid tree sterculia foetida.

சுடு, நெருப்பில் தீய்த்தல், to broil or scorch; 2. வாட்டல், to roast; 3. வதக்கல், baking.

சுடுகஞ்சி, சூடான கஞ்சி, இது பச்சரிசிக் கஞ்சி நெற்பொரிக் கஞ்சி, எவாகஞ்சி, கொள்ளுக்கஞ்சி, கோதுமைக் கஞ்சி, வடித்தக் கஞ்சி என்று பலவகையாம் நோயாளிகளுக்கு பத்தியத்திற்கு உபயோகப்படும், hot porridge. It is made of various articles such as raw broken rice, fried paddy, wheat, barley, horse green gram etc.

சுடுகண், கொள்ளிக்கண், evil eye.

சுடுகலம், செங்கல், brick; 2. சட்டி, earthen pot.

சுடுகாடு, பிணஞ் சுடுகாடு, burning ghat place where the dead are burnt; 2. சவக்காடு அல்லது இடுகாடு, burial ground — place where the dead are burried.

சுடுகாடு மீட்டான், முடக்கொத்தான், pulsy curer — cardiospermum halicacabum; 2. பெருந்தேட் கொடுக்கி, a large variety of scorpion plant Heliotropium indicum; 3. பாவட்டை, Indian pellet shrub, Pavella indica.

சுடுகாடு மீட்டான் குழம்பு, பாம்பு விஷந் தீண்டியவர்கட்கு பதினைந்து விதச் சரக்குகளைக் கொண்டு தயாரித்து, குன்றியளவு வெற்றிலையில் வைத்துக் கொடுக்குமோர் மருந்துக் குழம்பு அன்றியும் தவளையைப் பிளந்து கடிவாயில் வைத்துக் கட்டவும் வேண்டும். an antidote or snake bite prepared with the aid of 15 drugs mentioned below — and adminstered in betel leaf — A frog split into two must be placed on the bitten spot and bandaged. The fifteen drugs are இரசம், mercury, கந்தகம், sulphur, லிங்கம், cinnabar தாரம் yellow orpiment, மனோசிலை, red orpiment, துருசு, blue vitriol, காரம் borax இந்துப்பு, rock salt, காயம், asafoetita, திரிகடுகு, dry ginger, pepper & peper longus, மகிழம்விதை, seeds of Minusops elengi, நாபி aconite, and பூவந்திப் பழச்சதை, fleshy portion of the fruit of soap nut tree, மேற் சொன்னவைகளைச் சமன் கொண்டு பொடித்து, பூவந்திப் பழச்சதையுங் கூட்டி அரைத்து விஷந் தீண்டியவர்களுக்குக் குன்றி எடையளவு, பச்சைப் பயிறு கஞ்சிக் கொடுக்கவும், The fifteen drugs mentioned above are ground together and about two grains is given to the patient. He is kept on green gram porridge diet.

சுடுகாடுறையன், முடக்கொத்தான், Palsy carer, cadiospermum halicacabum.

சுடுகாட்டுச் சித்தர், சாலவித்தைக் காட்டல் குறி சொல்லல் முதலிய தொழிலுக்காக மனிதர் தலை மண்டையோடு நாய், பூனை, புலி முதலிய மிருகங்களின் எலும்புகள், மாந்திரீகமை முதலியவைகளைக் கொண்டு செல்லும் ஓர் வகைச்சாதியார். இவர்கள் அனேகமாகச் சுடுகாட்டிலேயே தத்தம் காரியங்களை இயற்றிக் கொள்வதாலிவர்கட்கிப் பெயர் வந்தது போலும். a trible of jugglers and fortune tellers who carry about human bones and those of beasts such as dog, cat, tiger, fox etc to work charms, and incantations with. They are so called from practising their arts in the burial grounds — grave yard.

சுடுகாட்டுப் புகை, பிணம் சுடும் புகை, smoke from the burning dead body, inhaling of this smoke reduces the life time.

சுடுகாட்டுப் பூ, மயானத்தில் வளருஞ் செடியின்பூ, flowers of the plants that grow in the burial ground — Periwinkle.

சுடுகாட்டுப் பேய், சுடுகாட்டில் திரியும் பேய், spirits of dead persons hovering about the grave yard — Coblin.

சுடுகாட்டு மணிபொறுக்கி, கொண்டையுள்ள ஓர் வகைப் பறவை, a kind of crest bird known as Indian hoopoe — upupa nigri pennis. It is so called from picking up grains; 2. காட்டுப் புறா, wild dove.

சுடுகூத்தன், கருப்பட்டி வாகை, see கப்பொட்டி.

சுடுகை, சூடுகாட்டல், process of heating —calcification.

சுடுகைக் கஞ்சி, hot gruel.

சுடுகோல், சூட்டுக் கோல், a red hot iron for burning or scaring as of morbid flesh; any instrument or substance used for branding.

சுடுக்குதல், நெட்டிவாங்குதல், Crakling the finger joints — decripitations.

சுடுசாதம், சூடுள்ள சோறு, அப்போது வடித்த சூடான அன்னம், hot cooked rice.

சுடுசாப்பாடு, சூடான வுணவு, food served while hot.

சுடுசாம்பல், சூடான அடுப்புச் சாம்பல், இது ஒத்தடம் கொடுக்கவுதவும், hot ashes direct from oven used in fomantation.

சுடுசுண்ணம், தாளித்த சுண்ணாம்பு, slaked lime; 2. புடமிட்ட மருந்துச் சுண்ணம், a calcined calcium compound.

சுடுசுளாத்தி, see சுடுதுரத்தி.

சுடுசெங்கற் குகை, சுட்ட செங்கல்லை அரைத்துப்பண்ணிய குகை, crucible made of powdered burnt brick.

சுடுசோறு, அப்போது சமைத்த அன்னம், fresh hot cooked rice.

சுடுதண்ணீர், வெந்நீர், Hot water.

சுடு தண்ணீர்க் கொப்புளம், வெந்நீர்பட்ட கொப்புளம், Scald caused by boiling water.

சுடுதல், புண் புரைகளை, சூட்டுக் கோலால் தீய்த்தல், burning or scaring as of morbid flesh or growth in cases of ulcers or sores with a red hot iron or electric current — Cauterization; 2. மருந்தெரித்தல்; burning medicine; மருந்து நீற்றுதல், calcining medicine; 4. சூடு போடுதல், branding.

சுடுதழும்பு, சுட்டவடு, scar formed by healing of wounds caused by burning or cauterization, crust or scab formed on wounds caused by burning or cauterization; 2. காரத்தினால் சுட்ட தழும்பு, Scar caused by the application of caustics.

சுடுதுரட்டி, சுடுதுறட்டி.

சுடுதுரத்தம், see சுடுதுரத்தி.

சுடுதுரத்தி, சித்திரப்பாலாடை, Euphorbia thymifolia or E. hypericifolia.

சுடுதொரட்டி, சூரைமுள்ளி, which see.

சுடுநாற்றம், இறைச்சி, பிணம் முதலியவை சுடுவதால் ஏற்படும் நாற்றம், bad smell caused by roasting meat or burning corpse.

சுடுநிலம், சுடுகாடு, cremation ground.

சுடுநீர், வெந்நீர், Hot water.

சுடுபுண, சுட்ட புண், burns caused by fire, 2. வெந்தபுண், injury caused by hot substances — Scalds.

சுடுபொன், புடமிட்ட பொன், refined gold.

சுடுமருந்து, எரிமருந்து, (literally) medicine obtained by mere burning; 2. புடமருந்து, calcined medicine; 3. இரசாயன மருந்து, chemical preparation; 4. புண்ணைச் சூடு மருந்து, caustic.

சுடுமுஞ்சித்தனம், முகத்தில் கோபக் குறியைக் காட்டும் தன்மை, irritable temperament.

சுடுரத்தம், see சித்திரப்பாலை.

சுடுவல், இரத்தம், blood.

சுடுவளாத்தி, see சூடுவளர்த்தி

சுடுவள்ளி, see தலைச்சூடு வள்ளி.

சுடுவனம், சுடுரத்தம், warm blood; 2. சுடுதிரவம், hot fluid; 3. திட்சண்யமான காடு, அதாவது அனல்வீசும் காடு, a forest throwing hot wind; 4. பாலைவனம், desert.

சுடுவன், see சுடுவனம்.

சுட்ககருப்பம், கர்ப்பம் கழித்துக் கொண்டு வயிறு பூரிக்காமற்

செய்வது, non-development of pregnancy.

சுட்கசுரம், அதிக வெப்பத்தினால் மேலெல்லாம் எரிச்சல் கண்டு, உடம்பை உலர்த்துமோர் வகைக் காய்ச்சல் மேலும், இதனால் தலைவலி, கண் வலி, வியர்வைப் பிரலாபம், பல்வலி, சவம்போல் கிடத்தல், மயிர்ச் சிலிர்ப்பு, அதிநித்திரை ஆகிய இக்குணங்களைக் காட்டும், a form of fever causing burning sensation and emaciation of the body due to excessive heat; 2. see கனைக்காய்ச்சல், 3. எலும்புருக்கிக் காய்ச்சல், இதனால் உடம்பிளைக்கும், Ricketic fever causing emaciation and deformity. It is marked by progressive wasting or emaciation of the body and intermittant fever.

சுட்கசிலேட்டுமம், சர்வாங்கச்சூம்பல், கபாதிக்கம், இருமல் மூச்சுக் கஷ்டம், வயிற்றுப் பிசம், மலபந்தம் ஆகிய விக்குணங்களோடு கூடிய ஓர் சிலேட்டும நோய், a disease caused by excessive phlegm humour.

சுட்கநோய், உடம்பை உலர்த்தும் நோய், any wasting disease; 2. உடம்பை இளைக்கச் செய்யும் சய நோய், consumption tending to a gradual loss or diminution of bulk in the system.

சுட்கமூலம், முளை சுருங்கிய ஓர் மூல நோய், a form of piles in which the small tumour of the veins out side the anus is found shrunken or decreased in size spontaneously; 2. வறட்சி மூலம், a kind of hemorrhoid due to the dry condition of the lower end of the rectum; 3. உலர்ந்து சுருங்கி இருப்பது that which is dried and shrinked; 4. உலர்ந்த வேர், dried root; 5. உலர்ந்த கிழங்கு, dried bulb or rhyzome.

சுட்கம், வறட்சி dryness; 2. உலர்வு emaciation; 3. ஓர் நோய், a disease.

சுட்கயோனி, மாதாந்த ருது காலத்தில் புணர்ச்சியை விரும்பிப் போகும் பெண்களுக்கு இயல்பாக விழும் இரத்தம். இப்புணர்ச்சியினால் உள்ளுக்குள்ளே மறிக்கப் படுவதனால் மல மூத்திராதிச் சிக்கலை யுண்டாக்கி, யோனியில் வலியை யுண்டாக்குமோர் நோய், a menstrual disorder in women marked by scanty flow of menstrual blood, constipation urinary complant uterus pain etc. It is due to their uncommon desire for indulgence in sexual intercourse during the menstrual period.

சுட்கரேவதி, குழந்தைகளைத் தாக்கும் ஓர் வகைக் கிரக தோஷம் இது, குழந்தை பிறந்து 7வது நாள், மாதம், வருஷத்தில் சிசுவை அல்லது தாயைக் கிரகம் பிடிக்கும். இதனால் அன்னத்துவேஷம், கொட்டாவி, உடம்பு வலி உண்டாகும், an evil influence of a plane affecting the health of the children at the 7th day or month or year. This affects either the mother or child. The symptoms are pain in the body, yawning and nausea.

சுட்கரோகம், உடம்பை இளைக்கச் செய்யும் நோய், wasting disease any disease causing emaciation.

சுட்கல், வறளல், to grow dry; 2. மெலிதல், to get reduced or emaciated.

சுட்காட்சிபாசுரோகம், ஓர் வகைக் கண்ணோய். இதில் கண்கள் சுருங்கி, இடுக்கம் பிடித்தல் போலிருக்கும். அதனால் கண்ணில் வலி, அதிர்ச்சி, எரிவு, ஒளிக்குறைவு, கண்சிவப்பு முதலிய குறிகளும் அத்துடன் கண்ணிரப்பை மூடல், திறந்தலில் பிரயாசை, மேலும் இரப்பை வரட்சியாலெப் பொழுதும் மூடின படியேயிருக்கும் சீதளவஸ்துவில் இச்சை முதலிய குறிகளையும் காட்டும் இந்நோய் முதிர்ந்தால் கண்ணில் குத்தல் வலி அதிகரிக்கும், பார்வையைப் புகைச்சலாய்க்

காட்டும், a disease of the eye due to sudden shrinkage or contraction of the eye as a whole. It is characterised by pain, slock burning sensation, dullness of vision, or hazy appearance, inflammation etc. and is also attended with difficulty in opening or closing of the eye lids and a cravi[illegible] for cool substances. In the advance stage there will be more acute pain and hezy vision. The lids become dry and hard and remain always closed. It may be a non-secreting type of conjunctivities.

சுட்கவட்சிபாகம், see சுட்காட்சி பாகம்.

சுட்கவரிசம், இமையிற் காணும் சொரசொரப்புள்ள சிறு மூளைகள், rough papillae in the eye lid.

சுட்சும்பி, கழுதைமான் புள்ளி, இதன் சாற்றில் பாஷாணம் கட்டும் வேர்ச்சாற்றில் அரிதாரம் வெளுக்கும், a medicinal plant. The juice of the leaves is capable of consolidating arsenic compounds while that of the root turns the yellow colour of orpiment into white.

சுட்சள், see சுள்ளு சுள்ளெனல்.

சுட்டகரி, எரித்தகரி, burnt charcoal, carbon; 2. சுடுவதனாலுண்டாகும் கரி, charcoal derived by burning wood fuel; 3. காந்திய நிலக்கரி, the refuse of the burned coals a hot coal that ceased to flame.

சுய்க்கல் கூத்தன், பூநீறு, an efflorésent salt found in the soil of fuller's earth.

சுட்டசாம்பச்சி, see எவட்சாரம்.

சுட்டசாம்பல், எரித்துண்டான சாம்பல் — ashes obtained by burning.

சுட்ட சுண்ணாம்பு, சுட்ட சுண்ணாம்புக் கல், burnt lime stone — quick lime 2. நீற்றிய சுண்ணாம்பு, slacked lime.

சுட்ட புண், நெருப்பினால் சுடப்பட்ட புண், injury caused by fire — burns; 2. வெந்த புண், wounds caused by hot substance — scalds.

சுட்ட புண்ணாற்றி, தீச்சுட்ட புண்களை யாற்று மருந்து, an agent that cures burns Antipyrotic.

சுட்டபுளி, நெருப்பிலிட்டெடுத்த புளி, இது ஓர் பத்தியபாகம், burnt tamarind used in diet.

சுட்ட பூக்கல், see வழலை.

சுட்டாமுட்டி, see சுட்டுவிரல்.

சுட்டாவிரல், see சுட்டுவிரல்.

சுட்டவெண்காரம், roasted borax — dehydrated Borax.

சுட்டி, நாக்கு, tongue.

சுட்டிகை, see சிட்டிகை.

சுட்டிச் சுண்ணம், குளியல் வாசனைப் பொடி, bathing scented powder.

சுட்டுக் குருவி, see சிட்டுக் குருவி.

சுட்டுப் பொருள், நினைத்தபடி கடவுள் குருவாக எழுந்தருளல், God appearing in the form of a guru in meditation according to the proficiency of the practising worshipper.

சுட்டுவிரல், ஆள்காட்டி விரல், index finger.

சுணக்கம், சோர்வு, fatigue.

சுணக்குதல், மெலியச் செய்தல், to cuase emaciation; 2. களைக்கும்படி செய்தல், to cause fatigue.

சுணங்கல், சோர்வுறல், to get tired, 2. மெலிதல், to grow slender.

சுணங்கறை, புணர்ச்சி, sexual union.

சுணங்கன், நாய் dog; 2. see சுணங்கன் விருட்சம்.

சுணங்கன் கபாலம், நாய் மண்டையோடு, skull of a dog.

சுணங்கன்புல், இது தர்ப்பைப் புல்லைப் போல செழித்து சாமையின் சாயலைப் போல ஊரிகளில் ஆரச்சுவர்களில் முளைக்கும். புழக்கடையிலும் காணலாம். இதற்கு மஞ்சள் நிறக் கிழங்குண்டு, a species of grass resembling deccan grass in appearance and sacrificial grass in its growth and fertility. It grows generally on the compound walls and in the back yard of houses in town and villages. Its bublous root is yellow colour.

சுணங்கன்மூலி, நாய்க்குட்டிச் செடி, இது ஒரு கற்பக மூல மகாமூலி 23 வகைகளில் ஒன்று.

சுணங்கன் விருட்சம், நாய்க்குட்டி மரம், இது வெகு அபூர்வம், பார்த்தவர்கள் கிடையாது. இம்மரத்தினடியிற் சென்றால் நாயைப் போலிரையும், சீ என்று சொல்ல, சத்தமடங்கும். இது இந்திரமாயசால வித்தைக்கு உதவும். இதன் பட்டையைக் குழித்தைல மிறக்கி இரும்புக்குக் கொடுக்கத் தங்கமாகும். இதன் பூத் தூளும் வாதத்திற்கு தவும். காயை மை கூட்டி ஊமையின் கையிலிட புதையில் காணும். வேரைப் பிடுங்கிக் குளிசமாட கெவுனம் பாயும். கூடு விட்டுப் பாயலாம். காயசித்திக் குதவும். இதன் இலை நீளமாகவும், தடிப்பாகவும், சுணையாகவும், சுற்றிலும், கருக்காகவும் இருக்கும். இதன் கனி நாய்க்குட்டியைப் போலிருக்கும். இக்கனி பழுத்துக் கீழே விழும்போது குரைத்து விழும். அப்படி விழுந்து நெடுநேரம் கிடந்து பின்பு விருட்சத்தில் போய்ச் சேர்ந்து கொள்ளும். அக்கனி விழும்போது சாக்கிரதையாக எடுத்து அறுத்துப் பார்த்தால் வெண்ணெய் போல் மெதுவாய் இருக்கும். It is called dog tree. Nobody has seen this plant. It is said that if any body approches it, makes barking sound, the sound stops, if the person says 'சீ' This plant is useful to magicians. The oil from the bark is said to

transmute iron into gold. Even its flowers are used in Alchomy. A black ointment is prepared from its fruit, and it is held in the hand by dumb person, he will be able to see and locate treasure trove. Its root if worn as talisman, the person can walk in the air, and pass from one body to another. The root bark is ful for rejuvenation. Its leaves are long thick pubescent with serrated margin.

Its fruit looks like a pup, and so the plant is called dog tree. When it gets ripe and falls from the tree a barking sound is heard. After remaining for some time on the ground, the fruits rises up and fixes itself into the tree. if it is picked, and cut before it joins the tree it will be found to be fleshy and butter like.

இப்பழத்தைக் கொஞ்சம் கொஞ்மாகச் சாப்பிட்டு வர மூர்ச்சையுண்டாகும். அப்போது எவரேனும் பக்கத்திலிருந்து கொண்டு பசும்பால் நான்குக் கொன்று தேன் கலந்து ஒரு கறண்டி வீதம் உள்ளுக்குச் செலுத்திக் கொண்டு வர 13ம் நாளில் மூர்ச்சை தெளியும். தேகமும் சித்தியாகும். If one eats this little by little he swoons and becomes senseles. Then if any body, feeds him with the mixture of milk and honey in the proportion of 4:1 he will revive on the 13th day. Then his body becomes immortal.

சுணங்கிப் போதல், மெலிந்து போதல், to grow weak and thin.

சுணங்கி விழல், களைத்து விழல், to fall by exhaustion or over exertion.

சுணங்கு, தேமல், light coloured yellow patches on the skin; 2. சோர்வுறு, to get tired; 3. சதுரக்கள்ளி square spurge Euphorbia antiquorum; 4. பூந்தாது, pollen; 5. பசலை அதாவது ஓர் சர்ம நோய், a skin disease; 6. நாய், dog; 7. மெலிவு, emaciation.

சுணங்குபடர்தல், உடம்பில் தேமல் படருதல், spreading of yellow patches or spots on the skin especially of the women.

சுணங்கு பூத்தல், See சுணங்கு பட்ர்தல்.

சுணச்சி, பவளப் புற்று பாஷாணம், a kind of prepared arsenic; 2. பேய்க்கடலை, a kind of bitter wild gram; 3. பேய்த்தும்பை, devil toombay — Leucas linifolia. The fresh juice is employed in head ache & colds; 4. நாகசிங்கி, a plant found grown in tanks.

சுணம், வெள்ளுள்ளி, garlic; 2. அழகு தேமல் yellow spreading spots which adds beauty to women.

சுணவு, see சுணைவு.

சுணை, இலையின் சுணை, asperity of leaves. 2. சிறுமுள், prickle; 3. தினவு, itching 4. சுனையுள்ள பதார்த்தம், 5. See சுணைக்கோரை.

சுணைக்கரந்தை, சுணையுள்ள கரந்தை, sharp sweet basil. Ocimum lanceolatum.

சுணைக்கழியாப் பிஞ்சு, அப்பொழுது பறித்த பிஞ்சு, a fresh downy fruit.

சுணைக்காணம், பேய்க்கொள், wild horse gram.

சுணைக்காது, காதுமடலின் கீழ்த் தொங்கிக் கொண்டிருக்கும் மெதுவான சதைப்பாகம், the lower termination of the ear — lobule.

சுணைக்காய்க்குள் பாஷாணம் கட்டும், பேய்க் குமட்டி, Colocynth — Citrullua colocynthr's.

சுணைக்குறிஞ்சா, சொர சொரப்புள்ள குறிஞ்சா, rough swallow wort — Gynema hirsutum.

சுணைக் கொடி, முசுமுசுக்கை, Bryonia scabra.

சுணைக்கோரை, சுனையுள்ள கோரைப்புல், a rough or downy reed.

சுணைச்சி, சிறுகாஞ்சொறி, small climbing nettle — Tragia involuerata.

சுணைத்தல், தினவெடுத்தல், itching.

சுணைத் தழும்பு, சுணை உடம்பிற் படுவதனால் நமைச்சலெடுத்து தடித்துத் தழும்புண்டாதல், nettle rash.

சுணை நெரிஞ்சில், ஓர் வகை முள் நெரிஞ்சில் of kind of nettle

சுணைப்புல், சுணையுள்ள புல், any grass, with rough surface; 2. கோரைப் புல், reed sedge grass.

சுணையுள்ள, முட்சுணையுள்ள, pubescence.

சுணையுறுகாணம், பேய்க்கொள், wild horse gram

சுணையுறுகொத்து, சுணையுறு மூக்கு, see சுணையுறுகாணம்.

சுணைவண்டு, ஒரு வகை வண்டு, a kind of beetle.

சுணைவு, பேய்க்கடலை, wild bitter bengal gram.

சுணை வெள்ளரி, நரி வெள்ளரி, downy cucumber Cucumis utilies simus.

சுண்டகம், கள், toddy; 2. மூஞ்சூறு, musk rat.

சுண்டக்கட்டுதல், இறுகக் கட்டுதல், to be hardended after boiling.

சுண்டக் காய்ச்சல், நீர் வற்றும்படி காய்ச்சுதல், to heat till it completing dries.

சுண்டக்காய்தல், இருகும்படி காய்தல், to dry in the sun till it completely dries.

சுண்டக்கீரை, நீர்ச்சுண்டி, floating sensitive plant Nepuntia genus.

சுண்டங்காய், சிறுகாய், small fruit; 2. see சுண்டைக்காய்.

சுண்டம், கள், fermented liquor.

சுண்டலி, ஓர்ப்பூடு, false holly. Cophandra axiclaris.

சுண்டல், சுண்டுதல், getting evoporated or dried; வேகவைத்த காய் தானியம் காலை யுணவுக்குச் சிறந்தது. Boiled pulses good and recommended for breakfast.

சுண்டற்கறி, பழங்குழம்பு, பழங்கறிகளை ஒன்று சேர்த்துக் காய்ச்சி வற்ற வைத்து எடுத்த பொருள், a mixture obtained by heating the remmant sauce, pepper, water and curries of the previous night.

சுண்டன், மூஞ்சூறு, musk rat; 2. சுண்டெலி, mouse.

சுண்டாங்கி, துவையல், a seasoning used with curry; 2. சட்டினி, chutney.

சுண்டாலம், see சுண்டாலி.

சுண்டாலி, யானை, elephant.

சுண்டான், கள் toddy; 2. மூஞ்சூறு, musk rat, c.f. shrew rat.

சுண்டி, கள், toddy; 2. புளித்தமது, any fermented, liquor; 3. சுக்கு, drug ginger 4. ஓர் வகைக் கண் வியாதி, a kind of eye disease; 5. நீர்சுண்டி, see சுண்டங்கிரை, 6. தொட்டால்வாடி, sensitive plant Mimosa Pudica; 7. see சுண்டிக்கிரை, 8. வறட்சுண்டி, floating sensitive plant; 9. இஞ்சி, ginger; 10. see சுண்டை, 11. கருஞ்சுண்டி, Mimosa rubicaulis.

சுண்டிகை, உண்ணாக்கு, uvula; 2. see சுண்டைக்காய், 3. வண்டின் நாக்கு, tonge of beetle.

சுண்டிக்கிருதம், ஒருசேர் சுக்கு அரைத்தும் அத்துடன் 8 சேர் சுக்கைக் கஷாயம் வைத்தும் இரண்டையும் கலந்து, அதற்கு நெய்யுமிட்டுப் பக்குவப் படுத்திய ஆ.வே. மருந்து இதனால் பாண்டு வீக்கம், சீதபேதி இவைகள் குணமாகும். the ingredients of 1 seer of dry ginger made into a paste to which is added 8 seers of dry gigner decoction and ghee. By boiling the mixture ghee is prepared. It is an Ayurvedic preparation given for dysentery, anemia and dropsy.

சுண்டிக்கீரை, நீர்ச்சுண்டி, water mimosa.

சுண்டிப் போதல், சுருங்கல், to be reduced by boiling or evaporation.

சுண்டியம், சுக்கு, see சுண்டி.

சுண்டியாதிக்கியாழம், சுக்கு, கோரைக் கிழங்கு, அதிவிடயம், சிந்திற் கொடி சம எடை சேர்த்துக் கஷாயமிறக்கி அக்கினி மாந்தம், ஆமவாதம், கிருணி முதலிய நோய்களுக்குக் கொடுக்கும் ஆயுள் வேத கஷாயம், This is a decoction prepared out of dry ginger. Moon creeper stem, bulb of nut grass, Indian atee. It is useful for chronic diarrhoea, loss of appetite etc.

சுண்டியாதிச் சூரணம், சுக்கு, சீரகம், இந்துப்பு, பெருங்காயம், மாங்காய்ப் பருப்பு, வில்வப் பழம் இவைகளைச் சூரணித்து வஸ்திரகாலிதம் செய்து தயிர் வார்த்துச் செய்யும் ஆ.வே. மாத்திரை, இதை ஆமாதிசாரம் அக்கினி மாந்தம் அருசி முதலிய நோய்களுக்குக் கொடுக்க அப்பொழுதே தீரும், an Ayurvedic preparation of some bazzar drugs dry ginger, cumin, rock salt, asafoetida, etc with curd. It is useful for diarrhoea loss of appetite, nausea etc.

சுண்டியிலை, தொட்டால் வாடியிலை —leaves of Mimosa pudica.

சுண்டியுண்டை, சோறு, கஞ்சி இவைகளைப் புளிக்க வேண்டி மூலிகை வேர்களைக் கொண்டு செய்யும் மாத்திரை, a pill prepared out of certain roots to ferment rice porridge etc. இந்த மாத்திரை சுக்கு சதுரக்கள்ளி, கொழிஞ்சி, சீரகம் முதலான பல மூலிகைகளின் வேர்ப் பட்டைகளால் செய்யப் படுகிறது. a medicinal pill prepared with dried ginger, root barks of square purge, (கொழிஞ்சி) ctruis, cumin seed

it is used as a fermenting agent to ferment rice gruel and other liquids; 2. சதுரக்கள்ளி, square spurge — Euphorbia antiquorum; 3. கொழுஞ்சி சீரகம், a kind of cumin seed.

சுண்டிலி, மயில், peacock மூஞ்சூறு, musk rat.

சுண்டில், தொட்டாற் சுருங்கி, sensitive plant Mimosa pudica.

சுண்டு, தலைப்பொடு, danddruff; 2. விறைப்பு, rigidity; 3. வண்டல், sediment; 4. சுண்டுதல், getting reduced by heat as liquid does; 5. ஓர் சிற்றளவு, a small measure; 6. மூக்கு, nose; 7. கீழுதடு, lower lip; 8. சதை இழுத்துக் கொள்ளுதல், tightening of muscle as in cramp.

சுண்டுதல், நீர் வற்றுதல், process of getting dry; 2. வேக வைத்தல், process of boiling; 3. நரம்பிழுத்தல், contracting or stretching of muscle.

சுண்டுதலை, சொறித்தலை, head with scurf.

சுண்டுவாதம், நரம்பை உள்ளேயிழுக்கும் வாதம், a disease marked by contraction of muscles as cramp — spasm etc.

சுண்டுவிரல், சிறுவிரல், little finger.

சுண்டெலி, சிறிய எலி, அல்லது, சிற்றெலி, mouse, a small rat.

சுண்டை, கள் toddy; 2. see சுண்டைக்காய், 3. வெண்ணொச்சி, the white species of negundo — Vitex negundo; 4. காட்டுச் சுண்டை, Solanum Verbacifolium; 5. சுண்டைச் செடி, Solanum pubescens.

சுண்டைக்காய், சுண்டைச் செடியின் பச்சைக்காய். இது கறிக்கும் வற்றலுக்கும் உப்யோகப்படும். இதை சிவக்க வறுத்துப் பொடி செய்து உப்புக்கல்லோடு கூட்டிக் கொடுக்க அசிரணம், வயிற்றுப் பொருமல் இவைகள் தீரும். இதை வறுத்துத் தின்ன மலக்கிருமி, பித்த அரோசகம் இவை போம் கஷாயமாக உபயோகிக்க சீதக்கட்டு, சீதபேதி, மூலவியாதி, கிருணி இவைகள் போம். இது ஓர் பத்தியப் பண்டம். இதைக் குழம்பு செய்துண்ண கபத்தை அறுக்கும். நெஞ்சு சளிபோம். வாயுவைக் கண்டிக்கும். மலக்கிருமிகளைக் கொல்லும். ஆசனத் துவார சீதக்கட்டு போம், the fruit of unarmed night shade — Solanum pubescens. The unriped fruit is used in curries when fresh. The dried ones are seasoned in butter milk with salt. They are again dried and stored. Whenever required they are fried in oil or ghee and used as an adjunct to food. If taken in sufficient quantity it cures indigestion, diarrhoea rumbling noise in the stomach biliousness and kills worms in the intestines. A decoction of them is a good remedy in mucous diarrhoea dysentery and hemorroids (piles).

It is a dietic substance. It serves as an expectorant and carminative.

சுண்டைச் செடி, சுண்டைக்காய்ச் செடி, அல்லது மரம்; 8 — 12 அடி உயரம். இதன் இலை அகலமாயும், சொரசொரப்பாயும் இருக்கும். மரம் சிறியது ஆயினும் விசாலம், வெள்ளைப்பூ சதா பூக்கும் காய் சிறியது, உருண்டை, பச்சை நிறம், குழம்புக்குதவும், இதனை மோரிலிட்டுக் காயவைத்து வற்றலாகவும் உபயோகிக் கலாம். சிறிது கசக்கும். ஆயினும் உடம்புக்கு நல்லதெனக் கருதப்படும். இதன் வேர் தும்மலையுண்டாக்கும். இதில் அனேக விதங்களுண்டு. அவையாவன: It is a shrub or tree about 8 — 12 feet high, leaves are broad pubesent on both sides, flowers are white and short. It flowers and bears fruits all round the year. Fruits are small round and green. They are slightly bitter but good for health.

1. ஆனைச் சுண்டை, Solanum ferox.

2. மலைச் சுண்டை, Solanum torvum

3. இராமேஸ்வரச் சுண்டை, Solanum pubescens.

4. முட்சுண்டை, Solanum trilobatum.

5. கருஞ்சுண்டை.

6. காட்டுச் சுண்டை, Solanum verbascifolium.

7. பேய்ச் சுண்டை, same as முட்சுண்டை.

8. நஞ்சுண்டை, poisonous variety.

9. இலைச்சுண்டை.

10. குத்துச்சுண்டை

11. முள்ளிலாச் சுண்டை, same as மலைச்சுண்டை.

சுண்டைப்பிரமாணம்,

சுண்டைக்காயளவு; சில மருந்துகளில் (மெழுகுகள், லேகியங்கள்) அளவைக் குறிக்கும், The size of fruit of Solanum pubescens.

NOTE: generally in Tamil medicine the doses of medicine are given as the size of rice, paddy, green gram black gram, red gram seed of Abrus precatorius, fruit of Solanum pubescens and gooseberry and soon.

சுண்டை வற்றல், சுண்டைக்காய் வற்றல், அதாவது பச்சைச் சுண்டைக்காயைக் காய வைத்து பிறகு உப்பிட்ட புளித்த மோர் அல்லது தயிரிலிட்டு ஊறவைத்து, மறுபடி தயாரித்த வற்றல். இதை நெய்யிலாவது நல்லெண்ணெ யிலாவது வறுத்து ரசஞ்சாதத்துடன் சாப்பிட வாயுவைக் கண்டிக்கும். ஆசன சீதக்கட்டு, மலக்கிருமி போம், பசியுண்டாம், dried unriped fruits of solanum pubescens. The fresh fruits are smashed and dried. Then they are soaked in sour curd or butter — milk with salt to taste during nights, and dried in the sun during day till it becomes completely dry. That is how the fruits are seasoned. They are fried in gingelly oil or ghee and taken as an adjunct to food. The dry fruits or seasoned ones are used in medicine.

சுண்டைவேர், சுண்டைச் செடியின் வேர், இது தும்மலை யுண்டாக்கும், the root of solanum pubescens. It causes sneezing.

சுண்ணக்கரி, சுண்ணாம்பு சேர்ந்த கரி.

சுண்ணக்கல், சுக்கான்கல், lime stone; 2. வெண்சுக்கான்கல், white lime stone derived from meta - morphosed rocks; 3. கருஞ் சுக்கான்கல், black lime stone obtained from aqueous rocks; 4. சுண்ணாம்புக்கல், slaked lime.

NOTE: Lime stone are formed mechanically, Chemically, organically, but always in water.

சுண்ணக்குகை, சுண்ணாம்புக் கல்லினால் செய்த குகை, crucibles made of slaked lime, அஞ்சு சுண்ணக்குகை, அதாவது கடல் நுரை, கிளிஞ்சில், வலம்புரிச்சங்கு, வெள்ளைக் குக்குடம் இவைகளினால் செய்தகுகை, crucible prepared with five varieties of lime — cuttle fish bone lime, common oyster sheel lime, slaked lime of lime stone, conch shell lime, egg shell lime.Another process of making curcible of five limes is as follows — crab shell (field crab) snail shell, conch shell common oyster or be valve shell and (hens hatched) egg shell are taken in equal quantities and grinded with the sufficient quantity of milk of madar — calatrophis gigantia — till they become a fine paste. Then the paste is made into a disc about 3 m.m. thick and dried under the sun. When completely dry, it is paked in shallow earthern crucibles with cloth strips smeared with clay. Again it is dried and subjected to a big puttam of cow dung cakes. After cooling, it is taken out, and opened. The disc will be found white soft and calcified.

Sufficient quantity is taken and grinded with white of egg and then with the milk of Madar. Lastly it is mixed with slaked lime water and made into crucible and lid.

சுண்ணக்குகையிலூதல், மருந்தைச் சுண்ணாம்புக் குகையில் வைத்தூதல், to blow with belows the lime crucible containing the medicine which is to be calcified.

சுண்ணக்குரு, பூநீரையும், கற்சுண்ணாம்பையும் தண்ணீரில் விட்டுக் கரைத்து சிவகரந்தை சத்தில் சொல்லியபடியே இதிலும் செய்து 4ம் நாள் பார்க்கத் தண்ணீர் மீது நுரையைப் போல் மிதக்கும் சத்தை சத்து பூர்க்கும் வரை தினப்படிவழித்து மற்றொரு பாண்டத்தில் சேகரித்து வெயிலில் வைக்க உப்பாகியிருக்கும். இச்சத்துக்கு வைத்தியமுப்பு என்றும் பெயர். ஆகவே இதை ஒவ்வொரு மருந்திலும் சேர்ப்பதால் அம் மருந்தின் குணம் சிறந்ததாகக் கருதப்படும். ஆகவே வைத்தியர்களுக்கு இது அவசியம். This salt is a highly concentrated extract from quick lime and dhoby's earth containing carbonate of soda. In Siddha Medicine there are innumerable ways oil preparing this quintessence salt. The secret involved in the preparation is not fully divulged because of its mystoc use in Alchemy. It is considered as an universal solvent or powder of a very high potency and is capable of curing all ailments.

According to the secret science of Hermatic philosophers the Rosycruciems considered this quintessence as a fifth essence of the ancient and medieval philosophy.

சுண்ணக் கூர்மை, see நாகரவண்டு.

சுண்ணச் சத்து, சுண்ணாம்புச் சத்து essence of lime; 2. எலும்பிலுள்ள சுண்ணச்சத்து calcium pho-phate found in bones; 3. சுண்ணாம்பிலுள்ள உலோகச் சத்து, the metalic basis of lime — Calcium; 4. குருச்சுண்ணம், see சுண்ணக்குரு.

சுண்ணச்சிறு நீர், அதிக சுண்ணாம்பு சத்து மூத்திரம், excess of calcian salt in the urine.

சுண்ணச் சீலை, சுண்ணாம்பு தடவிய சீலைத் துணி, a piece of cloth luted with lime and used for packing the container of medicine which is to be exposed to fire.

சுண்ணச்சீலை சுற்றல், சீலைச் சுண்ணம் சுற்றுதல், to pack by winding the piece of cloth luted with time over the container of medicine.

சுண்ணச் சீனிநீர், சர்க்கரை கலந்த சுண்ணாம்புத் தெளிவு, saccharated solution of lime.

சுண்ணத்துக்குயிர், முட்டை, egg supposed to possess a life giving virtue to lime.

சுண்ணத்துக் கூர்மையோன், நாகரவண்டு, a beetle supposed to carry water to snake holes.

சுண்ணத்தோன், see கற்பூரசிலாசத்து.

சுண்ணநீர், சுண்ணாம்பு தெளிந்த நீர், lime water.

சுண்ணநீறு, நீற்றிய சுண்ணாம்பு, slaked lime; 2. நீற்றிய சுண்ண மருந்து, a calcium compound.

சுண்ணப்பூச்சவுடு, உவர்மண், dhoby's earth; உவர்மண்காரம், impure carbonate of soda.

சுண்ணப்பூமி, பூநீறு எடுக்கும் நிலம், soil of fuller's earth.

சுண்ணப் பொடி, வாசனைப் பொடி, an aromatic powder; 2. சுண்ணாம்புத் தூள், lime powder or dust; 3. see சுண்ண நீறு, 4. சுண்ண மருந்து, calcined medicine.

சுண்ணமண், சுண்ணாம்பு மண், sand mixed with lime; 2. உவ மண், fuller's earth.

சுண்ணமானோன், கொறுக்காய்ப்புளி, sweet babool — Pithecolobium dulce.

சுண்ணம், சுண்ணாம்பு, slacked lime; 2. கந்தப்பொடி, fragrant powder; 3. see சுண்ணப் பொடி, 4. சுண்ணமருந்து, calcined compound; 5. பச்சைக் கற்பூரம், Borneo camphor; 6. சுண்ணபற்பம், oxide of calcium; 7. சுண்ணச்சத்து, precipitate substance thrown down from a liquid containing calcium; 8. புடமிட்ட சுண்ணம், sublimate of calcium; 9. பராகம், polien; 10. see சுன்னம்.

சுண்ணலோகச் சிந்தூரம், அயப் பொடியில் சாரநீர் விட்டு அரைத்துக் காய வைத்து 3 முறை புடமிட்டெடுக்கச் செந்தூரமாம். இது பாண்டு, சோகை, மகோதரம் இவைகளுக்குக் கொடுப்பது, பருத்த தேகம் இளைக்கும், If purified iron filings are ground with pungent liquied prepared from salammonac and subjected 3 times to fire as rules of calcination the filings become fire red powder — It is the red calcination of iron useful for anaemia, dropsy and ascites, reduces obesity.

சுண்ணவரசி, முல்லை malabar jasmine — Jasminum malabaricum.

சுண்ணவிரத்தம், சுண்ணாம்பு அதிகமுள்ள இரத்தம், blood that contains more calcium than normal.

சுண்ணவுப்பு, lime salts.

சுண்ண விரோதி, சவ்வீரம், perchloride of mercury.

சுண்ணவைப்பு, சுட்ட சுண்ணாம்பு burnt lime stone; 2. புடமிட்டெடுத்த மருந்துச் சுண்ணம், a kind of alkaline salt such as calcium carbonate obtained by process of calcination; 3. சுண்ணாம்பு வண்டல், calcareous deposits; 4. தமிழ் வைத்திய நூலின்படி தயாரித்த உலோகச் சுண்ணம், compound of calcium carbonate prepared as prescribed in Tamil medicine.

சுண்ணாம்பு, நீற்றிய சுண்ணம், slaked lime — Calx; 2. சுட்ட சுண்ணாம்பு; unslaked lime; 3. தாளித்த சுண்ணாம்பு, இது வெள்ளை நிறம். அதில் சாம்பல் நிறம் சாயலும் கலந்தது. வாசனையற்றது. விருவிருப்பும் காரச்சத்துமுள்ளது. இது கற்சுண்ணாம்பு. இது கிளிஞ்சிற் சுண்ணாம்பு என இருவகைத்து, கற்சுண்ணாம்பு சுரங்கங்களினின்று வெட்டியெடுக்கப்பட்டது. கிளிஞ்சிற் சுண்ணாம்போ உப்பங்கழிகளில் தங்கி நிற்கும் ஊமைச்சியோடு, சுண்ணாம்பு மண்ணிரல் வீக்கத்திற்கும் வெளிக்கு சுடுவதற்கும் உபயோகப்படும், கிளிஞ்சில் சுண்ணாம்பு தாம்பூலத்தோடு சேரும். மருந்து வகையில் பல வகை சுண்ணாம்புகள் உண்டு. எந்த பொருள் சுண்ணாம்பாக மாற்றப்படுகிறதோ அதன் பெயரால் வழங்கும். உதாரணமாக 1. கற்சுண்ணாம்பு, 2. கிளிஞ்சல் சுண்ணாம்பு, 3. சிப்பிச் சுண்ணாம்பு, 4. நத்தைச் சுண்ணாம்பு, 5. சங்கு சுண்ணாம்பு, 6. நண்டு ஓடு சுண்ணாம்பு, 7. முட்டையோடு சுண்ணாம்பு, 8. முத்து சுண்ணாம்பு, 9. முத்துச்சிப்பிச் சுண்ணாம்பு, 10. கௌரி சுண்ணாம்பு இப்படி பல. calcium Hydroxide or calcium Hydras (slaked lime) it is a white substances of a pale grey tint opaque inodorous acrid and alkaline taste comercially two kinds existo — stone chunnum and shell chunnam. The former is taken from querries the later from salt water marshes. The chunnam is used internally in dyspepsia loss of appetite, enlargement of spleen and externally as a caustic. Shell chunnum is chewed with betel leaf. Kings used pearl chunnam to chew betels.

NOTE:— Lime is an oxide of metal calcium. It is literally calcic oxide or carbonate of lime deprived of its carbonic acid. The pharmaceutical preparations of quick lime are 1. calcishydrus —caustic and eschoratic internally

administered as a corrosive poison; 2. Liquor calcis — antacid; masticatory, alterative and astringent; 3. Liquor calcis saccharatus; 4. Linementum calcis; 5. calx chlorata — a well known deodiser; 6. calcis phosphas — alterative and anti acid.

In Tamil medicine or Hindu medicine several kinds of lime are used. They go by the name of the substance used to prepare the lime. They are lime from lime stone, calcined Bivalve shells, snail shell, conch shell, crab shell, egg shell pearl oxyster shell, gowri and soon.

சுண்ணாம்புக்கரடு, *சுண்ணாம்புக் கல்லில் சேர்ந்த ஒரு கரடான வஸ்து, இது தண்ணீரில் கரையாது.* The impurity of limestone containing magenesite ($MgCO_3$)

சுண்ணாம்புக்கல், *சுக்கான் கல், இது சுட்ட கல் சுடாத கல்லென இருவகைப்படும்.* lime stone or indurated carbonate of lime. It consists of two varities, unslacked lime or lime stone, and slaked lime or quick lime Quick lime is oxide of calcium.

NOTE: chalk *(சீமைச் சுண்ணாம்பு)* is a soft amorphous carbonate of lime, which can be converted into quick lime by calcination and used for all purposes as lime stone.

சுண்ணாம்புக்கிளிஞ்சில், see *சுண்ணாம்பு சிப்பி.*

சுண்ணாம்புக்கீரை *அரைக்கீரை,* garden spinach — Amaranthus tristi's.

சுண்ணாம்புச் சத்து, *சுண்ணம்,* calcium.

சுண்ணாம்புச் சிப்பி, *சுண்ணாம்பாக நீற்றவுதவும் சிப்பி,* lime shell.

சுண்ணாம்பு தாளித்தல், *சுண்ணாம்பு நீற்றல்* slaking lime.

சுண்ணாம்புத் தண்ணீர், *சுண்ணாம்பு கலந்த தண்ணீர்,* solution of chunam (lime)

சுண்ணாம்புத் தித்திப்பு, *சுண்ணாம்புடன் சர்க்கரை கலந்து தண்ணீரிலிட்டுத் தெளிவிறுத்த நீர், இதை குழந்தை பேதிக்கும், சூலைப் பிடிப்பினால் வருந்துபவர்களின் குன்மத்திக்கும் கொடுப்ப துண்டு.* saccharated solution of lime — liquor Calcis Saccharatus. It is a mixture of lime and sugar to which water is added and filtered after a few hours.

சுண்ணாம்புத் தெளிவு, தெளிந்த சுண்ணாம்புத் தண்ணீர். இது வயிற்றுப் புளிப்பைப்போக்கும். நமது நாட்டு வைத்தியர்கள் இதை சீதபேதி, அசீரணம், அசீரணபேதி, குடல் ரோகம், வயிற்றுப் புளிப்பு முதலிய ரோகங்களுக்குக் கொடுப்ப துண்டு. இதைப் பாலில் கலந்து வயிற்றுப்புண், கண்டமாலை, சயரோகம் முதலிய நோய் களுக்குப் பத்திய வுணவாகக் கொடுக்கக் குணமுண்டாகும். இத்துடன் கற்பூரம் தேங்கா யெண்ணெயும் கலந்து நன்றாயிடித்து கொப்புளம் சிரங்கு முதலிய சர்ம நோய்க்கு இரணம் ஆறுவதற்குத் தடவ வுதவும். இத்துடன் நல்லெண் ணெயும் சர்க்கரையும் கலந்து உறவாக்கி நாட்பட்ட வெள்ளைக்குக் கொடுப்ப துண்டு. இது மூத்திரக் கல்லைக் கரைக்கும். அன்றியும் தாது விஷத்தையும் திராவகத்தின் விஷத்தையும் போக்கும். இரணம் சரும நோய்களுக்கு மேலுக் குபயோகிக்கலாம். அன்றியும் சன்னேந்திரியம் எரிச்சல் முலைக்காம்பின் புண் இவைகளுக்குதவும் பெரும் பாட்டிற்கும் கழுவு நீராக உபயோகப்படும். கருவேலம் பிசினோடு சேர்த்துக் கொடுக்க சீதபேதி போம், கந்தை துணியில் நனைத்து மேலுக்கிட மேகவிரணம், இலிங்கப் புற்று போம். காது மூக்கினின்று வரும் இரத்த வொழுக்கை நிறுத்தும். இதில், ஓமம் சுத்தியாகும். தாய்ப்பாலில்லாக் குழந்தைகட்கு மற்றப் பால் செரிக்கும்படி இதைக் கொடுக்கலாம். lime water — Aqua calcis or liquor calcis. It is a useful antacid

Vaidyans of our country use this as a remedy of much value in dysentery, dyspepsia and diarrhoea connected there with acidity of the stomach or alimentary canal. Milk with a small proposition of lime water has been found of great service as an article of diet in ulceration of stomach and also in scrofula and pthisis. An emulsion of lime water and cocoanut oil with or without camphor is applied for scalds and burns. Mixed with gingelly oil and sugar it is prescribed in obstinate causes of gonorrhoea. Mixed with gum arabica it is prescribed for dysentery. Mixed with gum boge it is applied to painful gouty joints. It is also used as a caustic in dog bite. As a solvent of urinary calculi it is held in much repute . It acts as a chemical antidote in poisons by mineral and oxalic acid. It is applied for burning sensation felt in the genitals and nipple sore and used as a lotion in menorrhagia. It is used as lint in veneral sores — Chaucre — for arresting bleeding from nose and ears Ajowan — Ptycholis ajowan —is purified by soaking in this water and drying.

சுண்ணாம்பு நீற்றல் சுட்ட கற்சுண்ணாம்புக் கல்லின் மேல் நீர் ஊற்றித் தாளித்தல், to sprinkle water on the burnt limestone (quick lime) and reduce it to powder.

சுண்ணாம்புப் பதநீர், குடுவையில் சுண்ணாம்பு தடவி வடித்த பனஞ்சாறு or பதனி, sweet palmyra sap.

சுண்ணாம்புப் பற்று, சுண்ணாம்பு வண்டல், இஞ்சி ரசத்தின் அடியிற் காணும் வெண்ணிறமான வண்டல், a white sediment deposited at the bottom of fresh ginger juice. This is known as lime deposit.

சுண்ணாம்புவல்லி, காட்டுக்கொடி முந்திரிகை, jungle angoor or jungle grape vine Vitis latifolia.

சுண்ணி, ஆண்குறி, male genital — Virile membrium.

சுண்ணித்தல், நீற்றுதல், அதாவது சுண்ணமாகச் செய்தல், to reduce any metal into calcis; 2. புடமிட்டு சுண்ணமாகச் செய்தல், the process of heating or calcining a metal in air as contemplated in Tamil medicine so as to convert it into a calx. The calces are generally equivalent to what the modern chemist calls 'metallic oxides'.

சுண்ணு, ஆமணக்கு, castor seed; 2. புனுகு, civet.

சுதகம், சிறு நெரிஞ்சில், small caltrops. Tribulus terrestris.

சுதகவாதத்திகம், புளியாரை, sour sorrel.

சுதங்கம், தென்னை மரம், Cocoanut tree.

சுதத்துவம், தும்மை, toombay flower — Leucas genus.

சுதந்தசுரச ர்சம், கஞ்சாங் கோரை, white basic Ocimum album.

சுதம், see சுதகம், 2. மலத்துவாரம், anus; 3. பழைய சுண்ணாம்பு, old slaked lime.

சுதரிசா, சம்புநாவல், black berry the fruits are elongated Syzgium jambolanum.

சுதரிசனம், see சுதரிசா, 2. கண்ணாடி, mirror; 2. அழகு, beauty; 4. see இச்சி; 5. வலியான், a black bird; 6. ஓர் வகைக் கடற்பாம்பு, a kind of see snake — chloris — gracilis obscura.

சுதர்ச்சி, சதுரக்கள்ளி, Square spurge- Euphorbia antiquorum.

சுதர்த்தனம், குயில், Indian cuckoo.

சுதவரி, சதகுப்பி, Dill — Peucedamum graveolens.

சுதர்சரசம், கட்டுக் கொடி, cocculus villosus.

சுதனா, நறுங்குறிஞ்சி, see குறிஞ்சி.

சுதனாச்சு, மஞ்சிபத்திரி, not identified.

சுதாகரன், கருடன், Brahminikite; 2. சந்திரன், moon.

சுதாகிருது, கருடன், Brahminikite — Haliastar indus.

சுதாச்சி, see சுதர்ச்சி.

சுதாதாளி, கிச்சிலிக் கிழங்கு, orange root Curcuma — Zedoaria.

சுதாநிதிரசம், சுத்தி செய்த கெந்திப் பாதரசம், இத்துடன் சுவர்ண மாட்சிக பற்பம், அயபற்பம் சம எடை திரிபலை கஷாயத்தினால் அரைத்து இரும்புப் பாத்திரத்தில் மாத்திரை செய்து இரவில் கொடுத்தால் இரத்த பித்தம் நீங்கும், a pill containing calcined iron, calcined gold pyrites, mercury and sulphur and prepared as per the text. It is given for Raktha pitha rogam — Haemoptysis Haematemesis, malaene Haematurea, Heamophilla and other bleedings.

சுதாரு, கடம்பு, Cadamba tree — Barringtonia racemosa.

சுதி, மலவாயில், the anus; 2. பெண், female.

சுதித் தகடுருட்சாசியம், see செழுமலர்க் கொன்றை அல்லது கொன்றை.

சுதுகி, சதுரக்கள்ளி, see சுதர்ச்சி.

சுதுப்புனாங்காறல், ஓர் சுறால் மீன், a kind of bridal fish, Equula insidiarix, 2. மண்டைக் காறல் மீன், horse mackerel — Equula edentula.

சுதும்பு, ஓர் கடல் மீன், milk fish — Lactarius delicatulus.

சுதுரச்சி, see சுதர்ச்சி.

சுதேசமருந்து, நாட்டு மருந்து, indigenous medicine.

சுதேச வைத்தியம், நாட்டு வைத்தியம், native treatment, i.e. treatment according to the Medical science of this country.

சுதேச வைத்தியர், நாட்டு வைத்தியத்தைக் கையாள்வோர், One practising native medicine.

சுதேவநாகிதம், சாதிக்காய், nut meg.

சுதை, சுவை, taste; 2. பால், milk; 3. பூந்தேன் honey from flowers; gathered from flowers 4. சுண்ணாம்பு, lime; 5. மருந்து, medicine, 6. அமிர்தம், nectar; 7. வெண்மை, whiteness; தித்திப்பு, sweet; 8. பெண், female.

சுதையம், சுண்ணாம்புச் சத்து, Calcium.

சுதோற்பத்தி, பிள்ளை பெறுதல், giving birth to a child; 2. பிள்ளைப் பேறு, child birth.

சுத்த ஆர்த்தவம், பெண் தத்துவம், female harmone; 2. நாதம், ovum; 3. சுரோணிதம் கற்ப முண்டாவதற்கு காரணமாயுள்ள முயல் ரத்தம் போலவும், கொம்பரக்கு கஷாயம் போலவும் துணியில் கறை ஒட்டாததாகவுமுள்ள ஆர்த்தவம், — Menstrual blood which does not stain the cloth and looks as red as shall lac decoction.

சுத்தகங்கை, பனி குடத்து நீர், fluid of the amniotic sac - Liquor amni; 2. ஆறுவகை செயநீர், solvent water extracted from six salts; 3. பூநீறு, efflorescent salt of the fuller's soil; 4. சுக்கிலம், semen; 5. சுரோணிதம், ovarian fluid.

சுத்தகம், திமிசு, East Indian rino tree — Pterocarpus marsupium.

சுத்தகேசி, தண்ணீர் மிட்டான் கிழங்கு, water root — Asparagus racemosus.

சுத்தகேவலம், மூன்று அவஸ்தைகளில் ஒன்று one of the three degrees of consciousness.

சுத்தகைதவம், பெருங்காயநாறி, a herbaceous plant called Persian asafoetida. Ferula persica; It is so named from its odour which resembles that of asafoetida.

சுத்தக்கட்டி, கலப்பற்ற பொன், வெள்ளி கட்டிகள் — ingots of pure gold and silver.

சுத்தக்கரி, இருந்தை, carbon.

சுத்தக்கழலை, சாதாரணமாக உண்டாகும் கழலை, தீவிரமாக பரவாது, innocent tumour not malignant.

சுத்தக் குளியல், அதிகாலையில் குளிர்ந்த சுத்த நீரில் தலைமுழுகல், Both taken at early hours with cold water.

சுத்தசலம், சுத்தநீர், clean or pure water; 2. தெளிந்த நீர், clear water crystal water; 3. சிறுநீர் அல்லது மூத்திரம், urine; 4. திராவகம், acid; 5. பனிநீர், dew water; 6. நிறமும் சுவையும் மற்றதும், வண்டல் படியாததுமான நீர், அதாவது வாலைநீர், water without colour taste odour or impurities — Distilled water; 7. See சுத்தகங்கை; 8. கடற்பாசிநீர், sea moss water considered as pure.

சுத்தசத்துவடிவம், மாயா விருத்தி.

சுத்தசாமிகம், திருவாத்தி, holy mountain ebony — Bauhinia tomentosa.

சுத்தசித்தம், பரிசுத்தமானது, pure mind.

சுத்தசிவம், see சுத்தகங்கை.

சுத்தசுக்கிலம், சிலேட்டு மாதிக்கத் தினால் கருவிழிமேல் வலம்புரிச் சங்குபோல் வெண்ணிறமான படலத்தை யெழுப்புமோர் வகைக் கண்ணோய், an eye disease where in a white coating developes on the cornea.

சுத்தசுக்கிலரோகம், கருவிழிமேல் நோவில்லாமல் சங்கைப் போல் வெண்ணிறத்தை யுண்டாக்கும், an eye disease of the black portion characterised by painless white spot on the black portion.

சுத்தசுரம், பிறிதொரு கோளாறொன்றுமில்லாது தனிப்பட்ட முறையில் வரும் சுரம், simple fever — primary fever — not secondary to any other disease and without any complications.

சுத்த சூனியம், முழுப் பாழ், complete vaccum.

சுத்த சூனியவாதம், எல்லாம் கடைசியாக ஒன்றுமில்லை யென்ற வாதம், the doctrine of all existing things coming to nothingness — Nihilism.

சுத்த செம்பு, கலப்பில்லாத தாமிரம், pure copper.

சுத்த சைதன்னியம், விளக்கமடைந்த அறிவு, pure spirit or intellect as distinguished from matter.

சுத்தசோபை பரிசுத்தமான, aspetic.

சுத்தஞானம், கன்மக்கலப்பில்லா மெய்யறிவு unadulterated spiritual knowledge.

சுசுத்தஞானி, பக்குவமடைந்த ஞானி, perfect wise man with spiritual knowledge.

சுத்த தத்துவம், மூன்று தத்துவங்களில் ஒன்று, one of the three tathuwas.

சுத்த தாமிரம், கலப்பில்லாத செம்பு, pure copper.

சுத்த தேகம், கருவிகரணாதிகள் இறந்து அறிவு அருள் வடிவாய் பார்வைக்குத் தேகம் தோற்றம் கைக்குப் புலப்படாது நிழல் சாயையும் கிடையாது, a body that cannot be felt and which gives no shadow.

சுத்ததேகி, வாதம், பித்தம் அல்லது சிலேட்டுமக் கூறுள்ளவுடம்பு, a person with one or the other of the three humours predominating in the body.

சுத்ததேன், தெளிய வைத்த தேன், clarified honey.

சுத்தநதி, தலை மூளையின் நீர், water of the brain.

சுத்தநரம்பு, புத்திக்குத் தெளிவையுண்டாக்கும் நரம்பு, the thing that causes clear intellect.

சுத்தநீர், see சுத்தநதி, 2. மூளையின் நிணநீர், serum of the brain; 3. நன்னீர், fresh water.

சுத்தபனிநீர், see சுத்த நீர், 2. பனிக்குடத்து நீர் amniotic fluid.

சுத்தபுடம், உண்ணலிற் களைந்தெடுத்தது, removal of injurious substances from the articles of fare or irgredients of food; 2. முழுவதும் எரிந்து நீராகும்படி போடும்புடம், with cow dung cakes — a process in calcination in which substances are reduced to metallic calx.

சுத்தப்பூர பதங்கம், இதனால் 21 வித மேகங்கள் போம், sublimate of sub chloride of mercury, a remedy for 21 Mega diseases.

சுத்த பைரவம், சுரத்திற்குக் கொடுக்கும் ஓர் ஆயுள் வேத மருந்து, an Ayurvedic medicine for fevers.

சுத்த போசனம், மாமிசமில்லாத வுணவு, (சைவ சாப்பாடு), vegetarian diet.

சுத்தப்பட்டினி, முழுதும்பட்டினி, complete starvation.

சுத்தமண், (உவர் மண்) இது உபரசச் சரக்கு, fuller's earth. It is one of the natural substances contemplated in Siddhar's science.

சுத்த மண்டூரம், இரும்பு சிட்டத்தை சுத்தம் செய்து தயாரிக்கும் புடமிட்ட செந்தூரம். இதனால் ஐவகை பாண்டு நோய்களும் ஆறுவகைச் சோபை நோய்களுந் தீரும். a medicine of red colour prepared out of ferrosoferric oxide which cures five kinds of anemia and six varieties of anasarca.

சுத்தமாக்கல், கோதில்லாமற் களைதல், to free from impurities — heterogenous matter of feculence to depurate.

சுத்தமாயை, மாயை, developed or absolute Maya. It is opposed to அசுத்த மாயை undeveloped Maya see சுத்த வித்தை.

சுத்தமேகம், மூத்திரமானது கோமயத்தைப் போல் மஞ்சளாகவும், குழம்பாகவும், சர்க்கரையின்றி ஒரு நாளைக்கு 4 புட்டி இறங்கும் ஓர் வகை நீரிழிவு நோய் மேற்கண்ட மூத்திரத்தைக் காய்ச்சித் திரியிட்டுக் கொளுத்த எரியும். a kind of diabetes marked by high coloured and thick urine and possage of a large amount of urine - nearly four bottles of urine a day — hot with no sugar. This urine is heated to a concentrated solution, and when a wick is immersed in this solution and ignited, it burns like a lamp.

சுத்தம், பால், milk, 2. சுசி, cleanliness, 3. மூன்று அவஸ்தைகளிலொன்று, one of the three i.e. the third and the highest state of seperate souls next to absorption; 4. புளிக்க வைத்த காடி, acid fermentation of any article; 5. சூனியம், nothingness — vacuum; 6. see சுத்தமாயை, 7. கலப்பில்லாதது, pure without any impurities or other substances.

சுத்தம் பண்ணல், see சுத்தி செய்தல்.

சுத்தரசம், சுத்தி செய்த ரசம், வாலை ரசம், mercury obtained by sublimation; 2. பத்துவகை ரசச் சத்துகளில் ஒன்று. இது சாரணைக் குதவும், கெவுன குளிகை யாகும், செந்தூரித்தால் வேதைக்குதவும், one of the ten kinds of quint essence of mercury of high potency used for animating mercurial pills for flying in the aerial regions and when calcined into a red oxide it will be useful in Alchemy.

சுத்தரசாயனம், இரசாயன முறை ஒன்றைப் பற்றியே சொல்லும் நூல், pure chemistry, a science treating only of chemistry.

சுத்தரத்தம், நுரையீரலில் தங்கிச் சுத்தமடைந்து மறுபடியும் இருதயத்திற்கு வந்து சேரும் சிவப்பு இரத்தம், red arterial blood restored to heart after purification in the lungs.

சுத்தரத்த விரணம், கொப்புள ரூபமாய் நடுவில் உயர்ந்து வலியின்றி மிருதுவாய் வழுவழுத்து, சிவப்பாயும் சில சமயம் கருப்பாயு மிருக்கும் ஓர் விரணம். இதுவே ரத்தக் கட்டி, a soft and painless ulcer in the form of boil with a red or black appearance and an elevation in the centre.

சுத்தலங்கணம், முழுப்பட்டினி, Complete fasting; 2. வெறும் வயிறு, empty stomach.

சுத்தலவணம், வாகட முறைப்படி யாதொரு களங்கமுமின்றிக் காய்ச்சி யெடுத்தவுப்பு, salt boiled and purified according to the rules of medical science.

சுத்தவல்லாதி எண்ணெய், சேங் கொட்டையை முதன்மையாகக் கொண்டு மற்றக் கடைச் சரக்குகளுடன் சேர்த்து அத்துடன் எள்ளு ஏரண்டம், இலுப்பை வேம்பு, புன்கு இவைகளின் எண்ணெய்களும், பசும்பாலும் எலுமிச்சம்பழச் சாறும் கலந்து தயாரிக்கும் ஓர் மருந் தெண்ணெய், இது வாயு ரோகம், பீனசம், சூலை, சொறி சிரங்கு முதலியவைகளுக்குக் கொடுக்கலாம், a medicated oil prepared with marking nut as the chief ingredient as per the text. It is given for skin diseases, and diseases of wind humour.

சுத்தவாசிகம், தக்காளி, அதாவது மஞ்சள் நிற அலரிப்பூ, yellow coloured oleander.

சுத்தவாதக் கட்டி, பிரசவித்து உடம்பு முழுவதும் பச்சைப் புண்போல் இருக்கும் பெண்களுடன் எந்நேரமும் உடம்பு நலியும்படி புணரச் செய்வதனாலும், உடம்பின் 14 வேகத்தை அடக்குவதனாலும், கருப்ப காலத்தில் அவபத்தியக் கேட்டினாலும், கருப்பையில் வாயுவானது அதிகரித்து இடுப்பில் உந்தி முதல் யோனி வரை பொறுக்க முடியாத நோவை யுண்டாக்கும் ஓர் வகைக் கட்டி. இது பக்கங்களில் குத்தலையும், நோவையும் உண்டாக்கி, சமுத்திரத் தவளையைப் போல் கருப்ப முகத்தை அடைத்துக் கொள்வதுடன் மாதாந்த ருது காலத்தில் அதிகரித்த வாயுவின் வேகத்தால் அல்குல் வழியாக ஊன் தண்ணீரைப் போல், சில சமயம் கருத்தும், மற்றக் காலங்களில், உதிரமாகவும் ஒழுகும். இயற்கையாகவே இக்கட்டி கரைந்து விழுந்தன்மை யற்றதால் இதைச் சிலர் இரத்த குன்மக் கட்டி யெனத் தவறுதலாய்ச் சொல்வர். a kind of swelling generally mistaken for uterine tumour blocking the entrance to the mouth of the womb and there by causing obstruction to the free flow of menstruation. It is marked by an umbearable pain in the loins, sides and in the uterus, oozing of serum or dark blood from the vagina. It is said that the disease is caused (1) by constant and untimely intercourse with a woman recovering after delivery (2) suppression of the 14 natural cravings. (3) failure of regimen of diet when pregnant.

சுத்தவான், மனதில் யாதொரு களங்கமுமற்ற யோகி, a yogi free from all impurities of the mind.

சுத்தவித்தை, சிவ தத்துவ ஐந்தினுள் ஒன்றாகிய சுத்த வித்தியாதத்துவம், அதாவது எப்போதும் சுகத்தையே அளிக்கும் ஓர் மாயை, a form of Maya with prepondarance of spiritual knowledge above tendency to work.

சுத்த விரணம், ஆறி வருவதற்குண்டான குணத்தைக் காட்டும் ஓர் விரணம், இது பார்வைக்கு மிருதுவாயும் ஊன் தண்ணீர் தவிர மற்ற வேறு வித ஒழுக்கில்லாமலும், சிவந்தும், சொற சொறப்பில்லாது வழவழப்பாயும் வலியற்றும் இருக்கும். healing ulcer characterised by healthy granules and border.

சுத்தவுபவாசம், see சுத்தப்பட்டினி.

சுத்தவெள்ளை, கலப்பற்ற வெள்ளை, pure white; 2. சுண்ணாம்பு, lime.

சுத்தன், நின்மலன், one with soul in its third or highest stage next to obsorption; 2. முத்தி பெறும் நிலையிலுள்ள ஆன்மாவுடையவன், one where soul is ready for liberation from births. c.f. சிவன் முத்தன்; 3. 18 மேக நோய்களுள்ளொன்று, one of the eighteen Mega diseases.

சுத்தாத்துவைதம், சிவாத்துமா பரமாத்மாவோடு இரண்டறக் கலப்பதனால் ஏற்படும் ஆனந்த நிலை, supreme bliss from inseparable union or the merging of individual soul with the universal soul.

சுத்தாநந்தம், ஆனந்தரூப சத்தி.

சுத்தாவத்தை, கன்மம் நீங்கிப் பிறவியற்று ஆன்மா சுத்தமாய் இருக்கும் நிலை, purity of the soul after liberation from births due to being rid of karma.

சுத்தான்னம், பழைய அரிசியைத் தவிடு நொய் போகத் தீட்டி அரிசியாக ஆய்ந்து இளவெந்நீரிற் கழுவி, துணியிற் கொட்டி ஆற வைத்து எடுத்து அரிசிக்கு 3 பங்கு சலம் விட்டு கொதிக்க வைத்து முக்காற் பங்கு வெந்தவுடன் துழாவி வடித்து மறுபடியும் நெருப்பில் முழுதும் பக்குவமாகும் சமயத்தில் இறக்கிக் கொள்வதாம். இதனாற் முத்தோஷ நோய்களும் குடலைப் பற்றிய நோய்களும் குணப்படும், Cooked rice. It must be prepared as follows old rice must first be freed from broken rice, stones, paddy, husk etc. It must be washed and cleaned in luke warm water and spread on a clean cloth for some time. In a suitable earthern pot water three times the volume of the rice must be boiled. The aerated rice must be added to this boiling water. When it is three fourth

cooked, it must be olirred, and the vessel must be taken out of the fire and the rice (cooked) must be strained. Then again the vessel with the cooked rice must be put on fire which is not inflames but hot cinders. In a few minutes, the rice gets fully cooked it is brought down.

சுத்தி, அரைப்பலம், half a pallam — one and half tolas; 2. கும்பிடு கிளிஞ்சில், white bivalve shell shining like silver; 3. சங்கு, conch; 4. மாங்கிஷப் பொரியல், curries prepared out of meat as in சத்தி பூஜை, a worship in which meat preparations are offered to go dess — Sakthi (universal energy) 5. கரந்தை, iron weed; 6. ஈருள்ளி, onion; 7. நெய், எண்ணெய் சொட்டு சொட்டாக விழும்படி அமைத்த சிறு கரண்டி, a small spoon for dripping ghee or oil etc. over any thing; 8. தட்டுங் கருவி, hummer, 9. பரிசுத்தம், purification.

சுத்தி கரம், சுத்தியாயிருத்தல், state of being pure or clean.

சுத்திகெந்தி, சிவப்புக் கெந்தகம், red sulphur.

சுத்திகை, இப்பி, bivalvular shell fish; 2. சிப்பி, pearl oyster; 3. அகல், a shallow dish.

சுத்திக்கிரம அவுடதம், உடம்பி லுள்ள அழுக்கை யகற்றும் வாந்தி பேதிகளை உண்டாக்கும் மருந்துகள், emetics and purgatives that tend to remove the impurities from the system.

சுத்திக்கிரமம், பதார்த்தங்களை வைத்திய நூற்படி சுத்தி செய்யும் முறை, process of purification of drugs.

சுத்திசலம், அழுக்கற்ற நீர், pure water; 2. சுத்தி செய்த நீர், filtered water; 3. வாலை நீர்; distilled water; 4. மழை சலம், rain water.

சுத்தி செய்தல், இரச கெந்தக பாஷாண வகைகள்

பூமியிலிருந்து வெட்டி எடுக்கும்போது மண்ணுடன் கலந்தும் மற்ற தாதுக்களுடன் சேர்ந்து மிருப்பதால் அவைகளை வாகட முறைப்படி அழுக்ககற்றல், getting rid of impurities as from ones of minerals and poisons which are generally found mixed with other substances. 2. வயிற்றைச் சுத்தி செய்தல், discharging of fecal matters from the bowel — defecation; 3. பொன் முதலிய உலோகங்களைப் புடமிடல், purifying or refining as of gold etc. by subjecting it to fire; 4. ஊதுதல், blowing of metals like silver — gold etc. to purify them; 5. வடிகட்டல், filtering or straining.

சுத்தித்தல், see *சுத்தி செய்தல்*.

சுத்தி பண்ணல், see *சுத்தி செய்தல்*.

சுத்தி பிண்டம், பெண்கள் கருப்பிணியாயிருக்குங்காலத்தில் மாத ருது தடைபடாமல் 10 மாதமும் வெளிப்பட்டுப் பிறகு பிறந்த குழந்தை. தாய்க்கு ஏற்படும் மாதவிடாயினால் யாதொரு கெடுதியுமேற்படாது கர்ப்பத்தில் இருக்கும் பிண்டம், the foetus in the womb or the child that is born to a woman who was having regular menses, during her period of pregnancy.

சுத்திமுறை, சித்த வைத்தியத்தில் கூறியபடி மருந்து சரக்குக்குத் தக்கவாறு நூலில் குறிப்பிட்ட படி செய்யும் கிரமம்; இது அடியிற்கண்டபடி பலவிதமாக ஏற்பட்டிருக்கும் அவையாவன:

1. உதாரணமாக இரசத்தை மற்ற சரக்குகளோடு சேர்த்துக் கல்வத்திட்டு அரைத்தல்.
2. கெந்தகமென்றால் அதை உருக்கி வெள்ளாட்டுப்பால் முதலிய சரக்குகளில் காய்ச்சிச் சாய்த்தல்.
3. இலிங்கத்தை முலைப் பாலில் கணக்குப்படி ஊறவைத்தல்.

4. மனோசிலை; சீலை கட்டி அவித்தல், நிமிளை பொன்னி மிளையும் இப்படியே.
5. தாமிரத்தைத் தகடு தட்டி மருந்து பூசி உலைமுகத்தில் உருக்குதல்.
6. இரும்பை பொடியாக ராவிப் பழச்சாற்றில் ஊறப் போட்டுப் பிறகு அவித்தல்.
7. பொன் வெள்ளி புடத்தில் சுத்தி: இந்துப்பை வறுக்கச் சுத்தி. இப்படி பல விதமாக ஏற்பட்ட சுத்தி முறை, all drugs must be purified as told in the text before converting them into medicine; the process of purification of drugs is variable according to the drug to be purified and medicine that is to be prepared, a few examples are given above.

சுத்திரசுவாசம், *காசம்*, asthma.

சுத்திரபலகறை, *சமுத்திரத்தில்* உண்டான ஒருவித சோழி, a kind of gowri grown in the ocean.

சுத்திலப்பரணி, see *ஏழிலைப் புன்னை*.

சுத்திலாட்டம், நாணல், reed.

சுத்திவேண்டா மருந்து, பாம்பு கடி விஷத்திற்காகத் தயாரிக்கும் மருந்து, இதற்குச் சுத்திமுறை அநுசரிக்க வேண்டியதில்லை. The drugs given for snake bite do not require purification.

சுத்தி கரணம், *சுத்தி* **பண்ணுதல்**, see *சுத்தி செய்தல்*.

சுத்துரம்,

சுத்துரு, கண்டங்காலி, yellow berriep night shade. Solanum jacquini.

சுத்துருகி, see *சத்துரு*.

சுத்தோதகம், நன்னீர், pure water; 2. *சுத்த நீர்*, clear crystal water; 3. நீராகாரம், cold rice water; 4. *மழைத் தண்ணீர்*, rain water; 5. வாலை நீர், distilled water.

சுத்தோபவாசம், முழுப் பட்டினி, Complete starvation.

சுநந்தனாகிரகம், குழந்தை பிறந்த 2வது நாள் மாதம், வருஷம், சிசுவை அல்லது தாயை பிடிக்கும் ஓர் கிரகம்; இதனால் குழந்தைக்குப் பல் கடித்தல், வயிற்றுப்பல், கண் மூடல், எப்போதும் அழுகை ஆகிய இக்குணங்கள் உண்டாம், c.f. நந்தனாகிரகம், a disease that affects the child or the mother during the 2nd day, or month, or year characterised by bloating of abdomen, ceasreless crying, biting of teeth etc. It is said to be caused by some planet.

சுநாரம், see அடைக்கலங் குருவி, 2. நாய்ப்பால், dog's milk; 3. பாம்பின் முட்டை, snake's egg.

சுநாறி, see சுநாறிப்பட்டை.

சுநாறிப்பட்டை, காய்ச்சற் பட்டை, a pittosporum tetraspermum.

சுநி, பெண்ணாய், female dog bitch.

சுநிஷ்ணன் see ஆரைக்கீரை.

சுநீரம், சிவப்புக்கல், sardine; 2. நீலக்கல் blue gem, Tacinth.

சுநுகி, சதுரக்கள்ளி, square spurge.

சுந்தர அக்கினிகுமார ரசம், அசீரணம் மாந்தம் முதலிய நோய்களுக்குக் கொடுக்கும் ஓர் ஆயுள்வேத மருந்து, An Ayurvedic medicine given for indigestion etc.

சுந்தரகேசி, தண்ணீர் விட்டான் கிழங்கு, water root.

சுந்தரத்தாது, துத்தபாஷாணம், a kind of arsenic compound with white vitriol as an ingredient. A sparagus racemosus.

சுந்தரநங்கை, அரசமரம், peepul tree — Ficus religiosa.

சுந்தரப்பொடி, வாசனைப்பொடி, aromatic powder; 2. சிந்தூரப்பொடி, Calcined red oxide.

சுந்தரப் பொன்மலை, ஏம (கூட) மலை, mountain containing gold ore.

சுந்தர மண், வாழை, plantain tree.

சுந்தரமாது, வெற்றிலை, betel leaf.

சுந்தரமாமணி, சூடாலைக்கல், a minereal stone.

சுந்தரம், கண்டங்கத்திரி, see சுத்துரு; 2. சூதபாஷாணம், an arsenical compound perhaps composing of mercury; 3. சிந்தூரம், red paint.

சுந்தரரேகை, கையில் காணும் ஓர் ரேகை; a line an the palm of the hand.

சுந்தரவித்து, ஓர் யுனானிச் சரக்கு. இதற்கு அசிங் என்று பெயர். இது கசகசாவைப் போல் வெண்மையான ஓர் விதை, an Unani drug known as flasing seeds. It is white and very much resembles poppy seeds.

சுந்தரானந்தர், இவர் சதுரகிரி மலையில் பஞ்ச தரு நிழலிலும் குகையிலும் யூகிமுனி, கொங்கணவர் இவர்களுடன் வசித்து வந்தவர். இம்மலையின் விசேஷத்தால் அகத்திய முனிவரும் சுந்தரானந்தரிடம் வந்து ஒரு லிங்கத்தைத் தாபித்து, பூசித்து வந்தார். சில நாள் சென்ற பிறகு சுந்தரானந்தர் அகஸ்தியரைக் கண்டு அவர் செய்த லிங்கபூசையைத்தான் செய்து வர கிருபை புரிய வேண்டுமெனக் கேட்க, அதற்கு அவர் சம்மதித்து அதன் இரகசியங்களைச் சுந்தரானந் தருக்கு உபதேசம் செய்து விட்டு சதுரகிரிப் பக்கத்திலிருந்து கும்பமலைக்குச் சென்றார். அகஸ்தியர் உபதேசித்தபடி அந்த லிங்க பூசையைச் செய்து வந்தனர். அதனால் அந்த லிங்க மூர்த்திக்குச் சுந்தரலிங்கமெனப் பெயர் வழங்கலாயிற்று. சட்ட முனிவரும் இவர் கூடவிருந்து பூசித்து வந்தவர், அந்த லிங்கத்திற்கு மகாலிங்கம் என்று பெயராயிற்று. அவ்விடத்து இடையனான பச்சைமாலை தடுத்தாட் கொள்ளும் பொருட்டு மேற்படி மகாலிங்க மூர்த்தி சுந்தரானந்தரை நோக்கி அனேக

தவத்தோர்கள் தன்னையறிந்து தானே பரமம் என்று தன்னையே பூசித்து ஆத்மஞானத்தை அடைகிறார்களே நீர் ஏன் அப்படிச் செய்யக் கூடாது என, அதற்கவர் அகஸ்தியர் உபதேசத்தின் படி ஆன்மா விடத்தே சிவபெருமான் பிரகாசிப்பார் எனப்பதி லளித்தார். இவர் தமிழ் நாட்டு சாதியைச் சேர்ந்தவர். போகரிடத்திலும், சட்ட முனி இடத்திலும் சில நூல் முறைகளை இவர் கேட்டு மிருக்கிறார். சிவநேசத்தில் சிறந்து இவரது பெருமை அளவிடற் பாலதன்று. இவர் செய்த நூல்களாவன. வைத்தியத்திரட்டு, 1500 வைத்திய காவியம், 1000 வைத்திய சூஸ்திரம் 500, வகாரம் 200. ருது நூல் 110 அதித சூத்திரம் 104 வாத சூத்திரம் 100. விஷநிவாரணி 100. வாக்கிய சூஸ்திரம் 64. கேசரி 55 சுத்த ஞானம் 51, தீட்சா விதி 50, தண்டகம் 47, பூசாவிதி 37, அதிசயகாரணம் 36 சிவயோக ஞானம் 32, முப்பு 25, சிவக்கியான போதம் 16. இதுவு மன்றி இவர் செய்த மற்றும் பல நூல்களும் உள்ளனவெனக் கேள்வி. சோதிட நூல்களும் இவர் செய்திருப்பதாகத் தெரிகிறது.

இவர் காயாதிகற்பங் கொண்டு வெகு காலம் இருந்த சித்தர், இவர் சிஷவர்க்கத் தாருடன் சேர்ந்து ஐராவதி மலையருகே சில காலம் இருந்து ஆற்றோரத்தின் பக்கம் சமாதி தேடி அதில் பத்து வருடமிருந்து வெளிவந்து சிஷனாகிய புத்திரானந்தருக்கு உபதேசம் செய்து வந்தவர் சிக்கிந்திரா மலையினுச்சியில் வசித்த நவகண்ட ரிஷியின் பேரன் ஓர் சிறந்த ஞானி இவர் பூமியில் வெகுசித்துகள் ஆடியவர். தேசமெல்லாம் சுற்றி வந்த சொரூப சித்தன் உலகத்தில் பெருமையாக வாழ்ந்த சித்தர் சீனபதி சென்று காலாங்கி நாதரைத் தரிசித்து தமது மகிமையை அவருக்குக் காட்டி மேக மண்டலத்தில் வாசியோகம் பூண்டு ஆகாயத்திற் சென்று மேகத்தோடு இணக்கமாகி

மேகம் செல்லும் மார்க்க மெல்லாம் தாம் சென்றும் காட்டினார். பிறகு காலாங்கியிடம் உபதேசம் பெற்றுத் தம்பதிக்கு ஏகினார்.

Sundaranthar lived along with Ughi and Kongaravar in the mountain called Sathuragiri under the shade of Panchathara. On account of the greatness of the mountain Agasthiar also came to live there. He established a Phallas (lingam) and performed rituals daily one day sundaranthar approched him and requeted permission to worship the Phallus. Then Agasthiar not only granted his wish but taught him the secrets of performing the rituals and left the place to live at a neighbouring mountain called Kumbamalai. Sundaranthar performed the daily rituals and the Phallus came to be known as Sundaralingam Sattamuni also joined him in the worship and the Phallus came to be known as Mahalingam.

One day God appeared and asked him why he did not like most, other hermits workship the spirit in himself and obtain the spritual wisdom he replied as Agasthiar had tought him that. Siva would manifest in him.

He is a Tamilian and disciple of Bogar and Sattamuni. To his credit there are several works in Medicine, Alchemy, Yoga and Philosophy.

There seemed to have lived another Sundaranthar the grand son of Navakanda rishi who lived on the top of Secindra mountain. He took Karpam and lived for many years. He lived with his disciples on the bank of Iravathi river on the Iravathi mountain. There after being in Samathi for 10 year, he came out and tought his disciple Puthira anthar. He was a man of wisdom and possessed super natural powers. He travelled in the air and visited many places. He was a great Siddar who lived in high estimation of

others. In China he met kalanginather and exhibited his prowers. Admiring him, Kalanginather gave him further spiritual inspiration Sundaranthar moved among the clouds, and established one can live there.

சுந்தரி, மூஞ்சுறு, musk rat; 2. சிறு செருப்படை, இது அறுத்த வயலில் முளைத்திருப்பதைக் காணலாம், a low spreading plant found grown in rice fields immediately after hervest — Glinus latoides; 3. பிண்டம், fetus; 4. பெண் woman; 5. சொன் முந்திரி மரம், looking glass tree Haritiera littoralis; 6. அழகுடையவள், beautiful woman.

சுந்தரிசுட்டது, இந்துப்பு, rock salt.

சுந்தரிபலா, சிறுவிடுகொள். இது நீரைக் கட்டும், an unknown plant capable of freezing water.

சுந்திரன், கிச்சிலிக் கிழங்கு, round white zedoary — Curcuma zedoria.

சுந்நத்து, விருத்த சேதனம், Circumcison.

சுந்தை, விந்து, semen.

சுபபுட்பம், கிராம்பு, clove.

சுபகம், see சுபபுட்பம்.

சுபகரிகம், பவளம், coral.

சுபகலவம், சீத்தா, Custard apple — Aona squamosa.

சுபகாரசம், கொண்ணை, (கொன்றை) cassia tree.

சுபகேசாதி, இருள்விடு செடி, which see.

சுபக்கிரகம், நல்ல கிரகம் புதன் வியாழன், வெள்ளியாம். good planets — Mercury, jubiter, Venus.

சுபங்கே, வறட்சுண்டி, a species of sensitive plant — Mimosa tripuetra.

சுபசன்னி, துணியை, துண்டு துண்டாகக் கிழிப்பதும், எதிர்ப்பட்ட வர்களைத் துப்புவதும் மூத்திர மலத்தைப் புசிப்பதுமாகிய குணங்களை யுண்டாக்கு மோர் வகை சன்னி,

a kind of delirium in which the patient is proned to mischievous activities such as spitting a persons tearing of clothes into pieces, taking internally excretions, urine and facces.

சுபச்சம், சுத்தமுள்ளவன், man of purity; 2. சௌக்கியமுள்ளவன், man of health.

சுபஞ்சு, கடற்பாசி, sea moss, ceylon moss; 2. கடற்காளான், sea sponge.

சுபதம், அரசமரம், peepul tree — Ficus religiosa.

சுபதினம், நல்ல நாள், auspicious day.

சுபத்தி, பவளப்புற்று பாஷாணம், a kind of arsenic.

சுபத்திரம், வெள்வேல், white acacia. Acacia ferrugina; 2. காட்டாத்தி, Bauhnia purpurea; 3. see சரபாரி கந்தச் சுபத்திரம்.

சுபத்திரை, காராம்பசு கறுப்புப் பசு, black cow.

சுபமிருத்து, நல்ல சாவு, happy death; 2. துன்பம் அல்லது மரண வேதனை யில்லாமலே சாதல், dying without suffering or pangs of death.

சுபம், காற்று, wind; 2. வெண்மை, whiteness; 3. மங்கலம், sacredness.

சுபரணி, see ஏழிலைப் புன்னை.

சுபரி, பசு, cow.

சுபலி, கள் fermented liquor.

சுபலோகம், சுத்தி செய்த உலோகம், purified or refined metal.

சுபவாதனை, ஞானானுபவம், spiritual enjoyment. 2. ஆத்துமானந்தம், blissful experience of soul.

சுபவிதாசம், பரசீகரம், அதாவது வயிற்றில் கருத்தரிக்கும்போதே மற்றொரு கருதரித்தல் அதாவது இரட்டைப் பிள்ளை யுண்டாயிருத்தல், the fecundation of a woman already pregnant, i.e

the fertilisation in the same uterus of two ova formed at different menstrual periods — Super foetation.

சுபன்னன், கருடன் brahmin kite; 2. சேவல், cock fowl.

சுபாங்கி, அழகுள்ள அங்கமுடையவள், woman endowed with beautiful organs.

சுபாங்கை, அழகுள்ளவள், beautiful woman.

சுபாசுபச குணங்கள், வைத்தியன் நோயாளியிடம் போகும்போது, நேரும் கெட்ட, நல்ல சகுணங்கள், கெட்டதாயிருந்தால் போகாமல் திரும்புவதே நலம். நற்சகுணங்கள் கண்டால் நோய் குணப்படு மென்பதற்கு குறி, முதலாவது கெட்ட குணங்கள் அவையாவன:

1. நாற்றமுள்ள குப்பை வண்டி, மாதவிடாய்ப் பெண், மலங்கழித்தல், இறைச்சி, மீன், கருவாட்டுக் கூடை, சேற்றுப்புழுதி எருவ டிக்கும் வண்டி முதலியன குறுக்கிடல்.

2. உப்பு பாசிப்பயிறு, எள்ளு முதலிய கருப்பு தானிய மூட்டை அல்லது அவைகள் அடங்கிய வண்டி.

3. தைலம், எண்ணெய்க் குடம், நெய், வலை உரி நெருப்பு முதலியவை களைப் பார்த்தாலும்

4. சண்டை, கூச்சல், அழுகை, திட்டல், தும்மல் முதலியவையாலும்

5. சண்டாளன், சந்நியாசி, சிப்பாயி, கைம்பெண், ஒற்றைப் பிராமணன், அம்பட்டன் இவர்களை எதிர்ப்பட்டாலும்,

6. பூனை, குரங்கு, காக்கை, ஆந்தை கத்தல் நரி ஊளை யிடுதல், நாய்ச் சண்டை, கலகம் அபாயம் முதலிய வைகள்.

7. குதிரைச் சவாரி, நோயாளிப் படுக்கை சில செந்துகள் வலமிடப் போதல், ஆண் யானை, ஆண் கோவேறு கழுதை, கருப்பு நாய் இவ்வகைகள் எதிரிடல்.

அபச குனம் அதிக விரிவாயினும் வைத்திய விஷயத் திற்குத் தகுந்தவைகளை மாத்திரம் இவ்விடம் சொல்லப்பட்டது. நல்ல சகுனங்கள், புருஷர்கள் இடமிருந்து இடம் போதல், பிணம் காணல், கல்யாண வைபவங்கள், கள்ளுக்குடம், கன்னிகை நரிவலமிடல், மேள சத்தம், கருட தரிசனம், கழுதைக் குரல், பசு, குடை, உத்தம யோகி இவைகள் எதிர்ப்படல்.

Good and bad omens that should be observed when then the physician starts to go and see the patient. If bad omen occurs, he must not visit the patient. The bad omens are:

1. A woman in menses, any body carrying flesh, fish, dry fish, filth or mire cart carring rubbish or filth or manure coming in the opposite direction.

2. Cart carrying salt to sesame or green gram coming in the opposite direction.

3. Vessel containing oil or medicinal oil, ghee, fire appear in front.

4. Fighting, quarrel, shouting crying, sneezing, accusation if any of them is heard.

5. Hermit, sepoy, widow single brahmin, Criminal barbar, if any of them come in the opposite direction.

6. Hearing Cooling of owls, crying of fox, cat, monkey, crow fighting of dogs.

7. Man of horse back, male elephant, male donkey, black dog, sick bed coming in the opposite direction, cats, fowls

etc. crossing the path from right to left.

Good omens are: 1. Males or fox crossing the path from left to right, 2. Females crosing from right to left, 3. seeing a dead body, or the marriage procession or brahmin kite; 4. Vessel containg toddy, cow maiden coming in the opossite direction. 5. Hearing the sound of drum or braying of the ass.

சுபாதி, *நரம்பிசிவு*, spasm; 2. *ரத்த நாளத்தின் குழாயின் விரிவு*, dilation of as blood vessel at a certain stage when it is considered as a dangerous ailment.

சுபாதிட்டானம், see *சுவாதிட்டானம்*.

சுபாலிகை, *அருப்பு*, oven.

சுபாவகாசத்தி, *பார்ப்பை மரம், அல்லது வன்னி மரம்*, Suma tree — Prosopis spicigera.

சுபாவகுணம், *இயற்கைக் குணம்* natrual disposition.

சுபாவசம்பந்தம், *இயற்கையிலே ஒன்றுக்கும் மற்றொரு வஸ்துவுக்கும் ஏற்ற சம்பந்தம்* (in chemistry) natural offinity imperturbed mind engrossed in one's true spiritual dispensation of Nature.

சுபாவ சித்தம்,

சுபாவசித்தி,

சுபாவநடை, *இருதயம், நாடி, மூச்சு முதலியவைகளின் கதி அல்லது போக்கு*, Natural movement of organs like heart, lungs etc, 2. *ஒருவனது இயற்கையாகவேயுள்ள நடை* usual mode of walking.

சுபாவநோய், *உடம்பில் இயற்கையாகவே யமைந்த நோய்*, a morbid state of spontaneous origin in the system — Idiopathy.

சுபாவமாய்ப் போதல், *இயற்கையாய் விடல்*, becoming accustomed or habituated.

சுபாவமுத்தி, *பிறப்பினின்று ஈடேறல்*, perfect liberation from birth.

சுபாவம், *இயற்கை*, Nature.

சுபாவவாதி, *மஞ்சளும் சுண்ணாம்பும் சேர்ந்தால் எப்படி சிவப்பு உண்டாகிறதோ, அது போல் சுக்கிலம் சுரோணிதம் சேர்ந்த விடத்தில் அவயவங்கள் உண்டாகின்றன. ஆகவே, சுகத்காரணத்திற்கு வேறே தெய்வமில்லையென்று வாதுரைப் போன்*, Naturalist who does not believe in God.

சுபாவீகம், *1. இயற்கைக் குணம்*, in herent quality, natural disposition; 2. *இயற்கைத் தன்மை*, natural state.

சுபவீதாசம், *பரசிகதம்*, super foetation,

சுபிரோதி, *வஞ்சி*, common rattan of South India calamus rotang.

சுபிரோதிகம், see *சுபிரோதி*.

சுபிலம், *வெள்ளி*, silver.

சுபுகம், *மோவாய்*, chin.

சுபுட்பம், *கிராம்பு*, clove; 2. *பவளம்*, coral tree; *3. பவள மல்லிகை*, night jasmine, Nyctanthes — arbortristis.

சுபுடனம், *உடம்புறுப்பின் மூலவஸ்து*, the rudimentary substance from which cells, tissues and organs are formed embryonic tissue Blastema.

சுபை, *மூங்கில்*, bamboo — Bambusa.

சுபோதம், *மெஞ்ஞானம்*, true wisdom; 2. *சுயஞானம்*, self or natural wisdom.

சுப்தசீவா, *நாக்கு மருத்துப் போதல்*, be numbed tongue; 2. *நாக்கு செயலற்றுப் போதல்*, Paralysed tongue.

சுப்தபாதம், *பாதம் செயலற்றுப் போதல்*, paralysed foot.

சுப்தம், உறங்குதல், sleeping dozing; 2. ஆட்டல், shaking.

சுப்தவாதம், ஓர் வகை வாத நோய், a kind of rheumatic diseases.

சுப்திசாரம், சமுத்திரத்திலுண்டான சுத்திர பலகறையின் உப்பு, salt of a kind of gowri grown in the ocean.

சுப்தி பிண்டம், see சுத்தி பிண்டம்.

சுப்பல்,

சுப்பி, மருந்தெரிக்கும் கள்ளி, twigs for heating or burning medicine.

சுப்பிகம், மாவிலிங்கு, lingam tree crataeva religiosa.

சுப்பிடதகம், கூகை நீறு, the flour of curcuma angustifolia.

சுப்பியம், வெள்ளிலோத்திரப்பட்டை, lodra bark; 2. விளாம்பட்டை, wood apple bark; 3. பாம்பு கொல்லி, snake killer; Ruta graveolens; 4. மாவிலங்கப்பட்டை, Bark of lingam tree.

சுப்பிரகம், வெள்ளி, silver.

சுப்பிரசாரம், முதியார் கூந்தல், sita's thread convoloulus tridentatus.

சுப்பிரசுதை, காட்டெருமைப்பால், திருக்கள்ளிப்பால், milky juice of Euphorbia tirucalli.

சுப்பிரதட்டம், அதிமதுரம், liquorice root.

சுப்பிரத் திட்டம், அத்திமரம், fig tree — Ficus indicus.

சுப்பிரதீகம், நல்ல அவயவங்கள் உடையது. being endowed with good organs; 2. கூர்மை அறிவு, keen intellect; 3. மிக்க ஒளி, great lustre.

சுப்பிரமணி, வச்சிரம், glue மரவைரம்.

சுப்ரமணிய மூலம், முருகரை உபாசிக்கும் மந்திரம், appropriate mantrains from workship of God Murugan; 2. மிளகு வேர், pepper root.

சுப்ரமணியம், மிளகு, black pepper.

சுப்பரமதுவா, கூகை நீறு, malabar root flour of curcuma root.

சுப்பிரமேகம், ஓர் வகை மேக நோய், இதில் மூத்திரம் கோமயம் போலிறங்கும், பால் நாற்றம் அடிக்கும், a variety of venerial disease where in the urine appears like cow's urine and smells like milk.

சுப்பிரம், 1. வெண்மை, whiteness; 2. சந்தனம், sandal wood; 3. வெள்ளி, silver; 4. கருடப்பச்சியின் குணம்,the quality of a medicinal green stone — beryl; 5. மிகுந்த ஒளி, great lustre; 6. தண்ணீர், water.

சுப்பிரயோகம், ஓர் பஞ்சபாணா வஸ்தை ஓர் காமாவஸ்தை, அதுபற்றியே பேசும் நினைவு மாயிருத்தல், thinking and taking of the person loved one of the five effects of love a condition of love affected person.

சுப்புரா, சருக்கரை, sugar.

சுமங்கை, see 2. ஆடுதின்னாப்பாலை, வறட்சுண்டி, sensitive plant Mimosa triquetra.

சுமஞ்சரி, துளசி, holy basil — Ocimum sanctump.

சுமதாகம், சிற்றகத்தி, common, sesban. Sesbania aegyptiaca.

சுமதாசா, செம்பை, foreign sesban Parkinsonia aculeata.

சுமதி, பேராமல்லி, long tubed Arabian jasmine. Jasminum sambac; 2. நற்குணன், man of good qualities; 3. நற்புத்தியுடையோன், man of intelligence.

சுமம், பூ flower; 2. கடம்பு, cadamba tree.

சுமரணம், சுவர்ணை உணர்ச்சி, sensation.

சுமரி, பெண்கள் யோனி உதட்டுக்கு மேல் காணப்படும் இலிங்க வடிவமாயுள்ள நீண்ட உறுப்புப் பாகம். இது பெண் குறியில் முன் பாகத்திலுள்ள நரம்புப் பகுதி an organ of the female homalogus with the penis of the male. It is a small elongated erectile body at the anterior of valva clitoris.

சுமரிக்கசிவு, சுமரியில் ஊறும் திரவம், smegna clitoridis.

சுமரிக்கவசம், சுமரியின் முன் பாகம், prepuce of the clitoris.

சுமரித்தாபிதம், பெண்களின் யோனி லிங்கத்தின் அழற்சி, clitoritis inflammation of the clitoris.

சுமரியெழுச்சி, சுமரி அடிக்கடி விரைத்தல், persistent erection of clitoris — clitorism.

·லி, கள், toddy.

சுமனசம், பூ, flower.

சுமணா, சிறுசண்பகம், small sampank flower; see சுரபி.

சுமாக், (Hina) பசையுள்ள ஓர் மரம், Sumach — Ahus genus.

சுமாரகம், நினைப்பு, thought.

சுமாரி, சிறுபுள்ளடி, which see.

சுமார், வலி அல்லது நோய்க் குறைவு, mitigation or decrease of pain or suffering or of any symptom or condition in diseses.

சுமாலி, see சுமலி.

சுமி, செம்மரம், Soymida febrifuga.

சுமிதிரி, சங்கினி சாதிப் பெண், the third and most libidinous class of women described in the erotic science.

சுமிருதம், பலாவிளி, see விழுதி.

சுமிருதோதாரு, தேவதாரு, deodar tree.

சுமிர்தம், நொச்சிலி, Vitex negunda; 2. See உகா; 3. ஈருள்ளி, onion; 4. காட்டு முருங்கை, which see.

சுமிர்த்தும், உதிரிமாரி, which see.

சுமுகம், கஞ்சாங்கோரை, see சரச்சு முகம், 2. துளசி, holy basil.

சுமுத்திரா கற்பூரம் சுமுத்திரா தீவில் தயாரிக்கும் கற்பூரம், Sumutra camphor.

சுமைத் தயிர், ஆடைத் தயிர், Curd with cream 2. கட்டித் தயிர், solid curd.

சும்பகம், ஊசிக் காந்தம், magnet attracting needle; 2. காந்தக்கல், load stone; 3. இரும்புச்சலாகை, iron probe; 4. தீத்தட்டிக்கல், fire stone.

சும்பல், கடம்பு, white Indian oak — Baring tonia racemosa; 2. முத்தஞ் செய்தல், act of kissing.

சும்பனம், ஓர் சுரதலீலை; பெண்களின் யோனியின் சுட

மணியை நாவால் வருடல், இதனால் பெண்களுக்கு உணர்ச்சி ஏற்பட்டு நாதங் கழலும்; முத்தமிடுகை, சப்புகை, இதழ் முதலியவற்றைச் சுவைத்தல், (In erotic science) a pervert act in the sexual congress. In this the clitoris is licked with the tongue for purposes of exciting a women to bring about the discharge of semen mulicbre — Cunnilingus. 2. நாயகனும் நாயகியும் தலைமாறி ஒருவரை ஒருவர் குறியை நாவினால் சுவைத்துக் காமநீர் பெருகும்படி செய்தல், man and woman sucking the genitals of each other; 3. முத்தமிடுகை, Kissing; 4. சப்புகை, sucking 5. இதழ் முதலியவற்றை சுவைத்தல், sucking lips etc.

சும்பன், சும்பனம் செய்வோன், a sexual pervert who licks the vulva Cunnilinguist.

சும்பிதம், இரண்டு உதட்டினாலும் நெருக்குதல், see சும்பனம்.

சும்பிதகரணம், see சும்பனம்; a made of copulation.

சும்பித்தல், சப்புதல், sucking; 2. முத்தமிடுதல், Kissing; 3. வாடல், withering.

சும்புதல், வாடி சுருங்குதல், withering.

சும்புளித்தல், பேரொளியால் கண் கூசுதல், clazing of the eyes.

சும்புள், கடம்பு, which see.

சும்மா, அடிக்கடி, often, repeatedly, 2. காரணமின்றி, without cause; 3. சாதாரணமாக, சும்மா யிருக்கும் போது, casually; 4. இயல்பாக, naturally 5. தொழிற்படாமை, being inactives; 6. மௌனம், silence.

சும்மி, பெருங்குமிழ், இதன் வேர் தசமூலத்தொன்று, gmelina arborea.

சும்மை, ஆவாரை, tanners Cassia — Cassia auriculata: 2. நெற்பொறி, fried paddy; 3. ஆளிவிதை, lin seed.

சும்மோகம், பெருலவங்கப் பட்டை, Climamomum tamala.

சும்மோதகம், கொழுக்கட்டைத் தேக்கு, இதுவே கொள்ளிக்கட்டைத் தேக்கு, bastard teak, Premna tomentosa.

சுய, இயற்கைக்குரிய, natural; 2. சுபாவத்திற்குரிய, idiopathic.

சுயகுணம், சுபாவகுணம், natural disposition.

சுயசி, குருஞ்சூலி, அல்லது அகச்சூலி, Toon tree — cedrela, toona.

சுயசிகிச்சை, தானே பரிகாரம் செய்து கொள்ளுதல், self treatment — Autotheraphy.

சுயதீபகம், நீலச் சொலிப்பு, the property of certain bodies especially or gamic fluids and solutions manifest when irradiated emitting a blue ray — Fluorescence.

சுயத்தங்கம், பிறவித்தங்கம், natural gold as opposed to வைப்புத் தங்கம், alchemic gold.

சுயத்தேன், கலப்பில்லாத் தேன், pure honey.

சுயநாசம், தற்கொலை, suicide.

சுயநோய், சுபாவ நோய், idiopathic disease.

சுயபவம், இயற்கைக் குணம், சுபாவக் குணம், idiosyn crasy.

சுயப்பால், தண்ணீர் கலக்காத தனிப்பால், unadulterated pure milk.

சுயப்புணர்ச்சி, தானாகவே செய்து கொள்ளும் புணர்ச்சி, அதாவது முட்டிமைத்துனம், self pollution, Masturbation — Onanism.

சுயமக்கினி, மந்த முதலான நோய்களைக் கண்டிக்குமோர் மருந்து, a medicine which relieves indigestion and loss of appetite; 2 ஓர் வகைச் செந்தூரம், see சுயமக்கினி செந்தூரம்.

சுயமக்கினிகுமாரன், அகஸ்தியர் செந்தூர 300-ல் சொல்லியுள்ள மருந்து, a preparation of medicine contemplated in Agastya's Chendooram 300.

சுயமக்கினி செந்தூரம், அய அரப்பொடியோடு காந்தம், கந்தகம், இரசம், மனோசிலை தனித்தனியே தூள் செய்து பிறகு ஒன்று சேர்த்து கற்றாழை சாற்றாலரைத்து ஒரே வில்லையாக தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டுச் சீலை மண் செய்து புடமிட்ட செந்தூரம். இதனால் வயிற்றுப் பொருமல், அசீரணம், அக்கினி மந்தம் போம், purified iron filing magnet, mercury, sulphur, red orpiment all five must be ground with aloe juice, and subjected to fire as per rules of calcination. The resulting red powder is given for indigestion, flatulence etc.

சுயமக்கினி மாத்திரை, வாத அஜீரணத்திற்காகக் கொடுக்கும் ஓர் மருந்து மாத்திரை, a medicinal pill prescribed for indigestion arising from flatulence.

சுயமருந்து, கலப்பில்லாத மருந்து, pure medicine; 2. உரித்தான மருந்து, specific medicine.

சுயம், கலப்பற்றது, unadulterated.

சுயம்பாகம், தானாகவே தன்கையாற் சமைத்துக் கொள்ளல், self cooking.

சுயம்பாகன், சவர்க்காரம், fuller's earth soap.

சுயம்பாகி, see சுயம்பாகன்.

சுயம்பாசி, இயற்கைப்பாசி, lichen.

சுயம்பான, இயற்கையான, natural.

சுயம்பி, நேயமரம், an unknown tree.

சுயம்பு, தானாய் உண்டாதல், produced or effected by nature — Natural.

சுயம்புச் சரக்கு, இயற்கைச் சரக்கு, natural drugs as opposed to artificial drugs (செயற்கைச் சரக்கு).

சுயம்புச்சரக்கைச் சுண்ணமாக்கி, see இலவண பாஷாணம்.

சுயம்புத் தங்கம், இயல்பாகவே பூமியில் விளையும் தங்கம், தானாகவே உற்பத்தியாகும் தங்கம் natural gold.

சுயம்புருவண்டு, இரசம், mercury.

சுயம்புலிங்கம், ஈசனுப்பு, which see; 2. பளிங்கு, crystal; 3. தானேயமைந்த லிங்கம், self produced Phallus.

சுயரசம், பச்சை அல்லது உலர்ந்த மூலிகைகளின் வேர், பட்டை, இலை, பூ, விதை முதலியவைகளைத் தண்ணீரில் ஊறப் போட்டு இடித்து வடித்த ஊறற் கஷாயம், the water in which the root, bark, leaf, flower fruit seed either fresh green or dried are allowed to soak and then extracted after filteration — cold infusion.

2. மேற்கண்ட சரக்குகளைப் பச்சையாகவே தண்ணீர்க் கலக்காமல் இடித்துப் பிழிந்து வடிக்கும் இரசம், the juice extracted from fresh green plant after pounding and expressing them and straining it through a thin cloth.

3. மூலிகைச் சரக்குகளைத் தண்ணீரில் ஊற வைத்து, அதற்கு காட்டாத்திப்பூ சேர்த்து புளிக்க வைத்து வடித்த ஆசவம், a kind of medicinal extract which is rendered less strong than the fluid extract as mentioned in No.1 & 2

4. மூலிகைச் சரக்குகளைச் சாராயம் அல்லது காடியிலூற வைத்து வடித்த சத்து, an extract or solution of the active principles of drugs or herbs whether green or dry in proportional spirit or alchohal — Spirituous or alchoholic tincture.

சுயலோகம், இயற்கையாக அகப்படும் உலோகம், native metal.

சுயவசனுதம், கருவழிக்குமியற்கை குணம் அமைந்த மருந்து, specific abortive.

சுயவதை, தற்கொலை, suicide; 2. சுயநாசம், self destruction.

சுயவல்லியுப்பு, ஆறாங்காய்ச்சல் வெடியுப்பு, nitre boiled and purified six times according to the process prescribed in Siddhar's science.

சுயவியாதி, சுயநோய், peculiar, temperment — idiosyncracy; 2. இயற்கை நோய், natural disease as opposed to acquired diseases.

சுயவெள்ளி, சுத்த வெள்ளி, pure silver.

சுயிரசம், குசப்புல், kuse grass or sacrificial grass Eragrostis — Cynosuroides.

சுயிலகரி, மருளுமத்தை, a kind of datura,see ஊமத்தை.

சுயோகி, கல், toddy - Palm wine.

சுயோதிஷ்பதி, சிறு வாலுளுவை, small chintoo, Celastrus paniculata.

சுயோநாகம், பெருவாகை வேர், root of sirissa tree — Mimosa sirissa.

சுரகண ரோகம், பிறவி குற்றத்தினால் குழந்தைகளுக்குக் காணும் சுரம், chronic fever of children due to congenital causes.

சுரகரகாரி, காய்ச்சலை போக்கு மருந்து, a remedy that dispels fever — Febrifuge.

சுரகரி, பேய்த்தும்பை, devil toombay — Leucas linifolia.

சுரகாஞ்சிமூலி.

சுரகாமலிகம், செருந்தி, golden champak ochana squarrosa or O.lucida.

சுரகுயிலம், பிசின், gum.

சுரகேசரிக் குளிகை, தோஷ சுரத்திற்குபயோகிக்கும் மாத்திரை, pill used for evers of children.

செய்முறை: செஞ்சந்தனம் விடை 5, கோரோசனம் விடை $2^1/_2$ ஏலரிசி, இலவங்கம், அதிமதுரம், பேரீச்சு, இலுப்பை, நன்னாரி, தாளிச பத்திரி, தேவதாரம், மாசிக்காய், ருத்திராட்சம், முந்திரிகை, ரோகணி வகைக்கு விடை 1. இடிக்க வேண்டியதை இடித்து, தூள் செய்து கல்வத்திலிட்டுப் பன்னீரால் 1 சாமம் அரைத்து குங்குமப் பூ 1 விடை சேர்த்து இளநீர் விட்டரைத்துக் குன்றியளவு (மாத்திரை) செய்து உலர்த்தி எடுக்கவும். அனுபானம் தேன், இஞ்சி சுரசம், இருவேளை கொடுக்கவும். புளி ஆகாது, A pill containing red sandalwood saffron and other bazar drugs prepared according to the text is given for all fevers in suitable vehicles such as honey, ginger juice etc.

சுரகை, சுண்ணாம்பு, slaked lime; 2. வசம்பு, sweet flag Acorus calamus.

சுரகோசுவரூபம், உருத்திரனுடைய கோபாக்கினியில் உற்பத்தியான கோபாவேசமுள்ள புருஷன், இவன் பயங்கரமான உருவத் தையும் பலத்தையும் உடையவனாகி உலக நாசனத்திற்காகப் பிறந்தவன். இவன் ஆவேசந்தான் சுரம் எனப்படுவது. இச்சுரம் என்னும் புருஷன் எல்லா மனித தாவரசங்கமமான சகல வஸ்துக்களிலும் வெவ்வேறு பெயர்களால் விளங்குகிறான். இவன் முக்கியமாய்ப் பிராணிகளின் உற்பத்தி காலத்திலும் முடிவு காலத்திலும் தோன்றுகிறான். இவனது வேகம் மனிதர்க்கல்லாது வேறு பிராணிகள் சகிக்க முடியாது. a person born from the anger of Rudra. He has inense strength but awful features. He has born only to destroy the world. His passion is conceived as fever. He affects various objects and goes by various names. Only human beings can hare his out bursts. He effects things especially at the time of their birth and death.

சுரக்கட்டி, காய்ச்சற்கட்டி, அதாவது மண்ணீரல் வீக்கம், enlargement of spleen due to fever.

சுரக்கணை, சுரங் கண்டு, அத்துடன் வாய் நீருறலுங் காணுமோர் வகை கணைச்சூடு, congenital heat in children accompanied by fever and salivation.

சுரக்கரத்தை, see சிவகரந்தை, fever basil; 2. கொழும்புச் சிவகரந்தை, Ceylon toolsy — Sphoeranthus zeylanicus.

சுரக்காலிக்கம், சுரம், சன்னி இவைகள் காணும் காலத்தில் கண்ணிலிடு மருந்து, an eye salve used on the eye lids in cases of fever.

சுரக்கழிச்சல், சுரத்தோடு கூடிய கழிச்சல். இது சிகிச்சைக்கு எளிதில் வசப்படாது. ஏனெனில்

ஒன்றுக்கு மருந்து கொடுத்தால் மற்றொரு நோய் அதிகமாகும். ஆகவே, இதற்குத் தனிப்பட்ட முறையில்தான் அவுடதம் கொடுத்து நிவர்த்திக்க வேண்டும். diarrhoea with fever.

சுரக்கள்ளி, செம்மரம், red cedar — Coromandal red wood — Soymids febrifuga. It is so named, as its bark possesses the quality of chincona and dispels fever; 2. ஓர் கள்ளி, fever milk hedge, fever rohitacum.

சுரக்காமலிகம், see சுரகாமலிகம்.

சுரக்காய்ச்சல், மிகுந்த சுரம், a high degree of fever — Hyper pyrexia; 2. உடம்பில் எரிச்சலை யுண்டாக்கும் சுரம், fever causing burning sensation over the body.

சுரக்கிருத்தியம், சுரங்கண்ட நோயாளிகளை கவனிக்க வேண்டியதும், அவர்களுக்குச் செய்ய வேண்டிய விஷயங்களும், things one should do to the patients suffering from fever.

சுரக்கினி, சுரத்தைத் தணிக்கும் மருந்து, remedy for dispelling or reducing fever —Febrifuge.

சுரக்கினி ரோகம், கண்டத்துள்ளும், தாடையுள்ளும் பேச முடியாமல் விரணப் புடைகளை யெழுப்பி, குரல் வளையை அடைப்பதனால் மூர்ச்சை குறட்டையோடு மூச்சு விடல், தொண்டைக் கம்மல், வறட்சி, உணர்ச்சியின்மை முதலிய குணங்களைக் காட்டும். இது வாயுவினாலுற்பத்தியாகி, சிலேட்டுமம் கோளாறடைவதனாற் காணும், a disease of the throat in which the patient faints owing to the choking of larynx. It is marked by stertorus breathing hoarseness, dryness and paralysed condition of the throat. It is carried by deranged vayu giving rise to disturbance of kapham.

சுரக்குடாரம், சுரத்துக்குப் பயன்படும் மாத்திரை, a medicine for fever.

சுரக்குடிநீர், சுரக் கஷாயம், a decoction given for fever.

சுரக்குளிர், குளிர் காய்ச்சல், srivering accompanied fever an intermitent fever — Ague.

சுரக்கோடாரி, see சுரக் கோடாலி.

சுரக் கோடாலி, காய்ச்சலைப் போக்குவதில் இணையில்லா மருந்து, an infalliable remedy for fever. It is so called from its eradicating every kind of pyrexial disease.

செய்முறை: method of preparation, வெள்ளைப் பாஷாணம், கௌரி, சூதம், வகைக்கு *1* விடை, இவைகளை கிழிக்கட்டி கஷாயத்தில் கிழிக்கட்டிப் போட்டு வைத்து பிறகு ஊமத்தை, கொம்புபாகல் சாற்றில் தனித்தனியாக 2 சாமம் அரைத்து பயிறளவு மாத்திரை செய்யவும் இளநீர் அல்லது வெந்நீரில் ஒரு உருண்டை கொடுக்க சுரம் தீரும், a pill prepared with while white arsenic, yellow oxide of arsenic, and mercury as per the text and given for fevers with suitable vehicles — hot water tender cocoanut water etc.

சுரக்கோது, சுரதோஷம், vitiation caused by fever.

சுரங்கம், சாதிலிங்கம், cinnabar — Vermilion *2.* சிந்தூரம், red powder; *3.* தேன்; Honey; *4.* தோடம்பழம்.

சுரங்கவூற்று, சுரங்கங்களின்று வரும் தண்ணீர், இதில் உலோகங்கள் கரைந்து சுவைக்கும், spring issuing out from mines. This spring water has the taste of the metal in solution Mineral water.

சுரசகஷாயம், அதிநீருக்காகக் கொடுக்கும் கஷாயம், a decoction prescribed for diabetes.

சுரசபிருதம், வேளை, velaiplant — cleome pentaphylla.

சுரசமணி, see ஆடாதோடை.

சுரசமான, சுவையுள்ள, delicious; 2. தித்திப்புள்ள, sweetish.

சுரசம், இஞ்சி முதலிய சரக்குகளைத் தண்ணீர் விட்டரைத்து அதனின்று எடுக்கும் ரசம், juice extracted from a solution of triturated drugs; 2. சுவையுடைமை, deliciousness; 3. போளம், myrrh; 4. சுயரசம், juice extracted without mixing water; 5. கற்கண்டு முதலிய சுயசார வஸ்து, substance prepared from the original extract like; 6. தித்திப்பு ரசம், sweet juice or essence; 7. சிறுகாட்டுக் கிழங்கு, a small species of yam — Dioscorea aculeata; 8. அரத்தை galangal Alpinia galanga; 9. பாதரசம், quick silver or mercury; 10. நொச்சி, notchy Vitex negunda; 11. துளசி, holy basic Ocimum sanctum; 12. முறித்த சாறு, juice of a plant or leaf or root into which a red hot iron is plunged to get rid of the noxious products in it; 13. சாறு, juice or extract; 14. நறும்பிசின், a fragrant resin; 15. இன்பமான ரசம், சுகிர்த ரசம், a delicious juice or essence; 16. சூடு தேய்ந்த அல்லது முறித்த மருந்துச்சாறு, a medicinal juice warmed by introducing a red hot iron.

சுரசம் செய்தல், சுயரசம் எடுத்தல், to extract pure essence.

சுரசம்பண்ணல், see சுரசம் செய்தல், 2. சாறு முறித்தல், eliminating noxious elements from a juice by heating or dipping a red hot iron.

சுரசம்மாரி, சுரத்தைப் போக்கு மருந்து, a medicine for eradicating fever — Febrifuge.

சுரசவாகுதிரசம், ஓர் வகைத் துளசி, a variety of holy basil.

சுரசவிதி, சுரசம் செய்யும் முறை, the method of heating the juice of plants or their parts to get rid off its noxious elements.

சுரச்னி, இரவு, night.

சுரசா, see சுரசம், 2. துளசி, holy basil.

சுரசாதரோகம், தொண்டைக் கம்மலையுண்டாக்குமோர் வகை நோய், இது கருமணத்தக்காளியால் போம், a disease causing soreness of throat. Hoarseness.

சுரசாதிகணம், வெண்ணொச்சி கரிசாலை, வெண்கடுகு, துளசி, வாய்விளங்கம், சித்தாமுட்டி, சுக்கு, மணத்தக்காளி முதலிய சரக்குகளை நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சிக் குழந்தைகட்குத் தடவ, கபம், கிருமி இவைகள் போம், a medicinal oil prepared as per text and used externaly for worms and phlegm in children.

சுரசாதிக்காய், விளாம்பிசின், gum of wood apple tree Feronia elephantum

சுரசாதிபேதம், மனிதர், மிருகம் முதலிய பிராணிகளுக்கும் மற்றுமுள்ள வஸ்துகளுக்கும் ஏற்படும் பலவிதமான சுரங்கள் அவையாவன:

1. பாகலம் — ஆனைக்குண்டாகும் சுரம், Fever affecting the Elephant.
2. சிலாசத்து — மலைக்கு ஏற்படும் சுரம், Fever affecting the Mountain.
3. நீர்மோகம் — பாம்புக்கு ஏற்படும் சுரம், Fever affecting the snake.
4. நீலாகா — தண்ணீருக்குள் ஏற்படும் சுரம், Fever affecting the water.
5. சீதிகா — பசுக்களுக்கு ஏற்படும் சுரம், Fever affecting the Cow.
6. ஊசரம் — நிலங்களுக்கு ஏற்படும் சுரம், Fever affecting the Earth.
7. அளர்க்கம் — நாய்களுக்கு ஏற்படும் சுரம், Fever affecting the dog.

8. திருஷ்டி பிரதியவரோதனம் — புலிகளுக்குண்டாகும் சுரம், Fever affecting the tiger.

9. அபஸ்முருதி — குதிரைகளுக் குண்டாகும் சுரம், Fever affecting the horse.

10. சிகோத்பேதம் — மயிலுக் குண்டாகும் சுரம், Fever affecting the Peacock.

11. பிரவாசதம் — காக்கைக்கு உண்டாகும் சுரம், Fever affecting the Crow.

12. பிருட்டபேதம் — உரோம நாசனம் பூனைகளுக்குண்டாகும் சுரம், Fever affecting the cat.

13. தத்துரம் — பெருச்சாளிக் குண்டாகும் சுரம், Fever affecting the bandicoot.

14. சுரம்பித்திகாயம் — கிளிக்குண்டாகும் சுரம், Fever affecting the parot.

15. சிரம் — சிருத்தைக் குண்டாகும் சுரம், Fever affecting the leopard.

மனிதர்களுக்கு உணவு முதலியவற்றால் ஏற்படும், யானை முதலிய காட்டு மிருகங்களுக்கு மரண காலத்தில், கடைசி காலத்தில் கடைசியாக உண்டாகும்.

சுரசாந்த ரோகம், see சுரசாரோகம்.

சுரசாந்தினி, வல்லாரை, Indian Penny wort Hydrocotyle asiatica.

சுரசி, வெண்ணொச்சி, a white variety of chaste tree. Vitex negundu.

சுரசிசா, சுண்டைச் செடி, jungle unarmed night shade Solanum pubescens.

சுரசிலேட்டுமரோகம், சுரத்தோடு கூடிய சிலேட்டுமக் குறிகள், அதாவது இருமல், கண்டத்தில் கபம், சீதாளம், நாவறட்சி, தாகம் முதலியன, A fever with symptoms, phlegm and cold.

சுரசு, வேளைப்பூடு, five leaved cleome, pentaphylla.

சுரசுரப்பு, (in botany) — சுணை, hispid.

சுரசூடாமணி மாத்திரை, இரசம், கெந்தகம், சாதிலிங்கம் இம்மூன்றையும் கருமத்தை விதையினால் சுத்தி செய்து பின்பு திரிகடுகு சேர்த்துப் பழச்சாற்றால் அரைத்துருட்டிய மாத்திரை. இதனால் வாதம், வாயு, நீங்காத சுரம் முதலியவை போம், a pill given for fevers.

சுரசூலை, சுரத்தினாலேற்படும் இருபக்கத்து விலாக்குத்தல், இதனால் உடம்பு கனத்து, எரிச்சலுண்டாகி, வயிற்றில் வாய்வும் சலமுங் கொண்டு கடுத்து, இடுப்பு, சந்து, கால் உளைந்து உணவு செல்லாது. excrusiating pain in the region of the sides along with fever. It is marked by heaviness of the body, disorder of stomach, pain in the hip, groin and legs, loss of appetite etc. 2. சுரத்தினால் கைகால் உளைந்து ஒய்ச்சல் கண்டு, மூட்டுகளில் குத்தலாகி, விருவிருத்து வலிக்கும் ஓர் சூலை நோய், a febrile disease characterised by darting pain in the muscles and joints weakness of the limbs etc.

சுரசை, சிற்றரத்தை, lesser glangal — Alpinia galanga (minor).

சுரஞ்சனம், கமுகு, arecanut tree.

சுரஞ்சா, துளசி, holy basil.

சுரஞ்சி, உசில், sirissaticle from its clearing rancidity, Albizzia amara.

சுரணி, அனாகதத்தானத்திலிருக்கும் அதிதேவதை, a goddess.

சுரணை, சுவர்ணை, feeling sensation sensitiveness; 2 see சுரணை மரம்.

சுரணை மரம், ஓர் மாமரம், a mango tree.

சுரண்டல், சுரண்டுதல், scraping; 2. நகத்தாற் பீறுதல், scratching

with finger nails; *3. கவருதல்,* to grow lusty; *4. சீண்டுதல்,* tickling; *5. விபசாரஞ் செய்தல்,* prostituting.

சுரண்டி, *புண் சுரண்டும் ஆயுதம்,* a sharp instrument used for scraping wonds; *2. சட்டுவம்,* an iron instrument for removing the adhered substance in a vessel a metal instrument used to scrape anything — Scraper; *சுரண்டினது,* scrapings.

சுரத்தாது, இந்திரியம், semen.

சுரதநீர், *சுக்கிலம்,* semen; *2. காமநீர்,* veneral secretions of woman — semen muliebre; *3. பெண் காமக்களை,* vaginal secretions in woman during intercourse; *4. சுரோணித நீர்,* a misnomer for menstrual blood.

சுரதநூல், *காமநூல்,* sexual science; *2. கொக்கோகம்,* a treatise on erotics compiled by Kokkoga muni.

சுரதமங்கை, *காமவிச்சையுடைய பெண்,* possionate woman, voluptuous women; *2. வேசி,* prostitute.

சுரதம், *பாதரசம்,* quick silver; *2. புணர்ச்சி,* sexual intercourse coition; *3. மருந்தின் சாரம்,* juice of herbaceous plants; *4. தைலசாரம்,* the essence of medicated oil.

சுரதரு, *தேவதாரு,* deodar Erythorxylon monogynum.

சுரதலீலா விளையாட்டு, *காமவிளையாட்டு,* love play.

சுரதலீலா விநோதம், *புணர்ச்சி விளையாட்டின் பொழுதுபோக்கு,* love sport as pastime.

சுரதலிலை, *புணர்ச்சிக்குரிய சரச விளையாட்டு,* wanton play or love play, sportive indulgence in sexual intercourse; *2. கரணம்* different postures in coition.

சுரதவித்தை, *கலவிக்குரிய இரகசியங்கள்,* secret doctrines of sexual science.

சுரத விளையாட்டு, *மகளிர் விளையாட்டு,* love play.

சுரதவின்பம், *புணர்ச்சியின்பம்,* sexual pleasure.

சுரதாக நாசினி, see *இருவேலி.*

சுரதாக்கு, *அரத்தை,* galangal.

சுரதாக்குதம், *பேரரத்தை,* greater galangal.

சுரதாப தைலம், *சுரத்திற்கு கொடுக்குமோர் மருந்தெண்ணெய்,* a medicinal oil for burning fever.

சுரதாரம், *விரணங்களுக்கு செய்யுமோர் சிகிச்சை,* a treatment for ulcers.

சுரதாரு, *செம்பரத்தை,* red shoe flower Hibiscus rosa sinensis; *2. தேவதாரு* deodar.

சுரதுருமம், *தேவதாரு,* deodar — Erythroxylon monogynum.

சுரதோஷ நிவர்த்தி, see *ஆதளை.*

சுரத்தல், *ஊறுதல், உண்டாதல்,* forming or secreting as milk in the breast.

சுரத்திருமம், *நேயமரம்.*

சுரத்துக்காதி, *திப்பிலிமூலம்,* root of long pepper.

சுரத்துக்குரிய, *காய்ச்சலுக்குரிய* febrile.

சுரத்தை, *முத்திரிகைப் பழம்,* cashew nut fruit (fruit or) Semicarpus —anacardium.

சுரநீக்கு மருந்து, *சுரநாசினி,* febrifuge.

சுரந்தா, *தேவதாரு,* see *சுரதாரு.*

சுரபங்கம், *குரற்கம்மல்,* Hoarseness of voice.

சுரபத்திரி, *ஓர்வகைச் சாதிப்பத்திரி,* tapering nutmeg.

சுரபரணி, *முறைக்காய்ச்சல்,* intermittent fever.

சுரபாஷாணம், *காய்ச்சற் பாஷாணம்,* a kind of prepared native arsenic.

சுரபாண்டம், கர்ப்ப பெண்களின் கருக்கிழியில் இருக்கும் பனிக்குடம் என்னுமோர் பை. fostal membrane forming the bag of water in the womb.

சுரபானம், சாராயம், arrack; 2. கள், toddy.

சுரபி, கந்தகத் தூள், sulphur powder; 2. கள்ளி, milk spurge; 4. சாதிக்காய், nut meg 4. பனங் கள்ளு, toddy of plamyra; 5. துளசி, holy basil; 6. மது, arrack; 7. மல்லிகை, jasmine; 8. பல்லி, lizard; 11. பிரமி, வழுக்கை, gratiola nonieri; 12. இலவம் பிசின், gum of silk cotton tree; 13. see இருவாட்சி, 14. பசி, hunger; 15. தேள் கொடுக்கி, Scorpion plant Helitropium indicum; 16. மருதமரம், Terminatia arjuna; 17. ஓர் வகை இரசக் குளிகை, இது வங்கத்தில் நீரை வாங்கும்; கெவுனம் பாயும்; (கருவூ குருநூ சூத்) a kind of mercuria ill it absorbs the fluid in the lead and aids one to travel in the aerial region. 18. மாட்டுக் கொம்பு, cow's horn; 19. மல்லிகைப் பூ, jasmine flower; 20. வெண்பசு, white cow; 21. சண்பகம், champak flower; 22. வெண்கடம்பு, white cadamba; 23. குந்துருக்கம், Indian frank in cense.

சுசுரபிகா, தேள் கொடுக்கி, scorpion plant.

சுரபிகாசி, வரிக்கற்றாழை, a kind of striped aloe.

சுரபிகோசம், சம்பு நாவல், East Indian Rose apple Eugena jambos.

சுரபிசனம், see சுரபிசித்தி.

சுரபிசித்தி, கருவிழி, chili fruited caper, Cadaba indica; 2. ஓர் கற்பமூலிகை, a rejuvenating drug — (unknown)

சுரபிசேகம், வரிக் கொம்மட்டி, striped colocynth. Citrullus colocynthis.

சுரபிதானி, சண்பகம், Champak —Michelia champaka.

சுரபிபத்திரை, சம்புநாவல், jambu tree malay apple tree.

சுரபிபோதம், see சுரபுன்னை

சுரபிமணி, இரசமணி, mercurial pill.

சுரபிமேற்புல்லுருவி, மருதமரத்தின் புல்லுருவி, a parasite found grown on marudah tree.

சுரபியாங்கம், வெண்கடம்பு, white cadamba tree.

சுரபில்லை, சுரக்கட்டி, enlargement of spleen.

சுரபிவழுக்கை, ஓர் வழுக்கை.

சுரபிவிருட்சம், கற்பத்துக்கடுத்த ஓர் மரம், a tree useful in rejuvenation.

சுரபின்னை, see சுரபுன்னை.

சுரபு, இலவம்பிசின், gum of silk cotton Bombax malabaricum; 2. துளசி, holy Basil 3. மல்லிகை, jasmine; 4. இலவு, silk cotton.

சுரபுகி, துளசி, holy Basil —Occimum sanctum.

சுரபுங்கு, சுனைப்புங்கு.

சுரபுன்னாகம், see சுரபுன்னை.

சுரபுன்னை, ஓர் மலைப்புன்னை, இது ஓர் சிறிய மரம், இலைக் கொழுந்து சிவப்பாய் இருக்கும் இலையோ கரும்பச்சை நிறம் பூ வெண்மை இதன் காய்க்குள் சதைப்பற்றுள்ள ரசமும் கொட்டையுமுண்டு. நாகசம் பங்கிக்குண்டான மருந்தின் குணம் இதற்குமுண்டு, sorra poon fragrant poon - Ochrocarpus longifolius. It is a small tree tender leaves are bright copper coloured. matured leaves are dark green. Flowers are white. The fruit encloses a large stone with a pulpy juice Medicinal properties

are very similar to those of Mesua ferrea. The flowers are stimulant and carminative.

NOTE: The flower buds are of the size of cloves and of a red colour Habitat malabar and western ghats. It is a very weak substitute for spirit lavendar and peppermint, Globular flower buds are used for dyeing and are used as perfume. 2. *வாழை,* calophyllum longifolium; 3. *கமேலா மாவு மரம்,* Mallotus philipinesis, 4. *ஓர் பூடு* Rhizophora macronata.

சுரபேதம், see *சுரவகை;* *தொண்டை,* hoarse throat.

சுரபட்டை, *கொய்னாப்படை,* *சாதாரணமாக இதை மரத்தினின்று 5-6 வருஷம் சென்ற பிறகு தான் எடுக்கப் படும் இதை அநேகவிதமாக எடுப்பதுண்டு. ஆனால் மிக்க சாக்கிரதையாய் எடுக்க வேண்டும். கழித்த பட்டையில் காரச்சத்து மிகுதியாக உண்டாகும். இப்பட்டையில் 2 விதம் உண்டு. வேப்பட்டையோ அடிமரத்தின் பட்டையை விடக் கணதியாயும் வெளிப்பாயுமிருக்கும்.*

இதை வெளியில் காய வைத்துச் சுருணைகளாகச் சுருட்டி வைப்பதுண்டு. இளமையும் முதிரச்சியும் அடையாத நடுத்தரமான மரத்தின் பட்டை தான் சத்தெடுக்க மிக்க சிலாக்கியமானது. இப்பட்டைகளுள் பாசி படர்ந்தது தான் மேன்மையானது. ஏனெனில் அதில் காரச்சத்து மிகுதியாக ஏற்படும். இதனின்று தான் கடையில் விற்கும் கொய்னா மருந்து தயாரிக்கப்படும். fever bark or Peruvian bark — Cinchona genus. This bark is usually removed about the fifth or sixth year and there are several methods of harvesting the bark. Great care should be taken to avoid injuring

the plant while removing the bark. There will be found a great Increase of alkaloids in the renewed bark is called morsed bark. The removed bark is placed to dry before the sun and the pieces which are thin are rolled up longitudinally into cylinders. The barks of moderately grown trees are the richest in the powerful alkalies and amongest them the morsed bark is considered superior for it contains more of cinchona alkaloids the product of which is the Quinine of the market.

NOTE: The following are the principal species known in South India:-
Officinalis, Succirubra, Hybrids, Calisaya, Lancifolia, Micrantha, Nitida.
The following are the commercial names of the different barks and the species to which they belong.
Bogota — lancifolia.
Columbian—lancifolia. Bolivian —calisaya. Crown — officinalis.
Calisaya — calisaya.
Fine crown - officinalis.
Caqueta — lancifolia
Finest grey — Peruvian.
Carthagena — lancifolia.

சுரப்பட்டைச்சத்து, *சின்கொய்னா பட்டையினின்று தயாரிக்கும் ஓர் சத்து, இதுவே கொய்னா மருந்து, இதில் இரண்டு விதமுண்டு. சிகப்புக் கொய்னா - இது சிகப்பு(நிற) (சுர)ப்பட்டையினின்று தயாரிக்கப்படும். மஞ்சள் கொய்னா, மஞ்சள் சுரப் பட்டையினின்று தயாரிப்பது தான் சாதாரணமாக வழங்கப்படுவது. இது சுரத்தைப் போக்கும். பலந்தரும், துவர்ப்பு, எல்லாவித சுரங்களுக்கும் உபயோகிக்கலாம். ஆனால் விஷ சுரத்திற்கு உலோகத் திரவங்களில் சிறிய அளவில் கலந்து கொடுக்கக் குணப்படும். குருக்களை யெழுப்பும். சுரத்திற்கு கொடுக்கப் பலத்தைத் தருவதுமன்றி உடம்பையுந்*

தேற்றும். விஷ சுரத்தினால் ஏற்பட்ட சுரக்கட்டிக்குப் பேதி மருந்தோடு கலந்து கொடுக்க ஓர் வித குண முண்டாகும். வாதப்பிடிப்பு, நரம்பு வலி, இவ்வித ரோகங்களில் சில நாளைக்குத் தொடர்ச்சியாய்க் கொடுக்க நன்மையை உண்டாக்கும். இரைப்பு, மூச்சுத் திணறல், கக்குவான், கொடிய கபவாத சுரம், நுரையீரல் தாபிதம், மார் அழிவிரணம் கண்ணோய், கருவிழியழற்ச்சி, அன்றி கண்ட மாலையினால் ஏற்படும் கண்ணோய்கள், அக்கினி விசர்ப்பி, உஷ்ணத்தடிப்பு, சீதபேதி, விஷ சுரத்தாலுண்டான அதிசாரம், அழிவிரணம், நமர், சயம் முதலிய நோய்களைக் குணப்படுத்தும். இது எல்லாவித ரோகங்களையும் கண்டிக்கும். குணத்தால் அபினிக்கு அடுத்ததென்றே சொல்ல வேண்டும். இதை சாதாரணமாக எலுமிச்சம் பழச்சாறு, தேன், கந்தகத் திராவகம், கடல் புளிப்பு முதலிய அனுபானங்களில் கொள்ளப்படும், வெறும் வயிற்றில் உட்கொள்ளுவது தான் சிறந்தது. சிகப்பு கொய்னா, குணத்திலும் உபயோகத்திலும் மேற்கண்ட மஞ்சள் இனத்திற்கு சமமாகவே சொல்லலாம். வேறு ஒன்றும் வித்தியாசமில்லை.

Quinine is prepared from the cinchona bark — fever bark —is called cinchona quinquina. It consists of two kinds viz; red and yellow. Red is the one obtained the red cinchona bark — Cinchona succirubra where as the yellow kind, sulphate of quinia — Quiniae sulphas which is common is some what aromatic and persistently bitter. It is a powerful antiperiodic, tonic and astringent. It is used for all kinds of fever — paroxysmal periodic, remittent and intermittent. In continued fevers it is less benefical. It has however, proved serviceable in typhoid (enteric) fever in small doses in combination with mineral

acids. In the advanced stages of exanthema it is of great service in reestablishing the strength and restoring tone to the system. In spleenic enlargement particulary of malarial origin it is very useful. In rheumatic and neuralgic affections. when they assume a periodical character, it is often productive of excellent results. Amongst other diseases in which it has been found serviceable are croup, laryngismus stridulous hooping cough, the advanced stages of pneumonia, pleurisy gangrene of the lungs, opthalmia, iritis and other affections of the eye connected with scrofulous diatheris erysipelas, urticaria, dysentery, diarrhoea, gangrene tetamus and phthisis with the exception of opium, no other remedy perhaps has a widr range of the rapeutic uses than quinine. It acts best when given in juice of lime and in solution with sulphuric acid. Its good effects are more speedily and certainly manifested if taken on an empty stomach.

NOTE:— The follwing are the other preparations from quinia and cinchona bark.

1. *பாவனத் திரவம்* — tincture of quinia.
2. *மாத்திரை* — pill of quinia
3. *கஷாயம்* — decoction of yellow cinchona bark
4. *ஊறல் கஷாயம்* — infusion of yellow cinchona bark
5. *திரவச்சத்து* — liquid extract of yellow cinchona bark

சுரப்பாலை, ஓர் வகைப்பாலை, இது வெட்பாலையைப் போல் இருக்கும். இலை வேப்பிலையைப் போலும் மொக்கிலிருந்து வரும், பால் கருவம் பிசின் போலும் வெண்மையாயு மிருக்கும், இதற்குக் கிருமிகளைப் போக்குங்குணமும் புண்புரைகளை ஆற்றுந் தன்மையுமுண்டு, இப்பிசினை

எண்ணெய் வகைகளிற் சேர்த்துக் காய்ச்சி இரணங்களுக்குப் பூசப்புண்களை ஆற்றும், இதன் பட்டைக் கஷாயம் சுரத்தைக் கண்டிக்கும், இது கொய்னாவைப் போல் கசப்பாயிருக்கும், a kind of paulay much resembling downy oleander. Leaves look like margosa leaves, and the gum exuding from the bud is similar to. that of Acacia arabica — gum arabic, and is white. It is anthel mintic and vulnerary. The gum boiled in oil is an external application for wounds. Decoction of the bark of this tree is a febrifuge and is bitter like quinine.

சுரப்பி, see *அதிங்கம்*

சுரப்பு, *சுரத்தல்*, issuing out as milk, 2. இரத்தம் சுரத்தல், அல்லது ஊருதல், suffusion as blood, 3. கதிப்பு, excess of forming as blood, 4. வீக்கம், swelling; 5. இரத்தக் கனப்பு, which see; 6. ஊதுதல், bloating

சுரப்புக் குறைவு, பால் அதிகமாக சுரக்காமை, deficient secretion of milk..

சுரப்பத் தண்ணீர், ஊற்றுத் தண்ணீர், spring water. Fountain water.

சுரப்புவடிவு, முலைமேற்றிரள், nipple.

சுரப்புன்னை, see *சுரபுன்னை*, — soora poon tree, Octrocarpus longifolia.

சுரமகம், செருந்தி, see *சுரகாமலிகம்*.

சுரமடித்தல், சுரம் காய்தல், to suffer from fever — to be attacked by fever.

சுரமணிமாத்திரை, நேர்வாளத்தைக் கடைச் சரக்குகளுடன் சேர்த்துக் கொடுக்கும் ஓர் பேதி மாத்திரை, இதனால் சுரம், கல்லடைப்பு, குன்மம், அண்டவாதம், இவைகள் போம், a purgative pill prepared with croton seed as a chief ingredient along with other bazaar drugs and prescribed for fever gravel or urinary calculus dyspepsia testicular complaints etc.

சுரமண்டலம், see *சலமண்டலி*.

சுரமதி, see *சுரமகம்*, 2. சிலந்தி, ulcer, 3. மேகவிரணம், syphilitic sore.

சுரமதில், **சீந்தில்**, moon creeper.

சுரமயக்கம், சுரத்தினாலேற்படும் மயக்கம், giddiness from fever.

சுரமருந்து, சுரத்தைப் போக்கு மருந்து, A medicine for the cure of fever pyretic.

சுரமலி, see *சரமலிகம்*.

சுரமலிகம், செந்தீக்கரப்பான், அதாவது உடம்பில் பல விடங்களில் வரும் அக்கி, eruptions of a fiery acrid humour in different parts of the body — Ery sipelas 2. செருப்படை, a low spreading plant — Glinus

laloides; 3. செருந்தி, see *சுரகாமலிகம்*.

சுரமாத்திரை, சுரத்திற்குக் கொடுக்கும் மருந்துக் குளிகை, fever pill, 2. கொய்னா மாத்திரை quinine pill.

சுரமாந்தம், செரியாமை, மந்தம் இவைகளினால் குழந்தைகட்குண்டாகும் சுரத்தோடு கூடிய ஓர் வகைக் கழிச்சல், diarrhoea in children attended with fever due to indigestion and other disorders of bowel.

சுராந்தை, அகோரமாய்ச் சுரங்காய்ந்து, இருமல், ஆயாசம், அன்னத்துவேஷம், அரோசிகம், முதலிய குணங்களை காட்டுமோர் மாந்தை நோய், a kind of tubercullosis marked by excess of fever, cough fatigue loss of appetite etc.

சுரமாய்க் கிடத்தல், காய்ச்சலினால் படுத்த படுக்கையிலேயே

கிடத்தல், to be laid up with fever.

சுரமாலிகை, சுரம், சன்னி இவைகளைப் போக்குவதற்காக அகத்தியர் வைத்திய காவியம் 1500 இல் சொல்லியுள்ள ஓர் மருந்து, a medicinal preparation contemplated in the Agastiyar work 1500 on medicine for curing fever, apoplexy etc.

சுரமாறாட்டம், சுரத்தின் வேகத்தால் புத்தி மயங்கி பிதற்றல் முதலிய மாறுபாடுகள், several bad symptoms such as loss of senses, incoherent talk etc. due to excess of fever.

சுரமுண்டாக்கல், காய்ச்சல் வரும்படியாகச் செய்தல் causing or giving room for fever. This entirey due to irregularity in diet.

சுரமுண்டாக்கி, சுரமுண்டாக்கு மருந்து, anything causing or producing fever — Febrifacient.

சுரமுதல், காய்ச்சலினால் பிடிக்கப்படல், getting feverish

சுரமும்மரம், சுரத்தின் உக்கிரம், severity or intensity of fever.

சுரமுறுசூலை, காய்ச்சல், தலையிடி, உடம்பில் வீக்கம், பலவீனம் முதலிய குணங்களை யுண்டாக்கி, மொளிகள் மோதுகட்டி வீங்கித் துன்புறுத்து மோர் வகை சூலை நோய், a kind of acute arthritis or gout marked by febrile symptoms head ache, swelling and weakness. It is a disease of metabolism attended by formation of chalky deposits in the cartilages of the joints and attacks of acute pain characterising arthritis.

சுரமெழுப்பி, சுரமுண்டாக்கும் வஸ்து, any substance which excites fever — Pyretogen 2. see சுரமுண்டாக்கி

சுரமேதம், குமுதை, ஒரு வகை மரம், a tree unknown.

சுரம், காடு, jungle desert; 2. கள், toddy; 3. உட்டுளை, inner cavity; 4. ஒருப்பு, a kind of salt; 5. காய்ச்சல், fever; 6. நகக்கண், that portion uniting the nail with the flesh; 7. உப்பு, salt.

சுரம், அறுசுவை உணவுகளி னாலும் உடம்பையடுத்த உட்கொதிப்பினாலும், ருதுகால பேதங்களினாலும் தகாத நடத்தைகளினாலும், மற்ற இரகக் கோளாறு, விஷச் சேர்க்கை. மனோவியாகுலம் முதலிய காரணங்களினாலும் வாதபித்த சிலேட்டுமங்கள் தனித்தனியாவது ஒருமித்தாவது இரைப்பையிலிருக்கும் அக்கினியை வெளிப்படுத்தி, சீதக்கட்டுகள் உள்ளவிடத்தை இளக்கி உப்பச் செய்து பின்பு செரியாமையாயிருக்கும் அன்னரசத்தை அநுசரித்து அவ்விடம் நாடோறும் அன்னரச நரம்புகளின் வாரங்களையும், உரோமத் துவாரங்களையும் மறைத்துப் பின்பு நாபிதானத்தில் சேர்ந்து சராக்கினியைத் தாண்டி அத்துடன் கலந்து உடம்பு முழுவதும் பரவி அதிகமான சூட்டை உண்டாக்கும். இது பில்லி சூனியம் முதலிய மாந்திரீகச் செயல்களினாலும் சாபத்தினாலும் இத்தகைய நிலைமையும் ஏற்படக் கூடும் இதனால் உடம்பு முழுவதும் வலி, வியர்வை, கைகால் சோர்வு, தாகம், தலைவலி, கண் உள்ளங்கை எரிச்சல் முதலிய குணங்கள் உண்டாகும். இது, அடியிற் கண்டபடி அனேகவிதங்களுண்டு, இவ்வித பல சுரங்களுக்குக் கட்டிய வெள்ளைப் பாஷாணத்தில் அரிசி எடை கொடுக்கப்போம். According to Indian Medical science the derangement of three humours in the system either singly or in conjunction with others effect the stomach, causing indigestion and dislodge the gastric fire which finds its way into the indigestion setting up inflammation of the mucous walls. The gastric heat evolved enters the naval

region developing the presence of some poison in the blood under the influence of which the tissues are more rapidly consumed with the result that heat is created in large amount and spreads though the whole organism.

It is due to one of the many causes such as errors in diet especially tainted food, internal heat sudden change of seasons or other atmospheric disturbances, untoward actions, malignant influences of inauspicious stars or planets agitation of mind from emotional feelings etc.

Such conditions may also be brought about by witch craft, sorcery or other dynamic forces of deadly incantations, magis spells, charms and curses.

It is marked by pain all over the body, profuse perspiration sens of numbness in the limbs thirst, head ache burning of the eyes and palm of hands etc.

Fever consists of different kinds viz:—

1. According to Ayurveda:

1. சன்னிபாத சுரம் — Typhus fever.
2. தாபச்சுரம் — ardent or remitent fever.
3. விஷமச்சுரம் —intermittant fever.
4. வாதச்சுரம் — rheumatic fever.
5. பித்தசுரம் — bilious fever
6. சிலேட்டுமச்சுரம் — phlegmatic fever
7. அசாத்தியசுரம் —chronic fever
8. கோபச்சுரம் — irritation fever
9. ஆமரசயசுரம் gastric fever
10. தாதுகதசுரம் — fever affecting the dhathus (tissues)
11. அபிசாரசுரம் — deadly incantation fever.
12. சாபச்சுரம் —curse fever
13. பூதாவேசசுரம் —fever caused by spirits and devils
14. பயச்சுரம் — anxiety or emotional fever
15. காமச்சுரம் — love fever
16. பிரலாபசுரம் — delirious fever
17. நிசிசுரம் mid night fever
18. அக்கினிமந்தசுரம் —dyspeptic fever

19. சுட்கசுரம் — ricketic fever
20. புராணசுரம் — chronic fever
21. போடகசுரம் — inflammatory fever
22. சோபை சுரம் — anemic fever
23. ஆநாகசுரம் — enteri fever
24. சயசுரம் — consumptive fever.
25. அவிநியாச சன்னி சுரம்
26. ஆமாதிசாரசுரம் — dysentric fever
27. அசிகசுரம்
28. அசிகசித்சுரம்
29. சித்தவிப்பிரம சன்னி சுரம்
30. தருணசுரம்
31. விஷசன்னி சுரம் — toximic fever
32. அதிசார சுரம் — fever with diarrhoea
33. இரத்தத் தாதுச்சுரம் — fever affecting blood tissue
34. சரும தாதுச்சரம் — fever affecting the skin

II. According to Tamil, Medical Science:

1. சொற்பசுரம் — ephemeral fever
2. அறைவிட்டுசுரம் — puerperal fever
3. படுக்கை சுரம் — bed fever
4. பித்தசுரம் — bilious fever
5. முடக்கு சுரம் — dengue fever
6. அக்கிசுரம் — herpetic fever
7. கபால சுரம் — cerebral fever
8. விடாச்சுரம் continued fever
9. பெருவாரி சுரம் — epidemic fever
10. குருசுரம் — eruptive fever.
11. களைப்பு சுரம் — fatigue fever
12. நஞ்சுபாய்ந்த சுரம் — septic fever
13. கிரந்திசுரம் — syphilitic fever
14. விரணசுரம் — tranmatic fever
15. அத்திசுரம் — fever settled in the bones.
16. எலும்புருக்கி சுரம் — ricketic fever
17. உதரசுரம் — gastric fever
18. அண்டைக்கட்டி சுரம் —sympathetic fever
19. சூதகவாயுசுரம் — hysteric fever
20. சூதகசுரம் — inter menstral fever
21. முறைசுரம் — inter mittent fever
22. அழற்சிசுரம் — irritation fever
23. மட்டுசுரம் — low fever.
24. விஷசுரம் — malaria fever

25. வெளிசுரம் — external fever
26. உட்சுரம் — internal fever
27. கொடிய சுரம் — malignat fever
28. கொசுக்கடி சுரம் — musquito fever
29. எலிக்கடிசுரம் — rat bite fever
30. நாய்கடிசுரம் — dog bite fever
31. நான்காமுறைசுரம் — quarton fever
32. மூன்றாம்முறைச்சுரம் — tertian fever
33. மக்களிக்குசுரம் — relasping fever
34. அம்மை சுரம் — pox fever
35. நடுக்கல் சுரம் — shivering fever same as குளிர்ச்சுரம்
36. அசீரணசுரம் — fever due to indigestion
37. மாறல் சுரம் — alternative fever
38. அவசுரம்
39. சன்னி சுரம் — same as முத்தொடி சுரம்
40. மேகசுரம்
41. தடிமன் சுரம்
42. கோழைசுரம்.
43. அக்கரசுரம்.
44. பறவைசுரம்.
45. முத்தோஷசுரம் — triple dosha fever (affecting the three humours).
46. ஐயசுரம்
47. மீளாச்சுரம் — தீராச்சுரம்.
48. வாதசுரம் —
48. வாதசுரம் —
49. மாந்தசுரம் — same as அன்னபானாதி சுரம்.
50. அதிசார சரம் —
51. ஆமசுரம்
52. சீதசுரம்— same as ஐயசுரம்
53. குளிர்சுரம்
54. விடசுரம் — same as விஷசுரம்
55. ரணசுரம் — same as விரண சுரம்
56. இரத்த சுரம் —
57. மாங்கிஷசுரம் —
58. ஊன்சுரம் — same as மாங்கிஷ சுரம்
59. தாபசுரம் — buring fever due to distress.
60. உடம்புநோய் சுரம் —
61. அன்னபனாதிசுரம் - same as உத்னசுரம்
62. பழஞ்சுரம் — chronic fever
63. பித்தசிலேற்பன சுரம் —
64. அசதிசுரம் — same as களைப்பு சுரம்
65. அட்சரமாந்த சுரம்
66. அர்த்தராத்திரி சுரம் — midnight fever

67. இராசுரம் — night fever
68. கடுஞ்சுரம்
69. கபசுரம் — same as ஐயசுரம்
70. சள்ளைக்கடுப்பு சுரம் —
71. சாமசுரம் —
72. தனிசுரம் —
73. கபவாதசுரம் —
74. மாந்தக்கணை சுரம்
75. வாதபித்த சுரம் —
76. சளிசுரம் — same as கோழை சுரம்
77. கிருமிசுரம் —

NOTE: Fever is an elevation of the body temperature accompanying all infections diseases and occuring in many other conditions such as shock, sunstroke, derangement of the digestive system, hysteria presence of some poison in the blood. So it is held that fever is only a symptom but not a disease by it self.

சுரம் காய்தல், காய்ச்சலினால் பீடுறல் being affected by fever, raging with fever.

சுரர் துருமம், தேவதாரு, deodar tree —Erythroxyton monogynum; 2. ஓர்வகைத் தேவதாரு, a kind of Pine tree Erythroxylon aureolatum.

சுரயோகம், a disease.

சுரவதிசாரம், see சுரக்கழிச்சல்

சுரவல்லி, அப்பிரக பாஷாணம், which see

சுரவன்பாக்கு, ஓர் உயர்ந்த பாக்கு, a kind of superior areca nut.

சுரவி, சண்பகம், champaka flower; 2. பசு, cow

சுரவிகாரநாசினி, பாதிரி, Sterospermum suaveolens.

சுரவினாசி, இடவகம், which see.

சுரவின்பால், பசுவின்பால், Cow's milk

சுரவீக்கம், காய்ச்சலிற் காணும் உடம்பு, கை கால் வீக்கம், Swelling due to fever.

சுரவெப்பம், சுரத்தின் உஷ்ணம், temperature of the body during fever.

சுரவேகம், சுரத்தின் தீவிரம், அல்லது கடுமை, high degree of fever.

சுரவை, வீக்கம், swelling

சுரழ், இலவம் பிசின், gun arabic, gum of silk cotton tree.

சுரளம், புன்னை மரம், Common poon tree — Calophyllum inophyllum

சுரளிகை, பாலை மரம், iron wood tree — Minu sops hexandrus.

சுரனாசி, விஷ்ணுகரந்தை, which see.

சுரனாசினி, see திருநாமப்பாலை, 2. see சிரானயிருசுவம், 3. see பேராமல்லி, 4. see விஷமச்சுரனாசினி, 5. see சித்தாமல்லி.

சுரனுவா, பேராமல்லி, big jasmine — jasminum undulatum.

சுரன், சூரியன்,Sun; 2. சுரம், fever; 3. ஓர் சிறு மீன், a small fish

சுரா, கள், toddy.

சுராகரம், தென்னை மரம், Cocoanut tree.

சுராகரி, நஞ்சுமுறித்தான், Indian or country ipecacuanha.

சுராகாரம், ஓர் வகை யுப்பு, an unknown salt.

சுராக்கம், பொன் gold.

சுராங்கிஷக் குளிகை, அகஸ்தியர் வல்லாதி 600ல் சொல்லியபடி பலவகை சுரங்களுக்கும் கொடுக்கும் மாத்திரை, a medicinal pill described in Agasthiar vallathi 600 and prescribed for different kinds of fever see சுராங்கிஷ மாத்திரை.

சுராங்கிஷச்சுருக்கு மாத்திரை, கந்தகம், ரசம் இவைகளை எலுமிச்சஞ்சாறு விட்டரைத்து ஓமம் அல்லது சீரகக் கஷாயத்தில் மேகக் கொதிப்பு, சுரம் இவைகளுக்குக் கொடுக்கும் ஓர் மாத்திரை, a pill containing mercury and sulphur as chief ingredients is given for venerial fever etc. with suitable vehicles, causmin or ajowan decoction.

சுராங்கிஷ மாத்திரை, இரசம், கெந்தகம், அரிதாரம், வெங்காரம், அக்கராகாரம், மிளகு, திப்பிலி, நெல்லி முள்ளி, கடுக்காய், காந்தம், இவைகளை வகைக்கு 1 விடை எடுத்து கலுவத்திலிட்டு வாளம் 10 விடை கூட்டி, முசுமுசுக்கை, ஆடாதோடை, கண்டங்கத்திரி, எலுமிச்சஞ்சாறு இவைகளை ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு சாறாக விட்டு அரைத்து மிளகு பிரமாணமாகச் செய்யும் மாத்திரை, இதனால் சர்வசுரமும் தீரும், இஞ்சி சுரசம், தேன், முலைப்பால் இவைகளில் 3 நாள் 6 வேளை கொடுக்கலாம். புளியாகாது, a pill prepared with mercury, sulphur, arsenic sulphide, borax, magnet, and some bazaar drugs, as told in the text and given for all kinds of fever in suitable vehicles such as honey, ginger juice breast milk etc. twice daily; tamerind free diet.

சுராங்குசரசம், நந்தி தேவரால் சகல சுரங்களுக்கும் சொல்லப் பட்ட ஓர் மருந்து, அதாவது, சுத்தி செய்த ரசம், கெந்தி, தாம் பூரபற்பம், மனோசிலை, தாளகம் ஏமாட்சிகம், சபரி இவைகளையும், அப்பிரகபற்பம், காவிக்கல், நாகதந்திவிரை, உலோக பற்பம், வெங்காரம், வங்கபற்பம் இவைகளை வகைக்கு 1 பலம் வாங்கி பழச்சாற்றால் 3 நாள் சித்திர மூல ரசத்தால் 3 நாள் புளியிலைச் சாற்றால் 3 நாள் அரைத்து அதை மேற்படி மிச்சம் நாலு ரசச்சாற்றிலும் ஊறப்போட்டு உலர்ந்த பின் (நிழலில்) கடலைப்பிரமாணம் மாத்திரை செய்து இஞ்சி சுரசத்தில் கொடுக்க சகல சுரங்களும் போம், இம்முறையை அநுமார் சீதையைத் தேடிக் கொண்டு தென்திசைக்கு வந்த பொழுது வியாகூலத்தால் சுரம் கண்டு உண்டான பொழுது அகஸ்தியர்

முறையை செய்து கொடுத்து அந்த தாப சுரத்தை குணப்படுத்தினாராம்.

A pill, the preparation of which is said to given by Nandhidever. It contains calcined powder of iron, tin, mica, copper, besides mercury, sulphur, yellow orpiment, red orpiment borx etc. It is given for all varities of fever with ginger juice.

It is said that Agastiyar prepared this pill and gave to Ajeenayar who was affected by Thapa jwaram — fever due to distress — when he was going in search of Sita.

சுராதி, துளசி, holy basil Gcimum sanctum; 2. வட்டத்திருப்பி Indian pareira cissampeloe pareira.

சுராதிசாரம், (சுரம் + அதிசுரம்) சுரத்தோடு கூடிய அதிசாரம், இதனால் அதிதாபம், மார்பு நோய், அருசி, பேதி, சீதம், ரத்தம் வீழ்தல், diarrhoea attended with fever.

சுராபகம், see சுண்டைக்காய்

சுராபானம், கள், சாராயம், முதலியவைகளைக் குடித்தல், drinking toddy arrack or other in intoxicating liquors.

சுராபானி, குடிகாரன், drinkard.

சுராமேகம், மூத்திரமானது கள்ளைப்போல் வெளுத்தும் நுரைத்தும், குழம்பாகவும் இறங்குமோர் வகை மேக நோய், இதைக் காய்ச்சினால் மாப்போல் வண்டல் படிந்து கள்ளைப் போல் மணக்கும், a disease in which the urine is white, frothy and thick like toddy a milky condition of the urine chylurea c.f. பிஷ்டமேகம்.

சுரார்க்கம், பொன், gold, see சுரார்க்கம்.

சுராலை, சாம்பிராணி, gum benzoin — Styrax benzoin

சுரி, ஆண் நரி, male jackal, 2. சுற்று spirital winding as crupers do 3. முறுக்கு, twist.

சுரியகுழல், சுருண்ட கூந்தலை உடைய பெண் woman having curly hair; 2. பெண் மயிர், female hair.

சுரிசன்னபுட்பம், நந்தியாவட்டம், Indian rosabay — Tabernaemontana — coronaria.

சுரிஞ்சான், ஒரு பழுப்புநிறமான கிழங்கு; இது மஞ்சட்கிழங்கைப் போன்ற ஓர் யுனானிச் சரக்கு. இது தித்திப்புச் சுரிஞ்சான், கசப்புச் சுரிஞ்சான் என இரு வகைப்படும். தித்திப்பு வகையோ வெண்மையாயும், உலர்ந்த பின்பு பழுப்பு நிறமாயும், விரிந்த தாமரை மொக்கைப் போலுமிருக்கும். இதை யுனானி வைத்தியர்கள் வாதரோகம், கபரோகம் இவைகளுக்கு உபயோகப் படுத்துவார்கள். தாதுவிர்த்தியை உண்டாக்குவடன் கபத்தைப் பேதி மூலமாய் வெளிப்படுத்தும். கசப்பு வகையோ விஷத்தன்மை யுடையதாதலால் உள்ளுக்குக் கொடுக்க உதவாது. a yellow bulbous root known as mercury's finger — Hermodactylus — Colchicum luteum. It is an Unani drug. It consists of two kinds — Sweet and bitter. Sweet is white when fresh and yellow like crocus saffron when dried. It resembles like a blossomed lotus flower Unani doctors prescribe it in cases of rheumatism and phlegmatic diseases. It acts like a purgative in removing phlegm from the system. It is a good tonic. The bitter variey should not beused internally.

சுரிஞ்சான்மிசிரி, see சுரிஞ்சான்

சுரிஞ்சி, மஞ்சணாற்றி, நுரை, small dycing mulberry Morinda citrifolia.

சுரிதல், சுருங்கல், to shrink; 2. திரைதல், become wrinkled in the skin.

சுரித்தமுகம், திரைந்த முகம், wrinkled face.

சுரித்தல், சுழித்தல், winding spiraly; 2. சுழித்து உள்ளே வாங்கல்

சுரிப்புறம், சங்கு, Conch; 2. நத்தை, snail.

சுரிமண், சேறு mire.

சுரிமுகம், see சுரிப்புறம், 2. துவாரமுள்ள பக்கம் that portion containing the hole.

சுரியல், மயிர், hair, 2.நீர்ச்சுழி, whirl pool; 3. இளையோர் மயிர், hair of young. 4. பெண் மயிர், hair of the female.

சுரீரெனல், see சுறிரெனல்.

சுருக்கங்கோரை, ஓர் வகைக் கோரை, a kind of koray root.

சுருக்கம், சுருங்குதல், stricture; 2. ஆசனச் சுருக்கம், anal stricutre; 3. குறைவு, diminution

சுருக்கல், ஒடுக்கல், Contracting; 2.குறைத்தல்,diminution as food.

சுருக்கி, ஆமை, tortoise; 2. சிறுகீரை, pig greens. Amaranthus campestris; 3. தொட்டாற்சுருங்கி, senstive plant — touch me not plant.

சுருக்கி, சாதிலிங்கமயினம், cinnabar variety; 2. கசப்புபசளை, bitter purslane.

சுருக்கிக்காய்ச்சல், சுண்டக்காய்ச்சல், boiling down to reducible quantity.

சுருக்கிடல், சுருக்குப் போடுதல், to strangulate 2. உருக்கு முகத்தில் உலோகங்களுக்கு மூலிகைக் குடிநீர் ஒட்டது சாறுவார்த்து அதன் சத்தை இழுக்கும்படி செய்தல், in Medicine pouring the juice or decoction of drugs in small quantities from time to time to metals in melting state in the process of calcination so as to absorb the essence of drugs. See also சுருக்கிடல்; சுருக்குக் கொடுத்தல்; சுறுக்கேற்றல்.

சுருக்கிடு சரக்கு, சுருக்குக் கொடுக்க உபயோகப்படும் சரக்குகள்; அவையாவன— drugs useful for imparting while metals are in fusion viz;

1. இலிங்கம் cinnabar; 2. வெள்ளை, white arsenic; 3. மால்தேவி, yellow arsenic; 4. சிலை, red arsenic; 5. வீரம், per chloride of mercury; 6. கெவுரி, yellow oxide of arsenic 7. கெந்தி, sulphur, 8. சூதம், mercury, 9. நாகம், Zinc, 10. காரீயம், lead, 11. வங்கம், tin, 12. துரிசு, Copper sulphate; 13. செம்பு சாரம், 14. சிங்கி, galena.

சுருக்கிட்டுக்கொள்ளல், see சுருக்குப் போட்டுக் கொள்ளல்.

சுருக்கு, சுருங்கச் செய்தல், causing anything to shrink, 2. வற்றச் செய்தல், causing to be reduced as கஷாயம், decoction which is reduced by boiling, 3. உருகிய உலோகத்திற்கு மூலிகை சாற்றை விடல், administering or imparting juice of drugs to metals infusion, 4. சுருங்குகை, contraction; 5. நீர்சுருக்கு, burning sensation while passing urine; 6. சுருக்குதல், to lessen, 7. வில்வம், bael tree.

சுருக்குதல், உள்ளுக்கிழுத்தல், drawing in contract, 2. இறுகப்பண்ணல், reducing; 3. குறைத்தல், lessening.

சுருக்கெனல், சுருக்கென்று குத்தல், a felling of lanciating pain.

சுருக்கேற்றல், மேலும் மேலும் சுருக்குக் கொடுத்துக் கொண்டே போதல், increasing the imparting of juice of drugs to substances to increase their potenccy.

NOTE:— this is done either to add or impart additional virtues to substaces or to get rid of their injurious effects or impurities.

சுருக்குக் கொடுத்தல், ஒடும் சரக்குகளைக் கட்டுவதற்காக, அச்சரக்கை ஒட்டிலிட்டு

அடுப்பில் வைத்து மூலிகைச் சாற்றைச் சிறுகச்சிறுக அதில் விட்டுக் கட்டியைப் புரட்டிக் கொடுத்துச் சாறு செல்லச் செல்ல, பழையபடியும் விட்டுப் புரட்டிக் கொடுத்துக் கொண்டே வருதலாம். இந்த விதம் நெருப்பின் சூட்டில் வைத்தும் அல்லது சூரிய வெப்பத்தில் வைத்தும் சுருக்குக் கொடுக்கலாம், to purify or consolidate such substances as cinnabar, sulphur, arsenic etc. which pass of as fumes by slight heat, this process is used; keep the substance on a mica plate and heat it with low fire *(தீபாக்னி)* while droping cotinuously the juice is liquid which will consolidate or purify the substance. The substance also must be rotated very often during the process.

சுருக்குச்சதை, ring like muscle which closes a natural orifice sphincter muscle.

சுருக்குத் தாக்கல், see சுருக்கிடல்

சுருக்குத் தைலம், தலைவலிக் குபயோகிக்கும் ஓர் வகைத் தைலம், a medicated oil or ointment applied to headache; 2. சுருக்குக் கொடுக்கப் பயன்படுத்தும் தைலம், oil used for சுருக்குக் கொடுத்தல்

சுருக்குப்போடல், see சுருக்கிடல், 2.கழுத்துக்கு சுருக்கிட்டு உயிர்ச்சேதம் விளைவித்தல், causing death by strangulation in which rope is applied to the neck.

சுருக்குப் போட்டுக் கொள்ளல், கழுத்திற்கு தானே சுருக்கிட்டு உயிரை மாய்த்துக் கொள்ளல், committing suicide by hanging ie. suspension from the neck.

சுருக்குவிழல், தோலில் சுருக்கம் அல்லது மடிப்பு விழல், formation of folds in the skin from corpulency.

சுருங்ககம், நாபியைப் போன்ற ஓர் வகை விஷக்கிழங்கு, இதைப் பசுவின் கொம்பில் கட்ட அதன் பால் செந்நிறமடையுமெனக்

கருதப் படும். an unknown drug said to resemble aconite. It is said that it is capable of converting the milk of cow into red colour if only the drug is tied to one of its horns.

சுருங்கண், கண் குவளை புண்ணாகி நாளுக்கு நாள் கண் சுருங்கும் ஓர் வகைக் கண்ணோய், an eye disease marked by gradual wasting or diminution of the eye due to inflamation in the socket —phthisis bulbi.

சுருங்கம், பீச்சுங்குழல், an instrument for expelling the fluid contained in it with some force — syringe.

சுருங்கலவாதம்.

சுருங்கல், குறைதல், being reduced, 2. பட்டினியாயிருத்தல், starving; 3. திரைவு அதாவது தோல் சுருங்குதல், formation of wrinkles on the body due to old age; 4. ஒடுங்குதல், shrinking.

சுருங்கியாதி சூரணம், சுவாசம், காசம், விக்கல், வாயு; அருசி இவைகளுக்குக் கொடுக்கும் ஆ.வே. மருந்து சூரணம், An Ayurvedic medicine given for asthma, hiccough, vayu, nausea etc.

சுருங்கீ, கிளைமான் கொம்பு, stag's horn.

சுருங்குகண் , see சுருங்கண், 2. கிழத்தினால் ஏற்படும் கண் சுருக்கம், shrunken eye due to old age.

சுருங்குசதை, துவாரத்தை அடைப்பதற்கேதுவான சுற்றிலுமுள்ள சதைகள், the circular muscles which contract and close the natural apertures orifices — Sphincter muscle —constrictor muscle.

சுருங்குதசை, see சுருங்குசதை

சுருசாவர்த்தம், நைவேளை, cleome felina.

சுருசி, நாவல்மரம், jambul tree — Eugenia jambolana.

சுருசுரெனல், வெய்யிலினால் அறை கொள்ளுதல், feeling hot from exposure to the sun.

சுருட்காய், see சுண்டைக்காய், Solanam verbiacifolium.

சுருட்கொள்ளல், சுருண்டு விழுதல், fainting — falling from weakness.

சுருட்டல், see சுருட்டிக் கொள்ளல்.

சுருட்டி, மயிர்ச்சிகைப்பூடு, Peacock's crest plant —Actincopteris dichotoma.

சுருட்டிக்கொள்ளல், சுருண்டுகொள்ளுதல், winding into round folds coiling reptiles do. 2. களைப்படைதல், to be fatigued - lying tired.

சுருட்டிப் பிடித்தல், வயிற்றில் சுருட்டி வலித்தல், twisting and griping pain as in the bowls; 2. குலைவயைப் பிடித்தல், a peculiar pain of liver; 3. பசியால், வயிறு சுருட்டி நோதல், twitching pain or sensation experienced in the stomach in excessive hunger.

சுருட்டிமூலி, பொன் முசுட்டை, Indian pareira gravel plant —Cissanpelos parelra.

சுருட்டியடித்தல், மயக்கத்தினால் கீழே வீழ்த்தி மோதும்படி செய்தல், falling and dashing from giddiness.

சுருட்டியிழுத்தல், ஓர் நரம்பிழுப்பு, twitching of the nerve.

சுருட்டிவாங்கல், குறட்டை வாங்குதல், as cramp, 2. இழுப்போடுகூடி மூச்சுவாங்குதல், spasmodic breathing.

சுஜட்டீகம், நொச்சுளி, which see.

சுருட்டு, புகைச்சுருட்டு, Cigar, 2. மடக்குதல், rolling.

சுருட்டுக் குடித்தல், சுருட்டுப்புகை யுட்கொள்ளல், smoking cigar.

சுருட்டுப்பாசி, கடற்பாசி, sea moss

சுருட்டுப்பிடித்தல், see சுருட்டுக்குடித்தல்

சுருட்டுப் புகையிலை, சுருட்டுப் பிடிப்பதற்காக உபயோகப் படுத்தும் புகையிலை, dried leaves of tobacco plant formed into small rolls for smoking. It is opposed to மெல்லும் புகையிலை, the used for chewing with betel.

சுருட்டுவாதம், முடக்குவாதம், அதாவது கை, கால்களை மடக்கும் ஓர் வாதநோய், a chronic inflammation of the joints of arms or legs with deformity — Arthritis deformans.

சுருட்டை, சுருட்டை விரியன் பாம்பு, இது சிறிதாயும் கபில நிறமாயும், ஓரத்தில் கருப்பாய் உள்ள வெண் புள்ளிகளை உடைய தாயுமிருக்கும். பிறை போன்ற வெள்ளைப் பட்டை முதுகின் இருபக்கமும் அமைந்துள்ளது. வயிறு வெண்ணிறம், இது சீறிப்பாயுந் தன்மை உடையது. இரு பக்கமும் சுருட்டிக் கொண்டு மடிப்புகள் உராய்வதால் புஸ் என்று சப்தமுண்டாகும்; பற்கள் மிக நீளம், வளவளப்புள்ளன. கண்களோ கொடிய பார்வையுள்ளன. விஷப்பாம்புகளில் இது மிகக் கொடியது. இதன் கடியினால் உடம்பு மதமதத்து பிறகு கொல்லும், அடியிற்கண்டபடி இது பலவகைப்படும், carpet snake Echis carinata (alias) Pseudoboa carinata. It is a small viper brown or brownish grey in colour with a series of whitish spots edged with blackish brown a semi circular whitish band on each side of dossal spots; belly whitish. It is fierce and aggressive and ready to attack.

It throws itself into a double coil, the folds of which rub against

each other making a rustling sound very like hissing. Its fangs are very long and mobile and its eye has a peculiarly vicious appearence. It is the most active and aggressive of all poisonous snakes. Kills by slow poisoning followed by gangrene or mortification.

The following are the different kinds;

1. இரத்தச்சுருட்டை — blood carpet snake the bite of which cause vomitting of blood.
2. அரணைவாற் சுருட்டை —lizard tail carpet snake. It has a fail like a green lizard.
3. நெடுஞ்சுருட்டை long carpet snake.
4. செஞ்சுருட்டை — red carpet snake.
5. குறுஞ்சுருட்டை — short carpet snake.
6. ஊதுசுருட்டை — swelling carpet snake its bite causes swelling.
7. அங்குலச் சுருட்டை — inch carpet snake so called from its small size.

சுருட்டை, சுருட்டைமுடி, curly hair, 2. மிளகாய்ச் செடிக்குக் காணும் ஓர் நோய், a disease attacking the chilly plants.

சுருட்டைக் கழலை, சுருட்டிக் கொண்டிருப்பதைப் போற் காணப்படும் ஓர் வகைக் கழலை, skin tumour having the look of a coil of intestine —Eiloid tumour.

சுருட்டைத்தலை, சுருள் மயிருடைய தலை, head having curly hair.

சுருட்டை நரம்பு, தளர்ந்த முடிச்சுகள் போற் காணும் (கருநிற) இரத்த நாளங்கள், enlarged veins appearing like knots. Varicose veins.

சுருட்டைப்பாம்பு, ஓர் விஷப்பாம்பு, a kind of poisonous snake.

சுருட்டைமயிர், சுருள்மயிர், curly hair.

சுருட்டையட்டை, தொட்டால் சுருட்டிக் கொள்ளும், a leech which curls when touched.

சுருட்படட்டை, பப்பிளி, red creeper.

சுருட்பள்ளம், காதின் மேல் வளைவின் பள்ளம், The margin of the pinna of the ear — Helix.

சுருணி, தொழுகண்ணி, unidentified plant.

சுருண்டுபோதல், சோர்வடைதல், to get exhausted; 2. பலங்குன்றல், to become weak, 3. ஒழுங்குதல், a state of extreme prostration and depression as in the case of one attacked by cholera. 4.இறத்தல், dying.

சுருண்டுவிழல், மெலிவினால் மயங்கிவிழல், drooping down from fatigue.

சுருண்டைக்காய், see சுண்டைக்காய்.

சுருதஞானம், கல்வி கேள்விகளினால் உண்டாகும் அறிவு, knowledge derived from education and culture.

சுருதா, கருப்பறுகு, black variety to Adenema hissopifolia.

சுருதி, ஒலி, sound, 2. காது ear, 3.மந்திரம் mantric formula sacred to some diety, 4. ஆகமம் புராணம் இசுமிருதி சேர்ந்த வேதங்கள், Vedas embracing Agamas, Puranas and Smritis.

சுருதி நேத்திரம், கருப்பு அகரம், probably a black variety of அகரு.

சுருதிபெற்றவன், கழுதை, ass so called from its unpleasant cry.

சுருபகாஷடம், செவ்விறகு, red fuel — red wood.

சுருபவேர், see அத்திமல்லிகை.

சுருமரம், பெரிய சவுரிமான், bosgrunnieus.

சுருமா, see சுருமாக்கல்.

சுருமாக்கல், see சுக்கான்கல்.

சுருமாக்கல், அஞ்சனக்கல் அல்லது நீலாஞ்சனக்கல், 1.சுரோத் தாஞ்சனம், 2.சவ்வீரஞ்சனம், இது ஈயத்தைப் போல் சாம்பல் வர்ணமாய் இருக்கும். இது சியாம் இகிப்து தேசம் இவ்விடங்களில் மிகுதியாக அகப்படும். இது சாதாரணமாய் சரும நோய்க்கு உபயோகப்படும். இதில் மை தயாரித்துக் கண்ணுக் கிடவுதவும். இது இரு வகைப்படும். 1.சுரோத் தாஞ்னம், 2.சவ்வீராஞ்சனம் ஒன்று, புற்றுக்காளான் போல் சிறிது கருப்புக் கூடிய காவிக்கல்லைப் போலிருக்கும், மற்றொன்று வெண்ணிறம் அல்லது புகை நிறமாயிருக்கும், டில்லிக்கு மேற்கேயுள்ள பூமியெல்லாம் சுருமாக்கல்லாகும். இக்கல்லின் மட்டத்திற்கும் கீழ் இருக்கும் பாறை தான் நீலாஞ்சனக் கல்லாகும். native sulphide of Antimony Antimonium sulphuratum or Antimonium nigrum. It is of two kinds. One is blackish brown and the other is white or smoky colour. It is found in great quantities in Siam and Egypt. It is generally useful in cutaneous diseases collyrium is prepared from this and applied for the eyes and is also used for painting the eye brows and eye lids.

NOTE:— From the composition and uses of lead and galena described under Anjanam it would seem that by the term 'Surma' the Hindus meant sulphide of lead and not sulphide of antimony as is generally supposed.

சுருமாரம், see சாரணை.

சுருமி, கப்பொட்டி, an unknown drug supposed to fix arsenic.

சுரும்பாரோகம், அடிக்கடி முறுக்குக் கொட்டாவி விடும் நோய், இது சாதாரணமாய் மூளைக்கேற்படும் கோளாறி னால் உண்டாகும். the act of stretching and yawning frequently. This is often the result of some disorder in the cerebral system, a lethargic state.

சுரும்பர், வண்டு beetle, 2. ஆண் வண்டு male bettle drone.

சுரும்பிதம், ஓர் வித காமலீலை. இதில் பெண்கள் தங்கள் குறி சிறியதாகவும் ஆழமில்லாமலும் இருக்கும் காரணத்தை முன்னிட்டு இரண்டு துடைகளையும் உயரத் தூக்கி எவ்வளவு பரப்ப முடியுமோ அதுவரைப் பரப்பி குறி விரித்துப் புணர்ச்சிக்கு தோதுவாகும் படி இயற்றிக் கொள்ளும் ஓர் நிலைமை. (In sexual Science) a position in which young girls having short and small vagina are forced to raise thighs upwards and draw them wide apart to the fullest extent so as to allow penetration during intercourse.

சுரும்பு, See சுரும்பர், 2. ஓர் கடல் மீன் உணவுக்குதவும், a sea fish good for eating Lactarius delicatulus, 3. மலைவண்டு, mountain beetle.

சுரும்புக்காரல், ஓர் வகைக் காரல் மீன், a fish of the Equnala genus.

சுரும்புமீன்கறி, சதும்பு என வழங்கப்படும் கடல் மீன் வறுவல், see சுரும்பு இது ருசியாக விருக்கும், இதனால் வயிற்று பிணிகள் நீங்கும், வீரியத்தையும், பசியையும் தரும், பத்தியத்திற்குதவும், fried curry of Lactarius delicaulus, it is tasteful, capable of curing tympanitis and other abdominal disease, it stimulates sexual desire and hunger and useful for those on diet.

சுருவம், நெய்த்துடுப்பு, a stirring rod used in ghee, 2. ஓர் அகப்பை, a kind of laddle.

சுருவநாதியுப்பு, see சத்தியுப்பு.

சுருவவாசனி, கற்றாழை, aloes.

சுருளட்டை, சுருண்டு கொள்ளும் அட்டை, a leech capable of coiling round.

சுருளப்பட்டை, see சுருள்பட்டை

சுருளவதக்கல், பச்சிலையை சுருங்கும்படி வாட்டல், roasting leaves for medicinal purposes till they are completely shrunk.

சுருளவாட்டல், see சுருளவதக்கல்.

சுருளி, தலைச்சுருளி Indian birth wort; 2. தொழுகண்ணி, telegraph plant — Hedysarum gyrans, 3. சந்தனவேம்பு, sandal neem cadreia toona, 4. ஜவாதேசத்துப் பூ மரம், java flower tree Mesua ferrea.

சுருளிமாமுனி, ஓர் குறிஞ்சிப்பூடு, cone head — Strobilanthes barbatus.

சுருளுதல், பசியால் சோர்தல், drooping from hunger.

சுருளுப்பட்டை, வெம்பாடம்பட்டை, see சுருள்பட்டை

சுருளுப்பூலா, விஷப்பூலா, poisonous poolah.

சுருளை, சுருள், coil — roll 2. குருத்து, tender shoot.

சுருள், சுருட்டை curl — coil; 2. தாமரை உட்சுருள் the inner fold of the young lotus 3. see சுருள்பட்டை, 4. பெண் மயிர் female hair.

சுருள் தங்கம், தங்கரேக்கு, gold leaves.

சுருள் தேவதாரி, சீமைத்தேவதாரி, இதனினின்று எடுக்கும் எண்ணெய் வயிற்றுக் கோளாறுக்கும், கட்டி சீழ் கொள்ள மேற்பூச்சு மருந்தாகவும் உபயோகப்படும். English deodar — Pinus longifolia, fine turpentine exuding from the bark on incision in internally a stomachic and externally applied as a plaster to abscesses to cause rapid supurration.

சுருள்நாரி, உரோமவிருட்சம், which see

சுருள்பட்டை, வேட்பாடம் பட்டை அல்லது செங்கத்தாரிப் பட்டைக் கொடி, அதாவது சாயப்பட்டை dye root of creeper bark or felse peacock's foot tree — Ventilago madraspatana.

சுருள்பட்டைக் கொடி, see சுருள்பட்டை.

சுருள்பூச்சி, நிலக்கடலைச் செடியை அரிக்கும் பூச்சி, insects which bright the ground nut plant — Pulchriphyllum.

சுருபகலை, சந்திரகலை, the vital air passing through left nostril.

சுருபகாஷ்டம், செவ்விறகு, red fuel.

சுருபக்குளிகை, see சொரூபக்குளிகை

சுருபக்கேடு, அங்ககுறைவு, defect in the organs or limbs.

சுருபநிலைப்போதகம், கஞ்சாக்குடுக்கை, gunjah (Indian hemp) smoking pipe. It is so called because it induces trance.

சுருபமணி, உடும்பின் வாயில் கழஞ்சி இரசம் விட்டு வாயை நூலால் தைத்து, பானையில் ஏற்றி நிறைய உப்பிட்டு அதன் வாயை மூடி மேலும் நிறைய எருவடுக்கிப்புடம் போட்டு, ஆறிய பின் இரசம் மணியாகி உருண்டு நிற்கும் பிறகு ஒரு கரண்டியில் வெள்ளியமிட்டுருக்கி மணியைப் போட நீர் வாங்கக் குளிகையாகும். இதைப் பசுவின் பாலில் போடசரிகை வெள்ளியாகும். Put $2^1/_2$ Pagoda a weight of purified mercury into the mouth of water lizard and stitch it. Put it in a pot. Fill it with common salt. Then subject it to fire Mercury will become a consolidated ball. It this ball is put into melted tin, the tin becomes silver. It must be immersed in cow's milk & taken.

சுருபம், see சொரூபக்குளிகை, 2. வடிவம், image, 3. தன்மை, nature.

சுருபனாதி, குப்பைமேனி, rubbish plant — Acayptha indica.

சுரே, கொத்தான், green thread creeper — Cassytha filiforms

சுரேசுவரி, முசுமுசுக்கை, bristly bryony — Bryonia Scabra.

சுரோச்சியை, துளசி, holy basil — Ocimum sanctum

சுரோந்திர சித்து, கருடன் brahmin kite.

சுரை, கறிச்சுரை, சுரைக் கொடி இதை மழை காலங்களில் வீட்டுப்புறக் கடைகளிலும், தோட்டங்களிலும், கொல்லை களிலும் பயிராக்குவதுண்டு, இதன் காய் ஓர் உணவு பதார்த்தம் இது குடத்தைப் போல் உருண்டையாயும் பருமனாயும் பளபளப்பாயும் மேல் தோல் மிருதுவாய் இருக்கும், உள்ளே குடல்கள் விதைகள் வெண்மை, நீர் சுரந்திருக்கும். இது சீதளத்தைத் தரும், மூத்திரத்தை அதிகப்படுத்தும். இதன் கஷாயம் வீக்கம் மகோதரம், நீர்க்கட்டு இவைகளைக் குணப்படுத்தும், இதைச் சர்க்கரையோடு கலந்து அல்வா முதலிய மிட்டாய் வகைகள் செய்ய உதவும் இதன் குடல்புண்களுக்கு வைத்துக் கட்டவுதவும், பேதி மருந்திலும் சேரும். பேய்க்குமட்டிக்குப் பதிலாக இதை உபயோகப்பதுண்டு, இதன் இலைக் கஷாயத்துடன் சர்க்கரை கலந்து காமாலைக்குக் கொடுக்கலாம். விதைகளினின்று எடுக்கும் எண்ணெய் தலைவலிக் குபயோகமாகும். இதன் கீரை கடைந்து தின்னலாம். காய்ந்த சுரை வாத்தியம் செய்ய உதவும். trumpet gourd — Lagenaria vulgaris — it is grown in rainy season in back yard of houses, gardens fields etc. It is a vegetable common in Hindu houses. The fruit is either long with broad base or round resembling a pot. It has a smooth surface. It is yellow when ripe — pulp and seeds white. It is cooling and diuretic. A decoction of this is useful for swelling in dropsy, suppression of urine. Mixed with sugar and ghee it is useful in preparing sweets such as halva.

Pulp of fruit used in poultices and purgative and is substituted for bitter water melon (colocynth). It is also used as a cooling application to the shaven head in delivium. Decoction of leaves mixed with sugar is given in jaundice; seeds yield a clear limpid oil and is used for headache. In houses it is sliced and cooked as curry; its shoots and leaves are eaten by al classes. Dried fruits are used for making stringed instruments and converted into bottles to store seeds, medicines etc.

1. கற்சுரை — spinous wild indigo, Tephrosia spinosa.
2. பேய்ச்சுரை — bitter gourd.
3. காய்ச்சுரை — புளிச்சைக் கீரை — Indian sore green — Hibiscus cannabinus.
4. கறிச்சுரை —bottle gourd used for culinary purposes. Lagenaria vulgaris.
5. காட்டுக் காய்ச்சுரை —wild sour green, Hibiscus Suratensis.
6. காட்டுச்சுரை —false calabash Cucurbita Lagenarius (alias) Rupo lagenarius.
7. கும்பச்சுரை —which see
8. கருஞ்சுரை —black gourd
9. கின்னாரச்சுரை —
10. பாத்திரச்சுரை—

சுரை, கறிச்சுரை, bottle gourd, 2. கள், toddy, 3. கறவைப்பசு, milch cow, 4. தேன் Honey, 5. சூரணம், medicinal powder, 6. உட்டுளை inner cavity, 7. அமுதம், nector, 8. மூட்டுவாய், joint, 9. பசுவின் முலை, teat of a cow, 10. உள்ளீடில்லாது குழிந்தவிடம், any depression or indentation caused on the surface, 11. மூங்கிற்குழாய், bamboo tube, 12. துவாரம், hold or cavity.

சுரைக்கந்தகம், இது ஓர் வைப்புச் சரக்கு, இது நாற்றமில்லாக் கந்தகம், நெருப்பிற்கு ஓடாது, brim stone in round pieces or sticks a prepared sulphur. odourless, does not fume in fire.

சுரைக்கந்தி, see சுரைக்கந்தகம், 2. வானக்கந்தி, sulphur used in fire

works. மச்சமுனி 800ல் சொல்லியபடி துருசு, நாகம், இரசம், வீரம், இலிங்கம், மனோசிலை, அரிதாரம், சத்திசாரம் இவைகளைப் பொடித்துக் குப்பியில் வைத்து எரித்திட ஒன்றாய்க் கட்டி உருகும். இது தான் சுரைக்கெந்தி, It is a kind of prepared sulphur. copper sulphate, zinc, mercury, corosive sublimate, cinnabar, red orpiment, yellow orpiment and sathi sarnam are powdered & put in a boule, and burnt as told in Matcha muni 800. The resultant is சுரைக்கெந்தி.

சுரைக்கரந்தை, see சுரக்கரந்தை

சுரைக்கருவி, இருதயம், the heart

சுரைக்காய், சுரைக்கொடியின் காய், கறிச்சுரை, இதனால் வாதபித்தம், அரோசிகம், பீலிக நோய் இவையுண்டாகும். சூடுபோம், fruit of bottle gourd creeper, See சுரை.

சுரைக்காய்க் கந்தகம், see சுரைக்கந்தகம்

சுரைக்காய் முலை, தளர்ந்த முலை, a loose breast.

சுரைக்குடுக்கை, காய்ந்த சுரை அல்லது சுரைக்காயோட்டுக் குப்பி, boule made of the shell of dired fruit of bottle gourd — fackeer's bottle used as feeder bottle.

சுரைக்குழல், மூத்திரக்குழல், the coiled corticle portion of the urinary tube — spiral tubule.

சுரைக்கெந்தி, வாணகெந்தி, see சுரைக்கந்தி

சுரைக்கொடி see சுரை

சுரைக்கொழுந்து, சுரைக்கொடியின் இளம் இலைகள், tender leaves of the bottle gourd creeper.

சுரைசமூலம், முழுச் சுரைச்செடி, இது மூத்திரச்சிக்கல், உடம்பு வீக்கம், பைத்திய ரோகம் போக்கும், bottle gourd plant. The entire plant is usefully employed in cases of urinary troubles swelling of the body and lunacy.

சுரைச்செப்பு, see சுரைக்குடுக்கை, இது மருந்துகள் வைப்பதற்குதவும், It is useful to keep certain medicines.

சுரைபவனி, கள், toddy.

சுரைப்பரணி, சுரையிலை, leave of bottle gourd creeper.

சுரைப்பழம், பழுத்த சுரைக்காய், riped fruit of bottle gourd creeper.

சுரையிலந்தை, ஓர் வகை இலந்தை, see இலந்தை

சுரையிலை, சுரைக்கீரை, இதனால் கோவை, உடம்பு வீக்கம், முத்தோஷம் போம், மலமிளகியிறங்கும், நீரிறங்கும், bottle gourd leaf. It is useful in cases of anemia, swelling due to dropsy derangement of the three humours in the system. It is a laxative and digestive.

சுரையிலைச்சுவரம், வங்கூழ் மரம், spleen tree — Amoora rohituka (செம்மரம்)

சுரைவிளக்கு, மருந்தெரிக்க உபயோகிக்கும் விளக்கு, lamp used for heating medicine.

சுரோணம், சிவப்பு redness

சுரோணராசவர்த்தம், ஓர் வகை சிவப்பு இராசவர்த்திக்கல், a kind of red precious stone.

சுரோணி, யோனி, female genital. Mons veneris, 2. பிட்டம், buttocks, 3. அநாமிரை, pelvic region, 4. இடுப்பு, hip.

சுரோணி கந்தம், கவுட்டி, acetabulum.

சுரோணிசூலை, வாதத்தினால் இடுப்பின் பக்கங்களிலும், பிட்டத்திலும் சூதத்தால் உண்டாகும் குத்தல், ஓர் வாத நோய், pain in the loins and

buttocks due to vascular causes; acute pain in the pelvic region.

சுரோணிதக்கட்டு, சூதகக்கட்டு, suppression of the menses.

சுரோணிதக் கரப்பான், செங்கரப்பான், a kind of rash.

சுரோணிதக்கிருமி, நாதக்கிருமி, germ cell

சுரோணிதக்கேடு, மாதவிடாய் கோளாறு, disorder of menstrual blood, deranged menstruation.

சுரோணிதநீர், பெண்காமக்களை, a seminal fluid in a woman semen muliebre.

சுரோணித நோய், மாதவிடாய் சம்பந்தமாக ஏற்படும் நோய், diseases of menstruation.

சுரோணிதம், உதிரம், blood 2. மகளிர் சூதகம் menustral blood 3. கந்தகம், sulphur, 4. பூநீறு, efflorесence in the soil of fullers earth, 5. நாரிசுக்கிலம், seman like fluid prostate fluid 6. இந்திரக் கோபப்பூச்சி, scarlet moth, Mutella occidentalis.

சுரோணிதவரிசம், கண் இரைப்பையில் தினவோடும் எரிச்சலோடும் கூடிய மெல்லிய சதை வளர்ந்து இது கத்தி கொண்டு நீக்கினும் மறுபடியும் கிளைக்கும், a disease of the eye lid marked by soft and fleshy growth with itching and burning sensation and recurring even after operation.

சுரோணிதவாதம், நெஞ்சு, கை கால்களுக்கு அதிர்ச்சி கண்டு அசைக்க வொட்டாது வலித்து, உடம்பு வறண்டு, நாவும் பல்லும் கடுத்து நொந்து, உளைவுடன் குத்தலும் உண்டாகுமோர் வாத நோய், பூகிமுனி *1200* a disorder of menstruation in woman marked by affection in the chest and limbs extreme sensibility to pain, dryness in the skin pain in the dentrin nervous shock, accompanied by intense bodily pain.

சுரோணிதவாயு, பெண்களுக்குப் பிள்ளைப் பெற்றவுடன் யோனி உள்ளடங்கி, பிறகு இரத்தம் துளிதுளியாய்ச் சீலையில் படுதலும், மூத்திரம் சரிவர இறங்காமலும் உடலில் தங்குவதால் ஏற்படும் வலி, a disease in women marked by pain due to suppression of menses or irregular menstruation caused by the contraction of the passage immediatelly after delivery urinary disorder pain etc.

சுரோதசம், channels.

சுரோதசாதி, சாமசாதியாகிய ஆண் சாதி நால்வகையிலொன்று, one of the four classes of men divided according to their lust.

சுரோதமகடு, சின்ன முள்ளங்கி, small radish.

சுரோதம், கால்வாய், தாரை உடம்பிற்குள் உணவு செல்லு மார்க்கம், the canal through which food and drink passes to the stomach — Oesophagus.

சுரோதவிகாசம், உடலிலுள்ள எல்லாத் துவாரங்களையும் இரத்த நாளங்கள் முதல் எல்லாக் கால்களையும் திறந்து விடுவதாகும். Opening out of channels including blood vessels.

சுரோதவிகாரம், இரத்தம் மாறுபாடுகள், vascular phenomena.

சுரோதாஞ்சனம், இதுவே சுருமாக்கல் ஓர் வகைச் சுத்தமான கருப்புக்கல், இது யமுனை நதியில் கிடைக்கும் அஞ்சனத்திற்குள் இது தான் மிக்க சுத்தமானது கண்ணின் எரிச்சலையும் நமைச்சலையும் போக்கும். உடம்பின் வலி, கெட்ட நீர் முதலிய மாசுகளை சுத்தப்படுத்தும். பார்வை தெளிவடையும், காற்று வெயில் முதலியவற்றின் கொடுமை சகிக்கக் கூடிய வலுவைக் கண்ணுக்குக் கொடுக்கும் இது புற்றின் மீது முளைக்குங் காளானைப் போல் கொஞ்சம் கறுப்பு (வெள்ளை) நிறமும் காவிக்கல்லையும் போல்

இருக்கும். இது கரிச்சாலைச் சாற்றினால் சுத்தியாகும். இது குணத்திலும் ரசம், வீரியம் முதலியவைகளில் சவ்வீராஞ் சனத்தை ஒத்தது, கறுப்பு, வெள்ளை என்ற வித்தியாசமே தவிர வேறொன்று மில்லை. Whitle galena or lead sulphide (antimony). It is produced on the banks of the river Jumna and is the best and purest of collyriums. It alleviates the burning and itching sensation of the eyes and removes all local pains secretions and impurities, increases the range of vision enables the eyes to bear the blasts of wind and glare of the sun and guards against the inroads of ocular affections.

NOTE:— It is of a white variety of anjana. (Galena or sulphide of lead) It is found in the bed of the river Jumna. It is known in Hindustani as saffed Surma. The article supplied under this name is calcareous or Iceland spar. It is considered inferior to the black surma or galena c.f. சவ்வீராஞ்சனம்.

சுரோத்தரம், சந்தனம் sandal wood

சுரோத்திர நரம்பு, காது நரம்பு இது காதுக்குள் சென்று அனேக இலைகளாய் பிரிந்து காதறைக்குள்ளிருக்கும் நீரின் மேல் மிதந்து கொண்டிருக்கும். vestibulo cochlear (eighth cranial nerve) divides into filaments in the internal ear and floats in the endolymph.

சுரோத்திரம், காது, ear, 2. கேள்வி hearing.

சுரோத்திரானகம், காதினுட்பறை, drum of the ear — Tymphanum.

சுரோத்திரேந்திரியம், ஞானேந்திரியம், one of the five sensory organs organ of hearing — Ear.

சுரோவத்திரவி, தாளிசபத்திரி, East Indian plum. Flacourtia — cata phracta.

சுர்மா, see சுருமாக்கல்.

சுலசிதகம், காமலீலைகளில் ஒன்று. பெண் ஒரு காலை தூக்கி தலைபக்கம் சாய்த்தும் மற்ற காலை தரையில் நீட்டியும் புணர்ச்சியில் ஈடுபடுதல் (In Erotic Science) a kind of posture in coitus with one leg on the head and the other downwards.

சுலனன், நெருப்பு fire.

சுலாய்ப்பு, ஒளி lustre.

சுலாவுரொட்டி, மெதுவு ரொட்டி, pan cake.

சுலானம் , நாயுருவி, Indian burr, Achyranthas, aspera, 2. குறைவு, deficiency, 3. சேறு, mire.

சுலி, see சுல்லி.

சுலுகம், சிறங்கை handful

சுலுகை, முதலை, Crocodile.

சுலூனம், ஓர் வகை மலக்கிருமி, a worm in the intestine.

சுலேதியம், மாவிலங்கு, three leaved caper — Crataeva religiosa.

சுலோகி, கள், toddy —vinous liquor

சுலோசனம், மான் deer, 2. மூக்குக்கண்ணாடி, spectacle, 3. அழகிய கண், beautiful eye.

சுலோபம், எறும்பு, emmet, ant.

சுல், வெள்ளி, silver.

சுல்பசுந்தரரசம், சூலைக்கு கொடுக்கும் ஓர் ஆ.வே. மருந்து, an Ayurvedic medicine for rehumatism.

சுல்லம், செம்பு, copper.

சுல்லன், பீளைக்கண்ணன், man with blear eyes.

சுல்லி, அடுப்பு, oven, 2. மடைப்பள்ளி, kitchen (in the temple)

சுல்லு, வெள்ளி, silver, 2. பல்லிப்பூடு, lizard plant.

சுல்வம், சிறங்கை, handful 2 செம்பு copper

சுவகம், நூதனமாய் ஏற்பட்ட குணம் அல்லது நியமம், peculiarity of temperament or constitution — Idiosyncracy.

சுவகுப்தம், வெள்ளைப்பூனைக் காஞ்சொறி, couitch plant — white, Mucuna pruriens.

சுவசகாசத்தி, பார்ப்பை மரம், அதாவது வன்னிமரம் suma tree Prosopis spicigera.

சுவசம்வேதனம், தன்னைத்தான் அறிகை to realise one self.

சுவசம்வேத்தியம், தன்னாலே அறியப்படுவது, that which is self taught.

சுவசனம், மூச்சு உள்ளுக்கிழுத்தல், the act of drawing air into the lungs. Inhalation.

சுவசனி, சுவாச கருவி, அதாவது வாய், மூக்கு வழியாய், தூசு, சாரல், புகை முதலியவைகள் புகாதபடியுள்ள ஓர்வித மூடி, an appliance covering the mouth and the nose to exclude dust cold smoke etc — Respirator.

சுவசாகம், பொருத்துகளுக் கயலாய், வன்ன சைகள் தடங்கலின்றி, இயங்கும்படி அவைகளுக்குச் சமீபமாய் அமைத்திருக்கும் நிணம் நிறைந்த சிறு சிறுப்பை, a number of large or small pouches or sacs in the subcutancous tissue enclosing a clear viscid fluid near the joints as in front of kneecap etc — Bursa mucosa.

சுவசுபம், அரக்காம்பால், அதாவது செவ்வாம்பல், red Indian water lily — Nymphae edulis.

சுவச்சந்தபைரவரசம், சாரவுப்புகளைச் சேர்த்து எருக்கம்வேர்க் கசாயத்தால் அரைத்து கண்ட குப்த சன்னிக்குக் கொடுக்கும் ஓர் ஆயுள் வேத மருந்து, an Ayurvedic Medicine for a variety of delirium.

சுவச்சம், விளக்கெண்ணெய், castor oil, 2. கண்ணிலுள்ள முக்குண நீரின் பொதுப் பெயர், a common name for the three humours in the eye, 3. ஒளி, transparency; 4. சுகம், convalescence, 5. நல்லெண்ணெய், gingelly oil, 6. சௌக்கியம், healthy, 7. முத்து, pearl.

சுவச்சலம், பேராமுட்டி, fragrant pavonia — Pavonia odorata.

சுவடு, தழும்பு, a scar on the body. Cicatrice 2. அடிச்சுவடு, foot step.

சுவணம், கழுகு vulture, 2. பொன், gold, 3. கருடன், brahumini kite, 4. உலோகக்கட்டி ore

சுவண்டிலை, see சவண்டிலை.

சுவதம், மாமரம், mango tree.

சுவத்தம், சொஸ்தம், சுகம் healthiness.

சுவத்திட்சணம், இங்குணம், which see.

சுவஸ்தம், சௌக்கியம், healthiness.

சுவஸ்திகம், ஓர்வகைக் குறுக்குக் கட்டு, a circular cross bondage, 2. ஓர் சிலுவை போன்ற குறி, a cross shaped religious in signia — Swastika. 3. It is a sign made by the crossing of two straight lines going in four directions.

சுவஸ்திகாசனம், தொடைக்கும் முழங்காலுக்கும் நடுவே இரண்டுள்ளங்கால்களையும் செலுத்தி அமரும் ஓர் யோக நிலை, a posture in yoga practice.

சுவநம், சண்பகம், champak flower.

சுவந்தா, இருவாட்சி, which see

சுவபாவசித்தி, சஞ்சித கர்மத்தால் நேரும் இயற்கைப்பயன், development of nature referring to the unexhausted acts of previous lives.

சுவபாவம், see சுபாவம், nature.

சுவமை, பொன், gold

சுவயதாபமானி, தானாகவே உஷ்ண அளவை நிர்ணயிக்கும்

கருவி, an instrument by which temperature is ascertained, self registering thermometer.

சுவயமக்கினி குமாரரசம், சுத்தி செய்த ரசம் கெந்தியை கலுவத்திலரைத்துக் கூழ்போலாக்கி அதற்குச் சம எடை அயபற்பம் சேர்த்து, கற்றாழைச் சாற்றினாலரைத்துப் பிறகு திரிகடுகு திரிபலை சூரணத்தில் சயரோகம், காசம், முதலிய நோய்களுக்குக் கொடுக்குமோர் ஆ.வே. மருந்து an Ayurvedic medicine containing mercury, sulphur and iron prescribed for bronchitis and consumption.

சுவயமக்கினிரசம், இரசம், கெந்தி, அயபற்பம், இவைகளை மூலிகைகளின் சாற்றினால் அரைத்து ஆயுள்வேத முறைப்படி பாவனை செய்துலர்த்தி சயம், காச ரோகத்திற்குக் கொடுக்கும் ஓர் ஆயுள்வேத மருந்து, an Ayurvedic medicine for consumption.

சுயவம்குப்தா, see சுவகுப்தம்

சுவரகராரி, சுரத்தைத் தணிக்கு மருந்து, febrifuge.

சுவரகுடாரம், சுரத்திற்காக பாஷாணத்தை கொண்டு செய்யுமருந்துகள், preparation arsenic medicines for fevers.

சுவரக்கட்டி see சுரக்கட்டி

சுவரக்காய்ச்சல், சத்து இறங்கும்படியாகக் காய்ச்சுதல் heating or boiling so as to extract essence as in decoction.

சுவரசதம், குறற்கம்மல், hoaseness of voice, பேதி, loss or watery motion

சுவரசம், சுயசாறு, pure juice of fresh drugs.

சுவரபங்கம், குரற்கோடு, affection of voice.

சுவரபேதம், குரற்கம்மல், hoarse throat.

சுவரம், சுரம், fever 2. சவட்டுமண், fuller's earth. 3. குரல் voice.

சுவரிலுப்பு, அவிப்பிணம்

சுவரொட்டி, சுவர்முள்ளங்கி, which see 2. ஆட்டின் மண்ணீரல், spleen of sheep, 3. ஓர் வகைப்புறா, a kind of dove, 4. மூட்டுப்பூச்சி, bug which adhere to walls.

சுவர், முலை, female breast.

சுவர்க்க புட்பம், தீன்பூ, an unidentified plant.

சுவர்க்கம், முலை, female breast, பேய்க் கொம்மட்டி, bitter apple — Cucuonis colocynthis.

சுவர்க்கம் பிடித்தான், ஆவிதை, tanners cassia.

சுவர்க் கருவிலி, ஓர் வகைப் சுவர்ப்பாம்பு, a snake a kind of cobra found in the crevice of a well.

சுவர்க்காதி, those regions where in must dwell for sometime before ones rebirth or reappearance in the world.

சுவர்க்காயம், உறுப்பு அல்லது உட்கிளையின் சுவர், walls of an organ or cavity — parietes.

சுவர்க்கோழி, கூச்சலிடும் ஓர் வண்டு, a kind of beetle making a shrill noice — cricket — Orthopetra of naturalists.

சுவர்ச்சம், இச்சிமரம், which see.

சுவர்ச்சலம், see செப்பு நெருஞ்சில், 2. சவ்வர்ச்சலம், a kind of salt.

சுவர்ச்சாதி, சத்திசாரம், an acid salt.

சுவர்ச்சிகம், சோடாவுப்பு, carbonate of soda.

சுவர்ணகணிதம், பொன், வெள்ளியின் மாற்றறிதல், an art of assaying gold and silver by the touch and of taking their specific gravities.

சுவர்ணகதலி, ஓர் பொன்னிறமான உயர்ந்த வாழை, புஞ்சள் வாழை, a yellow coloured superior plantain.

சுவர்ணகம், சிவப்புக் கொன்றை, red cassia — Cassia marginata 2. மஞ்சள் கொன்றை, yellow cassia — Cassia siamea; 3. சரசகொன்றை, cassia fistula.

சுவர்ணகாவி, பொன்னிறக்காவி, அல்லது செங்காவி, which see.

சுவர்ணகுண்டலி, தாளகம், yellow orpiment of arsenic.

சுவர்ணகேசரி, குரங்குமூஞ்சிமரம், அல்லது குரங்குமஞ்சணாறி இதுவே காமேலாமாவு மரம், this is kamala tree — Mallotus phillippinensis.

சுவர்ணகைரிகம், ஓர் காவிக்கால், a kind of red ochre.

சுவர்ணக்கற்றாழை, செங்கற்றாழை red aloe — Aloe indica.

சுவர்ணகிரி, ஓர் பூடு, cleome, felila.

சுவர்ணசிலாசத்து, இது கனமாயும் செம்பருத்திப்பூப் போன்ற செந்நிறமாயும் இருக்கும், பித்தத்தைக் கண்டிக்கும், a weighty mineral as red as shoe flower. It cools the system.

சுவர்ணசூதிகம், சிவப்பு மல்லிகை, jasminum revolutum.

சுவர்ணச்சாயல், see சுவர்ணச்சாயை.

சுவர்ணச்சாயை, தங்க நிறம், golden colour.

சுவர்ணட்சரி, கொக்கிறகு, the wing or feather of a crane.

சுவர்ணதீபம், அயர்லாந்து, the modern Ireland c.f. சந்திரதீபம்.

சுவர்ணத் திராவகம், பொன்னைக் கரைக்குமோர் திராவகம், Nitrohydrochloric acid for dissolving gold — Aqua regia c.f.

சுவர்ணபற்பம், தங்கபற்பம் இதனால் உடம்பு துக்கதி, காமவிச்சை பலம், சுக்கில விர்த்தியுண்டாம், காசம், சயம், குட்டம், கிரணி முதலிய அசாத்திய ரோகங்கள் குணப்படும் பசி தீபனத்தை உண்டாக்கி ஆயுளை விருத்தி செய்யும், calcifid gold.

சுவர்ணபாகு, பொன் வண்ணச்சாலி, an unknown drug.

சுவர்ணபுட்பம், நறுங்குறிஞ்சி, see குறிஞ்சி, 2. நறுஞ்சோதி, a gold coloured fragrant flower.

சுவர்ணபுட்பாதம், ஆவாரை, tanner's cassia cassia auriculata.

சுவர்ணபூதி, செப்பு மல்லிகை, a kind of jasmine — jasminum humile see சுவர்ணயூதி — சுவன்னயூதி.

சுவர்ணபூபதிரசம், கெந்தி, தாம்பிரம், அபிரேக், அயக் காந்தம், பொன், வெள்ளி பற்பங்களைச் சேர்த்து, செறுப்படைச் சாற்றினாலரைத்து வாலுகா யெந்திரத்தி லெரித்து திப்பிலி சூரணத்திற் கொடுக்கும் ஓர் ஆயுள் வேத மருந்து, இதனை பிரமேகம், சூலை, சூன்மம், கிரிச்சரம், குட்டம், சயம், காசம், காமளை பாண்டு இவைகளுக்குக் கொடுப்பது. A preparation made out of sulphur, copper, mica etc as per text and prescribed for skin diseases, bronchitis, consumption anaemia, dyspepsia rheumatic pains etc.

சுவர்ணபேதி, பொன்னை இளக்கும் அல்லது பேதிக்கு மருந்து, any chemical preparation action on gold. 2. ஓர் உபரசச் சரக்கு, a natural substances supposed to dissolve gold; 3. பொன்னைக் கரைக்கும் திராவகம், an acid dissolving gold — Nitrohydrchloric acid.

சுவர்ணமயம், பொன்னைப் போன்ற ஒளி, lustre of gold likeness of gold in colour.

சுவர்ணமாட்சிகம், இது அயச்சத்தின் ஓர் குணம், மஞ்சட் சாயல் கலந்து துண்டு துண்டுகளாய்ப் பூமியில் அகப்படும். அது இருப்பு, அப்பிரகம், இரசம் முதலிய தாது உலோகங்களிற் சேரும். இது உடம்பிற்குப் பலத்தைத் தரும். yellow pyrites gold pyrites. It is

one of the two varietites of iron pyrites. It occurs as dark yellow nodules with a golden lustre. It is an alternative tonic and is generally used in combination with other medicines of its class as iron, talc, mercury etc c.f. *தாரமாட்சிகம்.*

சுவர்ணமாரணம், *புடமிட்ட தங்க பற்பம்,* gold calcined powder.

சுவர்ணமுகி, *நிலாவிரை* which see.

சுவர்ணமேதினி *விருட்சம்,* see *சுணங்கன் விருட்சம்.*

சுவர்ணம், *பொன்* gold *2. கருடன்* Brahmini kite, 3. *கடம்பு,* Cadamba tree.

சுவர்ணயூதி, *செப்பு மல்லிகை,* a kind of yellow or golden jasmine & humile; 2.*ஆவில் புன்கு.*

சுவர்ணயூதிகம், *முல்லை* Malabar jasmine — jasminum malabaricum.

சுவர்ணலோகச் *செந்தூரம், தங்கமும் அரப்பொடியும் மற்றச் சரக்குகளோடு சேர்த்துப் புடமிட்டெடுத்த செந்தூரம், இதனால் சயம், காசம், நீரிழிவு மதுமேகம், பாண்டு, சோகை முதலிய இரத்தச் சீரை நோய்கள் போம்.* red calcined powder prepared as per text with gold and iron as chief drugs, and prescribed for consumption, bronchities diabetes.

சுவர்ணலோகத் *திராவகம், அயக்கம்பிகளை வெடியுப்புத் திராவகத்திலிட்டு, சில நேரம் கழித்து, தண்ணீரும் சேர்த்துக் குலுக்கி வைக்க மேற்படி கம்பிகள் கரைந்து விடும் பிறகு தெளிவிறுத்துத் திப்பியை நீக்கியதே இத் திராவகம். இது பொன் போன்ற நிறமானதால் இக்காரணப் பெயர் உண்டானது போலும்.* Iron wires disolved in nitric acid — acid extracted from salt petre — and filtered. It derives its name from the colour of the solution.

சுவர்ணவர்ணன், *மஞ்சள்* turmeric curcumalonga —*சுவர்ணவால் (சுவர்ணம் + ஆல்) சிகப்பு*

ஆலமரம், Red banyan tree — Ficus insectoria.

சுவர்ணவேதி, see *சுவர்ணபேதி.*

சுவர்ணவேதை, *பொன்னை பேதிக்கும் வஸ்து,* that which dissolves gold; 2. see *சுவர்ணத்திராவகம், 3. சுவர்ண பேதி என்னும் உபரசச் சரக்கு,* a natural substance said to dissolve gold see *சுவர்ணபேதி.*

சுவர்தாங்கி, *மலைக்காளான்,* hill mushroon.

சுவர்நாகம், *ஓர்வகை நாகப்பாம்பு,* a kind of poisonous cobra. Lycodin aulicus see *சுவர்க்கருவிலி.*

சுவர்ப்பாம்பு, see *சுவர்ப்புடையன்.*

சுவர்ப்புடையன், *ஓர் புடையன்* a kind of wart snake — Ophidic colubri formis.

சுவர்முள்ளங்கி, *சுவரில் படரும் சுவரொட்டிப்பூடு,* a parasite plant found grown on walls — Premonthes sonchifolia.

சுவர்வளையன், *சுவரின் பொந்துகளில் வசிக்கும் ஓர் பாம்பு,* a kind of snake frequenting the holes or crevices in walls see *சுவர் நாகம்.*

சுவர்விரியன், *ஓர் வகை விரியன் பாம்பு* a kind of viper.

சுவர்னமில்பொரி, *பாம்புகளா அல்லது சர்ப்பகந்தி,* snake plant — Ranwolfia scrpentina see *சோவன்னமில் பொறி.*

சுவர்னாகம் see *சுவர்ப்பாம்பு.*

சுவலித்தல், *கொழுந்து விட்டெரிதல், இது மணி மந்திர ஔஷதம் தயாரிப்பதற்கு முக்கியமானது.*

சுவலை, *அரசமரம்,* peepul tree. Ficus religioso, 2. *அரிசி* rice.

சுவல், *முதுகு,* the back, *பிடரி* nape; 3. *தோள்மேல்,* upper part of the shoulder.

சுவல்பபஞ்சமூலம், *கத்தரி கண்டங்கத்திரி முதலியவை* see *சொற்ப பஞ்சமூலம்.*

சுவல்லி, சுவல்யபி, கார்போகவரிசி, Babchi seeds, Psoralea corylifolia.

சுவல்வரி, அணில், squirrel.

சுவவு, மூஞ்சுறு, musk rat — பறவை மூக்கு beak of a bird.

சுவளை, see சுவலை.

சுவறக் குழைத்தல், ஊறும்படிக் கலத்தல், mixing so as to soak well.

சுவறப்பூசுதல், தைலம் முதலியவைகளை சூடு பெறத் தேய்த்தல், rubbing with pressure on the surface of the body so as to cret heat as is done with an ointment or medicated oil.

சுவறல்,see சுவறுதல், 2. உறிஞ்சுதல், sucking, 3. ஊறுதல், being soaked.

சுவறி நிற்றல், உடம்பில் நோய் ஊறியிருத்தல், அதாவது தங்கி நிற்றல் continuing a long time as a disease in the system.

சுவறியிருத்தல், see சுவறி நிற்றல்.

சுவறுதல், வற்றல் அல்லது காய்தல், drying 2. சோறுதல், soaking 3. குடித்தல், absorbing

சுவற்பகம், செங்கரும்பு, red sugar cane.

சுவற்பம், நெற்றி, fore head, 2. சொற்பம், little.

சுவற்பவம், பன்னீர்ப்பூ, rose flower or any flower smelling like rose.

சுவற்றல், குடித்தல், drinking, வற்றச் செய்தல்,2 drying.

சுவற்றுப்பல்லி, சுவரில் சத்தமிடும் ஓர் பூச்சி, wall lizard.

சுவற்றுப்பாசி, சுவரில் படரும் பாசி. the yellow wall lichen the stone crop. Wall moss.

சுவற்றுப்பூ, சுவறில் முளைக்கும் வாசனையுள்ள மஞ்சட் பூ, a plant with yellow flowers in its wild state on old walls — wall flower; wall fruit.

சுவற்றுப்பேன், மூட்டுப்பூச்சி, bug.

சுவற்றுமுள்ளங்கி, ஓர் மஞ்சட் பூச்செடி, இது கற்பூர எண்ணெய் மணம் வீசும், சாதாரணமாய்ப் பழங்கட்டடங்களின் இடிந்த சுவர்களிலும், சுடுகாட்டிலும் முளைக்கும், இது மாந்திரீகத்திற்கும், வைத்தியத்திற்கும் உதவும், இதன் இலையானது நீர்க்கட்டு, மார்புநோய், வாதசோபை இவைகளைப் போக்கும், இதில் மற்றோர் இனமும் உண்டு இது இரசத்தைக் கட்டும். wild country radish wall radish Blumea aurita-B-lacera. It is an annual herbaceous or some what shrubby plant with small yellow flowers. Smells strongly of turpentine. It is found particularly along the walls in old buildings and grave yards. It is used in medicine and magic. The leaves of the plant are used in cases suppression of urine chest pain anemia especially of vatha type. There is also another species called Pterdonta. It consolidates mercury.

சுவனன், நெருப்பு, fire

சுவன்ன கற்றாழை, செங்கற்றாழை, red aloe.

சுவன்னகேசரி, see சுவர்ணகேசரி

சுவன்னயூதி, செப்பு மல்லிகை, yellow jasmine see வசுர்ணயூதி

சுவா, நாய், dog

சுவாகசம் see சுவாகதம்

சுவாகதம், கிளிப்பிள்ளை, parrot.

சுவாகம், வெண்காரம், borax

சுவாகா, இரு சுவசற்பாட்சி, an unidentified plant.

சுவாகாசகந்தி, see இத்தி

சுவாக்கீரை, ஓர் பூண்டு, a plant.

சுவாங்கி, கஸ்தூரி மஞ்சள், the round Zeodary — Cucuma aromatica.

சுவாச கண்டகம், நரிமுருக்கு, an inferior kind of palans -Erythrina genus.

சுவாசகண்ணறைகள், நுரையீரலுக்குள் காணப்படும் சிறு காற்றுத் துவாரங்கள், cells or minute cavities containing air in the lungs — Alveolus of the lungs.

சுவாசகந்தி,

சுவாசகம், பேராமுட்டி, fragrant pavonia — Pavonia odorata 2. சவட்டுமண், fuller's earth 3. புறாமுட்டி அல்லது சிற்றாமுட்டி, another variety of Pavonia — Pavonea Zeylanica, 4. see எட்டி or காஞ்சிரம் or விஷமுட்டி, 5. கிளி parrot.

சுவாசகரவருக்கம், காசத்தைப்போக்கு மருந்துகள், the group of drugs which cures asthma or difficulty of breathing viz:—
Chebulic myrobalam — Terminalia chebula — கடுக்காய்
Piper longum — திப்பிலி
hedysarum alhagi.
Solanum xanthocarpum — கண்டங்கத்திரி
Curcuma aromatica — கஸ்தூரி மஞ்சள்
Eketaria cardamomum — பெரிய ஏலம்
Ocimum sanctum —துளசி
Aguilaria agalloohi அகரு

சுவாசகாசகி, தாளிசபத்திரி, East Indian plum — Flacourtia catapharacta.

சுவாசகாசக்கினி, கண்டங்கத்திரி, Indian night shade — Solanum jacquini, 2. சுண்டைக்காய், Unarmed night shade — Solanum pubescens. 3. see ஒட்டொட்டிப்புல், 4. தேள் கொடுக்கி, Scorpion plant — Helotropinum indicum, 5. சிரகாகோளி, a medicinal shrub, 6. see சிறுகாஞ்சொறி, 7. பிரஸ் பரணி

சுவாசகாசக்கினிபோக்கி, விளா, wood apple tree — Feronia elephantum, 2. சிரகாகோளி, a medicinal shrub — Common caper — Capparis aphylla, 3.சுண்டைக்காய், unarmed night shade.

சுவாசகாசவிழுப்பு, இரைப்பினாற் காணும் வலிப்பு, asthma marked by bronchial spasm and a swelling of the bronchial mucous membrance — Bronchial asthma.

சுவாசகாசம், கஷ்ட மூச்சு, இரைப்பை நுரை ஈரலில் அதிக சிறியதாயிருக்கும் சுவாசக் குழல்களின் சவ்வு தடித்துச் சுருங்கி அதன் மேல் பிசின் போலொத்த கபம் ஒட்டிக் கொண்டு, தொண்டையில் கபம் நிறைந்து வெளி வராது காற்றுப்போக இடமில்லாமல் மூச்சு தடைப்பட்டு, மேல் மூச்சுவாங்கி இழுப்புகண்டு கஷ்டப்படுத்தும், இது பிராணவாயு கோளாறடைந்து கபத்தோடு சேர்வதனா லுண்டாகுமெனக் கருதப்படும். ஐந்து வகைப்படும். asthma which signifies attacks of hard breathing owing to difficulty of breathing of a spasmodic character occuring in paroxysms caused by the contraction of the circular muscular fibres of the bronchial tubes in the lungs. It is also explained or considered that the vital air (Prana) fore going its normal functions rises upwards in unison with the deranged kapham of the system and produces that gasping or laboured breathing. It is of five kinds. They are as follow.

1. வாதகாச ரோகம் — asthma due to derangement of Vatha in the System.
2. பித்தகாச ரோகம் — asthma brought about by bilious disorders in the body and sexual excess.
3. சிலேட்டும காசம், humid asthma caused by aggravated condition of the humour phlegm in the system.
4. இரத்த காசம் —asthma attended with spiting of blood when coughing — Haemoptysis.
5. சயகாசம் — asthma combined with tuberculosis of the bronchial glands.

Note by C.D.

Ayurvada books treat Kasam and Swasam as separate diseases. The

book jeeva rakshamiratham (ஜீவரக்ஷாமிர்தம்) classifies each of them into five. Vatha Kasa rogam, Pitha Kasarogam, Silasma Kosarogam, Raktha Kasarogam and Saya Kasarogam. In none of these hard breathing occurs. Hence they can't be Asthma zoottura (slight) swasa rogam, Thamaga swasa rogam Vichina swasarogam, Magha swasa rogam. It every one of the hard breathing occurs in various degrees and so it can be considered as asthma, Kasa rogam, were cough is the predominting symptom can be taken as Bronchitis.

The siddha Medical books do not treat swasam (Iraippu) as a separate disease but only as a symptom and complication. As such; it appears in some varieties of kasanoi, silesma noi, pandu noi, sophai noi and some other diseases. Kasa noi, is classified as twelve and iraippu occurs as complication (கிளை நோய் உபத்திரவம்) in only as a five of them. They are swasa kasam, Manthara Kasam, Silathma kasam and Peenasa Kasam in my opinion only swasakasam is Asthama.

சுவாசகாசாக்கினி, விளா, wood apple tree — feronia elephantum.

சுவாசகாசி, கருப்பு வாகை, black sirissa tree or fragrant sirissa Albizzia odoratissima.

சுவாசகாளேசுவரரசம், வங்கம், அயம், தாம்பிரம், அபிரேக்கு முதலிய பற்பங்களோடு கடைச்சரக்குகளும் சேர்த்து அரைத்து இஞ்சிரசத்திற் கொடுக்கும் ஓர் ஆ.வே.மருந்து, இது சுவாச காசத்தைப் போக்கும்.

சுவாசகுடாரரசம், சுவாசம், காசம், சயம், சன்னிபாதம் முதலிய நோய்களுக்குக் கொடுக்கும் மருந்து.

சுவாசகோச அழற்சி, மூச்சுப்புகும் காற்றுக் குழாயின் வேக்காடு, Inflammation of the bronchial tubes — Bronchities — See சுவாசய விரணம்

சுவாசகோசம், see சுவாசப்பை

சுவாசக்கண்தோஷம்

சுவாசக்கருவி, மூச்சு வாங்க விட பயன்படும் உபகரணங்கள், respiratory organs.

சுவாசக்காற்று

சுவாசக்குத்து, நுரையீரல் குத்தல், அதாவது மூச்சுப்பையின் மூடுதோலில் உண்டாகும் வலி, shooting pain in the lungs — Pleurisy see சுவாசக்குற்று

சுவாசக்குழல், குரல்வளையின் மூச்சுக்குழாயின் இரண்டு பிரிவுகள் the two main branches of the trachea or wind pipe — Bronchial tubes — right and left.

சுவாசக்குழல், இது குரல்வளையும் அதன் மூச்சோடும் இரண்டு கிளைகளும் சேர்ந்தது, இது முருந்துவளையங்களாலும், சவ்வினாலுமாகி, கிருகத்தின் கீழ்ப்பகுதியில் கழுத்துக் கண்டந்துவங்கி வலது இடது கிளைகளாகப் பிரிந்து (அமைந்துள்ளது) இது, 4 1/2 X 3/4 X 1 அங்குலளவு, the trachea or the wind pipe descending from the larynx to the bronchi. It is the cartilagenous and membranous tube measuring 4 1/2 X 3/4 X 1inches. It is the tube which conveys air into the lungs.

சுவாசக்குழல் விரணம், சுவாசக் குழலின் அழற்சியாற் காணும், புண், inflamation of the bronchial tubes — Bronchitis.

சுவாசக்குழற்கிளை, மூச்சு விடுவதற்கான இரண்டு குழாய்கள், Bronchial tubes.

சுவாசக்குழாய், see சுவாசக்குழல்

சுவாசக்குற்று, நுரையீரலைக் கவர்ந்துள்ள சவ்வுக்குத் தாபிதங்கண்டு, அதன் அறைகளுள் நீரேற்றமுண்டாகி, குத்தலை உண்டாக்கும் ஓர் நோய், a disease marked by inflammation of the pleura investing the lungs with exudation into its cavity and upon its surface.

It is accompanied with an acute pain — Pleurisy.

Note by C.D.

இந்த நோய்க்கு விஷ்ணு சக்கரம் சிறந்த மருந்தாகும். ஒரு மாத்திரை தேனில் இரு வேளை கொடுக்கலாம். Vishnu Chackram Tablet one with honey twice a day is very useful in pleurisy.

சுவாசக்கூறு, மூச்சின் பகுதி, அதாவது 1 நாழிகைக்கு 360 வீதம் 1 நாளைக்கு 60 நாழிகையாகக் கூடுதல் 60 X 360 or 21,600 மூச்சு, the division of breath or respiration as a whole. According to Siddhar's work it is calculated as follows. Man breathes normally at the rate of 360 times for every 24 minutes or naligai and so for a day ie 60 naligays it comes to 360X60 = 21600. So, one should breath 21600 times a day. If his average breathing is more his life will be should shortened — if it is less life will be lengthened.

சுவாசக்கோரை, பாய்க்கோரை, koray grass used for making mats.

சுவாசங்கட்டல், மூச்சையடக்கல், suppression of breath.

சுவாசங்கட்டியிழுத்தல், சாகுந்தருவாயில் சிலேட்டுமம் கட்டி யிழுத்தல், the sound some times emitted by the dying person and caused by expulsion of the breath through chamels partly filed with mucous — Death rattle.

சுவாசங்கட்டியேற்றல், பிராண வாயுவை சுழிமுனை நாடி, வழியாய் மேலுக்குச் செலுத்தல், taking Pranan (esoteric breath) and forcing it up through sushumna for distribution to the nervous system.

NOTE: This can only be done by a yogi by his constant practice of suppressing breath through Pranayama (Scientific breathing)

சுவாசசக்தி, மூச்சு விடுவதற் குண்டான உடம்பின் வலிவு, இதுவே பிராண சக்தியெனவும் சொல்லலாம், the strength required to breath.

சுவாசதம், பிள்ளை, child.

சுவாசசத்தம், மூச்சு உள்ளுக்கும் வெளிக்கும் போவதால் ஏற்படும் சத்தம், breath sound.

சுவாசசலனம், மூச்சு விடும் பொழுது மூக்கு, குரல்வளை, மார்பு, வயிறு, இவ்வுறுப்புகளில் விரிவதும் சுருங்குவதுமான அசைவு, heaving movement of the parts involved in breathing.

சுவாசத்தடை, மூச்சுமுறிப்பு, obstruction to respiration.

சுவாசத்தளவாடம், மூச்சு சம்பந்தமான பாகம் Respiratory region

சுவாச நடை, மூச்சு உள்ளே போதல் வெளி வருதலாகிய அசைவு, movements of breath.

சுவாசநடை அறிகருவி, மூச்சுப் போக்கின் நிலைமையை அறிவிக்கும் கருவி, instrument for ascertaining the condition of throax, lungs etc by means of the sound arising there.

சுவாசநாளம், மூச்சோடும் (குழாய்) Bronchial tube.

சுவாசநிருணயம், கும்பக சக்தியை நிச்சயித்தல், establishing or maintaining the control of breath in Kumbaka.

சுவாசநோய், உடம்பு உலர்ந்து, சுரம், ஆயாசம், வயிறு பொருமல், வாந்தி, புறங்காலசைவு முதலிய குணங்களைக் காட்டுமோர் வகை மூச்சு சம்பந்தமான நுரையீரல் நோய், a disease of the lungs associated chiefly with respiration. It is marked by emaciation fever fatigue rumbling noise in the stomach vomiting shaking of the in step.

சுவாசந்தடைபடல், see சுவாசத்தடை

சுவாசந்துரத்துஞ்சூரன், மரமஞ்சள், tree turmeric Coscinium fenestratum.

சுவாசபந்தம், மூச்சுத் திணறல், Condition of being suffocated — Asphyxia; 2. சுவாச பந்தனம், அதாவது கும்பித்தல், which see

சுவாசபந்தனம், மூச்சையடக்குதல், suppression or suspension of breath through yoga practice.

சுவாசபித்தம், see சீதேவி செங்கழுநீர்.

சுவாசபித்த ரோகம், வயிறு கனத்துப் பொருமி உடம்பிளைத்து மேல்மூச்சு கண்டு, வாய் நீரூறி மார்புவலி, இருமல், பசியின்மை முதலிய குணங்களைக் காட்டும் ஓர் பித்த நோய், a disease caused by the heat humour characterised by flatulence, and heaviness, of the stomach, heavy breathing excess salivation, chest pain, loss of appetite, and emaciation.

சுவாசபிரசு வாசம், உள்மூச்சு வெளிமூச்சு, inhalation and exhalation, 2. மூச்சு, breath.

சுவாசப்பை; புப்புசம் நுரையீரல், organs of respiration in air breathing animals — lungs.

சுவாசமடக்குதல், மூச்சடக்கல், suppression of breath, 2. பிராணவாயுவைத் தம்பித்தல், இதுவே கும்பித்தல், restraining of breath as in yoga practice.

சுவாசமடங்கல், மூச்சடங்கல், suspension of breath, 2. மூச்சொடுங்கும் ஓர் யோக நிலை, the state of suspended animation gained in yoga practice.

சுவாசமடங்கிய சிசு, still born child.

சுவாசமறுக்கி, tree turmeric — Coscinium fenestratum.

சுவாசமிதகம், see நெய்சிட்டிக்கிரை, (சீதேவி செங்கழுநீர்)

சுவாசமுட்டல், மூச்சுத் திணறல், condition of being choked.

சுவாசமேற்கொள்ளல், மேல் மூச்சு வாங்கல், hard breathing.

சுவாசமேற்றல், பிராண வாயுவை சுழிமுனை நாடி வழியே செலுத்துதல், in yoga philosophy forcing the vital air through subtle passage.

சுவாசம், உயிர்ப்பு, breath, 2. சவட்டுமண், fuller's earth; 3. நன்மணம், fragrance; 4. உள்வாங்கி வெளிவிடும் மூச்சாகிய தொழிலுக்குத் தானிப்பெயர், respiration.

சுவாசம் சாதித்தல், கும்பித்துப் பழகுதல், practising suppression of breath through will power.

சுவாசம் போக்கி, தான்றிக்காய், devils abode — Terminalia belerica.

சுவாசம்வாங்கல், மேல்மூச்சிடுதல், to breath hard; 2. மூச்சை உள்ளுக்கிழுத்தல், to inhale; 3. வலது நாசியில் பிராண வாயுவை உள்ளுக்கிழுத்தல், to absorb Prana through the right nostril; 4. பூரித்தல், (in yoga) Complete inhalation of vital air for purposes or retention.

சுவாசம்விடல், மூச்சுவிடல் அதாவது பிராண வாயுவை ரேசித்தல், to exhale.

சுவாசயக்கட்டி, நுரையீரலுக்குள் காணும் கட்டி, இதில் சீழ் கோத்துத் தசைத் துணுக்குகள் ஏற்படும், a disease of the lungs marked by an abnormal cavity caused by supuration and the breaking down of the tissue — Vomica.

சுவாசயக்கபாடம், சுவாச இரத்தக் குழாய்க்கும் வலது சிரவத்திற்கும் நடுவேயுள்ள ஓர் கபாட சவ்வு, a valve at the junction of the pulmonary artery and the right ventricle — pulmonary valve.

சுவாசயந்திரம், மூச்சுக்குக் காரணமான நுரையீரல், lungs

சுவாசயந்திரிகம், மூச்சு விடும்போது மார்பின் சுவர் விரிவதும், சுருங்குவதுமான ஓர் அமைப்பு, such formation of the chest as to enable it to heave during breathing.

சுவாசயப்பை, நுரையீரலைச் சுற்றிலும் கவர்ந்துள்ள மெல்லிய சவ்வு, a thin membrane investing either lung — Pleura.

சுவாசயமுனை, நுரையீரலின் தலைப்பு, upper extremities of the lungs — Apices of the lungs.

சுவாசயேமாதிரிரசம், செப்புப் பாத்திரத்தில் மனோசிலையை வைத்து வாலுகாயந்திரத்தில் சமைத்து கெந்தி பாதரசம், குளம்பாக்கி அதில் கலந்து, பிறகு எரித்து (1/2 நாள்) கொடுக்க சுவாசம் போம். உடம்பு மேனியாகும். a medicine prepared out of red orpiment of arsenic, mercury and sulphur. The mixture is packed in a copper vessel, and burnt in sand bath. The medicine is useful in Asthma.

சுவாசரோகம், இதுவே இரைப்பு, இது காசம் விஷப்பாண்டு, விடாச்சுரம், சீதளாதி வஸ்து முதலிய காரணங்களினாலேற்படும். இதனால் மார்பிலும், விலாப்பக்கங்களிலும் குத்தல், திணறித் திணறி மூச்சு விடல், வயிற்றுப்பிசம், இளைப்பு, இருமல் முதலான குணங்களைக் காட்டும் நுரையீரல் நோய், a disease of the lungs marked by pain in the chest and on the sides hard breathing swelling of the abdomen fatigue, cough etc. see மூச்சு நோய்.

சுவாசலயம், மூச்சு விடும் போது மார்பு விரிவதற்கும் சுருங்குவதற்கும் உள்ள காலவளவு, the duration of dilatation and contraction of the chest while breathing.

சுவாசவாயு, உள்ளிழுக்கும் வெளிவிடும் மூச்சுக்காற்று, the respiratory air; 2. பிராணவாயு, oxygen

சுவாசவுறுப்பு, மூச்சுவிடுவதற்காக அமைக்கப்பட்ட உறுப்புகள், respiratory organs in the system.

சுவாசக்கினி, கொத்துமல்லி, coriander 2. see இசங்கு

சுவாசாசயம், மூச்சுத் தங்குவதற்கு உறைவிடமான நுரையீரல், the lungs which are the organs of respiration in air breathing animals. see சுவாசப்பை

சுவாசாரி, வட்ட திருப்பியைப் போன்ற ஓர் மூலிகை, a drug similar to cissampeles pareira.

சுவாசிதம், நறுங்குறிஞ்சி, see குறிஞ்சி, 2. பேராமுட்டி, fragrant pavonia — Pavonia odorata.

சுவாசித்தல், மூச்சுவிடுதல், respiring — breathing.

சுவாசினி, பாதிரிமரம், trumpet flower tree— Stereospermum chelonoides.

சுவாசுதித்தம், ஆதொண்டை, Ceylon caper — Capparis horrida.

சுவாசோதக நரம்பு, கண்டநாடி, கண்டநாளம் இவைகளோடு இணைந்து பிறகு நெஞ்சு அறைக்குள் இறங்கி, குரல்வளை, சுவாசக்குழல், புப்புசம், தொண்டை, தீனிப்பை, இருதயம் இவ்விடங்களில் பரவி நிற்கும், இந்த நரம்புகள் முகுளத்தில் உற்பத்தியாகும் இடத்தில் இருக்கிறது. இவைகள் சுவாச செயல்களுக்கு வேண்டிய வைகள் அல்லவாயினும் அச்செயல்களுக்கு வேண்டிய பிரதிகரண கிரியைக்கு இந்தப் பாகம் மிக்க உதவியாகும். The Pneumogasteric nerve or vagnus which starts from the brain (medulla oblongata) supplies not only the heart but also extends to the arteries of the neck, the larynx, the lungs, the throat stomach etc. Although it does not help for requirements of the respiratory functions it indirectly helps towards the character of respiratory impulses in a reflex manner with the result that the respiration becomes much slower.

சுவாணம், நாயுருவி, Indian burr — Achyranthus aspera.

சுவாதகத்தி, தோதகத்தி, Malabar black wood — Dalbergia latifolia.

சுவாதகந்தி, see இத்திமரம், see சுவாதகத்தி

சுவாதகந்திதம், see சுவாதகத்தி.

சுவாதக்குத்து, see சுவாதம்.

சுவாதந்திரசுரம், விஷக்காற்றினாற் காணும் ஓர் சுரம், self originated fever due to contaminated atmosphere fever due to contaminated atmosphere Idiopathic fever.

சுவாதம், சுவாசம், respiration, நுரையீரலைக் கவர்ந்துள்ள சவ்வுக்கேற்படும் அழற்சி, a disease marked by inflammation of the pleura — Pleurisy.

சுவாதகந்தி, see இத்திமரம், see சுவாதகத்தி

சுவாதகந்திதம், see சுவாதகத்தி.

சுவாதக்குத்து, see சுவாதம்.

சுவாதந்திரசுரம், விஷக்காற்றினாற் காணும் ஓர் சுரம், self originated fever due to contaminated atmosphere fever due to contaminated atmosphere Idiopathic fever.

சுவாதம், சுவாசம், respiration, நுரையீரலைக் கவர்ந்துள்ள சவ்வுக்கேற்படும் அழற்சி, a disease marked by inflammation of the pleura — Pleurisy.

சுவாதசி, திராட்சை, grape vine — Vitisvinifera.

சுவாதிக்கொக்கு, வெண் கொக்கு அல்லது நாரை, white stork; 2. உருசித்தல், tasting புசித்தல், eating.

சுவாதிட்டானம், இது மனித வுடம்பினுள் அமையப்பெற்ற ஆறாதாரத்தி லொன்று. இது இரு விரற் பிரமாணம், மூலதாரத்திற்கு மேலாக லிங்க பீடமாகவும் நாபியின் கீழாகவுமுள்ளது. இதுவே தானென்னும் மமதைக்குக் காரணம், பிரமா சரஸ்வதிக்கு இருப்பிடம், இக்கமலத்திற்கும் இதழ்களுண்டு, இதைத் தியானிக்க உலக பந்தத்தினின்று

விடுபட்டு, பிணி, சாக்காடு என்பவைகளைக் கடந்து எல்லோராலும் போற்றப் படுவன், one of the six nerve centres in the human body. It corresponds to hypogastic centre where in the selfish sentiments are alleged to be originated. It is a centre of Pranic dynamism called lotus consisting of six petals forming the seat of Brahma, the creator and Sarswati, the goddess of learning. When stimulated it originates forces conducive to the opening of higher spiritual consciousness. He who contemplates on this centre becomes generally beloved by all and obtains freedom from death and disease.

NOTE: The cerebro — spinal axis is the habitation of these nerve centres which are purely psychophysical and so the nerve flash across the ordinary human vision. It is purely the object of yogic perception. The yoga practice is chiefly aimed at freeing and developing these centres and more especially freeing the passage within the spinal cord. 2. It is situated above the first Chakra Muladar *(மூலாதாரம்)* and is in the spinal centre just behind the genital organs and the bladder. It is associated with the Tatwa of water and sense of taste. The secretion of the sex glands, the ovaries and testicles and the excretary organs, bladder, vagina, womb, and penis are all governed by this most important nerve centre. It is ruled by the planet Jupiter *(குரு)* This region of the body is sacred to Brahma.

Note 1. by C.D.: Though it is said here that this centre is associated with water & taste under *(ஆறாதாரம்)* (which see) water is associated with மணிபூரகம் and earth with this centre.

Note 2. by C.D. Each of the five Atharams or centre except the Moolatharam is said to be the seat of one of the five elements, one of the five Gods with his

consort and various number of lotus petals. From the figures that represent the centres it is clear that the angles there in symbolize the five elements. Similarly the Gods, Godesses and petals must symbolise something. The consorts of the Gods symbolize the inherent power of the gods. It is my convinced opinion that the Gods symbolize the functions of the respective centre where in they dwell; the number of the petals there perhaps represent the number of organs that perform the function.

So, Swathistanam being the seat of Brahma must perform the function of Brahma ie creation. The seat of centre is said to be the genitals, and as such, it does the functions of creation.

Manipurakam is the abode of Vishnu and his function is preservation. He gave (amirtham) ambrosia to the Devas and preserved them. Similarly, this centre feeds the body and preserves it. The seat of this centre is umbelicus, where main digestion takes place and annarasam (end products of digestion called chyme) is formed. Number of organs, placed even at a distance like salivery glands, perform this function.

Anagatham is the centre, where in Rudra dwells. Rudra is the name give to Siva when he does the function of destruction — Samaram. The seat of this centre is that of the heart. The lungs, that are there, eliminate the carbondioxide which is injurious to the body. The ductless gland thymus which is just behind the sternum aids the destruction of injurious bacteria. Thus, this centre is responsible for the destruction or removal of injurious bodies and so, its function is similar to that of Rudra. Thus, it protects the body from its enemies, the elements that may cause injury.

Visudhi is the seat of Maheswaran whose function is maraithal — concealing. The blood carries both nourishment and waste products set free by the living tissues. Substances are carried to their destination without being mixed or chemically changed on the way. Each protein, that blood carries, appears to have a special transport function — just as railway refrigerator, coal or cattle trucks have special functions. One is designed to carry iodine needed by the thyroid gland, another carries phospherous for the teeth, a third calcium for bones and so on. Thus the substances are concealed and carried. This function is attributed to this centre which is said to be situated in the neck. At the root of the neck lies the ductless glands thyroid and parathyroid. Perhaps, they are responsible for such function.

Agnai is the abode of Sadhasivan. The name, Agnai means command, bid or prescribe, and so; It can be said that it commands, other centres and controls them. Function of Sadhasivan is to give —to give plenty to those in need and ask. Its commands to other centres are such as to make them give or supply to the body what ever it is in need of and so, it performs the function of Sadhasivan. It controls other centres and links their functions. Its seat is said to be the centre of fore head. This refers perhaps to the place where pituitary is situated. This pituitary controls other ductless glands and their functions.

Mooladharam. The name indicates that it is the origin and root for all other adharams or centres. Its diety is Vigneswarar, known as Ganapathi. Without His grace no function will be completely fulfilled sometimes even evil can happen. Similarly without the aid or cooperation of this centre, the functions of

other centres will not be complete; they may be deficient or exaggerated or sometimes even a freak or something inexplicable may be produced. The name Vigneswarar, indicates it.

The seat of this centre is anus. It is represented by a triangle which symbolishes Agni. So, this may be considered to be the seat of Agni which also occupies Anagatham. Vinayagar has no consort, Kundali, a Vayu, a force dwells in that place along with him. It is otherwise known as Vallabhai.

Nerves and blood vessels:

The organs which carry out the functions of those centres are not only connected with one another by nerves and blood vessels but with every living cell in the body. It is only, through those nerves and vessels, messages and materials are received and also sent out — one set of nerves serves to bring in the messages, and another set takes out the messages.

The organs of Agnai abound with nerves, and blood vessels. They receive messages from every nook and corner of the body. As soon as the messages are received, quick appropriate decisions are made and commands are sent, through the nerves and vessels to the concerned organs to carry out the decisions.

So, it is clear, that the nerves and blood vessels act, as messengers and vehicles, and that by themselves do not make any decision.

சுவாதிதினம், *வேனிற் காலத்துக் கடுங்கோடையாகிய சித்திரை மாதத்திய சுத்திரி நாள்*, a hottest part of the summer season in April and May — Dog days.

சுவாது, ஆடாதோடை, Malabar winter Cheery — Adhatoda vasica; 2. இலுப்பை, bassia tree — Bassia longifolia; 3. *சிறு*

விடுகொள், which see; 4. சுவை, taste, 5. இனிமை, sweetness.

சுவாதுகண்டகம், நெருஞ்சில், small caltrops Tribulus terrestins, *(சுவாது + கண்டகம்)* It literally means sweet thorn. 2. *தாளிபத்திரி*, East Indian Plum — Flacourtia cataphracta. 3. ஓர் முட்செடியின் இனம், small shrubsor tress arm-ed with thorns — Flacourtia genus.

சுவாதுகண்டம், see *சுவாது கண்டகம்*

சுவாதுகதாந்திரி, வன்னி, suma tree — Prosopis spicigera.

சுவாதுகந்தி, *துளசி* holy basil — Ocimum sanctum.

சுவாதுகாதி, ஒரு பூடு, Ficus gibbosa (parasitica).

சுவாதுசீதம், தென்னைமரம், cocoanut tree. Title from its water being sweet cool and freshing as southern breeze —தென்றல்.

சுவாது சீதளம், see *சுவாது சீதம்*.

சுவாதுதித்தபலகை, ஆதொண்டை, Ceylon caper — Capparis horrida.

சுவாதுதித்தம், பெருங்கம்பிப்பூடு, large cape jasmine, Gardenia latifolia.

சுவாதுபித்தம், பெருங்கம்பிப்பூடு, Cumby resin tree — Gardenia gumifera.

சுவாதுமத்தம், பேரீஞ்சு, date tree — Phoenix dactylifera.

சுவாதுமேற்றம், ஓமை, which see.

சுவாதுரசம், *புளிமுந்திரி*, sour cashew nut tree — Anacardium occidentalis.

சுவாதுரசாயனம், முடபலா, பலாவில் ஒரு வகை —a variety of jack tree.

சுவாது வர்ணம், பொன்னாங்காணி, Alternanthera sessiles.

சுவாதுவாகி, பலாமரம், jack tree — Artocarpus integrifolia.

சுவாத்தியம், ஆரோக்கியம், healthiness.

சுவாத்தியாயம், மந்திரம் உச்சரித்தல், chanting of mantrams.

சுவாத்துமகம், ஆன்மாவோடு கூடியது, One with the soul.

சுவாநம், see சுவானம்

சுவாந்தம், மனது, mind.

சுவாபதம், துட்டமிருகம், சிங்கம், புலி, கரடி முதலியன wicked beasts such as lion, tiger, bear etc.

சுவாபாவீகம், ஏதுவினால் பிறக்காமல் இயல்பாயுள்ளது. that whish is found; natural without any means.

சுவாமி, பொன், gold, 2.கருடன், Brahimini kite.

சுவாயம், நாயுருவி, Indian burr, Achyranthus aspera, 2. நாய், dog; 3. பொன், gold.

சுவாரகண்டகம், நறுமுறுங்கை, which see.

சுவாரசம், வெள்ளி லோத்திரம், lodhra — Simplocos racemosa. 2. விளாம்பட்டை, bark of wood apple tree — Feronia elephantum.

சுவாரசியம், see சுவாரசம்.

சுவாலனயந்திரம், பெருவாரியாகக் கொளுத்தும் யந்திரம், an instrument for producing rapid and powerful combrustion deflagator, incinirator.

சுவாலிதம், மிக்க எரிச்சலுண்டாதல், a condition attened with excess of burning sensation, 2. மிகுதியாக எரிதல், burning with flam.

சுவாலிதவாதம், உணவுக் குற்றம், மிகுசையோகம், ஓயாதவேலை, இவைகளினால் பிறந்து உடம்பு

உஷ்ணம், வயிறு குத்தல், எரிச்சலுண்டாகி துன்புறுத்தும் ஓர் வாதநோய். a vatha disease caused by excessive indulgence, over worked and dietic errors, and characterised by heat in the body, burning sensation and pricking pain in the stomach.

சுவாலிலச்சாரம், see சுவாலிலைச்சாறு

சுவாலிலைச்சாறு, குங்குலியம், Yellow dammer — Boswellia serrata.

சுவாலினி, சித்திரமூலம், lead wort — Plumbago zeylanica.

சுவாலைபோடுதல், தீ மூட்டியெரித்தல், to kindle fire; 2. புடமிடுதல், to burn in grate of fire to calcine.

சுவானக்கிரக தோஷம், சிசுக்களுக்குண்டாகும் தோஷம், இது நாயைப் போல் குலைத்தல், நடுக்கல், மயிர்ச்சிலிர்ப்பு, வியர்வை, கண்மூடல், திடுக்கிட்டெழுல், பற்கடித்தல், நெஞ்சிற்குறுகுறு சத்தம், உடம்பில் பீ நாற்றம், எரிச்சல் முதலிய குணங்களைக் காட்டும். one of children's disease caused by planet, characterised by the following symptoms shivering, goose hair, sweating biting the teeth, slight sound in the throat, foctid smell in body, burning sensation, closing the eye lids and barking like dog.

சுவானசக்கரம், நாய்கடியாது விலக்கப்படுவதாகக் கருதப் படும் ஒரு சக்கரம், a magical diagram or amulet intended to prevent dog's biting.

சுவானம், நாயுருவி, Indian burr Achyranthus aspera; 2. நாய், dog; 3. பொன், gold; see சுவாயம், 4. கணங்கன் விருட்சம், அதாவது நாய்க்குட்டி மரம். which see an unkown tree with marvellous virtues. 5. ஓர் வகைக் கிரக தோஷம், an evil influence of a planet affecting children.

சுவானாபிலம், சிறு வாலுளுவை, வாலுளுவையின் சிறு விதைகள், small seeds of spindle tree — Celastrus paniculata.

சுவானாமில்பொடி,2 சர்ப்பகந்தி, snake root — Ophioxylon serpentinum see சோவண்ணமில் பொரி.

சுவானுபவம், ஆன்மாவைப் பற்றித் தானாகவே உதிக்கும் அனுபவம், self experience towards the illumination of the soul:

சுவானு பூதிகம், தன் இயல்பாய் உண்டான ஞானம், self acquired wisdom.

சுவி, see இத்திமரம், rhomboid leaved fig — Ficus infectoria; 2. துளசி, holy basil — Ocimum sanctum

சுவிகை, கச்சோலம், husk of cardamon; 2. கள், toddy.

சுவிக்கிராதம், விரம், perchloride of mercury — Corrosive sublimate.

சுவிக்கிராந்தம், சிவிக்கிராதம், which see.

சுவித்திரக் குட்டம், see தவளைக் குட்டம்.

சுவிரியம், இலந்தை, Common jujube — Zizyphus jujuba.

சுவிர்த்தி, இரும்பு, Iron

சுவீஷம், ஆத்திமல்லிகை, an unknown plant used in rejuvenation.

சுவீகரித்தல், உட்கொள்ளல், taking internally.

சுவீரியம், சுவிரியம்

சுவு, மூஞ்சூறு, musk rat.

சுவுகம், மோவாய்க்கட்டை, chin

சுவேகம், வெண்கரும்பு, white species of sugar cane.

சுவேசம், வெண்கரும்பு, see சுவேச்சம்.

சுவேச்சம், பேராமுட்டி, fragrant pavonia — Pavonia odorata; 2.வெண்கரும்பு, white coloured sugar cane.

சுவேச்சாபேசி, நம்மிஷ்டப்படி நடவாத தசை நார், in-voluntary muscle.

சுவேச்சை, தன்னிஷ்டம், One's desire.

சுவேதஅப்பிரகம், வெள்ளை அப்பிரகம், white variety of mica.

சுவேத எரண்டம், வெள்ளை ஆமணக்கு, white variety of castor.

சுவேதஎரண்டாதி சூரணம், வெள்ளை யாமணக்கு வேர், பெருங்காயம், இந்துப்பு இவை களைச் சமஎடை சூரணித்து வாதசூலை நிவர்த்திக்கு வெந்நீரில் சாப்பிடக் கொடுக்கும் ஓர் ஆ.வே. மருந்து. an Ayurvedic medicinal powder (pulvis) containing root of white castor, asafoetida and rock salt given with hot water for rheumatis pains.

சுவேதகணிகை, வெண்குருகடம், white corpuscles.

சுவேதகண்டகம், சிறு நெருஞ்சி, caltrops — Tribulus terrestris.

சுவேதகண்டங்காரி, வெள்ளைக் கண்டங்கத்திரி, white flowered thorny solanum — Solanum xantha carpum; 2. ஆனைச் சுண்டை, Solanum ferox.

சுவேதகண்டம், வெள்ளை முள் கத்திரி, white thorn brinjal — Solanum genus.

சுவேதகந்தகம், வெள்ளைக் கந்தகம், இது 4 வகையிலொன்று, சுவேதம், இரத்தம், பீதம், கிருஷ்ணம், white sulphur one of the four kinds. For others see இரத்தம், பீதம், கிருஷ்ணம்.

சுவேதகந்தம், வெள்ளறுகு, small chirella — Exacum hyssopifolium, 2. பிரம்பு, cane tree — Calamus rotang.

சுவேதகந்தாலோழி, see சுவேத கந்தம்.

சுவேதகம், சவரிலோத்திரம், which see, 2. புனல்முருங்கை, bitter moringa — Indigo fera asenata; 3. முருங்கை, drum stick tree Hyperanthra moringa; 4. விளாம்பழம், wood apple fruit — Feronia elephantum 5. அயக்காந்தம் நால் வகைகளில் ஒன்று it is one of the four kinds of load stone with a mixture of iron, Other kinds are பிரம்மகம், சம்பகம் and ரோமகம், 6. வியர்வையில் பிறப்பன, those which are born from perspiration.

சுவேதகரந்தை, வெள்ளை விஷ்ணு கரந்தை, white flowered Vishnu plant — fever plant — Sphoeranthus indicus.

சுவேத கருமம், வேது பிடித்தல், vapour bath anything done to increase perspiration; 2. வெந்நீர் ஒத்தடம் முதலியவைகளினால் வியர்வை யுண்டாக்கல், hot water fomentation to increase perspiration; 3. ஒத்தடம் கொடுத்தல், வேது பிடித்தல் முதலியன செய்கைகளால் உடம்பிற்கு சூடுண்டாக்கும் முறையை குறிக்க வந்த பொதுப் பெயர். a common term referring to the application of heat to the system in any one of the following ways viz., fomentation, vapour bath, hot water bath, warm poultice etc. which may or may not cause perspiration.

NOTE: The object of this process is not only to open out the pores in the skin but also to dilate the vessels and to release obstructions in all the passages in the body — Diaphoretic measures.

சுவேதகற்பூரம், வெள்ளை கற்பூரம், white camphor — not indentified but is said to cure insanity cough and thirst.

சுவேதகா,சிறு சண்பகம், small champak — Michelia champak; வெட்பூலா, white poolah Phyllanthus leucopyrus; 3. வெந்நீர் ஒத்தடத்தினால் உடம்பில் வியர்க்கும்படி செய்தல், causing

perspiration by hot water fomentation.

சுவேதகாண்டம், சிந்தில், moon creeper Menispermum cordifolium, 2. வஞ்சிக்கொடி, a creaper calamus rotang.

சுவேதகாம்போசனி, வெட்பூலா அல்லது வெள்ளைப்பூலாஞ்சி, white poolah — white honey shrub — Phyllanthus leucopyrus.

சுவேதகாரம், நாணல், reed — Saccharum spontaneum.

சுவேதகாரி, உடம்பில் வியர்வையைப் பிறப்பிக்கும் மருந்து, drugs or medicines which promote perspiration diaphoretic; Sudorific See ஒளதடப்போக்கு, 2. விடமருது, Poisonous murdah — Terminalia genus.

சுவேதகி, வெட்சிப்பூ, Cupids, arrow — Ixora coccinea; 2. வெண்சோளம், white Indian Millet — Sorghum vulgare; 3. மாவிலிங்கம், lingum tree — Createaeva religiosa, 4. வெள்ளை வாடாமல்லி, white ever lasting jasmine — Gomphyena globosa; 5. வெள்ளறுகு, see சுவேதகந்தம்.

சுவேதகுசுமம், வெள்ளெருக்கு, white flowered giant swallowwort — Calotropis gigantea (albiflora).

சுவேதகுசமோப்பி, see சுவேத குசுமம்

சுவேதகுட்டம், வெள்ளைக் குட்டம், White leprosy Macular leprosy.

சுவேதகும்பி, வெள்ளை சுழற்கொடி, a white variety of bonduc nut creeper — Caesalpinia bonducella.

சுவேதகூச்சரம், வெள்ளை வட்டச் சாரணை, purslane leaved trianthema — Trianthema monogyna.

சுவேதகோளம், உடம்பின் தோலினுள் வியர்வைத் தண்ணீர் தங்கி நிற்கும் கோளம், one of the glands that secrete the sweat,

located in the subcutaneous tissue (under the skin) and opening by a duct upon the surface of the skin — Sweat gland; 2. திலம், (மஞ்சாடி மரம்) elephant goomchy — Adenanthera pavonia.

சுவேதக்கினம், see சவரி லோத்திரம்

சுவேதசந்தனம், வெள்ளைச் சந்தனம், white sandal wood — santalum album. it is opposed to red sandal wood (செஞ்சந்தனம்) Pterocarpus santalinus.

சுவேதசந்திரகாஞ்சம், வெண் சந்தனம், see சுவேத சந்தனம்

சுவேதசம், வியர்வையில் பிறப்பன கிருமி, கீடம், to take origin in perspiration, beings engendered by moisture one of the four kinds of birth.

சுவேதசாத்திரம், வெண் கருங்காலி, egg fruited ebony Diospyros cocurpa.

சுவேதசாமரம், வெண்கடம்பு, see கடம்பு.

சுவேதசாரம், நாணற்புல், buffalo reed — Saccharum spontaneum; 2. வெண் கருங்காலி, see சுவேதசாத்திரம்.

சுவேதசாலி, வெள்ளையரிசி வெள்ளை நெல், White rice or paddy — சம்பா நெல், opposed to கார் நெல்.

சுவேதசிக்சை, see சுவேத கருமம்.

சுவேதசிலந்தி, இப்பூச்சியின் விஷம் பட்ட விடத்தில் கொப்புளங்கண்டு நீர் வடிந்து தாகம், மூர்ச்சை, சுரம் உண்டாகும். a kind of insect which causes blisters, fever, thirst, fainting etc.

சுவேதசுரசம், வெண்ணொச்சி, white notchy — Vitex negunda; 2. வெள்ளை நீர் நொச்சி, white flowered chaste tree — Vitex integerrima.

சுவேததளம், வெண்பாதிரி, see பாதிரி.

சுவேதத்தம், வெள்ளைக் காக்கணம், see சுவேதவாகினி.

சுவேததுாரு, வெள்ளறுகு, see சுவேத கந்தம்.

சுவேதநாதம், இந்திரியம், White seminal discharge of the male as distinguished from the red menstrual discharge of the female.

சுவேதநிறதோஷம், வெள்ளைக் கழற்கொடி, see சுவேத கும்பி.

சுவேதநீர், சுக்கிலம், semen, 2. வீரியம், Virile.

சுவேதபசலி, வெண்பசலை, white Indian spinach — Spinacia oleracea.

சுவேதபத்திரம், மூக்கிரட்டை, spreading hog weed — Boerhaavia diffusa.

சுவேதபாகவருக்கம், வியர்வையை உண்டாக்கு மருந்துகள், அவை, முருங்கை, ஆமணக்கு, எருக்கு, மூக்கிரட்டை, வெண் சந்தனம், பார்லி அரிசி, எள், இலந்தை, மாசிக்காய் முதலியன group of drugs that promote perspiration drumstick, castor, mudar, white sandal barley, Boerhaavia diffusa, gingelly seed, zizypus, oak gall.

சுவேதபாண்டு, வெண்பாண்டு, இந்நோயால் பீடிக்கப் பட்டவர்களைச் சில சமயங்களில் தான் பார்க்கலாம். இவர்கள் பார்வைக்கு வெயிலில் அடிபடாத வெள்ளைக்காரர்கள் பிரேதமாய் கிடக்கையில் எப்படி வெளுத்துக் காணப்படுகிறார்களோ அப்படியே வெளேரென்று காணப்படுவார்கள். இவர்கள் மயிரும் சணல் நாரைப் போல் வெளேரென்று தோற்றப்படும். கருவிழியும் வெளுத்துக் காணும், கண்மணியும் கருநிறமாறி, சிறுத்து செந்நிறமடையும், தரிச நரம்புசாலமும் கூச்சமுற்றுப் பார்வை குன்றுவதால் அவர்கள் நிழலுக்கு வந்தாலொழியப் பகல் வெளிச்சத்தில் பார்க்க முடியாது. அவர்கள் தேகம் மிக்க

நுட்பாயிருக்கம். வியர்வை மிக்க நாற்றம் வீசும். சுபாவத்திலேயே அவர்கள் பயந்தவர்களாகவும், எளிதில் கோபமடையக் கூடியவர்களாயு மாவார்கள். இவர்கள் நெடுநாள் உயிர்பிழைத்திருக்க மாட்டார்கள், இந்நோய் கொண்ட பெண்களுக்கோ குழந்தை யிராது, அப்படி குழந்தையிருந்தாலும் தேச வளப்பத்தின் படிதான் நிறம் ஏற்படும். whiteness of the skin hair and the eyes — Albinos. Persons affected with this are to be met with occasionally; the colour of their skin gives some what the look of adead European who had not been much exposed to the sun, their hair is like flax and the irisis of the palest greytint. their pupil instead of being dark has a subrubied appearance. It is usually found so contrancted owing to the extreme sensibility of the retina that the function, vision is imperfectly performed and consequently the man cannot see distinctly in open day, until he is brought into some shady corner. They are usually very delicate in constitution and so in their nature timid and easily irritable. They are seldom known to live to an advanced age.

The females who are victims to this disease are said to bear children very rarely but when they do their off spring is of the natural colour of the coast to which they belong.

சுவேதபாண்டு, Leukaemia.

சுவேதபித்தம், உடம்பு முழுவதும் கெட்ட நாற்றத்தை வீசும் வியர்வை, sweat emitting a bad smell; *2. கற்றாழை நாற்றமான வியர்வையை உண்டாக்கும் நோய்,* a skin disease causing perspiration with a bad odour like that of the juice of aloe.

Note by C.D: அரக்குத் தைல ஸ்நானம் இந்நோயைப் போக்கும். bath with medicated oil of lac as chief ingredient with cure this disease.

சுவேதபுட்பகம், புன்னை alexandrian laurel Calophyllum inophyllum.

சுவேதபுட்பா, பேய்த்தும்மட்டி, bitter apple Cucumis colocynthis.

சுவேதபுட்பி, மாவிலிங்கம், lingam tree — Crataeva religiosa.

சுவேதபூலா, நீர்ப்பூலா, water poolah — Phyllanthus multiflorus.

சுவேதமண்டலம், வெள்விழி, sclerotic coat of the eye, white of the eye.

சுவேதமம், ஆற்று முள்ளங்கி, which see

சுவேதமருசு, புனல் முருங்கை, oval leaved Indigo — Indigofera trita.

சுவேதமல்ல குலமீன், சாம்பல் அல்லது வெள்ளை வர்ண ஆற்று மீன், தின்பதற்குதவும், வெயில் காலத்தில் சீக்கிரத்தில் கெட்டுப்போகும். grey mullet, a river fish, good for eating.

சுவேதமாடிய கூத்தன், தில்லை மரம், tiger's milk tree — Excoecaria agallocha.

சுவேதமாலிகா, வெள்ளைச் சாரணை, one styled trianthema, Trianthema manogyna.

சுவேதமுஷ்டி, புறங்கை நாறி, an unknown plant capable of curing intense itching — prurigo.

சுவேதமூலம், வெள்ளைச் சாரணை, see சுவேதமாலிகா.

சுவேதமூலி, தொட்டால்வாடி, sensitive plant.

சுவேத மூலிகை, வெள்ளை நீர்முள்ளி, Hygrophila spinosa (alba)

சுவேதமூலை, சுவேதமூலம், which see.

சுவேதம், நேர்வாளம், Indian croton oil tree; *2.* வெள்ளை நீர் முள்ளி, a white species of நீர்முள்ளி, water thorn — Hygrophila spinosa (alba); *3.* வெண்மை, whiteness; *4.*

வியர்வை, perspiration; 5. நாணல், thatch grass, Saccharum spontaneum; 6.மாவிலங்கு, holy garlic peer tree. Cratacva religiosa; 7. வஞ்சிமரம், country willow salix tetrasperma; 8. வெந்நீர் ஒத்தடத்தினால் உடம்பில் வியர்க்கும்படி செய்தல், causing perspiration by hot water fomentation, 9. பாதசரம், mercury; 10. வஞ்சிக்கொடி, 11. நீர்வஞ்சி, see சீந்தில்கொடி, four seeded willow — sarcocephalus missions; 12.வெள்ளி, silver 13. முருங்கை, Moringa pterygosperma; 14. பிரம்பு — cane tree — Calamus rotang; 15. தில்லைமரம், tiger's milk spurge — Excoecaria agallocha.

சுவேதம் பண்ணல், வியர்வை உண்டாக்கல், causing perspiration.

சுவேதரசம், வயிற்றிலுண்டாகும் சீரணத்துக்காதிநீர், pancreatic juice.

சுவேதராசவர்த்தம், வெண்ணிறமான இரத்தினம், a white species of lapis lazuli.

சுவேதவஞ்சி, வஞ்சி மரம், see சுவேதம்

சுவேதவம், வெள்ளைப்பாதிரி, white flowered trumpet tree, Bignonia chelonoides.

சுவேதவர்ணவப்பிரகம், வெள்ளை அப்பிரகம், white mica.

சுவேதவாகினி, வெள்ளைக்காக்கணம், white mussell creeper clitoria ternatea (albiflora)

சுவேதவாடி, தொட்டாலவாடி, see சுவேதமூலி

சுவேதவிதி, உடம்பிற்கு சூடேற்றும் வழிகளை குறிக்கும் முறைகள், prescribed method or process of application of heat to the system.

சுவேதம், இது நான்கு விதம், 1. தாபசுவேதம், 2. உஷ்ணசுவேதம், 3. உபானக சுவேதம், 4. திரவசுவேதம், 1. application of dry heat by bricks etc., 2. appliction of hot steam; 3. application of hot medicinal decoctions, parts plasters etc., 4. hot hip bath, hot water bath.

சுவேதனயந்திரம், வேடுகட்டி வேகவைத்தல், steam bath got up by covering the mouth of a pot of boiling water with a piece of cloth on which is placed the medicine to be boiled or heated by steam and then covering it with another pot or lid tightly.

சுவேதனம், உடம்பில் வியர்வை யுண்டாகும்படி உடம்பிற்கு பலவிதமாகச் சூடேற்றல், application of heat to the skin in various ways so as to cause or induce perspiration, see சுவேதம்.

சுவேதனி, உடம்பினில் வியர்வை யுண்டாக்கு மருந்து, an agent promoting the flow of sweet — Sudorific; a medicine that increases or stimulates the secretion of sweat by dilating the cutaneous vessels — Sedative diaphoretics.

சுவேதனை, தன்னறிவு, self knowledge, 2.தானேயூகித்தடைந்த அறிவு, self perception; 3. தன்வேதனை, self inflited pain.

சுவேதனைக்காட்சி, அபரோட்ச ஞானம், self acquired wisdom.

சுவேதா திவாணகம், ருதந்தி, நேர்வாளம், croton seed.

சுவேதிகா, சிறுசண்பகம், small champak.

சுவேதித்தம், வெள்ளைக் காக்கணம், white musel shell creeper — clitoria ternatea (albiflora).

சுவேத்தனம், வெண்பாதிரி, white flowered fragrant trumpet flower stercospermum chelonoides.

சுவை, இரசம், juice; 2. இனிமை, sweetness; 3. அறுசுவை தோன்றற்குக் காரணமான இரசதன் மாத்திரை, subtle matter from which element is evolved

giving rise to six kinds of tastes; சுவைத்தல், to taste; சுவை ஆறு வகை, 1. இனிப்பு, sweetness 2. புளிப்பு, sourness; 3. கசப்பு, bitterness; 4. துவர்ப்பு, astringency; 5. உவர்ப்பு, saltishness; 6. கார்ப்பு, pungency or acrid.

சுவைகமம், மலையாமணக்கு, hill castor plant — tyle berry plant — Jatropha multifida.

சுவைகாணல், உருசியறிதல், to test by the tongue and palate.

சுவைக்கழட்டல், அறுசுவைக் கழட்டல், இது துறந்தோரால் செய்யப்படும், to relinquish the six kinds of taste. This is generally done by those who renounce the world.

சுவைக்காட்டல், இனிப்புக் காட்டல், to make agreeable or pleasing to palate or taste; 2. உருசியாதல், being tasteful.

சுவைக்கேடு, உருசியிழத்தல், loss of sensation of taste.

சுவைதட்டுதல், உருசிதோன்றல், finding agreeable to taste.

சுவைத்தல், போகம் நுகர்தல், to indulge in sexual intercourse, 2. உருசித்தல், to try taste by eating, 3. மெல்லுதல், chewing 4. முத்தமிடல், kissing, 5. உண்ணல், eating, 6. முலையுண்ணல், sucking the breast.

சுவைநரம்பு, உருசியை யடுத்த நரம்பு, nerve pertaining to the sense of taste — Gustatory nerve.

சுவைப்படுத்துஞ்சரக்கு, தாளிக்குஞ் சரக்கு, கடுகு, உளுந்து, பெருஞ்சீரகம், பெருங்காயம் முதலியன, condiments such as mustard seed black gram dholl, anise seed, asafoetida et. added by frying in ghee or oil to the sauce to give it relish spices used in seasoning.

சுவைப்படுத்தல், see சுவைக்காட்டல்.

சுவைப்பரீட்சை, ருசியினால் சோதித்தல், examination by the sense of taste.

சுவைப்பொருள், தின்பண்டம், eatables.

சுவைமிகுதி, அறுசுவைப் பண்டங்களைக் கிரமமாகக் கொள்ளாமல் அதிகமாகப் புசிப்பது, (உ-ம்) புளிப்பு, துவர்ப்பு அதிகரிக்கில் வாதம் அதிகம், உறைப்பு, தித்திப்பு — கபம் அதிகம், உப்பும் கசப்பும் பித்தம் அதிகம், instead of eating substances of each taste in equal measure to eat substances of certain taste more — increase of sourness and astringency rises wind humour increase of sweetness and pungency rises the phlegm humour and increase of bitterness and saltishness rises the heat humour.

சுவைமூலம், நாவில் உருசியறியும் பாகம், end organs of the gustatory nerve in the papillae of the tongue — taste bulb or taste bud.

சுவையாதீதம், சோற்றுப்பு, common salt.

சுவையிலசுவரம், செம்மரம், Amoora rohituka.

சுவையின்மை, உருசியில்லாமை, tastelessness inspidity.

சுவையுள்ள, உருசியான, palatable, sapid savoury.

சுவ்வகில், மலையிலவு, silk cotton tree growing on hills or mountains.

சுழட்டிச்செடி, கைப்பேட்டிச் செடி, an unknown shrub.

சுழலமாடுதல், தலைசுற்றல், neeling of the head, swimming of the head.

சுழலவெரித்தல், நான்கு பக்கமும் தீப்படும்படி எரித்தல், to burn so that the fire or heat is widely diffused; to heat or burn extensively so as to embrace a wide area.

சுழலல், மயங்குதல், being giddy,

2. பொறி மயங்கல், being dizzy; 3. கிறுகிறுத்தல், அல்லது சுற்றல், reeling of head; 4. அலைவுபடுதல், being restless.

சுழலாரை, see சுழலாவிரை.

சுழலாவிரை, பொன்னாவிரை, rounded poded cassia — Cassia sophera (typica)

சுழலி, மாந்த வலிப்பு, convulsions or fits from fever due to digestive disorders.

சுழலுதல், see சுழலல்.

சுழலை, ஆடுமாடுகள் சுழன்று சோர்வுற்றுத் திடீரென்று விழும் ஓர் நோய், a disease or a sort of giddiness causing cattle to fall down fatigued suddenly without apparent cause.

சுழலையாடுதல், களைப்பினால் சோர்ந்து விழுதல், droping down as from fatigue.

சுழல், see சுழல விரை, சோர்தல், fainting; 3.வளைவு, curl; 4. சுழற்சி, whirl pool.

சுழல்நோய், திடீரென விழல், இது ஆடு மாடுகளுக்குக் குண்டாகும். நோய், a disease in cattle causing them to swing and fall down suddenly.

சுழல்வண்டு, நீரில் சுழன்று கொண்டிருக்கும் ஓர் வகையான வண்டு. இது மாந்திரிகத்திற்குதவும், an insect found whirling in water — water bettle — Cybster confuses — This is useful in magic.

சுழல்வண்டு சுட்டசாம்பல், சுழல்வண்டை எரித்த சாம்பல், இதை வெள்ளுள்ளி, மிளகு வெற்றிலைச் சாற்றில் அரைத்து, கண்ணில் தீட்ட மாலைக்கண், வெள்ளெழுத்து புகைச்சல் போம், The burnt ashes of water beetle mixed with the juice of betel leaves, garlic, and pepper and applied to the eyes cures night blindness, dullness of vision.

சுழல்வண்டெரிதல், see சுழல்வண்டெரித்தல்.

சுழல்வண்டெரித்தல், பார்க்குமிடமெல்லாம் பூச்சி பறப்பது போலும் தூங்கும் போதும் அவ்வாறே தோற்றுவதுடன் கண் கூசும். கண் புகைச்சல் முதலிய குணங்களையும் விளக்கைப் பார்க்கப் பலவிதமாகவும் காணப்படும் ஓர் கண்ணோய் (அக-நயன -விதி) a disease of the eye in which the vision is severely affected due to a derangement of the muscular coordination of the eye. It is marked by a condition of a subjective appearance in which mote appears to be floating where ever seen both in a waking state and in sleep, extreme sensitiveness to light dullness of vision etc.

சுழல்விழியெரித்தல், கண்கள் பலவிதமாக எரித்து நேரே விழிக்கவொட்டாது. இமைகனத்து, கீழ் தொங்கி, அரிப்பும் சாந்த வலியும் காணும் அன்றியும், கண்ணில் பீளைகட்டித் தூக்கம் பிடியாது நீர் வடிந்து துன்புறுத்துமோர் கண்ணோய், an affection of the eye marked by varied sensation of burning inability to look straight at an object, thickening and drooping of the eye-lids, itching and slight pain, mucopurulent and watery discharge, sleeplessness etc.

சுழற்கண், சுற்றுக்கண், which see.

சுழற்கத்தி, கண்ணின் படலத்தை அறுப்பதற்காக உபயோகிக்கும் ஓர் சுழலும் கத்தி, a kind of knife used in circular extraction of cataract.

சுழற்காய், see சுண்டைக்காய்

சுழற்றல், கிறுகிறுப்பு, a whirling or giddy sensation; giddiness.

சுழற்றி, கருவண்டு, a black beetle; 2. சுழற்கத்தி, which see.

சுழற்றிந்துகம், பின்தொடரி, an unknown plant with psychic virtues and useful in magic.

சுழற்றியடித்தல், பெருவாரி நோய்களில் உயிரைக் கொள்ளை கொண்டு போதல், sweeping away of innumerable lives in

epidemics; 2. *புயற்காற்றடித்தல்*, fierce blowing of wind in stormy weather.

சுழற்றிடுபில்லம், *விழியழற்சி* *சதை வளர்த்தி கருவிழி குவிந்து* சிறுத்தல், an eye disease causing inflammation of the eye growth flesh and shrinking of the black portion of the eye.

சுழ்ற்றுதல், கிறுகிறுக்கச் செய்தல், causing giddiness.

சுழணி, வலம்புரிக்கொடி இது குழந்தை நோய்களுக்குதவும், a kind of creeper whirling on to the right side — It is used in children's diseases.

சுழணோய், see *சுழல்நோய்*

சுழாரை, see *சுழாலாவிரை*.

சழாவிரை, see *சுழலாவிரை*.

சுழி, விந்து, semen, *மயிர்ச்சுழி*, hair curl *3. சுழிமுனை*, which see; *4.* தலையெழுத்து அல்லது விதி, fate, *5. அங்கச்சுழி*, lucky symptoms on the body *(1.அங்கச்சுழி 2.உரோமச்சுழி, 3.தொப்புட்சுழி 4. அட்சரச்சுழி, 5.நீர்ச்சுழி, 6.இலக்கணச்சுழி, 7.உச்சி*, summit.)

சுழிகை, *கள்,2* toddy.

சுழிகோதை, *பீனசப்புல்*, a kind of grass — title perhaps from its usefulness in catarrh of the nose.

சுழிக்கணம், குழந்தைகளுக்கு நளிர்சுரம் கண்டு மூச்சு மேலிட்டு, கண் பஞ்சடைந்து உச்சிக் குழியாயிருக்கும். உடல் நொந்து நெஞ்செரிச்சல் காணும் ஓர் கண் நோய், a disease in children characterised by cold and fever, hard breathing, hazy vision bodily pain etc due to tabes mesentrica.

சுழிக்கணரோகம், குழந்தைகட்கு, கண்சொருகி, ஈரல், நெஞ்சு சிவந்து பாலுண்ணாது வயிறு பொருமி இருமல் காணும் ஓர் வகைக் கண்ணோய், a congenital disease in children brought about

by excess of heat in the system. It is marked by upturning or whirling of the eye ball inflammation of the lungs aversion to milk rumbling noise in the stomach, cough etc.

சுழிக்கணை, see *சுழிக்கண* ரோகம்.

சுழிகணைவலிப்பு, குழந்தைகட்கு கணரோகத்தினால் காணும் வலிப்பு, convulsions or fits in children due to congential heat.

சுழிக்காற்று, சூறைக்காற்று, whirl wind.

சுழிக்குதல், see *சுழித்து* வாங்குதல்.

சுழிதல், இறத்தல், dying.

சுழித்தல், கண் குழிதல், sinking of the eyes through old age; 2. முகம் சுருங்குதல்.

சுழித்து வலித்தல், மூச்சு விடுங்காலை இசிவுடன் வலித்தல், spasams in breathing.

சுழித்து வாங்குதல், *கண்சுழல்*, whirling of the eyes, 2. *சுருட்டியுள்ளே யிழுத்தல்*, twisting and drawing in; *3.* கண் *சுழித்து உள்ளே வாங்குதல்*, rolling and absorbing in are withdrawing as eyes; *4. மூச்சை சுருட்டி உள்ளேயிழுத்தல்*, having spasmadic and painful breathing; 5. *மூச்சுக் கஷ்டத்துடன்* வெளிவருதல், hard breathing.

சுழித்தோடல், நாடி *சுழன்று* ஓடல் இது ஓர் *மரணக்குறி*, whirling and drawing in of the pulse — this is a death sign.

சுழிப்பிழையன், கெட்ட *சுழியுள்ளவன்*, one who has bad marking on the body.

சுழிமாந்தக் கழிச்சல், குழந்தை களுக்குச் செரியாமையினா லேற்படும் பேதி இதில் கண்கள் சொருகும், purging or distortion of bowels in children due to indigestion marked by whirling of the eyes.

சுழிமாந்தம், குழந்தைகளுக்குச் *சுரம் காய்ந்து*, கண்கள் *சுழித்து*

விக்கல், கக்கலுடன் முலை உண்ணாது, இரைப்பு, இருமல் காணுமோர் மாந்த நோய், an indigestion in children followed by fever, rolling of eyes hiccough vomiting, aversion to milk, hard breathing, cough etc.

சுழிமாந்தம், see சுழிமாந்தக் கழிச்சல்.

சுழிமுனை, சுழிமுனை நாடி, உடம்பில் பரவி நிற்கும் தசநாடிகளில் மூலாதாரத் திலிருந்து ஆக்கினைவரை வீணாதண்டு மூலமாயோடி உச்சியில் அச்சுருவாணியாய் நிற்கும் ஓர்நாடி, இது அஸ்தி பிரம்மலோக பிராப்திக் காரணமாகி நிற்கும் ஆதாரம் ஆகையால், இதற்குப் பிரமதண்டம் என்று பெயர், மேற்கண்ட பிரம்மலோக பிராப்திக்கு முறைப்படி உபாசனை செய்தவர்களை இந்நாடி பிரம்மந்திர மூலமாய் சூரிய மண்டலம் வரை ஓடிப் பிரம்ம லோகத்தை அடையச் செய்யும் பரஞ்சோதி சொரூபியாகிய பரப்பிரம்மம் இந்த நாடியில் வசித்துக் கொண்டிருக்கிறார். இந்நாடி தான் சுத்தப்பிரமத்திற்கு ரூபமாய் இருக்கும் சூரிய சந்திரய அக்கினிக்கும், பஞ்சபூதங்களை ஏழு கடலுக்கும் இன்னும் மற்ற 64 கலைக்கியானம், வேதம், மந்திரங்களுக்கும் ஆதாரமானது.

இதற்கு நடுநாடி என்றும் பெயர். ஏனெனில் இது இரண்டு பாதங்களின் அங்குட்ட விரல்கள் முதற்கொண்டு தேக மத்திய கந்தஸ்தானவரை இரு கிளையாய் ஓடி அதற்கு மேல் பிரமந்திரம் வரையில் ஒரு கிளையாகவும் ஓடி ஆறாதாரச் சக்கரங்களையும் அதற்கு மேல் துவாதசாந்தவரையில் நான்கு சக்கரங்களையும் வியாபித்து பிரமந்திரம் வரையில் சகள ரூபமாகவும் அப்பால் துவாத சாந்தம் வரையில் நிட்கள ரூபமாகவும் இருக்கும். One of the ten nerves or arteries spreading through the human body and extending from the nerve centre at the sacral region up to that at the cerebral region find; it lodgment at the crown of the head; 2. நடுநாடி மூன்றில் ஒன்று, இது யோகிக்கு மாத்திரம் செயல்படும். இது வாசிக்கு நடுநிலையாதலால் புருவமத்தியெனக் கொள்ளப் படும். One of the three main currents of Prana in the human body and its functions only in yogi. It is the place of union for breath of both nostrils and this place is supposed to be between the two eye brows.

NOTE: 1. It is one of the passages of the nerve centre at the top of the vertebral column running down though the spinal card. The importance of this passage will be seen only when one comes to practice. This centre is in all probability the seat of vitality and of life. According to Siddhar's yogi philosophy, this 'Sulimunai' *(சுழிமுனை)* is the spinal column with all its ramifications. Within this Sulimunai is a hollow called chitra and it is in this hollow or the empty channel the Divine Spirit is supposed to dwell. It is said that every one of the six dynamic centres *(ஆறாதாரம்)* pulsates with the vibrations of the great stream current which sulimunai receives from the Great life Principle and that the great energy playing on sulimunai gives the motive power which enables the respective parts of the human organism to function.

It appears that there is correspondence between the human system and the zodiac and the planets and that Sulimunai governs Sagit tarins and Pices. The Siddha works speak volumes of the importance of this Sulimunai located for practial purposes between the eye brows. For further details see the Tamil works of Siddhars.

NOTE: 2. The sushumuna is not a force and does not pass and impinge upon anything but is the outer of the three Nadis which form the conduit for the force which is the arousing of the Devi called Kundalini; the cosmic power in bodies which force is not itself

a Nadi but passes through the inner most or chitra nadi, which terminates at the 12 petalled lotus below the Sahasrada from which ascent is made to the Brahmarandhra.

சுழிமுனை, யோனி லிங்கத்திற்கும் இப்பெயர், a misnomer for clitoris.

சுழிமுனை கோளம், see அமுதநிலை, Pitiutary gland.

சுழிமுனை திறத்தல்

சுழிமுனைமூளையன், மூளையின் அடிப்பாகம் பருத்தவன், a large headed idiot having a swollen lower brain — Mala mencephalon.

சுழிமை, வாயு உள்ளே பூரித்தல், Inhalation of the vital air.

சுழியச்சு, பொன்னை உருக்கி வார்க்கும் அச்சு, casting mould as of melted gold etc.

சுழியல், ஆண், பெண் மயிர், man and woman's hair; 2. கள், toddy.

சுழியோகம், சிவயோகம், இது, 64 யோகங்களிலொன்று, இது மற்ற யோகங்களைக் காட்டிலும் மிகச் சிறந்ததும் மேன்மையானது மாகவுள்ளது. சாதாரணமாய்ப் பிரகிருதியிலுள்ள ஆன்மா வானது மனித உடம்பினுள் இடகலை பிங்கலை சுழிமுனை யென்னும் மூன்று நடுநாடிகளின் மூலமாய்ப் புகுங்கால் 12 தத்துவங்களின் காரணமாக மாயையினாற் சிக்கி மனித வாழ்க்கையை ஓர் கனவைப் போல் பொய்யாக்கும், ஆகவே, உடம்பின் தத்துவங்களை நீக்கி மாயையைவென்று மனதை லயப்படுத்த இவ்வழியே சிறந்தது. இதனால் மனது பரிசுத்தமாகி மனோவலிமை வலுத்துச் சைதன்னிய நிலையையடைய ஏதுவாகும். அன்றியும் சமாதிக்கும் வழியுண்டாகி ரிஷிகளும், யோகிகளும் பரமாத்துமாவில் ஐக்கியப்பட்டு இலிங்க வடிவமாக விளங்குவார்கள்.

Sivayogam — This is one of the 64 yogas and is by far superior to other kinds and is counted as

the highest form of development because its aim is directly spiritual. Its philosophy teaches that man's existence is a mere delusion which arises from the genesis of the so called 12 faculties due to the circulation of the universal spirit through the human body in a triple set of hollow vessels or channels viz. Idagala Pingala and Sushumuna. It aids the growth of mind the evolution of the loftier mental faculties, the rising on to the higher intellectual plances and the passing into states of consciousness far beyond the reach of ordinary humanity. The practice of this yoga leads to the attainment of Samadhi. the Rishis and Yogis after remaining as long as they liked in the condition of absorption in the Infinite, metamorphose their bodies into Lingams.

சுழுத்தி, நினைவு கெட்டுத் தன்னை மறந்து நித்திரை செய்யுங்காலத்து, பிராணவாயு சத்தம், ஆக இரண்டு கருவிகளைக் கொண்டு ஆன்மா இருதயக் கமலத்தினின்று உடம்பைப் பாதுகாக்கும் நிலை, இது சித்தம் பிராணவாயு இரண்டுடன் இருதய கமலத்தில் வந்த போது தான் கண்டதை யொன்றும் பிறருக்குச் சொல்ல இயலாது உள்ள நிலை, In the yoga philosophy it is a state of insensibility to one's surroundings, when the soul is said to take its a stand in the region of the heart with the aids of vital power and sound and guard the human body trance.

2. சப்தா வஸ்தையிலொன்று, in the Agama Philosophy an intellectual faculty that argues future events from the present circumstances.

3. மயக்கமான நித்திரை, deep sleep — a state of deep thought or abstraction — reverie.

4. மூன்றாம் வஸ்தை அதாவது இதயத்தானம், the thrid stage dreamless slumber.

5. புலன்கள் செயலற்ற தன்னையறியாமல் ஆழ்ந்த

நித்திரையில் இருக்கும் ஓர் நிலைமை, cosmic dreamless state.

சுமுந்து, see சுளுந்து

சுமுப்தி, see சுழுத்தி

சுமுமுணா, நடுநாடி, see சுழிமுனை

சுமுமுனை, see சுழிமுனை

சுமுனா, see சுழிமுனை

சுமுனை, see சுழிமுனை

சுளகம், உள்ளங்கை, palm

சுளக்கி, பவளப்புற்று பாஷாணம், a kind of arsenic.

சுளட்டி, வட்டச் சுளட்டி which see

சுளி, புளியாரை, sour sorrel — Oxalis corniculata.

சுளிகா, வாகை, sirissa tree — Albizzia lebbek.

சுளிகாமேற்புல்லுருவி, வாகை மரத்துப் புல்லுருவி, a parasite on sirissa tree.

சுளிகை, முருங்கை, drum stick tree — Hyperanchera moringa — Moringa pterygosperma; 2.பாலை, iron wood tree — Mimusops hexandrus.

சுளிக்கு, ஊன்றுகோல், leaning staff.

சுளிசனம், see சுளிகை.

சுளுகன், புளிப்பிறண்டை, hairy wild vine — Vitis setosa.

சுளுகு, நுட்ப அறிவு, keen intellect.

சுளுக்கான், தூணியாங்கிஷம், an unknown plant.

சுளுக்கு தசை, நரம்பு பிசகுதல் அல்லது நரம்புப் புரட்சி — sprain, 2. மூட்டுபிசகி சவ்வுகளுக்குக் காணும் தாபிதம், the wrenching of a joint with inflamation of the mucous membrane or partial rupture of other injury of its attachments — sprain.

சுளுக்குக் காய்ச்சல், சுளுக்கினால் ஏற்படும் சுரம், இதற்கு, கொத்தமல்லி, திரிகடுகு, பேராமுட்டி, கஷாயமிட்டுக் கொடுக்கத் தீரும், fever following the sprain or fracture — fracture fever.

சுளுக்குச் சுரம் see சுளுக்குக் காய்ச்சல்.

சுளுக்குதல், see சுளுக்கு; 2. மூட்டுப் பிசகுதல், dislocation of joint; 3. முகத்தைச் சுளுக்கல், gross looking.

சுளுக்கு நாயகம், கைகால் சுளுக்கைப் போக்கும் ஓர் விதப் பூண்டு, இது பலவீனத்தால் வந்த சுளுக்கு, சாதாரணமாக ஏற்படும் கைகால்களுக்கு இரத்தம் கட்டியதற்கு மேற்காணும் ரத்தத் தடிப்பு முதலியவைகளுக்கு மேற்பூச்சு மருந்தாக வுபயோகிக்கக் குணப்படும், a medical plant capable of removing or curing all kinds of sprain such as one arising from weakness or debitlity or ordinarily as the limbs arms and legs — swelling of the joints through rigidity.

சுளுக்குப் பார்த்தல், சுளுக்கைச் சோதித்தல், examining the sprain or dislocation; 2. மந்திரித்தல், uttering magic.

சுளுக்குப் பிடித்தல், see சுளுக்கேறுதல்.

சுளுக்குருவல், சுளுக்கு வழித்தல், a message with medicated oil to bring relief or for curing sprain.

சுளுக்கு வாங்கல், சுளுக்குருவல்.

சுளுக்கெடுப்போன், எலும்புமுறிவு, சுளுக்கு முதலியவைகளைத் தீர்ப்பவன், a authorised person who professes skill in treating fractures and dislocations — Bone — selter.

சுளுக்குகேறுதல், சுளுக்குப் பிடித்தல், to be sprained.

சுளுக்கேற்றிவிடல், சுளுக்கு அதிகப்படுத்தல், causing sprain to grow worse by improper handling or massage.

சுளுந்து, proper spelling is சுழுந்து — கோரான். இதுவே சுளுந்துக் கோரான் அல்லது வெள்ளை வெட்சி, ஓர் சிறியமரம். இலை முனை சிறியதும் பளபளப்புள்ளது. வாசனையுள்ள அனேக பூக்களையுடையது. வெள்ளை அல்லது சிறு சிவப்பு நிறம். பங்குனி சித்திரையில் பூக்கும். இப்பூக்களை மாலையாகக் கோத்துக் கழுத்தில் அணிவதாலும், பூக்களைப் பாலில் நசுக்கி உள்ளுக்குக் கொடுப்பதாலும் கக்குவான், இருமல், குணப்படும். சிவப்பு வெட்சி என்றும் ஓர் இனம் உண்டு. பிரயாணிகளுக்கு தீவர்த்தியாக உபயோகப்படும். This is a small baring white fragrant flowers in the months of March and April, flowers administered with milk cures whooping cough and cough. Torch tree — Ixora parviflora.

சுளுந்துக்கட்டை, கோரான் குச்சு, பிரயாணிகளுக்கு தீவர்த்தியாக உபயோகப்படும், twig of jungle geranium used by travellers a torch.

சுளுந்துக்கோல், சுளுந்துக்கோவா see சுளுந்து.

சுளை, பலாச்சுளை, the pulp of jack fruit — of Artocarpus integrifolia.

சுளோம்புசம், நீர்க்கடம்பு, water cadamba — Stephegyna parviflora.

சுள், உறைப்பு, pungency, acrimony; 2. see சுள்சுள்ளெனல், 3. கருவாடு, dried fish.

சுள்சுள்ளெனல், உடம்பின் தோலிற் சுருக்கெனக் குத்தல், a pricking sensation, felt in the skin, generally due to prickly heat.

சுள்ளக்கம், வேர்க்குரு, prickly heat.

சுள்ளக்காய், மிளகாய், red chilli — capsicum frutescens.

சுள்ளம், see சுள்ளக்கம், 2. கோபம், anger.

சுள்ளலன், மெலிந்தவன், an emaciated person.

சுள்ளலி, ஒல்லி, அதாவது உயரத்திற்கு தகுந்த பருமன் இல்லாத பெண்,a thin or viry girl whose body bulkiness is not proportionate to her height.

சுள்ளாப்பித்தல், சூடுகாட்டல், rendering hot; 2.எரிதல், burning.

சுள்ளாப்பு, உறைப்பு, pungency; 2. வெப்பம், heat.

சுள்ளான், see சுள்ளெறும்பு, 2. ஓர் வகைக் கொசு, a kind of mosquito.

சுள்ளி, அனிச்சபூடு, pimpernel — Anagallis arvensis; 2. ஆச்சாமரம், ebony tree — Diospyros ebenum; 3.ஞாழல், a species of fragrant tree crocus sativus; 4.கதம்பம், different shrubs used in perfumes and unguents; 5. மாமரம், mango tree — Mangifera indica; 6. ஆச்சா, falre frankincense — Hardwickia pinnata; 7. மல்லி, jasmine, 8. மயிர்க் கொன்றை, royal gold mohur — Poincinia regia; 9. நாகதாளி, snake charming root — cucumis anguinus; 11. குங்குமம், kemela dye Mallotus phillippinensis; 12. எலும்பு, bone; 13. நாகமல்லி, ring worm root — Rhina canthus communis; 14. கற்பூர வகை, cinnomum genus.

சுள்ளிடுதல், உறைத்தல், being pungent to taste; 2. வலித்தல், paining; 3. மனம் வருந்தல், being troubled in mind — afflicted.

சுள்ளிடுவான், சுள்ளெனக் கடிக்கு மோர் பூச்சி, தெள்ளுப்பூச்சி, 2. மிளகு, pepper; 3. மிளகாய், chilli.

சுள்ளு, கள், toddy, 2. வெப்பம், heat.

சுள்ளுக்கருவாடு, ஓர் வகைச் சிறிய கருவாடு, a kind of small dried fish.

சுள்ளுசுள்ளெனல், வாயு முதலிய உபத்திரவத்தாலுண்டாகு மோர் குத்தல் நோய், a minute pain experienced at times due to deranged Vayu in the system.

சுள்ளுப்பூச்சி, see சுள்ளிடுவான்.

சுள்ளெறும்பு, சிவப்புக் கொள்ளி எறும்பு, a species of red ant — the biting of which causes burning sensation.

சுறா, see சுறாமீன்.

சுறட்டுப்பிடி, முரட்டுப்பிடி, holding tightly and roughly.

சுறட்டுவலி, தொந்தரையான வலி, persistent pain giving much trouble, 2. குறட்டை வலி, cramb; 3. குறண்டல்வலி, spasmodic pain.

சுறட்டைத்தலை, பொடுகு தலை, dandruft.

சுறணகி, காட்டுக்கருணை, wild suran Synantherias sylvatia.

சுறணம், காறாக்கருணை, white yam — Amorphophallus campanulatus — Dracontium poly phyllum.

சுறண்டல், see சுறண்டுதல்.

சுறண்டவம், புனம்புளி, sweet babool — Pithecollobium dulce or Pithecellobium dulce.

சுறண்டி, ஓர் கறண்டி, a kind of spoon for scraping — scraper.

சுறண்டுதல், சுரண்டியெடுத்தல், removing by scraping as in wound.

சுறவம், see சுறவு

சுறவு, புறா, dove, 2. சுறா,2 shark fish, 3. சுறாவினம், fish of shark family.

சுறவுக்கோடு, சுறாமீன் கொம்பு, jaw bone of the sword fish.

சுறவை, சுரப்பு அல்லது வீக்கம், swelling; 2. உணர்ச்சி, sensitiveness; 3. சுறுசுறுப்பு, diligence; 4. சுள்ளக்கம்.

சுசுறா, சுறாமீன், shark fish; 2.மகரமீன், shark — Selachoidei; 3. கோலா மீன், flying fish swordfish — xiphis gladius; 4. கள், toddy, 5. நாய்மீன், dog fish; 6. கொட்டைவாளை, two spotted shark — butter fish — callichrous bimaculatus.

சுறா, கடல் மீன்களில் ஓர் பெரிய இனம், இது மிக்க அபாயத்தை விளைவிக்கக் கூடியது, பிடித்தால் விடாது, சில செம்படவர்கள் சுறுசுறுப்பாக யிருந்தாலொழிய, தவறித் தண்ணீரில் விழுந்தால் அதினின்று தப்பித்துக் கொள்ள முடியாது. ஆனால், சிலர் கை, கால் இழந்தும் தப்பித்துக் கொள்வர். இதைப் பிடித்துப் படகேற்றும் போது தான் சாத்ரணமாய், அபாயம் ஏற்படும். இதன் கறியைப் பற்றி அகத்தியர் தமிழ் வைத்திய நூல் 1000த்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இது உடம்பின் வாயுவைப் போக்குமென்றும், கைகால் பிடிப்பு முதலிய வாத வலிக்கு மிக்க பிரயோசனமான தென்றும், ஆகவே பத்தியத்திற் குதவும் பண்டமெனவும், கருதப்படும். இதன் ஈரலினின்றும் எண்ணெய் எடுக்கப்படும். முற்றாத நடுத்தரமான இனத்தின் கறிகருவாடாக உபயோகப் படும். இதன் சிலுவிலிருந்து ஈனத்தார் சூப் செய்து குடிப்பார்கள். இது சாதாரணமாய் கருப்பு, சாம்பல் நிறம், சிவப்பு, வெண்மை என நான்கு வகை உண்டு. அன்றியும் சம்மட்டித் தலை, இரட்டை புள்ளி, மஞ்சள் நிறம், குதிரையினம் முதலிய பல வகையான ரூபங்களோடும் கூடியனவாய் இருக்கும். a voracious sea fish of gigantic size and is very dangerous, capable of causing great accidents. It carries away fisherman diving in the sea; if they are a little careless, or persons gathering shells or those who accidentally fall into the water. If it once seizes a man it never lets go. In rare cases agile man may escape with the

loss of hands or legs. The most frequent accidents occur only when they are hooked and lifted up to the fisherman's boat.

Tamil Medical writers such as Agastiyar, Bogar, Yugimuni and others have elaborately written on the subject. Its flesh is said to have great medical virtus and as such is used in several diseases as flatulency, arthrities, rheumatic affections etc.

The species of this genus are black, grey, white, red in colour and of various descriptions as hammer headed, varied snout, zebra etc. It consists of different varieties as mentioned under:

1. குரங்கன்சுறா — dog fish — chiloscyllium indicum; 2. tiger shark — Stegostoma tigrinum.

2. வழுவன்சுறா — yellow shark — galeocerdo rayneri.

3. செஞ்சுறா red shark — carcharius acutus.

4. புள்ளிச்சுறா அல்லது சொட்டைவாளை — spotted shark — callichrous limaculatus.

5. கொம்பன்சுறா —hammer headed shark — Sphyrna blochii.

6. வெள்ளைச்சுறா —grey white shark Pristis dubius or P — zyston.

7. பால் சுறா — dun shark — Mustelus vulgars.

8. மணிச்சுறா —black shark— Carcharius menisorrah.

9. ஓங்கிற்சுறா —

10. மட்டிச்சுறா —

11. வெண்ணெய்ச்சுறா — butter shark

12. கோலாச்சுறா—

13. வெள்ளைக் கோலாச்சுறா

14. காலன்சுறா —

15. நெளிஞ்சுறா.

16. ஆரணிச்சுறா —arni shark

17. பேய்ச்சுறா —devil shark —

18. மேயுஞ்சுறா

19. ஓர் கொம்பன் சுறா one tusked shark — zyaena blochii c.f. கொம்பன் சுறாய் No.5.

20. புடுக்கன்சுறா, scrotal shark

21. புலிச்சுறா, tiger shark — or zebra shark scyllium hepta gonum.

22. பறங்கிச்சுறா — English hammer headed shark— zygaema malleus.

23. பருவாய்ச்சுறா —wide mouth shark carcharius genus Squalus russelli.

NOTE: No.1 is common at Madras and favourite food of this fish is molluses (சிப்பி), No.2 is of considerable size and is exceedingly fierce, eats seasnakes. No.3 attains considerable size and is found on Malabar coast. No.4 is an excellent food and is considerably used by Europeans. No.9 dives deep to the bottom of the sea.

சுறாக்களிறு, ஆண் சுறா, male shark

சுறாக்கறி, இது ஒரு பத்திய பதார்த்தம், இதனால் வாத கப ரோகங்களும் குடல் விருத்தி, உடம்பு வலி போகும், பிரசவித்தப் பெண்களுக்கு இதைக் கொடுக்க பால் சுரக்கும். அனேக நோய்களைச் சாந்தப்படுத்தும். It is useful even for those who are on diet. It relieves bodily pain and many other diseases. It increses secretion of milk.

சுறாக்கொம்பு, see சுறவுக்கோடு.

சுறாச்சிறை, சுறாமீன் இறகு, shark fins.

சுறாத்தலைக்கல், சுறாமீன் தலையிலிருந்து எடுக்கும் கல். இது மாந்திரீகத்திற் குதவும், a stone in the shark's head. used in magic.

சுறாத்துருமம், தேவதாரு, deodar tree — Erythroxylon monogynum.

சுறாத்தோல், பதப்படுத்தாது சுரசுரப்பாயிருக்கும் சுறாத் தோல், a kind of leather with a granulated surface prepared without tanning from the skin of a shark — Shagreen.

சுறாநெய், இவ்வெண்ணெய் வழவழப்பாயும் வெகுட்டலை யுடையதாயுமிருக்கும். இது இருமல் வாதரோகம் இவைகளை நீக்கி உடம்பிற்கு வலுவைக் கொடுக்கும். இந்நெய்க்கு சுறாநெய், திருவாதாங்கேட்டுநெய், மங்கார நெய் என்றும் பெயர் — Shark oil used as a substitute for codliveroil.

சுறாப்பாரை, ஓர் கடல் மீன், sea fish — shark pauray — caram rottleri; 2. see குமரப்பரை.

சுறாமீனெய், புதிய சுறாமீன் ஈரலை நீரிலிட்டு கொதிக்க வைத்து தயாரிக்கப்படும் எண்ணெய். It is a fine amber coloured oily liquid with a fishy odour. It is more disagreeable and tastes more strongly then codliveroil. It is nutrient, demulcent, and alterative.

சுறாமீன்செப்பட்டை, சுறாமீன் சிறகு, shark's fin.

சுறாமுள், சுறாமீன் எலும்பு, shark bones.

சுறாவேறு, see சுறாக்களிறு

சுறிஞ்சான், see சுரிஞ்சான்

சுறிமுகத்தந்தம், யானைக் கொம்பு, elephant's tusk.

சுறிரெனக் கடித்தல், கொட்டுதல், sting as a scorpion, or ant or honey bee etc. 2. கூர்மையான வலியுண்டாகும்படி கடித்தல், biting vehemently so as to cause acute pain; 3. கடுத்தல், stinging pain.

சுறீரெனல், see சுறீரெனக் கடித்தல்.

சுறீரென வலித்தல், கடுத்து வலித்தல், shooting or quick darting pain.

சுறு, சுட்ட தசையிலிருந்து வரும் கெட்ட வாசனை, சுடுநாற்றம், ·ad smell emitted, when flesh burnt.

சுறுக்கிடல், see சுருக்கிடல்.

சுறுக்கிட்ட சுண்ணம், see சுருக்கிட்ட சுண்ணம்.

சுறுக்கு, காரம் pungency.

சுருக்குசம், சதுரக்கள்ளி square spurge — Euphorbia antiquorum.

சுறுக்குத்தாக்கல், see சுருக்குத் தாக்கல்.

சுறுக்கெனல், கடுத்தற் குறிப்பு stinging — smarting.

சுறுக்கொள்ளுதல், மயிர்க்கூச்சல், மயிர்சிலிர்த்தல், hairs standing on ends — rough bristing state of skin produced by cold or fright — goose flesh or skin; 2. தீயிந்து போதல் — to become chared or scorched.

சுறுமாக்கல், அஞ்சனக்கல், black antimony.

சுறை, கொத்தான், a twiggy plant called green thread creeper — cassytha filiformis.

சுறோணிதம், see சுரோணிதம், 2. விந்து, semen verile; 3. நாதம் semen mulibre ovum; 4. வழலை, a preparation from menstrual blood used in Alchemy; 5. இரத்தம், blood; 6. பெருச்சாளி, bandicoot; 7. see அனிச்சம் —Pinepernal — Anagallis arvensis.

Note by C.D. (It is note a tree)

சுறோணிதவழலை, இந்துப்பு, rock salt.

சுறோணித விருத்தி, செஞ்சந் தனம், red sandal — Pterocarpus santalinus.

சுறோணிதவுப்பு, இந்துப்பு, rock salt.

சுற்பம், செம்பு, copper.

சுற்றல், சிலைமண் சுற்றல், coating as with clay to a vessel intended for calcination. 2. சுற்றுதல், to coil round something winding; 3. தலை சுற்றுதல், reeling of the head; 4. சிலை சுற்றல், dressing as of a wound.

சுற்றாடை, கட்டுத்துணி, a strip of cloth used in dressing Bandage; 2. மாதவிடாயின் போது பெண்கள் உள்ளாகச் சுற்றிக் கொள்ளும் பழஞ்சீலை, a strip of old cloth used by females as an under wear during menustrual period, 3. பிரசவித்த பெண்களுக்கு வயிற்றை இறுகச் சுற்றுவதற்காக உபயோகப் படுத்துஞ்சீலை, a tight bandage used round the abdomen of women immediately after delivery.

சுற்றிடமயக்கல், தலை சுழலும்படி மயக்கமுண்டாதல், giddiness followed by whirling of the head.

சுற்றில் பிடித்தல், see சுருட்டிப் பிடித்தல், 2. வயிற்று வலியால் வரும் உபாதை, spasm or griping pain from colic.

சுற்று, விரற்சுற்று, whitlow; தலைச்சுற்று, reeling of the head.

சுற்றுக்கண், சுழற்கண், whirling eye.

சுற்றுக்குடல், வயிற்றைச் சுற்றிக் கொண்டிருக்கும் குடல், that portion of the intestine attached to the abdominal wall by the fold of peritonium — Mesentery.

சுற்றுக் குலைவு, இமையைச் சுற்றிலும் மயிர் உதிர்ந்து அவ்விடத்தில் விரணம், நீர்வடிதல், வீக்கம், வலி இவைகளை யுண்டாக்குமோர் கண்ணோய், a disease of the eye lids an ulcerous form of marginal blepharitis marked by chronic inflammation of hair follicles and sebaceous glands of the margin of the eyes — Blepharitis ulcerosa — B. marginates.

சுற்றுக்கொடி நஞ்சுக்கொடி, naval card

சுற்றுக்கொழுப்பு, கொழுப்புக்குடல், the lower part of the intestine or colon the outer part of which is covered with fat.

சுற்றுதல், சுற்றிப்போதல், taking a circutous root as blood in circulation; 2. கிறுகிறுத்தல், giddiness; 3. வளைந்த மைதல், beiing coiled or encircled as power in குண்டலினி.

சுற்றுப்புடை, பக்கவீக்கம், swelling at the sides or in the surroundings; 2. பக்கம் புடைத்தல், protruding at the sides.

சுற்றுமண், வார்ப்புக்கருவின்புறம் பூசிய மண், the mud coating in a coasting mould.

சுற்றுவளையம், கருப்பை நழுவாமற்படி யோனித் தாரைக்குள் புகட்டும் வளையம், a ring pessary placed in the vagina to support the uterus.

சுற்றோட்டம், வட்டமாகச் சுற்றிவரல், movement in a regular or circuitous course. 2. இரத்தம் நாடி நாள வழியாய் உடம்பினுள் சுற்றிவரல், இது பலவகைப்படும்; the circulation of the blood through the arteries and the veins in the system; the movement of the blood from the heart through the arteries and back through the veins. This circulation consists of different kinds vize:

1. உடனிகழ்ச்சி சுற்றோட்டம், that which is carried on through the secondary channels after stoppage of the principal course —collateral circulation.

2. பிண்டச் சுற்றோட்டம், that which is carried on in the foctus — Foctal circulation.

3. நிணநீர்ச் சுற்றோட்டம், the passage of the lymph through lymph vessels and glands —Lymph circulation.

4. ஈரற் சுற்றோட்டம், the passage of the venous blood through the liver.

5. நுரையீரற் சுற்றோட்டம், the circulation of blood through the lungs.

சுனகப்பூரிதம், வாதரக்காட்சி, an unknown tree.

சுனகம், வெள்ளைப்பூண்டு, garlic — Allium sativum.

சுனகன், நாய், dog 2. see சுணங்கன்

சுனக்குடம், சதுரக்கள்ளி, square spurge — Euphorbia antiquorum.

சுனதே, நாணல், reed.

சுனந்தம், ஈசுரமூலி, Indian birth wort — Aristolochia indica.

சுனந்தனாகிரகம், சுநந்தனாகிரகம், which see.

சுனம், வெள்ளுள்ளி, garlic; 2. மிளகு, black pepper Piper nigrum.

சுனம்புசம், அணு மூல துவரை.

சுனலை, பெருவழுதலை, big spieces of brinjal — Solanum indicum.

சுனாசகம், முடவானங்கை, milkwort — Polygala genus c.f. மிளகு நங்கை

சுனாசனம், புளியாரை, sour sorrel Gxalis corniculata; 2. வாலுளுவை, spindle tree Celastrus paniculata.

சுனாரம், அடைக்கலங்குருவி, domestic or house sparrow; 2. பாம்பின் முட்டை, egg of snake.

சுனி, பெண்ணாய், bitch.

சுனிகி, சதுரக்கள்ளி, square spurge — Euphorbia anliquorum; 2. see சுனாக்குடம்.

சுனிசம், see சுனிசனம்.

சுனிசனம், 2. புளியாரை, sour sorrel — Oxalis Corniculata; 2. see சுனாசனம்

சுனக்கு, சதுரக்கள்ளி, square spurge; 2. see சுனக்குடம்

சுனை, கரு, embryo; 2. தினவு, itching; 3. நீருற்று, spring; 4. பசும்புற்றரை, grassy plot; 5. மலைச்சுனை, mountain spring.

சுனைக்கரந்தை, ஓர் வகைக் கரந்தை மேலே பட்டால் அரிக்கும், a kind of basil of coming in contact with the body causes itching sensation Ocimum philosum.

சுனைக்காஞ்சொறி, செந்தொட்டி, stinging nettle — hemp leaved tragia — Tragia cannabina.

சுனைக்கொடி, முசுமுசுக்கை, rough bryony — Bryonia scabra.

சுனைக்கோரை, நமைச்சலை யுண்டாக்கு மோர் வகைக் கோரை, a kind of bristly sedge grass causing itching when touched bristly coray.

சுனைதல், குழியாக்கல், making hollow, 2. மிருதுவாதல், being rendered soft; 3. வாடல், withering.

சுனைத்தண்ணீர், புண்ணீர், thin fluid oozing from the wound or sore Ichor; 2. மலையினுச்சிலுள்ள குளத்துநீர், அல்லது மலை ஊற்று நீர், இதனால் பெருவயிறு, இருமல், சீதசுரம், வாதகோபம், கபவாதம், பைத்திய தோஷம் ஏற்படும். water or mountain spring or pond. By drinking or bathing in this water diseases such as ascites, cough, fever due Vatham and Kapham — rheumatic affections and dementia are caused.

சுனைத்தல், தினவெடுத்தல், itching; 2. சொறிதல், scratching.

சுனைத்தவம், பூலாங்கிழங்கு, poolah root — Curcuma Zedoaria.

சுனைத்தவிடு, உமித்தவிடு, bran.

சுனைத்துளசி, முள்துளசி, இதனால் எலிகடி விஷம்போம், thorny basil — Ocimum genus — It cures rat bite.

சுனைத்தேவதாரி, முள்ளுத் தேவதாரி, a kind of priestly deodar.

சுனைத்தோரிதம், பூனைக்காஞ்சோரி, a small climbing nettle tragia involucrate

சுனைநீர், see சுனைத் தண்ணீர்.

சுனைப்பாசி, கொடிப்பாசி, moss creeping upon water — Hydrilla verticillata.

சுனைப்புல், ஓர் வகைப்புல், a coarse grass.

சுனைப்புன்கு, மணிப்புன்கு, rusty soapnut — Erioglossum edule.

சுனைமேலாதி, see சுனைக்கொடி

சுனையெருமை விருட்சம், see எருமைக்கனைச்சான்

சுனைவள்ளி, முள்வள்ளி, the root of a winding plant of the Dioscorea genus.

சுனைவாகினி, முசுட்டை, clove scented creeper — Ipomuea, candicaus.

சுனைவீரம், கொச்சிவீரம், corroive sublimate prepared formerly in Cochin.

சுனைவு, பேய்க்கடலை, bitter bengal gram — Cicer genus; 2. சுனை நீர், rock water.

சுனைவெண்டை, முள் வெண்டை, rough lady's finger. Hibiscus genus.

சுனைவெப்பிலி, கரும்புத் தோகை, the tail portion of sugar cane.

சுனை வெள்ளரி, முள் வெள்ளரி, Common cucumber — Cucumis sativus.

சுனைவேப்பிலை, மலைவேப்பிலை, mountain neem — Melia azedarach.

சுன், வெண்மை, whitness; 2. பூச்சியம், zero.

சுன்னக்குகை, சுண்ணாம்பிற் செய்த மூசை, Crucible made of lime stone; 2. சுண்ணாம்பு மருந்தாற் செய்து வாதத்திற்கு உபயோகிக்கும் மூசை, a crucible made of alkaline salts and used in alchemy.

சுன்னச்சி, சத்திசாரம், an acrid salt.

சுன்னத்து, விருத்த சேதனம். அதாவது ஆண்குறியின் முன்

தோலை அறுத்தல், இது மகமதியருள் வழங்கும் செய்கை ஆகவே இப்பெயர். இப்படிச் செய்தால் குறியினுட்பாகத்தை அடிக்கடிச் சுத்தி செய்ய வேண்டுவதில்லை யென்பதற்காக வேண்டியும், பெண் சம்போகத்தினால் மேக நோய்கள் தாக்காதபடிக்கும் இப்படிச் செய்வதுண்டு. a cutting or removal of all or part of the prepuce or coreskin of the penis — Circumcision — This is a term used by Mahomadans among whom this act is very much in vogue. This is commended from the stand point of health and cleanliness for it is said that there will be no occasion for daily washing the glans penis and one will not contract venereal diseases.

This is a sort of ceremony observed by Mahomadans in which every male child is deprived of the foreskin according to the dict of the Koran.

NOTE:— If the foreskin is not removed interior portion washed frequently, the secretion of the glans on the inner surface of the penis becomes dried and foul causing local irritation which may lead to bed wetting and other bad habits.

சுன்னத்துப் பண்ணல், see சுன்னத்து.

சுன்னப்புச்சவுடு, உழமண், fuller's earth.

சுன்னமூசை, அஞ்சுன்னக்குகை, which see

சுன்னமேகம், மூத்திரத்தில் சுன்னச்சத்து அதிகமாக வரும் ஓர் வகை மேகம், a kind of urinary disease attended with excess of calcium salts in the discharge of urine.

சுன்னம், சுண்ணாம்பு, lime; 2. சுழி, circular mark; 3. உலோகங்களை புடமிட்ட தமிழ் மருந்து, a calcium compound prepared from metals, 4. பூச்சியம், zero.

சுன்னம், உலோகங்களைக் கொண்டு உயர்தரமான மூலிகை ரசம், செய்நீர், திராவகம் இவைகளைக் கொண்டு ஒவ்வொரு சித்தர்களும் அவ்வவர்க்குத் தெரிந்து அனுபவப்பட்ட முறைகளைத் தாமியற்றிய நூல்களில் வெளிப்படையாகவோ அல்லது பரிபாஷையைக் கொண்டு மறைவாகவோ எழுதியுள்ள பற்ப செந்தூர வகைகளை விட ஓர் சிறந்த முறையில் தயாரித்த பற்பத்தைப் போன்ற ஓர் வெண்மையான மருந்துச் சரக்கு. இது வாத வைத்திய முறைகளில் மிகச் சிறப்பு வாய்ந்ததெனக் கொள்ளப்படும். இவ்வுன்னத மான சுன்னமுறை தற்காலத்தில் அனுபவத்திற்கிடையா தெனினும் அதன் சிறப்பும் மேன்மையும் எக்காலத்தும் அழியாதென்பது திண்ணம். ஆரிய மருத்துவ முறைகள், அதாவது ஆயுள்வேதம் தழைத்தோங்கும்படி சித்த வைத்தியத்தைச் சீர்குலையச் செய்தது ஆரிய சூழ்ச்சிகளில் ஒன்றாகும். தமிழ் சித்த வைத்தியம் தலையெடுக்காது அமிழ்த்தப்பட்டதற்கு இதுவே காரணம். இச்சுன்ன வகைகளில் காரச்சுன்னம், கடுங்காரச் சுன்னம், சாரச்சுன்னம் முதலியவைகள் வாதமுறைக்கு மிக்க உபயோகமானவை. ஆனால், கடுங்காரச் சுன்னம் தகுந்த முறைப்படி உடம்பிற் கொள்ளும்படி செய்தால் ஊசிப்பிரயோகத்தினா லுட்புகட்டு மருந்துகளைவிட மேன்மையான குணத்தைத் தந்து நோய்களை அறவே ஒழித்து உடம்பைப் பண்படுத்துந் தன்மையது என்பதில் யாதொரு சந்தேகமே கிடையாது. ஆனால் சுன்னமுறையில் மருந்துகளைத் தயாரிப்பது அசாத்தியமான காரியம். ஆராய்ச்சி அனுபவமுறை அற்றவிடத்து இது பலிக்காது. இச்சுன்னத்தில் அனேக வகையுண்டு, சாரச்சுன்னம், சீனம், சூடம், அண்டம், நிமிளை, பரிசம், சாரக்கட்டு, தாம்பூரம், சுக்கான் கல், பூரம், பிரமக்கல், புளி, பாஷாணம், Siddhar's have written in their works the processes of converting minerals into medicines which are generally either red in colour called Chenduram (*செந்தூரம்*) or white called Baspam (*பற்பம்*) They are organic Compounds highly assimable. with the help of Seynir (*செயநீர்*) fuller's earth (*பூநீர்*) and acids (*திராவகம்*) they prepared another variety of medicine called chunam which is also white in colour but different from Baspam. This chunam posesses the qualities of calcium and is used in Alchemy and medicine. This is more potent than Baspam.

Now a days, it is not in vogue because the methods of its preparations are not clearly known, for they are written in secret or code language (*பரிபாஷை*), *காரசுன்னம்* is one of higher potency. The chunam goes by the name of the mineral which is calsified for example — *தாமிர சுன்னம், பூரசுன்னம், துருசு சுன்னம், சாரக்கட்டு சுன்னம்* and so on.

சுன்னாகம், வெண்ணாவல், white janmoon — Eugenia caryophylli.

சுன்னாறிப்புல், சுக்குநாறிப் புல், காவட்டம் புல், மாந்தப்புல், இதன் அடித்தண்டு 6 அடி, இலைகள் நீளம், பெரியது, இதன் கஷாயம் வயிற்றுக் கோளாறுக்குதவும், இதை மெல்ல இஞ்சியைப் போல் வாசனை வரும். ginger grass spice grass citronella grass or roussa oil grass — Andropogon nardus. stem 6 ft. leaves long and very lorge. An infusion of the leaves is medicinally stomachic. Volatile oil is obtained by distillation from the fresh plant. On being chewed it has exactly the flavour of ginger. Leaves are substituted for tea and are also used in curries to give them flavour.

சுன்னாறிப்புல்லெண்ணெய், மாந்தப்புல்லெண்ணெய், இது வாலையினின்று இறக்கப்படும். இதை இங்கிலாந்தில் வாசனையோடு கலப்பதற்கு உபயோகிப்பார்கள். Oil of

citronella. The oil obtained by distillation from fresh plant is exported to England for the use of perfumers. It is rubefacient used in rheumatism, also stimulent and diaphoretic. It prevents the hair of the head from falling off after acute disease.

சுன்னிதம், நுன்மை, very minute.

சுன்னுக்கட்டி, திரட்டுப்பாற் கட்டி, condensed milk; 2. பாற்கட்டி, cheese.

சுன்னை, விந்து semen.

சூ

சூ, சூ விடுதல் அதாவது சூ என்று நாயை யேவும் ஒலிக்குறிப்பு, a sound to make the dog chase.

சூககுழம், சிலந்தி நாயகம், a medicinal plant capable of curing ulcers.

சூகதானியம், சுனையுள்ள நெல், prickly paddy.

சூகதோஷம், பெண் குறியி லுண்டாகும் மேக விரணம், an ulcer or venereal sore in the genetal of a female.

சூகம், காற்று, wind; 2. தவழும் பிராணி, creeping things as reptiles; 3. நகருதல், crawling as a child, 4. தாமரை, lotus, 5. தோலைப் பற்றிய முள்ளு போன்ற சில முனைகள், thorn like growths on the skin.

சூகரன், பன்றி, pig, 2. மான், deer; 3. ஓர் பாசி club moss.

சூகை, சுழற்சி, whirling; 2. தலைச்சுழற்சி, reeling of the head; 3. ஓர் வகை எறும்பு, a speicies of ant emmet; 4. யானை, elephant; 5. நீர் அட்டை, a kind of irritating water leech.

சூகைக்கண், கூச்சக்கண், near sighted-ness or shortsight myopia; 2. சுழல்கண், whirling eyes.

சூகைகை, சூம்பியகை, withered arm.

சூகைதோஷம், ஓர் வகைக் கிரந்திப்புண், இது பதினென் வகைகளிலொன்று, சாதாரணமாய் ஆண் குறி நீண்டு வலுவடையும் படி சூகை யென்னும் அட்டையை குறியின் மேல் விடுவதால் ஏற்படும் புண், One of the eighteen diseases of different type affecting the penis of a man by foolishly resorting to the practice of getting in abnormally elongated and swollen by plastering it with the irritating water leech — சூகை

சூகைமுலை, வற்றிப்போன முலை, shrunken breast of female.

சூகையாடுதல், கிறுகிறுத்தல், having a whirling sensation, being dizzy; 2. தலைசுற்றல் reeling of the head.

சூக்கம், see சூக்குமம்.

சூக்காய், see கடுக்காய், 2. நண்டு, a kind of small crab.

சூக்கீடம், கம்பளிப் பூச்சி, hairy caterpiller.

சூக்கும கந்தம், உயிர் அணு அல்லது விலத்தில் (cell) காணப்படும் நோய் போன்ற பொருள் — வலம், granular particles found in a cell — granules.

சூக்குமகாயம், புரியட்ட காயம், the subtle body formed of eight regions viz; அனாகதம் — விசுத்தி — ஆக்கினை — நாதம் விந்து சத்தி — சிவம் — பரை , of spirtual elements.

சூக்குமக்கிருமி, கண்ணுக்குப் புலப்படாத கிருமி, any microscopic organism.

சூக்குமசரீரம், சூக்குமதேகம் அதாவது புரியட்டவுடம்பு, subtle body — astral body. It is the subtle body made up of eighteen constituent priciples viz; புத்தி, அகங்காரம், மனம், ஐந்து ஞானேந்திரியங்கள் ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து தன்மாத்திரைகள், budhi pure reason or it may be intelect egotism, mind, five sense organs,

organs of perception, five organs action of and five subtle elements.

சூக்கும சரீரத்தோற்றம், மானத விகற்பங்கள், mental phenomena.

சூக்குமசாதிப்பூடு, பெரிய வெழுத்தாணிப்பூடு

சூக்குமசீந்தில், சீந்திற் கொடி, moon creeper — Menis permum cordifolium.

சூக்கமசீவராசி, கண்ணுக்குத் தெரியாத நுட்ப உயிர்கள், microbes, microscopic organisms such as bacterium. or bacillus.

சூக்குமசீவி, see சீவாணு, bacterium.

சூக்குமசெயநீர், கொழுப்பினின்று பைலினை பிரிக்கும் ஓர் திரவம், a fluid found in the composition of bile separating pylin from fat.

சூக்குமதண்டுலம், கசகசா, poppy seed — seeds of Papaver somniferum; 2. திப்பிலி long pepper — Piper longum.

சூக்குமதமம், சூக்குமத்திற்கு மேற்பட்டது, இது, புவனவாசிகளுக்கு தக்கபடியிருக்கும், One that is more subtle itself.

சூக்குமதரம், சூக்குமமான மற்றொன்றின் மேற்பட்ட சூக்குமம், anything more inute or microscopic than the other which is very minute or microscopic.

சூக்குமதரிசினி, நுட்ப வஸ்துக்களைப் பார்க்க ஓர் இயந்திரம், an optical instrument consisting of a lens for rendering minute objects distinctly visible — Microscope.

சூக்குமதேகம், தூலமல்லாத்து, subtle or etheral body (in occult science) astral body 2. இது அகார, உகார, மகார, நாதம், விந்து ஆகிய 5 எழுத்தாலாகிய சூக்கும பஞ்சாட்சரம், பிரணவ மந்திரமாகிய ஓம், the mystic syllable 'OM' (consisting of a, u, m Nadam, Vinthu).

சூக்குமநீர், நீராவி, steam — the vapour of water.

சூக்குமபஞ்சபூதம், ஞானேந்திரியங்களிடத்தே சூக்குமமாயுள்ள ஐந்து பூதங்கள், இது ஆகாயம் செவியிலும், வாயு உடம்பிலும், தேயு, கண்ணிலும், அப்பு நாவிலும், பிருதிவி நாசியிலும் நுட்பவடிவாயிருக்கும். the five subtile elements — Akasa, Vayu, Fire, Water and Earth that exsist respectively in the ears, skin, eyes, tongue and nose 2. அபஞ்சீகரண பஞ்சபூதங்கள், the five elements that have not undergone five fold composition.

சூக்குமபத்திரம், கடுகு, mustard; 2. கொத்தமல்லி, corriander; 3.சீரகம், cumin seed; 4. செங்கரும்பு, red coloured sugar cane.

சூக்குமபத்திரி, பற்பாடகம், fever plant — Mollugo cerviana.

சூக்குமபயிரி, கருநாவிக் கிழங்கு, black aconite root Aconitum ferox.

சூக்குமபாகம், செங்கரும்புத் தட்டை, the stalk of red sugarcane.

சூக்குமபாசிகம், சோளம், Indian millet Holcus saccharatus.

சூக்கமபாசியம், சீரகம், cumin seed.

சூக்குமபாதிரி, சிற்றிலந்தை, small jujube Creeper — Scutia indica.

சூக்குமபிடகம், கழலையின் அமைப்பு, structure of tubercle.

சூக்குமபிரமாண்டம், Microcsm which is the Monistic doctrine.

சூக்குமபூதம், தூலமல்லாதது, subtle class of elements being radicals of gross elements, பஞ்சபூதம், see சூக்குமபஞ்சபூதம்.

வேணுமென்றா லெள்ளுக்குள் ளெண்ணெய் போலும்
வித்தினிடத் தடங்கிநின்ற விருட்சம் போலும்
காணுகின்ற பூவிலுறை வாசம் போலும்
கன்றாவின் பாலிலுள்ள நெய்யைப் போலும்
தோணுமயில் முட்டையின்மேல் வர்ணம் போலும்
தூலமதிற் சூட்சுமந்தான் துலங்கி நிற்கும்
ஆணுவத்தால் சாதனத்தை மறந்தாயானால்
அபரோட்ச ஞானமுத்தி யரிதுதானே"
(புசுண்டர் ஞானோப நிடதம் 32)

சூக்கமரூபம், சூட்சும வடிவம், subtle form.

சூக்குமம், நுண்மை, astral as opposed to *தூலம்* — gross matercal; *2.* *ஏலம்,* cardamum —Elletaria cardamomum; *3.* *அணு,* atom; 4. see *சிந்தில்,* 5. *சூட்சம்,* minute.

சூக்குமாட்சி, see *சூக்குமதரிசினி.*

சூக்குமாட்சிகன், புலப்படாத அணுக்களை விளங்கக் காண்பிப்பவன், one skilled or versed in handling microscope.

சூக்குமி, பெரியாநங்கை, large mangay — Polygala telephioides probably so called of its very small flowers.

சூக்குமில், *சிலந்திப்பூச்சிக்கூடு,* spider's nest — or web.

சூக்குலம், *சிலந்தி நாயகம்,* ulcer plant; *2.* வேலிப்பருத்தி, hedge plant — Daemia extensa.

சூக்குளி, வெற்றிலை, betel leaf — Piperbetle.

சூங்குமம், வேலிப்பருத்தி *உத்தாமணி* — see *சூக்குலம்*

சூசகம், *தருப்பைப்புல்,* sacrificial grass; *2.* வேலிப்பருத்தி see *சூக்குலம், 3.காகம்,* crow, *4.* *நாய்* dog, *5.* *பூனை* cat.

சூசகவாயு, see *சூசிகா வாயு, சூதகவாயு*

சூசம், செம்மறியாட்டு ஆண், ram wool producing sheep.

சூசாக்கிரம், *ஊசி மல்லிகை,* needle jasmin — Jasminum auriculatum; *2.* *ஊசிமுனை,* pointed end of a needle.

சூசி, *ஊசி,* needle

சூசிகம், *சூதகம்,* menstruation.

சூசிகாகிராணி, ஓர் வகை *நாட்பட்ட பேதி,* a kind of diarrhoea.

சூசிகாசருமப்பிரயோகம், உடம்பின் தோலுக்கடியில் ஊசிகுத்தி *மருந்தைப் புகட்டல்,* an act of throwing a medicinal liquid into the subcutaneous tissue —Hypo dermic injection.

சூசிகாசன்னி, *சூதக சன்னி,* a nervous affection chiefly attacking women — Hysteria.

சூசிகாசூலை, *தூரச்சூலை,* painful and difficult menstruation —Dysmennorrhea c.f. *சூதகவாயு*

சூசிகாநாடிப்பிரயோகம், உடம்பினுள் தோலின் கீழிருக்கும் இரத்த நாளத்தில் ஊடுருவும்படி ஊசியில் குத்தி மருந்தை நேரே இரத்தத்தில் பரவச் செய்தல், the act of throwing of a liquid medicine into a vain of the body by a needle as to get it mixed in the circulation of blood. Intravenous injection.

சூசிகாபரணம், *பிரமமுனி வைத்திய நாலிற் சொல்லியுள்ள ஓர் மருந்துமுறை,* a medicinal preparation contemplated in Brahmamuni's work on Medicine. 2. *அகத்தியர் வைத்திய காவியம் 1500ல் சொல்லியுள்ள சன்னிக்குக் கொடுக்குமோர் மருந்து,* a medicine prepared as per process mentioned in Agastyar's medicine 1500 and prescribed for delirium or apoplexy.

சூசிகாபாணம், ஓர் *வாத நோய்,* a vatha disease 2. *அத்திமரம்,* fig tree — Ficus glomerata.

சூசிகாப்பிரயோகம், *ஊசியால் உடம்பினுள் மருந்து புகட்டல்,*

The act of throwing into as of a liquid medicine into a cavity of the body by means of a hallow needle — Injection.

சூசிகாமுகம், சங்கு, conch.

சூசிகாவாயு, சூதகவாயு அதாவது சூதகத்தில் உதிரம் போகாது கருக்குழியில் உதிரங்கட்டிக் கொண்டு கைகால் கடுத்து, உள்ளங்கால் நகக்கண்களில் குத்தலெடுத்துச் சோறு செல்லாது. இது அசாத்தியமெனக் கருதப்படும். a disorder of menstruation marked by pain in the limbs pricking pain on the sole of the feet and nailsbed, aversion to food etc. It is due to the accumulation of menstrual blood in the womb arising from scanty or suppression of menses — Amennorrhoea.

சூசிகாவாயுசன்னி, குழந்தை பிரசவித்த பிறகு பெண்களுக்கு அழுக்கு தங்குவதா லுண்டாகும் காய்ச்சல், septic poisoining (fever) occuring in child — bed — Puerperal fever; 2. கருப்பவாயுவினா லேற்படும் சன்னி, delirium in a hysterical patient.

சூசிகை, ஊசி needle.

சூசிக்கல், ஊசிக்காந்தம், magnet attacting needle; 2. காந்த ஊசி, magnetic needle.

சூசிமுகயோனி, ஓர் பெண் குறி நோய், இது வாதாதி பண்டங்களை மித மின்றிப் புசித்து உடனே புணருவதால் பெண்களுக்குக் கருப்பையில் வாயு தங்கி அதனால் சதை வளர்ந்து அல்குலின் துவாரத்தைச் சிறுகச் செய்து சையோகத்திற்கு இடமில்லாதபடி செய்து விடும். ஒரு வேளை வலுவில் புணர எத்தனித்தால் வலியையும் இரத்தப் பிரவாகத்தை யுமுண்டாக்கும். இதற்குத் தக்கையிட்டுத் துவாரத்தைப் பருக்கச் செய்யலாம். needle eyed vagina. it is a disease of the female genital in which the vagina is extremely constricted due to abnormal growth of flesh consequent upon having untimely or irregular sexual intercourse with men immediately after taking or consuming food combined with Vatha substances. This narrowing of the passage renders penetration impossible and if attempted with force hemorrhage and pain are imminent results. It is thought advisable to enlarge the vaginal orifice in such cases by daily plugging it with cork or pith of increased sizes.

சூசியம், சூட்டிறைச்சி, roasted meat.

சூசியாசியம், மூஞ்சூறு, musk rat.

சூசிவத்திரம், see சூசிமுகயோனி, small narrow vagina.

சூசு, see சூசுகம்

சூசுகம், முலைக்காம்பு, nipple; 2. முலைக்கண், orifice of the nipple.

சூசுரட்சை, முலைக்காம்பு மூடி, nipple shield

சூசேயம், தாமரை, lotus.

சூடசங்கோலாக்கி, ஏலம், cardamum

சூடசடாதாரம், see சுவாதிட்டானம்

சூடசம்பிச்சம், மருவம், அதாவது மருக்கொழுந்து, maid's love —Aretemesia abrotanum —A.austriaea.

சூடசத்திரி, சுவையை மாரணமாக்கும் அல்லது, சுவையில்லாமற் செய்யுமோர் மூலி, a plant that destroys the sense of taste.

சூடம், see சூடன், 2.உச்சி, crown of the head; 3. கேசரி, sky, 4. மாமரம், mango tree —Mangifera indica; 5. பாரிசாதம் அல்லது பவள மல்லிகை, night jasmine — Nyctanthes arbortristis.

சூடமூலி, கற்பூரவல்லி, thick leaved lavender — Anisochilus carnosus.

சூடரேச்சாதி, சரக்கொன்றை, (lit) wreathe cassia common cassia —cassia fistula.

சூடவல்லி, see சூடமூலி

சூடறுத்தல், கண்ணில் சூட்டினால் வளர்ந்த சதையைக் கத்தியால் அறுத்து, அல்லது சுணையுள்ள இலையினால் தேய்த்து நீக்குதல், the scraping of an affected part of the eye due to growth of flesh with a scraping knife or rough leaf.

சூடனி, சிற்றரத்தை, lesser galangal — Alpinia galang (minor)

சூடனிந்து, சூடன் செயநீர், a pungent water prepared with campher as chief ingredient.

சூடனுப்பு, கற்பூரவுப்பு, இது வெடியுப்பு, சீனம், சாரம், கல்லுப்பு, பூநிறு, இவைகளைக் கூட்டிப் பொடித்து வழலை நீரில் கரைத்து எரித்திட இது கட்டியாக விருக்கும். (மச்ச 800) camphor salt. It is a prepared salt as per process prescribed in Macha muni 800 and obtained by boiling a mixure of nitre, alum, salammoniac, Sea salt in a solution of fuller earth.

சூடன், கற்பூரம், camphor —Camphora officinarum 2. ஓர் மீன், a fish; 3. அண்டச் சுண்ணம், an alkaline salt prepared from the human skull bone.

சூடன் தீயில் வாட்டல், கற்பூர நெருப்பில் வாட்டுதல், heating in camphor fire.

சூடன்வைப்பு, வாழைக் கிழங்கு நீர் ஒரு செம்பு பாத்திரத்தில் விட்டு, அதற்கு 40 பலம் வெடியுப்புக் கூட்டிக் காய்ச்சிக் குழம்பு பதத்தில் 1 படி கருவாப்பட்டை தைலம் வார்த்து, புட்டுபோற் காய்ச்சி, இறக்கியது தான் சூடன் வைப்பு, the juice of plantain inner stem or corm is taken in a copper versal. 40 pal of salt petre is added and boiled to a thick consistency. Then one measure of oil of cinnmon is added and boiled it becomes a soft solid. This is camphor.

சூடா, குடுமி, tuft of hair in the head; 2. ஓர் தின்பண்டம், an eatable cake.

சூடாக்கல், ஓர் வகைக்கல், see சூடாலைக்கல், (சூடு + ஆக்கல்) உஷ்ணமாக்கல், to heat.

சூடாமணி, வடமொழியில் எழுதிய அமர கோசத்தைப் போல் தமிழில் சைனியத் துறவிகளால் மிருகத் தொகுதி, மரத்தொகுதி முதலியவைகளை வரிசைக் கிரமமாய்ச் செய்யப் பட்ட மூன்றுவித நிகண்டுகளில் ஒன்று, a poctical lexcion on the plan of Sanskrit Amarakosam writen by a jainya ascetic. It is one of the three classical diction aries consisting the names of beasts plants etc. together with explanations of the 64 sciences.

சூடாமணி, குன்றிமணி, jeweller's bcad; 2. வெட்பூலா, white Poolah — Phylanthus lencopyrus.

சூடாமணிக்கயிறு, மணிக்கட்டை அளந்து பிறகு அதைக் கொண்டு விறற்கடை அளவுக்கு ஒத்துப் பார்த்து அதன் வித்தியாசத்தால் நோய்களை விவரிக்கும் ஓர் நூல், a treatise in Tamil describing the several diseases indicated by the various differences caused in the calculation of lengths of strings with which wrist and fingers are measured according to rules mentioned there in.

சூடாமணிக்குளிகை, வேதமுனி முறைப்படி தயாரித்து குளிர்க் காய்ச்சல், சன்னி, பிதற்று சன்னி, முதலிய நோய்களுக்குக்

கொடுக்கும் மாத்திரை, a pill prepared as per process of Vidamuni and used for ague apoplexy, delirium etc.

சூடாதிக்கம், உடம்பின் சூடு, அல்லது உஷ்ணம், increase of heat in the system.

சூடாலம், சணப்புவிரை, hemp seed, 2.தலை head.

சூடாலைக்கல், ஓர் வகைக் காந்தக் கல், இது உபரசச் சரக்குகளிலொன்று, It is one of the 120 kids of natural substances mentioned in the Tamil medical scicnce.

சூடி, நவச்சாரம், sal ammoniac.

சூடிகம், கள், toddy.

சூடிகை, கருப்பிணிகளுக்கு உண்டாகும் நோய், இதனால் கருப்ப காலத்தில் சீரணக் கோளாறும் சுரமும் பிறகு நாளுக்கு நாள் இரத்தக் கேட்டினால் சோவையு முண்டாக்கும், a disease of the pregnant women where in digestive troubles occour first. Then fever anaemia and dropsy follow — sutika.

சூடிச்சி, எவட்சாரம், salt petre potassium nitrate.

சூடிடல், சூடுபோடல், burning with actual cautery — ustion, 2.சுடுதல், application of a hot iron; 3. மருந்திட்டுச் சுடுதல், the application of a caustic substance in cautrization.

சூடியம், கோசத்தின் தாதுவை நாவினால் உறிஞ்சுதல், sucking the semen.

சூடினா், கொங்குமரம், false tragacanth, leaf bellows tree cochlos — permum gossipium.

சூடு, வெப்பம், heat; 2. சேவற்சூடு, cock's creat; 3. சூடுதல், to wear; 4. சுடுபுண், scald; 5. ஒத்தடம், fomentation; 6. உட்சூடு, internal heat; 7. உள்ளெரிவு, interna, glowing; 8. காங்கை, temperature; 9. அபக்குவ போசனத்தினாலும், ஆயாசத்தினாலும் நோயின் கொடுமையாலும், உடம்பில் ஏற்படும் , கொதிப்பு, heat of the body caused by disease, fatigu & not properly cooked food; 10. உணர்ச்சி, feeling or sensibility, 11.சுடுகை, branding, 12. வடு, Scar; 13. தலை, head; 14. ஓர் கண்ணோய், an eye disease.

சூடுகாட்டல், ஒத்தடம் போடல், fomenting; 2.சிறுசூடுபடுத்தல், warming; 3. சுரக்குறி தோன்றல், feeling feverish; 4. கடுமைக்குறிகாட்டல்.

சூடுகுத்தல், see சூடறுத்தல்.

சூடுகுத்தல், வெட்டைச் சூட்டினால் கா்ப்பத்திலுாரிப் பிறந்த குழந்தைக்கு கண்ணில் சீழ் வடியும் ஓர் கண்ணோய், the purulent discharge from the eye of the new born due to veneral heat of the mother during her pregency Ophthlmia neonatorum.

சூடுகொள்ளல், உடம்பு வெப்பங் கொள்ளல், becoming heated in constitution; 2. உடம்பு அனத்தல், becoming feverish.

சூடு சுடுதல், சூடுபோதல், branding.

சூடுசுரணை, உணர்ச்சி, feeling or sensibility.

சூடு செய்தல், உஷ்ணம் கொள்ளும்படி செய்தல், causing warmth.

சூடுண்டாக்கல், வெப்பமாக்கல், causing warmth heating.

சூடுண்டாதல், உடமபு சூடு கொள்ளல், to get increased in warmth of body.

சூடுதல், உண்ணுதல், eating, 2. சூடு போடுதல், branding, 3. அணிதல் — to wear.

சூடுதாவுதல், சூடு உறைக்குதல், radiation of heat.

சூடுதுரத்தி, see சூடுபோக்கி.

சூடுபறக்கத் தேய்த்தல், தைலம் பூசி, சூடுண்டாகும்படி தேய்த்தல், rubbing with hand forcibly after applying ointment to the affected part so as to creat heat, the act of anointing or of applying oil with friction — Inunction.

சூடுபிடித்தல், நீர் கடுப்புண்டாகுதல், being attacked with strangury.

சூடுபொறுக்காமை, சூடுதாங்காமை, Extreme sensitiveness to heat Hyperthermesthesia. Thermopyperesthesia.

சூடுபோக்கி, உடம்பினுஷ்ணத்தைத் தணிக்கும் மருந்து, antipyretic.

சூடுபோடல், சூட்டுக்கோலினாற் சுடல், to brand, ஊசியினல் சூடிடல், cauterzation by the needle — Akido cautory.

சூடுவளர்க்கை, ஓர் கண்ணோய், an eye disease, சூடுவளர்த்தி.

சூடுவளர்த்தி, சூட்டினால் கண்ணில் சதை வளருதல், granular ophthalmia.

சூடுறல், உடம்பு காய்தலின் உணர்ச்சி, feeling feverish.

சூடை, ஓர் சிறு பச்சை நிற மீன், a green small fish Sardine clupea fimbriata; 2. ஓர் மஞ்சள் நிற சிறு மீன், Sardine with yellow spots Clupea lile; 3. வெண்ணிற மீன், silvery fish — Pillona lachenaultic; 4. தலை, head.

சூட்சகலை, சந்திரகலை, the vital air passing through the left nostril.

சூட்சப்பாவை, ஆத்துமா, the soul.

சூட்சப்பாறை, கற்பாஷாணம், see சூட்சம்

சூட்சம்மம், சாரணை தீர்ந்த இரசக்குளிகை, animated mercurial pill

சூட்சமைலா, சிறிய ஏலக்காய், small cardamom, see சிற்றேலம் அல்லது சிறு ஏலம்.

சூட்சம், see சூக்குமம், subtleness; 2. மணிபூரகம், one of the six psychic centres at the naval region in the human body. It is considered to be the seat of Vishnu with his consort Lakshmi.

சூட்சம், பெருவழுதலை, big brinjal; 2. கற்பாஷாணம், 3. வெள்ளைக் காக்கணம், white mossel shell creeper — Clitorea ternatea; 4. குக்கில் அல்லது குங்கிலியம், Indian Bedellium — Balsa modendron mukul.

சூட்சயேகவல்லி, பேராமுட்டி, fragrant pavonia — Pavonia odorata.

சூட்சாதிசூட்சம், see சுவா திட்டானம், 2. அதிசூக்குமம், very subtle or very microscopic.

சூட்சி, நீலஞ்சோதி, an unknown rejuvenating drug of a bright blue colour.

சூட்சுமகாயம், see சூக்குமகாயம்.

சூட்சுமசரீரம், சூக்கும காயம், (in occultism) astral body.

சூட்சுமசெயநீர், விரைவில் ஆவியாய்ப் போகக்கூடிய செய்நீர், இது சாராயத்தில் கந்தகத்தை கூட்டுவதனால் ஏற்படும், a highly volatile liquid obtained by the action of sulphuric acid upon ordinary alcohol — Ether.

சூட்சுமதரிசனம், அறிவினால் கூர்மையாகப் பார்த்துக்காணல், to see through keeness of intellect.

சூட்சுமநாளிகா, see சூட்சம நாளிசம்.

சூட்சுமநாராயணி, தண்ணீர் மீட்டான் கிழங்கு, water root Asparagus racemosus.

சூட்சுமநாளிசம், கிளிமுக்கு, the back of a parrot; 2. see சூட்சுமகாளிகா.

சூட்சுமநேத்திரம், மூத்திரத்தாரையின் வழியாய் செலுத்துமோர் பிச்சுக்குழல், a tubular or syringe like instrument to be introduced through the urethra into the bladder to draw out urine — Catheter.

சூட்சுமபத்திரம், ஆரைக்கீரை, oxalis green — Marsilea quadrifolia; 2. see சூட்சுமநாராயணி, 3. நறுஞ்சோதி, 4. தண்ணீர் விட்டான் கிழங்கு, water root — Asparagus racemosus.

சூட்சுமபத்திரி, பற்பாடகம, sparrow leg — Mollugo cerviana.

சூட்சுமபாதிரி, see சூக்குமபாதிரி

சூட்சுமபுத்தி, நுண்ணிய அறிவு, acute intelligence.

சூட்சுமப் பிராணவாயு, subtle vital force.

சூட்சுமப்பிலா, உத்தாமணி, hedge cotton — Daemia extensa.

சூட்சுமம், see சூட்சும சரீரம், 2. சூக்குமம், subtleness; 3. அறிவு நுட்பம், keeness of intellect.

சூட்சுமவல்லி, முடக்கொத்தான், winter cherry or palsy curer — Cardio spermum hallcacabum.

சூட்சுமமூலம், செம்பை, sesban — Sesbania aegyptiaca.

சூட்சுமவாயு, ஆகாயத்தில் வாயு மண்டலத்திற்கப்பால் இருக்கும் வெளி, இதன் மூலமாகத்தான் ஒளி, சூரிய வெப்பம், மின்சார சக்தி முதலியவைகள் ஊடுருவிச் செல்வதற்கு ஏதுவாயிருக்கும், a higher region of the heavens beyon the aireal region. It is supposed to be a hypothetical medium for transmission of light, heat electricity etc. Ether.

சூட்சுமவாயுநாடி, முதலில் மந்தமாயிருந்து பிறகு விரைவாக ஓடும் நாடி, pulse that runs fast after appearing slow and sluggish at first.

சூட்டளவை, உஷ்ணமாணி, an instrument by which temperature is measured — Thermometer.

சூட்டாணி, சூட்டுக்கோல், cauterising rod or needle.

சூட்டிக்கை, கூர்மையான புத்தி, keen intellect.

சூட்டிறைச்சி, சுட்ட இறைச்சி, roasted meat 2. சூடான மாமிசம், warm or hot meat; 3.கறிமசாலையிட்டு வறுத்த இறைச்சித் துண்டுகள், pieces of meat seasoned with curry stuffs and roasted on a skewer.

சூட்டு, மயிர்சூட்டு, peacock's crest; 2. உச்சிக் கொண்டை, crest of birds in common.

சூட்டுக்கணம், சுழிகணம், உடம்பின் சூட்டினால் பேதி கண்டு உடம்பிளைக்குமோர் வகைக்கண நோய், atrophy due to excess of heat in the system resulting in diarrhoea.

சூட்டுக்குத்தல், சூட்டினால் கண் சதை வளர்ந்து ஏற்படும் குத்தல், irritation due to abnormal growth of flesh in the eye arising from constitutional heat — Ophthalmia.

சூட்டுக்குச் சூடு கொடுத்தல், தமிழ் வைத்தியத்தில் சூட்டுக்குசூடு கொடுக்க உடம்பு குளிர்ச்சியாகும் என்னும் கொள்கையால் இவ்விதம் செய்வதுண்டு, ஆனால் நோய்களுக்கு மருந்து கொடுக்குங்கால் இம்முறையை அனுசரித்தே கொடுப்பதாகக் காணப்படவில்லை. ஏனெனில் சூட்டுக்குக் குளிர்ச்சியும், குளிர்ச்சிக்கு சூடும் கொடுத்து வருவதே பொதுவாகத் தமிழ் வைத்தியமுறை. ஆகவே ஒற்றுறை, எதிருறை என்ற இருவிதமும் இருந்து வந்ததாகவே இது சமயத்தைக் கருதி உபயோகப்படுத்த

வேண்டியதாகத் தெரிகிறது. in Tamil medicine the Principle of treating with a remedy apparently hot for internal heat on the theory that such treatment would result in rendering the system cool. So, the doctrine on which the Vaidyans were guided seems to be on the principal that every disease is curable by such medicines as would produce in a healthy person symptoms similar to those which characterise the given disease. It appears that such a practice was not followed when treating diseases purley. So, the system that was followed was the art of' curing founded on differences by which one morbid state was removed by inducing an opposite or different one. Hence the two systems were rcognised and acknowledged and they were apparently followed as occasion rose.

NOTE: The administeration of a medicine capable of producing effects similar to the diseases to be treated on the principle as the Homoepathists would put it "Similia similibus curantur' that a patient suffering from the effects of inherent heat must be with a remedy apparently hot but treated really cooling in its effects.

The general belief of the Hindus in the hot and cold inherent qualities of medicine is that if a disease be hot or cold a medicine of opposit equalities is to be prescribed.

சூட்டுக்கோல், சுடுகோல், cauterosing iron needle used for cauterization; 2. குழந்தைகட்கு நோயினால் வலிகாணில் சூடுபோடும் ஊசி அல்லது இரும்புக் காம்பு, இது ஓர் வித சிகிச்சை, an application of a caustic substance or a cautery or heated branding, iron used as a treatment in children suffering from convulsions or fits accompanying a diseases. 2. see கருப்புள்ளிக்கோல், 3. மாடுகளுக்கு சூடு போட உபயோகிக்கும் இரும்புக் காம்பு, an iron rod used for branding cattle.

NOTE: This kind of cauterization or application of a cautery was in vogue in ancient days for purposs of charring the tissues to destroy malignant cells without deviatlising the healthy tissues.

சூட்டுக்கோலிடல், வலிப்பு வந்த குழந்தைகளுக்கு ஊசி அல்லது இரும்புக் காம்பினால் சூடுபோடல், cauterising with a red hot needle or rod children, suffering from convulsions.

சூட்டுடம்பு, உஷ்ணம் கொண்ட தேகம், body, which is over heated.

சூட்டுத்தலைவலி, உடம்பின் உஷ்ணத்தினால் ஏற்பட்ட தலைவலி, இதற்கு கொத்தமல்லி விதையும் சந்தனமும் அரைத்துப் போடபோம், head ache due to excess of heat in the body. This is relieved by applying a paste of corriander seeds and sandal wood.

சூட்டுப்புண், சுட்டபுண், burns, 2. உஷ்ணத்தினால் ஏற்பட்ட புண், boil arising from the internal heat in the system.

சூட்டுமணல், கருமணல்,black sand.

சூட்டுவடு, சூட்டுக்கோலிட்ட வடு, a scar or cicatrix left after cautery.

சூட்டுவலி, பிரசவத்திற்கு முன் காணும் இடுப்புவலி, the pains of a pregnant woman before delivery; 2. உடம்பின் கொதிப்பினால் ஏற்படும் வலி, pain in a person due to extreme bodily heat.

சூட்டெண்ணெய், எரித்து வடிக்கும் வேப்பெண்ணெய், margosa oil extracted from the seeds of margosa by boiling them. 2. உடற்சூட்டைத் தணித்துக் குளிர்ச்சி தரும் எண்ணெய், a medicated oil prescribed for reducing the heat in the body.

சூணம், கண்ணில் கருவிழியின் சவ்வு, the dark brown vascular of the eye between the sclera and the retina.

சூணம்வயிறு, குழந்தைகளுக்கு காணும் பெருவயிறு, pot belly.

சூதஅங்குசம், காந்தம், magnet.

சூதகக்கட்டி, உருது நீர்க்கட்டி, an abscess or mass like formation in the abdomen dues to scanty or suppressed menses —internal abscess.

சூதகக்கட்டி, பெண்களுக்கு வயிற்றில் உற்பத்தியாகும் கழலை, blood born gulma or tumour in cases of women some times this is mistaken for conception — Polypus uteri.

சூதகக்கட்டு, தகபந்தம், suppression of monthly discharge or suppressed menses —Supressio mensium.

1. சூதகத் திரட்சி, accumulation of menustrual blood in the uterus and in the vagina — Haemato colpometra.

2. சூதகம் சரிவர வாராமை, absence or abnormal stoppage of the menses, obstruction or morbid defieiency of the catamenia arising from organic deficiency or from functional derangement — Amenorrhoea.

சூதக்காரி, தூரஸ்தரி, manustruous woman - woman in periods.

சூதகக்கிராணி, சூதகவாயுவினா லேற்படும் கழிச்சல், flatulency arising from menustrual disorders.

1. பிள்ளை பெற்ற பிறகு காணும் கழிச்சல், a chronic diarrhoea in women after delivery.

2. மாதவிடாயாகும் போது வயிறு வலித்து இரத்தம் வெளிப்படல், dysentery during menstrual period.

3. சூதகம் ஆகும் போதெல்லாம் வலித்து இரத்தம் விழுந்தாலும், கெடு தப்பி வலித்து இரத்தம் வெளிப்படல், irregular menses with dysentery.

சூதகக்குறைவு, பெண்களுக்குச் சூதகம் சரிவர வெளிவராமை, scantiness of the menstrual discharge in women Oligomenorrhoea.

சூதகக்கோளாறு, மாதவிடாயில் ஏற்படும் குற்றங்கள், disorders of menstruation; 2. சூதக விகற்பம், hysteria.

சூதகங்கட்டுதல், சூதகபந்தம், suppressed menses.

சூதகங்கழித்தல், மாதவிடாய்க்குப் பிறகு குளித்தல், bathing after menstruation.

சூதகசத்துரு, காந்தம், magnet.

சூதகசன்னி, நரம்பைப் பற்றிய வோர் சன்னி, இது பெண்கள் மாதவிடாய் காலத்திலும், சூதக சம்பந்தமான கருப்ப வாயுவாலும் காணும் இதில் சுரம் விட்டு விட்டுக் காயும், சம்போகத்தில் விருப்பம் வரும். சில சமயம் கீழ் வயிற்றில் ஏதோ பந்து போல் உருண்டையாக மேலுக் கெழும்பி வயிற்றைத் தாக்குவதாகக் காணப்படும். a nervous affection in women characterised by fever and other morbid symptoms delirium etc. It chiefly affects women in their menses and those affected by hysteria and by simulation of various disorders — Neurasthenia.

சூதகசன்னி, see அபதானகம், Hysterical covulsions.

சூதகச்சயம், சூதகக் குறைவு, scanty menses சூதகக் கோளாறினா லுண்டாகும் சயநோய், consumption due to irregular menstruation.

சூதகச்சிக்கல், சரியான காலத்தில் மாத விடாய் காணாமை, a condition in which the menstruation does not appear in proper time. irregularity of

menstruation — Primitive amenorrhoea.

சூதகச்சூலை, மலடிகளுக்கு சூதகத்தினால் ஏற்படும் குத்தல் நோய், Painful menstruation in a sterile woman due to irregular menses.

சூதகண்டகி, சத்திசாரம், which see

சூதகண்டச்சி, see சத்திசாரம்

சூதகத்தடை, சூதகபந்தம், obstruction of menstruation when it should be normally present; 2. கருப்பைவாய் அடைப்பட்டுச் சூதகம் வெளிப்படாமை, Retenus Mensium.

சூதகத்தலைவலி, சூதக சம்பந்தத்தால் பெண்களுக்குக் காணும் தலைவலி, head ache caused in women due to menstrual disorders — Hysterical head ache.

சூதகத்தாரை, யோனித்தாரை சூதகம் வெளிவரும் வழி, இதுவே ஆண்குறி போகும் வழி. The canal through which the menstrual blood comes out. It is the passage for the penis to enter.

சூதகத்தி, கோவை, red bitter melon — Cephalandra indica.

சூதகத் திரட்சி, மாதவிடாய் இரத்தம் பெண் குறியில் திரண்டு நிற்றல், an accumulation of menstrual blood in the vagina.

சூதகத்துண்டையுடைச்சல், கருப்பையைப் பற்றிய அகால ருது குன்மக்கட்டி முதலியன, irregular menses tumours etc. 2. சூதக இரத்தத்தில் காணும் கட்டி முட்டிகள் — menstrual blood containing clots membranes etc.

சூதகத்தேக்கம், மாதவிடாய் வெளிவராமல் தேங்கி நிற்றல், retention of menses — Emensis mensium

சூதகநிவாரணி, சூதகததை அதிகப்படுத்தும் சரக்கு அல்லது மருந்து, emmenagogue.

சூதகம் நிற்பாடு, சூதகம் நிற்றல், suppression of menses; சூதகவொழிவு மாதவிடாய் அறவே ஒழிதல், change of life menopause.

சூதகநீர், see இந்திர கோபப் பூச்சி, 2. மாதவிடாய், menstrual blood.

சூதகபந்தம், சூதகக்கட்டு அதாவது மாதவிடாய் வெளிவராமை இது சாதாரணமாகக் கருக்குழியில் ஏற்படும். அவயவக் கோளாறினாலும் ருதுவாகாத்தினாலும் சோகை முதலிய நோயின் காரணங்களினாலும் ஏற்படும். morbid deficiency of the menses as a result of congenital or acquired artesia of some part of lower genital tract or of an imperfect developmnt of the ovaries or uterus or of constitional disease especially anaemia — Amennorrhoea.

சூதகபற்பி, நீலஞ்சோதி, unknown plant capable of clacining Mercury.

சூதகப்பாண்டு, புத்தியறியும் சிறு வயதுப் பெண்களுக்கு இரத்தங் கெட்டுக் காணும், ஓர் வகைக் பாண்டு, இதனால் பசியின்மை, செரியாக்குணம், பலவீனம், சூதகக்கோளாறு, நரம்புக்கேடு முதலிய குணங்களுண்டாகும். a peculiar anemia or dropsy mostly affecting girls about the age of puberty. I is an anemic condition due to decrease of red corpuscles in the blood. It is marked by perverted appetite, digestive impairment, debility, menstrual disorders and nervous disturbances.

சூதகப்பிரனம், பெண்களுக்கு மாதவிடாய்க் கோளாறினால் ஏற்படும் சித்தமயக்கம், a nervous affection due to menstrual disorder in women characterised by nervous mental affections.

NOTE: This should not be confounded with Amenomania in which also women exhibit the same symptoms but is manifested under the form of gayity or sports.

சூதகப்புல், தருப்பைப் புல், scarificial grass so called from its ceremonial cleanliness by removing all impurities.

சூதகப்பெண், மாதவிலக்கானப் பெண், a woman in menses or periods.

சூதகப் பெருக்கு, மாதவிடாய் ஒழுக்குபுணர்ச்சியினால் அக்கினி மீறி வெட்டையுண்டாகி அதிகரித்து உடம்பில் தாதுக்கள் பலங்குன்றி, கருப்பைத் தாதுக்களும் பலவீனப்பட்டு, கருக்குழியில் இரத்தம் அதிகமாகச் சேர்ந்து புண்ணாகி யோனியின் வழியாய் இரத்தம் செவ்விளநீர் போல் ஒழுகிக் கொண்டேயிருக்கும். இதுவே பெரும்பாடு எனப்படும். இதனால் வயிற்றுவலி யுண்டாம். an abnormal or excessive discharge of menstruation — Menorrhagia.

சூதகப்பெரும்பாடு, see சூதகப்பெருக்கு.

சூதகப்போக்கு, மாதவிடாய் ஒழுக்கு, the menstrual flow.

சூதகமரம், புளிமா, sour mango tree.

சூதகமலடு, சூதகவாயுவினா லேற்படும் 6 வித மலட்டில் ஓர் மலட்டு ரோகம், barreness in women due to disorders or mensturation. It is one of the six kinds of barrenness.

சூதகமலம், மாம்பூ, flower of mango tree.

சூதகமல்லி, சிவப்பு மல்லிகை, red jasmine.

சூதகமறல், சூதகமுற்று மொழிதல், menopause, see சூதகமொழிவு

சூதகமாதல், மாதவிடாயாதல், having monthly course.

சூதகமுடைதல், மாதவிடாய் இரத்தம் வெளிப்பட்டுச் சிக்கல் நீங்குதல், reappearance of menstruation after supression.

சூதகமொழிவு,வீட்டு விலக்கமாகாமல் முற்றும் நின்றுவிடல், இது 40 முதல் 45 வயதான பெண்களுக்கு இயற்கையிலேயே இப்படி நின்று விடும். there will be complete stoppage of menses when the woman attains the age of 40 to 45.

சூதகமுட்டு, see சூதகபந்தம்.

சூதகமூர்ச்சை, வீட்டு விலக்கமாகும் போது மயக்கமாதல், Hysteria.

சூதகம், தீட்டு ceremonial impurity or impurity from child birth; *2.* மகளிர்த்துடக்கு menstruation; *3.* தருப்பைப்புல், sacrifical grass; *4.* பெண்ணழுக்கு, any discharge from vagina. *5.* மாமரம், Mango tree; *6.* அசுத்தம், uncleanliness; *7.* பிறப்பு, birth, *8.* முலைக்கண், nipple.

சூதகயிசிவு, see சூதக வலிப்பு

சூதகலயக்கியம், காட்டுக்கொள், wild horse gram.

சூதகவயிற்றுவலி, சூதகக் கோளாறினால் தொப்புளருகில் காணும் வயிற்றுவலி, severe pain in the epigastrium cheifly in the menstrual woman — Gastralgia.

சூதகவலி, பெண்கள் சூதகத்தினால் வலியோடு கூடிய இரத்தவொழுக்கு, கைகால் வலி, a kind of menorrhagia attended with an aching in the limbs and a painful flow of the catamenial fluid — Dysmennorrhoea — It is of there kinds. 1. Inflammatory 2. Membraneous. 3. Spasmodic. They may be distinguished by their characteristic pains.

சூதகவலிப்பு, பெண்களுக்கு அநேகமாக சூதககாலத்தில் காணும் ஓர் வகை மயக்கம், கை கால்கள் இசிவாகும், சில சமயங்களில் இரத்தம் அல்லது நுரை அல்லது இரண்டும்

வாயிலிருந்து வெளிப்படும். அவர்களால் பேசமுடியாதே தவிர பிறர் பேசுவதை உணர்வார்கள். மயக்கமும், இசிவுமின்றி விக்கல், கொட்டாவி, வயிறு உப்பிசம், வயிற்றில் பந்து போல் எழும்பி தொண்டையை அடைப்பது போன்ற உணர்ச்சி, ஒரு சமயம் புலம்பல், மறுசமயம் சிரித்தல், கை கால்கள் நடுக்குதல், புத்தி சுவாதீனமின்மை பேய் பிடித்தது போல் பேசுதல், ஆடுதல் இவை போன்ற குணங்களில் சில அல்லது பல தோன்றும், புத்தி தெளிந்தபின் சிறுநீர் அதிகமாகக் கழியும், a kind of convulsive fits loss of senses, vomitting blood or froth or both, flushing, flatulence, hiccups, yawning, feeling of a ball rising in the abdomen, chocking of the throat, alternate crying and laughing, behaving as if possessed by evil spirit are some of the symptoms of the disease. It is due to the derangement of uterus such as cessation of menstrual flow, neglect of husband or his incapacity to gravity her sexual appetite; early widow hood etc. After the attack, when the patient comes to her senses, there will be a copious discharge of light coloured wine Hysteria.

சூதகவழுக்கு, மாதவிடாய், menstrual fluid;2. யோனி வழியாய் வரும் ஒழுக்கு, any discharge from vagina.

சூதகவாயு, தூரச்சூலை see சூதகச்சூலை 2. கருப்பவாயு, flatulency in the womb arising from irregular menstruation; 3. இருது நீர்க்கட்டு, supression of menses — Amennorrhoea; 4.கருக்குழியில் வாயுவும் அக்கினியும் சேருவதால் மாதவிடாய் திரண்டு, கருக்குழி தூர்ந்து, அடிவயிற்றில் வலிகண்டு, உடம்பும் வயிறும் பருக்கும் ஓர் சூதகநோய், a menstrual disease marked by pain at the epigastrium, corpulency, enlargement of the abdomen. It is due to the uterus being choked up with accumulation of the menses arising from heat combining with the deranged vayu in the system c.f. இரத்த பித்த குன்மம்.

சூதகவிரத்தம், மாதவிடாய் இரத்தம், menstrual blood.

சூதகவெட்டை, மாதவிடாய் காலத்தில் வெள்ளையொழுக்கு காணும் நோய், white menstrual discharge.

சூதகவொழுக்கு, அகாலத்தில் பெண்களுக்கு யோனி வழியாய்க் காணும் ஒழுக்கு, untimely discharge of blood through vagina.

சூதகற்பூரம், இரசகற்பூரம், impure subchloride of mercury.

சூதகாதிகம், மாதவிடாய்ப் போக்கு, dysmenorrhoea.

சூதக்கருப்பு, சுத்தி செய்த ரசம் 1.பங்கோடு வெடியுப்புச் சுண்ணம் 1 பங்கு, விடைத்தேரின் பட்டை 8 பங்கு, இம்மூன்றும் அரைத்துப் புடமிட்டெடுத்த கருப்புத்தூள், இதனால் நரம்புச் சிலந்தி, விரணம், குன்மம், கீழ்பிடிப்புபோம். நரம்பு முறுக்கேறும், purified mercury I part, calcified potassium nitrate I part and bark of mimosacinereā 8 parts, grind the three substances and subject it cow dung cake fire. The resulting black powder is recomended for guinea worm disease, ulcers, rheumatism etc.

சூதக்கறுப்பு, see சூதக்கருப்பு

சூதக்காய், மாங்காய், mango.

சூக்கிணறு, இமயமலையண்டையிருப்பதாகச் சொல்லும் இரசக்கிணறு, mine of mercury supposed to be near the Himalayas — mercury well

சூதங்கட்டி, இரசத்தைக் கட்டு மருந்துகள், drugs that consolidate mercury for the list, see ஔஷத வகுப்பு, 2.பச்சை நாபி, aconite root.

சூதசத்துரு, இரசத்தைக் கொல்லும் வஸ்துக்கள், medicines or herbs. Capable of killing or otherwise neutralising the effects of mercury. See சத்துரு.

சூதசாரணை, இரசத்தைக் கட்டிச்சாரணை யேற்றுதல், animating the consolidated mercurial pill

சூதசிந்தூரம், see சூதசெந்தூரம்

சூதசெந்தூரம், இரசச் செந்தூரம், red oxide of mercury see இரசசிந்தூரம்

சூதசெந்தூரி, ஆதளை, 2. நேயமரம், an unknown tree supposed to have medical virtues.

சூதசெம்பு, இரசவாதத்தால் ஏற்பட்ட செம்பு, alchemic copper derived from transmulation.

சூதசோரசெந்தூரி, இரசத்தையும் சோரபாஷாணத்தையும் செந்தூரமாகச் செய்யும் நாகதாளி, a plant that is capable of converting mercury Sora arsenic and into red.

சூததாது, சூதபாஷணம், mercurial poison.

சூதத்தின் மித்துரு, இரசத்திற்கு உறவான சரக்குகள், friendly drugs of mercury see மித்துரு

சூதத்தின்வேதை, பொன்னிமிளை, iron pyrites occuring in dark yellow nodules with a golden lustre.

சூதத்தைக்கட்டியாக்கி, புளிவிஞ்சி, an unknown drug capable of consolidating mercury.

சூததைக்கட்டுவாலாமூலி, கற்பூரவள்ளி, thick leaved lavender — Anisochilus carnosus.

சூதத்தைசணத்தில்கட்டி, சர்க்கரை வேம்பு, a kind of margosa tree the bark of which tastes sweet.

சூதத்தைத் தாக்கும் சூரன், பொன்னம்பர், yellow amber.

சூதத்தைத்தூளியாக்கி, இரசத்தைத் தூளாகச் செய்யுமருந்து, any drug capable of turning mercury into a powder; 2. see கலைச்செம்பு

சூதத்தைதோசையாக்கி, see இலவணபாஷாணம், 2.see கல்லறளி

சூதத்தைப்பந்தம்பண்ணி, see கருந்தக்காளி

சூதத்தைப்பெந்தம்பண்ணி, black tomato

சூதத்தைப்பற்பமாக்கி, இரசத்தைப் பற்பமாக்கு மருந்து, that which converts mercury into an oxide; see முத்திருக்குஞ்செவி.

சூதத்தைப்பேதமாக்கி, இரசித பாஷாணம், a silver poison probably silver nitrate.

சூதத்தைப்பொன்னாக்கி, இரசத்தைப் பொன்னாக்கும் மருந்து, anything which reduces mercury into gold; 2. see நாகபாஷாணம்.

சூதத்தைமணியாக்கி, இரசத்தை மணியாகச் செய்யுமருந்து, any agent that converts mercury into a bead. 2.see கொடிநெல்லி, 3. see நச்சுப்புல், see கசப்பு பசலை

சூதத்தை முடிக்கின்றோன், துரிசு, blue vitriol — Copper sulphate

சூதநத்து, ஆகாயத் துளிர் என்னும் ரவிபீஜம்

சூதநாகபந்தனி, see எருமைக் கனைச்சான்.

சூதநாசன், பெரிய முள்ளங்கி, big radish.

சூதநிலை, இந்திரியநிலை.

சூதநோக்கல், நிலாஞ்சனக்கல், sulphuret of antimony.

சூதபத்திரி, சாசி, cumin.

சூதபத்திரிகம், சீரகம், (சாசி) cumin seed.

சூதபந்நனி, இரசத்தைக்கட்டு மூலிகை, drug that consolidates mercury. They are as follows;

2. பேய்த்துவரை, bitter red gram. 3. see அழுகண்ணி, 4. ஆகாசகருடன், Bryonia epigoea; 5. வறட்சுண்டி, sensitive plant; Mimosa tripuetra; 6. கல்தாமரை, stone lotus without juice. Nosturtium genus; 7. தித்திப்புக்கோவை, sweet caper — Lehneria umbellatta; 8. சாயாவிருட்சம் தலைச்சுருள் வள்ளி, உரோமவிருட்சம், செம்பல்லி, தாம்பூரச்சிகை, கண்பூ, கிளிமுறுக்கு முதலியன, unidentified drugs such as these mentioned above for further details see ஒளடதவகுப்பு

சூதபற்பம், இரசத்தைப் பற்பமாகச் செய்யும் வேம்பு, margosa capable of turning mercury into calcined oxide.

சூதபற்பி, நீலஞ்சோதி, unidentified plant which is said to be capable of calcinising, mercury.

சூதபற்பியம், விடத்தேர், mint tree — Mentha crispa.

சூதபற்பினி, செம்பல்லிப்பூடு, see செம்பல்லி

சூதபாகி, வெட்பூலா, white poolah. white honey, honey shrub. Cicca lencopyrus.

சூதபாந்தவி, தொழுகண்ணி, telegraph plant Desmodium gyrans.

சூதபாலை, மாபாலை, a kind of பாலை, see பாலை

சூதபாஷாணம், இரசத்திலுண்டாகும் ஓர் வகைப் பாஷாணம், இது படிகக்கட்டி போல் இருக்கும். a kind of poison prepared from mercury. it resembles a crystal; 2. ஓர் பிறவிப் பாஷாணம், a mercurial poison.

NOTE: This poison is found native and it can also be prepared.

சூதபாஷாணங்கட்டி, சூதபாஷாணத்தைக் கட்டும் கவித்தும்பைப்பூ, hill toombay — Leucas procumbeus.

சூதப்பிஞ்சு, மாம்பிஞ்சு, tender mango; முத்தோஷம், அரோசகம், சர்த்தி, அக்கினி மந்தம் போம், it cures tridosa, anorexia vomitting, loss of appetite.

சூதப்புள்ளடி, பெரும்புள்ளடி, acute oblong unifoliate tick trefoil — Desmodium gangeticum. c.f. சிறுபுள்ளடி

சூதமணி, இரசமணி, சாதாரணமாக இதை, மணியாகக் கட்ட முடியாது துருசு சுண்ணத்தைச் சாறுவராத விராலியிலையிலிட நீர் கசியும், அக்கசிந்த நீரைக் கரண்டியிலிட்டு அதற்கு இரசத்தை விட்டுக் காய வைக்க, இரசங்கட்டி மணியைப் போலாகும், யோகிகள் வாசியைக் கும்பித்துக் கட்டுவதற்கு இம்மணியை அணிந்து கொள்ளுவார்கள். mercury bead. It cannot be easily consolidated. The alkaline salt prepared from blue vitriol when added to the juiceless leaf of Dodonaea viscosa (boy myrtle) renders it wet when water will be found exuding from it. This water which in poured into a spoon on being mixed with mercury and heated, solidifies mercury into a bead. The bead is used by Yogis generally for suppressing respiration and remain in suspended animation.

சூதமணியாக்கி, காய்ப்பாகல், இதுவே பாகற்கொடி, spiked bitter cucumber — Momordica charantia.

சூதமாண்டுபோதல், இரசம்மடிதல், killing of mercury.

சூதமாமூலி, இது ஓர் அபூர்வ மூலிகை, இதை இடித்துச்சாறு வாங்கிச் சூதத்திலிட்டு அரைக்கச் சூதம் வெண்ணெயாகும். பிறகு கருமத்தங்காய்க்குள் வைத்துக் காடைப்புடம்போட, கட்டி மணியாகும். இம்மணியினால் கெவுனத்திலோடலாம். தங்கமிட்டு செந்தூரம் செய்தால்

வேதைக்குதவும், 64 சரக்கிலும் தோய்த்துவாட்ட, கட்டி மெழுகாகும், காட்டினால் நவலோகம் பொன்னாகும். இதைச் சூரணித்துத் தேனிற்கொள்ள உடம்பிற்குறுதியாகும். This is a rare plant. If mercury is triturated with its juice it becomes a glutinous mass. It is made into a ball, incerted into the black dhatura fruit and subjected to a fire of one cowdung cake *(காடைபுடம்)*. The mercury hardens becomes a bead. It helps to travel in air. Along with gold it is converted into calcined red oxide and used in alchemy. If taken with honey the body becomes strong.

சூதமார்க்கம், நீர் விளைவு, விளா, apple tree. Feronia elephantum.

சூதமூலி, see சூதமாமூலி.

சூதமெழுகு, தலைச்சன் பிள்ளையின் அண்ட முடியின்று செய்யப்படும் ஓர் மெழுகு an unctuous preparation of the skull of the first born fetus; 2. இரசத்தை மெழுகாகச் செய்தது, அதாவது இரசமெழுகு, a wax like prepartion of mercury.

சூதம், பவளமல்லிகை, coral jasmine Nyctanthis arbortristis; 2. *பாதரசம்*, mercury; 3. *புளிமா*, sour mango, Indian hog plum spondias mangifera; 4. *மாமரம்*, Mango tree; 5. *வண்டு*, ; 6. *பன்றி*, hog; 7. *தீமுருகல் பாஷாணம்*, a kind of poison supposed to phosphorous; 8. *மூளையின் மாங்கிஷம்*, the mass of nervous material with in the skull; 9. *உண்டாக்கல்*, producing (supposed to produce gold;) 10. *பிறப்பு*, birth.

NOTE: Mercury is different kinds. They are 1. *நிர்மல சூதம்*, 2. *நீலகண்ட சூதம்*, 3. *சந்தான சூதம்*, 4. *உபரச சூதம்*, 5. *பரிகுரு சூதம்*.

சூதம்சணத்திற்கட்டி, சர்க்கரை வேம்பு, sweet margosa — Melia genus.

சூதம்சாதல், இரசத்தைக்கட்டல், இதனால் அடியிற்கண்ட செய்யுளின்படி அனேக காரியங்கள் கை கூடும்.

"பாருநீ சூதஞ் செத்தால் பராபரை முன்னே நிற்பாள்
பாருநீ சூதஞ் செத்தால் பனிச்சென்று பொன்னு மாகும்
பாருநீ சூதஞ் செத்தால் பரவிய உடம்பு பொன்னாம்
பாருநீ சூதஞ் செத்தால் பறக்கலாங் கவுனங் கேளே"

குறிப்பு: சூதமானது பாஷாணம், சுன்னம், உபரசங்கள், உதகம், முப்பு, மலை மூலிகைகள், இவைகளால் கொல்லப்படும்.

Mercury can be killed or consolidated by arsenics chunam, salts, *(உபசரம்)* seyanner, quinessence *(முப்பு)* and some rare plants. It it is consolidated, Godess Parvathi will appear, body will become golden, gold can be prepared and one can travel in heavens.

சூதம்பலம், மாம்பழம், Mango fruit.

சூதம்பேதமாக்கி, see இரசிதபாஷாணம்.

சூதயிலை, மாவிலை, mango leaf.

சூதரம், மாங்கனி, mango furit. 2. பன்றி, hog.

சூதராரசம், ஆ.வேதப்படி ரசம், கெந்தி, அபிரேக்கு இவைகள் கலக்கும்படி அரைத்து தேகவலிவுக்குத் தக்கபடி 40 நாள் கொடுக்க கிராணி, சயம், குன்மம், மூலம், மேகம், சுரம் முதலிய நோய்கள் குணப்படும். an ayurvedic medicine prepared with mercury, sulphur and mica. This cures diarrhoea consumption piles, gunmam etc.

சூதராட்சசன், பொன்னம்பர், ambur of a gold colour.

சூதவஞ்சனம், நீலாஞ்சனக்கல், a compound of antimony.

சூதவம், வண்டு, beetle.

சூதவயிரி, பொன்வண்ணச்சாலி, an unknown plant; 2. see சூதவைரி

சூதவெண்ணெயிறுகி, சூதவெண்ணெயைக் கெட்டிப் படுத்துமோர் மூலி, அதாவது ஆரைக்கீரை a drug capable of hardening the colloid mercury — Marsilea quadrifolia.

சூதவெண்ணெய், இரசத்தைக் கட்டுவதற்கு முன் வெண்ணெய்ப் போற் செய்தல், ''சூதமது வெண்ணெயானால் உலோகத்திலனந்தம் வேதை'' சூதம், 1.பலம், துருசு 2. பலம், சேர்த்து தும்பைப் பூச்சாற்றில் அரைக்க வெண்ணெயாகும், எலுமிச்சம் சாற்றினாலும், தகரைச் சாற்றினாலும் அரைக்கலாம். the act of rendering mercury into a glutiness mass — mercury I part copper sulphate 2 parts. Triturate with the juice of Leucas aspera flowers. Even juice of lime fruit and leaves of cassia can be used. The mercury becomes glutinous mass.

சூதவெள்ளி, இரசவாத வித்தையினால் செய்த வெள்ளி, silver obtained by means of alchemical process. 2. கட்டிய இரசம், consolidated mercury; 3. see கல்லாரை.

சூதவைரி, மூவிலைக் குருந்து, see குருந்து 2. பொன்வண்ணச்சாலி, an unknown plant.

சூதளச்சி, பேய்க்கடலை, devil gram — bitter gram.

சூதளம், கோங்கு, yellow flowered silk cotton — Cochlospermum gossypium

சூதாக்கினி, குழலா தொண்டை, an unknown Siddhar's plant.

சூதாஞ்சனம், நீலாஞ்சனம், antimony.

சூதாதிகம், see சூதவொழுக்கு, excess of menstruation — Menorrhagia.

சூதாதிவடுகம், ரசபற்பம், சுவர்ண பற்பம், தாம்பூர பற்பம், இவைகளைச் சமமாகக் கொண்டு இலவம் வேர்க் கஷாயத்தினால ரைத்து சீரக அனுபானத்திற் கொடுக்க ஆயுள்வேதப்படி சுகத்தோடு கூடிய சன்னி பாத அதிசாரம்போம், an ayurvedic preparation when given with cumin decoction cures diarrhoea & delirious fever. It is prepared by grinding calcined mercury, calcined gold, calcined copper with the decoction of root bark of Silk cotton tree.

சூதி, பிள்ளை பெற்றவள், Woman who gave birth to a child.

சூதிகம், கர்ப்பம், Pregnancy.

சூதிகாசற்பம், முட்டையிட்ட பாம்பு, இது கடித்தால். வாயில் இரத்தம் கக்கி மாரடைப்புண்டாகும். Snake which has just laid eggs. If it bites, vomiting of blood and chocking of chest occurs.

சூதிகாகிரகம், பிள்ளை பெற்ற வீடு, lying in room.

சூதிகாபவனம், see சூதிகா கிரகம்.

சூதிகாமலடி, பெற்றமலடி, அதாவது கருசிதைந்தும், பிறந்த பிள்ளை இறந்தும் மலடியாயிருப்பவள், கருப்பந்தரித்த 3 நாள் 3 மாதம், 3 வருடம் இவைகள் ஒன்றிலே கருப்பம் நசிக்கப் பெற்றவள். a childless woman because of abortion or death of the born child every time.

சூதிகாரோகம், பிரசவித்த பெண்களுக்குப் பத்தியக் கேட்டினால் அசீரணம் முதலியவைகளினால் வாயு ஏற்பட்டு பிரகோபமடைந்து பல கோளாறுகளை யுண்டாக்கும். Eng. version due to indiscreet dieting a delivered woman suffers from indigestion and other allied symptoms. Vayu gets aggravated to a greated extent and causes those symptom.

சூதிகாவாதம், கூத்தாடச் செய்கின்ற ஓர் வாதம், இது சூதகக் கோளாறினால் பெண்களுக்கு ஏற்படும். இது கருப்பத்தைக் கரைத்துச் சின்னப்படுத்தும், நரம்பைப் பற்றிய வாதநோய், a convulsive nervous disease with involuntary and irregular jerking movements. It occurs in females especially young girls and is due to menstrual disorders — Chorea.

சூதகவாயு, கர்ப்பவாயு, flatulency in the womb causing sterility and hysteria a wasting disease following child birth.

சூதிகை, பிள்ளை பெற்றவள், lying in woman 2. பிரசவம், delivery; 3. பிரசவித்த பெண், woman who delivered a child.

சூதிக்கிரகம், see சூதிகாகிரகம்.

சூது, ஓரிதழ்த் தாமரை, One petal lotus; 2. களாவிலை, leaf of களா which see; 3. தாமரை, lotus flower; 4. சூரியகாந்தி, sun flower.

சூதுமாதவம், ஓரிதழ்த் தாமரை, Viola suffruticosa, see சூது

சூத்தடித்தல், ஆணோடு ஆசனப்புணர்ச்சி, commiting sodamy.

சூத்தழகி, ஓர் வகை மாம்பழம், a kind of mango fruit.

சூத்தாங்கரடு, மலவாயிலின் தடிப்பு, thick skin of the anus.

சூத்தாட்டியுள்ளான், எப்பொழுதும் வாலையாட்டிக் கொண்டிருக்கும் ஒரு சிறு பறவை, (உள்ளான்) ஆற்றங்கரைகளில் காணலாம். pied wagtail — Motacilla Madras patana found on banks of rivers.

சூத்தாம்பட்டை, பிட்டம், buttocks 2. குண்டிப்பக்கம், posterior.

சூத்திரகண்டகாரி, சிறு கண்டங்கத்திரி, dwarf prickly night shade — Solanum jacquini.

சூத்திரகுட்டம், சாந்தகுட்டம், a mild form of leprosy; 2. ஓர்வகை சர்ம நோய், Itch thyosis eruptions in the from of fish scales.

சூத்திரகுலக்கரு, நாலாஞ் சாதிப் பெண்ணின் வயிற்றில் தரித்த 3 — 5 மாதத்திய கருப்பிண்டம், a foetus 3 to 5 moths old born to a fourth class woman divided according to her age or lust.

சூத்திரக்குலப்பெண், நாலாஞ்சாதிப் பெண் அதாவது அத்தினி, the lowest of the four classes of women divided according to their lust.

சூத்திரசங்கு, ஓர் சிறு சங்கு, a small conch shell.

சூத்திரசங்குபற்பம், see சம்பூக பற்பம்.

சூத்திரசண்பகம், நாகசம்பங்கி — சிறு நாகப்பூ — Mesua ferrea.

சூத்திரசந்தனம், செஞ்சந்தனம், red sanders.

சூத்திரசர்ப்பம், புற்றுகளில் வசிக்கும் நான்காம் சாதிப்பாம்பு, the fourth class of snakes living generally in white ants' hill.

சூத்திரசாதிபலம், கருப்புக் கடுக்காய், a black variety of myrobalam.

சூத்திரசாதிப்பெண், see சூத்திரக்குலப் பெண்.

சூத்திரசீரகம், சிறு சீறுகம், small cumin.

சூத்திரசீரிடம், பூளைப்பூ — சிறுபீளை — Aerva lanata.

சூத்திரசீவி, அற்ப உயிர், animalcule.

சூத்திரசுத்தி, சிப்பி, bivalve shell.

சூத்திரசுவர்ணம், சோகுசா, lead gold; princes metal.

சூத்திரதுளசி, ஓர் வகைத் துளசி, a kind of holy basil.

சூத்திரத்தானம், ஓர் வட மொழி வைத்திய நூல், an Ayurvedic science.

சூத்திரநாகம், ஓர் வகை நாகப்பாம்பு, fourth class of cobra. See சூத்திரபாம்பு.

சூத்திரநாபி, வச்சநாபி, இதனால் தேள்கடி பூச்சி விஷம், சுரம், குட்டம் இவைகள் தீரும். மேலும் தலை நோய், சன்னி பாதம், பாம்பு கடி, உள்விரணம் குணமாகும். a kind of inferior aconitered flowered snake wood Reuwolfia serpentina. It serves as an antidote for scorpion sting insect bites and as an remedy for fever and leprosy. Moreover it is useful in cases of head ache, typhoid, snake bite and internal wounds.

சூத்திரபனசம், ஈரப்பலா, small jack — Artocarpus lakoocha.

சூத்திரபிப்பிலி, காட்டுமிளகு, wild pepper.

சூத்திரபிரமாண்டம், the kinetic aspect of spirit in the human body or Microcosm which is a repleca on a small scale of the greater world.

சூத்திரப்புட்பம், பருத்திப்பூ, Indian cotton flower. Flower of gossypium indicum.

சூத்திரபாவை, தசவாயுக்களால் ஆட்டுவிக்கப்படும் மனித உடம்பு, human body dancing with the aid of the ten nerves or arteries of the system as compared to a statue worked by a spring.

NOTE: by C.D. There are ten vayus in the human body. They are Pranavayu, Udanavayu, Samanavayu, Vyanavayu, Apanavayu, Kurmavayu, Thanajeyavayu, Nagavayu Girukaravayu and Devaththavayu. These are responsible for all the movements in the body.

சூத்திரம், இயந்திரம், machine; 2. ஓர் அமைப்பு an apparatus; 3. பஞ்சு நூல், cotton thread.

சூத்திரரோகம், குழந்தைகளுக்குக் காணும் சுரம், குருநோய், அம்மை, கரப்பான், கணம் முதலியவைகள் a class of minor diseases especially exanthemas of different kinds such as fever, eruptions, measels etc.

சூத்திரவிக்கல், அற்பவிக்கல் இது பசிகளைப்பினாலேற்படுதால் உண்டவுடன் சாந்தப்படும். slight hiccup which stops by drinking water or taking food.

சூத்திரவுருவம், அசையும் உருவம், moving figure 2.ஆடும்பிரதிமை, an image set in motion.

சூத்திரன், புட்பராகம், topez; 2. வைடூரியம்,cat's eye

சூத்திராஞ்சனம், ஓர் அஞ்சனம், a kind of ungent applied to eyes incertain diseases.

சூத்து, ஆண்குறி அல்லது பெண்குறி, male or female genital; 2. ஆசனம், anus; 3.சூத்தாம்பட்டை, buttocks.

சூத்தொட்டல், புட்டம் வற்றிப்போதல், a slang for atrophy of buttocks.

சூத்தொட்டி, இளைத்துப் போனவன், a slang or contemptuous term for an emaciated person ove one with skin and bones.

சூத்தொட்டிப்போதல், புட்டம் ஒட்டிப் போதல் shrinking or diminution in bulk of the buttocks found in an emaciated person.

சூத்தை, கெட்ட அழிந்த, rotten.

சூத்தைப்பல், சொத்தைப்பல், carious teeth.

சூத்தைப்பாக்கு, சொத்தைப்பாக்கு, worm eaten areca nut.

சூநம், பூமலர், full blown flower; 2. மான், deer; 3.பூமொட்டு, flower bud; 4. வீக்கம், swelling.

சூநாறி, ஓர் பிசின் மரம், yellow flowered resin tree — Pittosperum tetraspermum.

சூநியவாதி, see சூனியன்.

சூநியன், முடவன், a lame man; 2. மாரணவித்தைக்காரன், magician causing disease and death.

சூந்துமம், சிலந்தி நாயகம், ulcer plant — Ruellia stepens. It is a plant used for all cutaneous eruptions.

சூந்தயிலி, see சூந்துமம்.

சூபகாவவரை, பேய்த்தம்பட்டவரை, wild sword bean — canavalia ensiformis (virosa)

சூபம், ஓர் பயறு, a pulse; 2. பாத்திரம், vessel.

சூபதூபனம், சூபாங்கம், பெருங்காயம், asafeotida.

சூபிகா, பாம்பு கொல்லி, common rue — Ruta graveolens.

சூபியம், பேய்த்தேற்றா, காட்டுத்தேற்றா, wild clearingnut — strychnos potatorum.

சூபுரம், கடம்பு, cadamba —Eugenia racemos'a

சூப்பல், see சூப்புதல்

சூப்பி, ஆண்குறியின் நுனித்தோல், foreskin of the penis — Prepuce, 2. ஆண் குறியை சூப்புகிறவன், one who sucks the penis.

சூப்பிகளைதல், ஆண்குறியின் நுணித்தோலை யறுத்தல், cutting off the foreskin of the Penis circumcise.

சூப்பியம், பாம்பு கொல்லி, see சூபிகா.

சூப்பியறுத்தல், ஆண் குறியின் நுனித்தோலையறுத்தல், cutting of the prepuce — the removal of all or a part of the prepuce — circumcision; 2. see சுன்னத்து.

சூப்பு, நாவினால் சுவைத்தல், sucking, 2. மாமிசத்து நீர், அதாவது கறியின் ரசம், mutton soup.

சூப்புதல், சப்புதல், sucking; 2. சும்பனம் பண்ணல், sucking the organ.

சூமந்திரம் போடல், நோய், சங்கை, பயம் முதலியன நீங்கும்படி மந்திரித்தல், curing from the influence of malignant spirits. —Exorcise.

சூமம், நீர், water; 2.பால், milk.

சூமி, சுரக்கள்ளி, mahogany tree — Soymida febrifuge.

சூம்பல், see சூம்புதல்

சூம்பற்கை, see சூம்பியகை.

சூப்பியகால், துவண்டகால், atrophied leg.

சூம்பியகை, நோயினால் இரத்தம் போஷிப்பில்லாமல் இளைத்துச் சிறுத்துப் போனகை, wasting of the hand or arm from lack of nutrition.

சூம்பியகை கால், மிகவும் இளைத்துச் சிறுத்துப்போன கைகால், abnormal smallness of the arm and leg — Acromicria.

சூம்புதல், நீர் அல்லது இரத்தம் சுண்டிச் சிறுத்து வாட்டமடைதல், wasting or diminution in the size of a part or atrophy of the eye due to lack of blood circulation; 2. உறுப்புலர்தல், drying up or withering or wasting of a part or of the organism as whole as limbs. 3. மெலிந்து வாடிப்போதல், withering.

சூயக்கினி, பூவரசு, portia tree — Thespesia populnea.

சூரகாசிதம், சிறுகடலை, small bengal gram.

சூரணக்கிழங்கு, கருணைக் கிழங்கு, elephant foot yam — Typhonium trilobatum.

சூரணசுத்தி, பசுவின்பாலில் பாதிசலம் விட்டுப் பாத்திர வாய்க்கு வேடுகட்டி, சூரணத்தை மூடி, பிட்டவியலாக அவித்தெடுத்துலர்த்தி யெடுப்பது சுத்திமுறை, அல்லது சூரணத்தை முழுகிற வரையில் பால் வார்த்து அது சுண்டுகிற வரையில் பால் வார்த்து அது சுண்டுகிற வரையில் உலர்த்தி வைப்பது

ஒரு சுத்தி, Take a suitable vessel and pour into it milk dilutd with half its volume of water. Tie the mouth with cloth. Put the powder on the cloth and cover it with another, vessel almost air tightly. Heat the milk. Allow the milk to boil for about 15 minutes. Take out the powder dry it under the Sun. This is the process of purification.

சூரணசேபிதம், நிலவாகை, East Indian senna — Cassia angustifolia.

சூரணஞ்சம், காட்டுக்கருணை, wild elephant yam — Dracontium polyphyllum.

சூரணஞ்சனி, கௌரிபாஷாணம், இது பரங்கி வைப்பு பாஷாணத்திலொன்று, one of the 32 kinds of prepared poisons. see கௌரி பாஷாணம்.

சூரணத்தண்டு, கருணைக் கிழங்கின் தண்டு, steam of elephant yam.

சூரணபாகம், காம்பு, செத்தை, தூசி, போலி பொருள்கள் முதலியவைகளை நீக்கி முறைப்படி சுத்தி செய்து உலர்த்தி யெடுத்த பொருளை இளம் வறுப்பாக வறுத்து உரலிலிட்டு இடித்து, வஸ்திரகாயஞ் செய்து எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு நிறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும். இப்படியே சூரணத்திற்கு வேண்டிய சர்க்கரை நீங்கலாக ஒவ்வொரு பொருளையும் சூரணஞ் செய்து நிறுத்திக் கொள்ள வேண்டும். பிறகு யாவற்றையும் ஒரு சுத்தமான பாத்திரத்திலிட்டு நன்றாக கலந்து சூரணத்திற்கு உரிய சுத்தி செய்து உலர்த்தி, குறிப்பிட்ட அளவு கட்டிகள் இல்லாத நாட்டு சர்க்கரையை நன்றாக கலந்து புட்டியில் பத்திரப்படுத்த வேண்டும். the drugs should be first properly dried and slightly fried. Then each of them should be pounded and sieved. Then each powder should be taken agreeably to the

measures directed and mixed together in proper porportions, along with sugar some powders are subjected to the process called bavanam *(பாவணம்)* The fact is powders and mineral substances are soaked in various kinds of fluids such as the expressed juice of herbs, infusion decoction etc. A single operation takes 24 hours. In many cases the process is repeated several times in the same variety of fluid or in different variety as the case may be. The object in view is to imbue the powder or mineral with the active principle of the drug used to extract the fluid.

சூரணபாரதம், இரசபற்பம், white oxide of mercury obtained by process of calcination. see இரசபற்பம், 2. குங்கிலியம், Indian bedellium.

சூரணமணங்கம், see அனிச்சை

சூரணமாக்கல், பொடி செய்தல், reducing any substance to powder ஒன்றிரண்டாய் நுணுக்கல், breaking into samll fragments — Comminuting.

சூரணமாக்குகை, பொடியாக்குகை, Pulverisation, 2. நுணுக்கல், Comminution.

சூரணமோதகம், கருணைக் கிழங்கை முதன்மையாகக் கொண்டு கடைச் சரக்குகளுடன் சேர்த்து தயாரித்து மூலம், சூலை, குன்மம் இவைகளுக்குக் கொடுக்கப்படும். ஆ.வே. மருந்து, anAyurvedic preparation of wild elephant yam given for piles, gulmam etc.

சூரணம், கருணைக் கிழங்கு, see சூரண கிழங்கு, 2. see அனிச்சை, 3. இடித்த தூள், powdered substance; 4. தூள், any dry powder commonly medicinal; 5. சிறிதும் ஈரம் தங்காதபடி உலர்த்திய மருந்துச் சரக்குகளை நன்றாக பொடி செய்து வடித்து எடுத்த தூள், medicinal compound powder made by pounding or grinding well dried herbs or other substances in a mortar with a

pestle and passing the powder through a fine cloth or muslin.

சூரணவிதி, Rules for making medicinal powder.

1. துவர்ப்பு பதார்த்தங்களை இரும்பு உரலில் தூள் செய்யலாகாது. கருத்துக் கெட்டுப்போம்.

2. கடின வஸ்துவை கல்லுரலில் தூள் செய்யவும்.

3. மிருதுவான வஸ்துவைக் கலுவத்திலிடவும்.

4. தூள் செய்யும் கருவிகள் சுத்தமாயிருக்க வேண்டியது.

5. யோகங்களில் சேருகிற வஸ்துக்களை முதலில் தூள் செய்து நிறுத்து எடுத்துக் கொள்ளவும்.

6. பிறகு கடைச்சரக்குத் தூள் செய்வதும் அப்படியே.

7. சூரணத்தை வஸ்திரகாயம் செய்ய வேண்டும்.

8. அளவு பெரியவர்கள் 1/2 — 1 துலாம் சிறியவர் குன்றி எடை 7 — 21 வரையில் வயது தேகதிடம் வியாதிக் கூறு, தேசம், காலம் இவைகளை அனுசரித்து.

9. அனுபானம் வெல்லம் சம எடை, சர்க்கரை, 2. பங்கு நீரானால், 4பங்கு நெய், தேன் சூரணம் குழையும்படி.

1. Iron mortar and pestle should not be used for pounding astringent drugs especially raw green drugs eg. galnut.

2. Stone mortar should be used for very hard substances.

3. Soft, fragile substances like saffron must be powdered by grinding in Kalvam.

4. All instruments used must be clean.

5. Each drug must be powdered sieved in muslin cloth and then weighed and then mixed with other powders.

6. Adult Does 1/2 to 1 tola; Children — 7 21 Kundri.

7. Vehicle - Jaggery equal quantity Sugar double, water four times, ghee & honey sufficient quantity.

சூரணன், கடலை, Bengal gram.

சூரணா, அனிச்சை, see சூரணம்

சூரணாஞ்சனம், மிளகு, திப்பிலி, கடல்நுரை, கறிச்சாற்றிலும் ஆமை அல்லது மீன் பித்திலும் ஊறவைத்துப் பிறகு சூரணமாகச் செய்து கண்ணோய்களுக்கு அஞ்சனமாகத் தீட்டும் ஓர் ஆயுர்வேத மருந்து a powder used as an application for the eyes. In Ayurveda it is made by pulverising pepper, long pepper, sea forth (cuttle bone =கடல்நுரை) after keeping them soaked in meat juice or soup and the bile of a tortoise or fish.

சூரணித்தல், தூளாக்குதல், powdering மருந்துச் சரக்குகளை

பொடி செய்தல், reducing a drug or medicine to a very fine powder and drying it — Levigation.

சூரதாரு, தேவதாரி, deodar cedar — Cedrus deodara.

சூரத்ததிவிடயம், ஓர் வகை அதிவிடயம், a kind of Surat atees.

சூரத்தைமிர்தை, see சூரத்துக்கடுக்காய்

சூரத்தாவாரை, see சூரத்துநிலாவிரை.

சூரத்து, இது கூர்ச்சர தேசத்துப் பூர்வீகப்பட்டணம், இவ்விடம் திராவிடர்கள் தமிழ் வைத்தியப்படி அனேகம் மருந்துச் சரக்குகள் மூலிகைகளைத் தயார் செய்து வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்ததாகத் தெரிகிறது. Surat, an ancient town of Goozerat peopled by Dravidians who had then a great manufacturing centre of Indian drugs and exported them to Southern India.